ஸ்ரீ :



ஸ்ரீமதே ராமானுஜாய நம : ஸ்ரீமத் வரவரமுநயே நம :

ஸ்ரீ வானாசல மஹாமுநயே நம :

# நவ திருப்பதி அனுபவம்

*வெளியீடு :*

**ஸ்ரீ உ.வே. K. பக்ஷிராஜ அய்யங்கார்**

**குடும்பத்தினர்**

# நவ திருப்பதி அநுபவம்

(திரு. K. பட்சிராஜன் B.A,. B.L,.)

## தோற்றுவாய்

இறைவன் ஐந்து நிலைகளில் இருப்பதாகப் பெரியோர்கள் கூறுவர். அதாவது, பரம பதத்திலே இருக்கும் இருப்பு, பாற்கடலில் பள்ளி கொண்டிருப்பது, இராம கிருஷ்ணாதி அவதாரங்கள், எல்லா ஆத்மாக்கள் உள்ளும் மறைந்து நிற்கும் நிலை, அடியார் மனங்களில் தோன்றும் வடிவோடு அந்தந்த திவ்ய தேசங்களிலே "பின்னானார் வணங்கும் சோதி"யாகக் கோயில் கொண்டிருக்கும் நிலை என்பன. இவற்றை முறையே, பரத்வம், வியூஹம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சை என்று கூறுவர் ஆன்றோர். இவற்றில் நாம் கிட்டி யநுபவிக்கும் நிலை அர்ச்சைதான். இந்த அர்ச்சாவதாரத் திருமேனியோடு எம்பெருமான் ஸேவை ஸாதிக்கும் திருப்பதிகளில் ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற திருப்பதிகள் நூற்றெட்டு, அவற்றுள் ஒன்பது திருப்பதிகளே நவதிருப்பதிகள் என்று விசேஷப் பெயர் பெறும்.

தமிழ் முனிவன் வதியும் பொதிய மலையில் பிறந்து நீரோடு தமிழ் பெருக்கும் பொருணையாற்றின் இருமருங்கிலும் அமைந்தன இவ்வொன்பது திருப்பதிகளும். இவ்வொன்பது திருப்பதிகளையும் மங்களாசாசஸனம் செய்தவர் ப்ரபந்நஜன கூடஸ்தரான நம்மாழ்வார் தான். ஆழ்வார்களிலே நம்மாழ்வார் தான் ஞான சிகரம் என்று போற்றப்படுபவர். வேதங்களில் உட்பொதிந்த ஞானம் அரைகுறையாக வேதம் படிப்பவர் கையில் சிக்கி, தெளிவின்றிக் கலங்கி, இறுதியில் நம்மாழ்வார்

என்ற ஞானமடுவில் தேங்கித் தெளிந்து தன்னுள் மறைந்துள்ள அபூர்வப் பொருள்களை யெல்லாம் காட்டிற்று என்று பொருள்பட வரும்,

**“மண்ணாடின ஸஹ்யஜலம் தோதவத்திச் சங்கணி துறையிலே துகில் வண்ணத் தெண்ணீராய் அந்தஸ்த்தைக் காட்டுமா போல அல்பருதர் கலக்கின ச்ருதி நன் ஞானத்துறை சேர்ந்து தெளிவுற்று ஆழ்பொருளை அறிவித்தது”**

***(ஆஹ்ருதயம் 1.7.1)***

*(மண்ணாடின-கலங்கின, ஹஸ்யஜலம்-பொதிய மலைத்தண்ணீர், சங்கணி துறை - திருச்சங்கணிதுறை என்ற ஆழ்வார் திருநகரியிலுள்ள நீர்த்துறை, அந்தஸ்த்தை - உள்ளிருப்பவற்றை, அல்பச்ருதல் - குறைந்த கேள்வியறிவை உடையவர், ச்ருதி - மறை.)*

-என்ற ஆசார்ய ஹ்ருதய சூத்திரம் ஒவ்வொரு அறிஞரும் சிந்தித்து மகிழ்தற்குரியது. நம்மாழ்வார் குருகூரில் அவதரித்தவர். குருகூர் என்ற ஊர் அழ்வார் திருநகரி, பொருகை ஆற்றின் தென்கரையில் திருநெல்வேலியிலிருந்து திருச்சீரலைவாய் செல்லும் வழியின் நடுவில் அமைந்துள்ளது. மேலே கூறிய நவதிருப்பதிகளில் திருக்குருகூர் முக்கியமானது. மற்றவை, துலைவில்லி மங்கலம் (இரட்டைத் திருப்பதி) திருப்புளிங்குடி, திருப்பேரை, ஸ்ரீவைகுந்தம், வரகுண மங்கை (நத்தம்) திருக்குளந்தை (பெருங்குளம்) திருக்கோளூர் என்பன. இந்த ஒன்பது தலங்களும் நம்மாழ்வார் வாழ்வில் மிகவும் ஏற்றமுடையன என்பர் அறிஞர்.

உலகில் எம்பெருமான் ஒருவனே புருஷன். ஏனைய ஆன்மாக்கள் அனைத்தும் பெண்ணியல்புடையன என்பது சாஸ்திரங்கள் கண்ட உண்மை.

**“ஸ ஏவ வாஸுதேவோ ஸௌ ஸாஷாத் புருஷ உச்யதே**
**ஸ்திரீ ப்ராயம் இதரத்ஸர்வம் ஜகத் ப்ரஹ்ம புரஸ்ஸரம்”**

எனவே ஆன்மாக்கள் ஸ்வதந்திர மற்றவை. இறைவனின் அதீனத்துக்கு உட்பட்டவை என்பது தானே போதரும்.



எப்பொழுது ஒரு உத்தம ஸ்திரீயின் பூரண நிலையை ஒரு ஆன்மா அடைகின்றதோ அப்பொழுதுதான் அது இறைவனையும், இறைவனுக்கும் தனக்கும் உள்ள தொடர்பையும் அறிந்து கொண்டதாகும். அவ்வறிவே ஆன்மா பெற வேண்டிய தலையாய பேறு. இப்பேறு, எப்போது ஒரு ஆன்மா இவ்வுலகில் மாற்றுப் பொருள்களின் மீதுள்ள அபிமானத்தைக் கட்டோடு விடுகின்றதோ அப்போது கிட்டும். இத்தகைய உத்தம நாயகியின் பாவத்தைப் பெற்றால் தான் ஒரு ஆன்மா இறைவனை உள்ளபடி அறிந்து அனுபவிக்க முடியும் என்பது நம்மாழ்வரின் வாழ்க்கைச் சரிதத்தினின்று புலனாகும். அச்சரிதமும் அவரது பிரபந்தங்களினின்றே பெறக் கிடைக்கும். இவ்வாழ்வாரின் ஞான வாழ்வில் இந்த ஒன்பது தலங்களும் எப்படி ஏற்றமுற்றன என்பது பின்னர் நன்கு விளக்கப் பெறும். எனினும் சுருங்கக் கூறின் இவ்வொன்பது தலங்களில் திருப்புளிங்குடி, வரகுணமங்கை, ஸ்ரீவைகுந்தம் இம்மூன்று தலங்களிலும் உள்ள மூர்த்திகள், ஞானபக்குவம் பெற்றுக் கொண்டிருந்த நம்மாழ்வாரைத் தாம் அனுபவிக்க விரைந்த இடங்கள் என்று ஆசார்ய ஹ்ருதயம் கூறும். எனவே மற்ற ஆறு தலங்களும் அவ்விதம் அழ்வார் நாயகிக்குரிய ஒவ்வொரு குணங்கள் பிரகாசித்த இடங்கள் என்பர். அவற்றையும் பின்னர் விளக்குவோம்.

முதல் மூன்று தலங்களையும் இறைவன் நாயகியைப் பெற விரும்பி விரையும் விரைவை விளக்கும் தலங்களாக ஆசார்ய ஹ்ருதயம் குறித்தது என்பதை மேலே கூறினோம்.

இப்படிக் கூறுவது புதிதாகத் தோன்றலாம். ஆனால் இவ்வுண்மை எளிதில் விளங்கக்கூடியது. இறைவன் தன் விளை யாட்டாக உலகத்தையும் உயிர்களையும் தோற்றுவிக்கிறான். அவ்வுலகத்தோடு உயிர்களை இணைக்கும் மாயையும் உண்டாக்குகிறான். உயிர்கள் அம்மாயைக் கட்டை அறுத்துத் தன்னை மீண்டும் வந்தடைகின்றனவா என்று பார்க்கிறான். அவன் தானே இங்கு பலநிலைகளில் தன்னை வெளிப்படுத்திக்

கொள்ளவும் செய்கிறான். ஏதேனும் ஒரு ஆன்மா அவனை அடைய முற்படுமானால் அது அவனை அடையும் முன்பு - அவன் அதை வாரியுண்கிறான். அத்தனை ஆத்திரம் அவனுக்கு. ஏனெனில் மாயையிலகப்பட்ட உயிர்கள் அதிலே மயங்கி அவனை மறக்கின்றன. அல்லது ஆன்மா ஞானம் பெற்று அந்த அனுபூதியிலேயே தன்னை இழந்து விடுகின்றன.

அன்றி அவன் அருளிய நூல்கள் அனைத்தும் ஓதி, கர்மங்கள் அனைத்தும் செய்து, அவற்றின் பலன்கள் பெற்று அந்த அகங்காரத்திலே தன்னையே இறைவனாக எண்ணி அழிகின்றன. இக்குழிகளையெல்லாம் தப்பி தன் உண்மை வடிவம் என்ன என்பதை ஒரு ஆன்மா உணர்ந்து, தான் என்றும் இறைவனின் அடிமை என்ற நிலைமை இழவாது காப்பாற்றிக் கொள்வது மிக துர்லபமாகையாலே அப்படி ஒரு ஆன்மா பக்குவமானால் அதை இறைவன் மேல் விழுந்து பற்றுகிறான் என்பது நம்மாழ்வார் காட்டும் உண்மை.

**"வாரிக்கொண்டு உன்னை விழுங்குவன் காணில் என்று**
**ஆர்வுற்ற என்னை ஒழிய என்னில் முன்னம்**
**பாரித்துத் தான் என்னை முற்றப் பருகினான்**
**காரொக்கும் காட்கரை யப்பன் கடியனே"**

*(திருவாய் மொழி - 1-6-0)*

*(பாரித்து-பரிவு கொண்டு.)*

என்பது மாறன் மறை. பருகுகிறான் என்ற பதமே இவ்வான்மா இறைவனை அடையு நெறியில் எவ்வித நீர்ப்பண்டமாய்க் கரைந்து நிற்கின்றது என்பதைக் காட்டும். இப்படி இறைவன் ஆன்மாவைப் பற்ற விரையும் நிலையைத் தான் Thompson என்ற ஆங்கிலக் கவி எழுதிய The Hound of Heaven என்னும் கவிதை விளக்குகின்றது. இப்படி ஆழ்வாரைப் பற்ற இறைவன் இடங்களாக அம் மூன்று தலங்களும் குறிக்கப் பெறுகின்றன. ஆசார்ய ஹ்ருதய சூத்திரம் கூறுவதென்ன என்பதை இனி ஆராய்வோம்;



**"போக்ய பாகத்வரை தெளிந்த சந்தைக்கு முன்னில் மூன்றிலும் ப்ரகடம்"**

ஆழ்வார்க்கு பரமபக்தியாகிற உணர்வு தலையெடுக்குமளவும் இறைவனுக்குண்டான ஆத்திரம் "தெளிந்த வெண் சிந்தை" என வரும் பாசுரவாக்குக்கு முந்திச் சொல்லப்பட்ட "புளிங்குடிக்கிடந்து, வரகுண மங்கை இருந்து வைகுந்தத்துள் நின்று" என்ற விடத்தே சொல்லப்பட்ட மூன்று திருப்பதிகளான திருப்புளிங்குடி, வரகுணமங்கை, ஸ்ரீவைகுந்தம் என்ற மூவிடங்களிலும் அவன் கிடந்து இருந்து நின்ற மூன்று நிலைகளிலும் தெரியும் என்பது இதன் பொருள்.

பசியன் ஒருவன் சோறுசமையுமிடத்தைக் காண்கிறான் சற்றுப் பொறுத்தால் அதைத் துய்க்கலாம் என்று அங்கே சாய்கிறான். அவன் ஆத்திரம் பொறாமல் கிடையை விட்டு உட்காருகிறான் சற்று பின் அதுவும் பொறாமல் ஆத்திரம் மேலிட்டு எழுந்து நிற்கிறான். இம்மூன்று நிலைகளையுமே அம் மூன்று ஸ்தல மூர்த்திகளின் நிலை விளக்கும் என்பது விஷயம்.

இம் மூன்று இடங்களும் ஆழ்வாராகிய நாயகிக்கு பரம பக்தியாகிய உத்தம ஸ்த்ரீ பாவம் பக்குவம் பெற்ற இடங்கள் என்பதாயின் இந்த மூன்று பதிகள் போக, பாக்கியுள்ள ஆறு தலங்களும் எதைக் குறித்தும் என்ற வினா எழுமல்லவா? அந்த நாயகி தனக்குரிய ஆறு முக்கிய குணங்களையும் வெளிப்படுத்திய இடங்களாகப் பெரியோர் பணிப்பர்.

அக்குணங்களாவன :- அனன்யசேஷத்வம், அனன்ய சரணத்வம், அனன்யபோக்யத்வம், ஸம்ஸ்லேஷத்தில் தரிப்பு, விஸ்லேஷத்தில் தரியாமை, ததைக நிர்வாஹத்வம் என்பன. அதாவது பிறவொருவனுக்கு அடியளல்லாமை, பிறரைச் சரணமாகப் பற்றாமை, பிறன் அனுபவிக்கப் பொறாமை, - அவனோடு கூடியிருக்கையில் வாழ்வு, அவன் பிரிவு பொறாமை, தன் செயல் யாவும் அவனிட்ட வழக்காகை. மேலே சொன்ன இந்த ஆறு தலங்களில் ஆறு குணங்களும்

வெளியாகின்றன என்பது அறிஞர் கூற்று. முதன் மூன்று தலப் பெருமையையும், ஆறு குணங்கள் எப்படி எங்கு தோன்றுகின்றன என்ற விவரத்தையும் அந்தந்த தலங்களின் தல வரலாற்று விசேஷங்களையும் இனித் தனித் தனியே அனுபவிப்போம்.

இவ்வொன்பது திருப்பதிகளிலும் உள்ள கோயில்களின் காலம் நம்மால் வரையறுத்துக் கூற இயலாது. கோயில் என்று கூறும் பொழுது கர்ப்பக் கிருகத்தை மட்டும் நான் குறிக்கிறேன். இக்கோயில்கள் எழுந்ததைப் பற்றி அந்தந்த திருப்பதிகளின் தல புராணங்கள் சில விஷயங்களைத் தருகின்றன. ஆனால் அவை காலத்தைக் குறிப்பிடுவன அல்ல. இவ்வொன்பது திருப்பதிகள் பற்றியவரை நம்மாழ்வார் நேரில் கண்டு அனுபவித்த தலங்கள். இவை என்றும், நம்மாழ்வார் அவதாரத்திற்கு வெகு காலத்திற்கு முன்பே அவை பிரசித்தி பெற்றிருந்தன என்றும் மட்டும் நாம் ஓரளவு கூறலாம். இத்தலங்கள் பற்றிய புராண வரலாறுகள் தற்கால "பகுத்தறிவு"வாதிகளுக்கு வேடிக்கையாகவும், வியப்பாகவும் கூட இருக்கலாம். அந்தத் தலங்கள் பற்றிய வரலாறுகள் என்னவென்பதை நம்பிக்கையுடைய நாம் சற்று பார்ப்போம்.

# புராண வரலாறு

## 1. ஸ்ரீவைகுண்டம்

பூர்வம் நைமிசாரண்யத்தில் முனிவர்கள் கூடியிருக்கையில் சூதமா முனிவர் அங்கு எழுந்தருளினார். அவரிடம் முனிவர்கள், சிறந்த விஷ்ணுத்தலங்களைப் பற்றி அருளுமாறு கேட்க, சூதமா முனிவர் அருளினதாக ஒரு வரலாறு காணப்படுகிறது. அது வருமாறு:-

சோமுகன் என்னும் அசுரனால் வேதஞானம் பறிபோக நான்முகக் கடவுள், தவம் செய்யத்தக்க இடத்தைத் தேடி, தண்பொருணை யாற்றங்கரையில் ஒரு அழகிய இடத்தைத் தேர்ந்து அங்கு வைகுந்தநாதனை நோக்கித் தவம் செய்தார். வைகுந்தநாதனும் அவருக்குப் பிரஸன்னமாய் இழந்த ஞானத்தை அளித்தார். வைகுந்தநாதன் வடிவழகை அனுபவித்த பிரமன், தான் பெற்ற பேறு தன் படைப்பும் பெற வேண்டும் என்று பகவானை வேண்ட அங்கேயே வைகுந்தநாதன் என்ற திருப்பெயருடன் எம்பெருமான் அர்ச்சாரூபமாக கோயில் கொண்டருளினான். அதன் காரணமாகவே அத்தலமும் 'திரு வைகுந்தம்' என்னும் பெயர் பெற்றது.

பின்னால் இந்திரன் இத்தல மகிமையை நாரத முனிவர் மூலம் கேள்வியுற்று, இத்தலத்துக்கு வந்து, திருமாலை வணங்கி அத்தலத்திலுள்ள 'கலசம்' என்னும் தீர்த்தத்தில் நீராடி, பலன் பெற்றான்.

இவ்வாறு தேவதைகளால் பூசிக்கப் பெற்ற வரலாறு ஒரு புறம் இருக்க, பிரமன் வேண்டுகோளின்படி பரமன்

மனிதர்க்கும் இலக்கானான் என்றும் ஒரு வரலாறு காண்கின்றது. கால தூஷகன் என்பவன், களவையே தொழிலாகக் கொண்டவன். எனினும் இறையன்பு மேலிட்டவன். ஆகவே தினமும் தன் தொழிலுக்குப் புறப்படுமுன், தான் வெற்றியோடு திரும்பினால் அன்று கிடைத்த கொள்ளைப் பொருளில் பாதியை இறைவனுக்குக் காணிக்கையாக அளித்து விடுவதாக சபதம் செய்து, அவ்வாறே செய்து, வெற்றிகரமாகத் தொழில் நடத்தி வந்தான். ஒரு சமயம், அவன் தன் தோழர்களுடன் அவ்வூர் அரசன் கோயிலைக் கொள்ளையடிக்கப் போயிருந்த போது இடையே காவலாளிகள் விழித்துக் கொண்டார்கள். காலதூஷனும், சிலரும் தப்பி விட, ஒரு சிலர் காவலாளிகளிடம் சிக்கிக் கொண்டனர். அவர்கள் வாயிலாக அரசன் காலதூஷகனைப் பற்றி அறிந்து, அவனைப் பிடித்து வரும்படி பணியாட்களை ஏவினான். இதனையறிந்த காலதூஷகன், வைகுந்தநாதன் கோயிலுக்குச் சென்று, தன்னை இந்த ஆபத்தினின்றும் அவன் தான் காக்க வேண்டுமென்று மனமுருகி வேண்டினான். இறைவனும் அவன் மன உருக்கத்திற்கு இரங்கி, அவனுக்கு அபயம் அளித்து, நானே காலதூஷகன் வடிவில் அரசன் பணியாட்களிடம் சிக்கி, அரசன் முன்னிலையில் கொண்டு வரப்பட்டான். அரசன் அவனை நோக்கி ஏன் திருடினாய் என வினவ, அரசனிடம் இறையன், தத்துவ விசாரம் செய்தான். அதை வியப்புடன் கேட்ட அரசன், இவன் சாதாரணக் கள்வன் அல்லன், இறையம்சம் பொருந்தியவன் என்பதை யுணர்ந்து அவனுடைய உண்மை உருவைக் காட்டுமாறு பணிந்துவேண்ட, இறைவனும் அவ்வண்ணமே தன் உண்மை யுருவை அவனுக்குக் காட்டி, தான் அவ்வுருக்கொண்ட வரலாற்றையும் கூறி, காலதூஷகனையும் அரசனுக்கு நண்பனாக்கி மறைந்தான். இவ்விதம், கள்வர் தலைவனைக் காக்க கள்வர் தலைவனாகத் தோன்றியமையின், இப்பெருமானுக்கு "கள்ளர்பிரான்" என்ற காரணப் பெயர் அவ்வரசனாற் சூட்டப்பட்டது. இதுதான் இத்தலத்தைப் பற்றிய வரலாற்றுத் துணுக்குகள். இன்னும் சில வரலாறுகள் இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. இப்பெருமான் பிருது சக்ரவர்த்திக்கு பிரத்யக்ஷம் ஆனான் என்று ஒரு குறிப்பு கூறுகிறது. ஆனால் அதன் முழு வரலாறு அறியக் கிடைக்கவில்லை. பிரமன் தவம் செய்ததாக வரலாறு கூறும். ஆனால் பிரமனுக்கு பிரத்யக்ஷமானதாகக் குறிப்பில் கூறப்படவில்லை. எனவே இவை துணுக்குகளின் சேர்க்கையே. முழு வரலாறு அல்ல என்பதை அறியலாம்.



(இறைவன் திருநாமம், கள்ளப்பிரான், வைகுந்தநாதன்; தேவி: வைகுந்தவல்லி, தாமிரபர்ணி, பிருதுதீர்த்தங்கள்; கிழக்கே திருமுகமண்டலம்; நின்ற திருக்கோலம் இந்திரனுக்கும் பிருதுசக்ரவர்த்திக்கும் பிரத்யக்ஷம்.)

## 2. வரகுண மங்கை

ஸ்ரீவைகுந்தத்தையடுத்து கிழக்கே இத்தலம் உள்ளது. இப்பொழுது **நத்தம்** என்று அழைக்கப்படுகிறது. ஸ்ரீ வைகுந்தத்திலே நின்ற வண்ணம் காட்சியளிக்கும் பெருமாள் அடியார் நிலாகின்ற அவ்வைகுந்தத்தில் வீற்றிருப்பதுபோல், இருந்த திருக்கோலத்தில் காட்சியளிக்கிறான். இத்தலம் பற்றிய புராண வரலாறு ரசமானது. ஒரு அந்தணன் பகவான் நின்று காட்சியளிக்கும் திருவைகுந்தத்தின் தொலைவிலே நின்று, அவன் 'அருளார் திருச் சக்கரத்தால், அகல்விசும்பும் நலனும் இருளார் வினைகெட'த் தனிக்கோல் செலுத்தி வீற்றிருக்கும் இருப்போடு தனக்குக் காட்சியளிக்க வேண்டிக் கடுந்தவம் புரிந்தான். அவன் வேண்டுகோளுக்கு இரங்கி இறைவனும் வீற்றிருக்கும் திருக்கோலத்திலே காட்சியளித்தான். அவ்வந்தணன் வேண்ட அந்நிலையில் அர்ச்சா உருவிலே இன்னும் காட்சியளிக்கிறான். அந்தணன் தவம் செய்து பேறுபெற்ற இடமாதலில் அத்தலத்துக்கே ஒரு மகிமை ஏற்பட்டது. வெகு காலத்துக்குப் பின், லோமசர் என்னும்

முனிவர் தன் சீடன் ஒருவனுடன் இத்தலத்துக்கு வந்து தவம் செய்து கொண்டிருந்தார். அப்போது ஒரு வேடன் அருகில் உள்ள நீர் நிலையில் வலை வீசி ஏராளமாக மீனைப் பிடித்தான். பேராசையினால் மீண்டும் வலைவீச அவன் செய்கையில் ஒரு கொடிய பாம்பு அவனைத் தீண்டியது. வேடன் மயங்கி அவ்விடத்திலேயே விழுந்து உயிர் துறந்தான். அவனது உயிரைக் கந்தருவர்கள் விமானத்தில் ஏற்றி அழைத்துச் சென்றனர். இதையனைத்தையும் கண்ட லோமச முனிவருடைய சீடன், தன் குருவிடம் போய், “உயிர்களைக் கொலை செய்து உண்டு ஊன் வளர்க்கும் இவ்வேடனுடைய உயிரை, கந்தருவர் விமானத்தில் ஏற்றிச் செல்லக் காரணம் யாது?” என்று கேட்டான். ரோமசரும் இது இத்தலத்தின் மகிமை. எத்தகைய பாபியானாலும் இந்த திவ்ய தேசத்திலே உயிர் பிரியப்பெற்றால் அவ்வுயிர் பாபம் நீங்கி, நற்கதி பெறும் என்று கூறினார்.

(எம்பெருமான் திருநாமம்: விஜயாஸனன்: தாயார் வரகுணவல்லி, விஜயகோடி விமானம், தேவபுஷ்கரிணி, அக்னி தீர்த்தம், கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம்.)

இங்கும் வரலாறு முழுவதுமில்ல. தீர்த்தம் அக்னியின் பெயராலான வரலாறு கிடைக்கவில்லை. இந்த பூமியிலே பகவான் அர்ச்சாரூபியாக விரும்பி வாழும் தலங்கள் பற்றிக் கூறுமாறு கேட்க இவ்வரலாற்றை விச்வசகன் என்னும் அரசனுக்கு சநக முனிவர் கூறினதாகப் புராணம் கூறுகிறது.

மேற்சொன்ன அதிசயமான கதையை விச்வசகன் மிகவும் பக்தி சிரத்தையுடன் கேட்பதைக் கவனித்த சநகர் மேலும் சொன்னார்.

### 3. திருப்புளிங்குடி

இந்த வரகுணமங்கைத் தலத்திற்கு வடக்கே சற்று தூரத்தில் முன்காலத்தில் ஒரு ரமணீயமான மணல் திட்டும் சோலையுமிருந்தது. அதன் அழகில் ஈடுபட்டு



“ஒண்டொடியாள் திருமகளுடன் வைகுந்தநாதன் ஏகாந்தமாக அங்கே கேளிக்கையாயிருந்தான். அந்தத் தெய்வீக தம்பதிகளின் உல்லாச விளையாட்டைக் கண்டு பரந்தாமனின் மற்றொரு தேவியான பூமிபிராட்டி ரோஷம் கொண்டாள். படிப்படியாக அந்தப் பொறாமை விஷம் ஏறி, தான் செய்வதின்னதென்று அறியாமல், உலகனைத்தையும் தாயாக நின்று தரிக்கவேண்டிய அவள், பூமியைத் திரஸ்கரித்து, பாதாளம் சென்று விட்டாள். அதனால் எல்லா உலகங்களும் வறண்டு, உயிர்கள் கண் சுழன்று துடிதுடித்தன. தேவர்கள் பகவானிடம் சென்று முறையிட்டார்கள். பரந்தாமனும் காரணத்தையுணர்ந்து முறுவல்செய்து பாதாளம் சென்றான். அவன் மட்டுமல்ல. திருமகளும் சென்றாள். - அவள் காரணமாகத் தானே பூமி தேவி இவ்விதம் ரோஷம் கொள்ள நேரிட்டது! -இருவரும் போய்ப் பாதாளமெங்கும் தேடிக் கடைசியில் பூமிதேவியைக் கண்டு சமாதானப்படுத்தினார்கள். பூமிதேவியின் திருவுள்ளத்தில் அந்த ரமணீயமான தலத்தின் அழகு குடிகொண்டு விட்டதை உணர்ந்து பகவான் ஸ்ரீ தேவி பூதேவியிருவருடனும் மீண்டும் அந்தச் சோலைக்கே எழுந்தருளி அங்கே பாதாளமெங்கும் அலைந்த அலுப்புத்தீர சயனித்திருந்தான். இரு தேவியரும் அவனது திருவடிகளை வருடி சிரம பரிகாரம் செய்தார்கள். இந்தச் சேர்த்தியழகை சேவித்த தேவரும் முனிவரும் இந்த சேவை நித்தியமாக சேவை சாதிக்கிறார். அந்த இடமும் அருகிலுள்ள தீர்த்தமும் மிகவும் முக்கிய புண்ய ஸ்தலங்களாயின. பூமிதேவிக்கு அருளிய தலமாதலால் அதற்கு பூமி பாலனக்ஷேத்ரமென்றும் இறைவனுக்கு பூமிபாலன் என்றும் பெயர் ஏற்பட்டது.

ஒருக்கால், இமயச்சாரலில் இந்திரன், ‘இந்திராணியுடன் அச்சாரல் அழகை ரஸித்துக் கொண்டிருக்கையில், மான்வடிவில் ரமித்துக் கொண்டிருந்த ஒரு ரிஷி தம்பதிகளின் மேல் வஜ்ராயுதத்தால் அடிக்க அத்தம்பதிகளில் ஆணானது இருக்க வேண்டும் என்று பிரார்த்திக்க பகவானும்

தேவியருடன் அங்கேயே அர்ச்சா மூர்த்தியாக நித்தியமாக ரிஷியாய் விழக் கண்டான். உடனே துடிதுடித்து பிரம்மஹத்தியால் பீடிக்கப்பட்டவனாய் அப்பாவம் தொலைய வழிநாடி, கடைசியில் இந்த க்ஷேத்திரத்தில் வந்து ரிஷிகளோடு பெரிய வேள்வி யொன்றினையாற்றி அந்த தீர்த்தத்தில் அவப்ருதஸ்நானம் செய்து பாவம் நீங்கப்பெற்றான்.

இப்படியாக தீக்ஷையிலிருந்த இந்திரனை சில அரக்கர்கள் வந்து நலியப்புக்கார்கள். தீக்ஷையிலிருந்த இந்திரன், தான் போர்புரிவது தீக்ஷாபங்கமாகுமாதலால் ஒன்றும் செய்யாதிருக்க, அது கண்ட பகவான் அரக்கர் மேல் சினந்து தன் கதையைக் கடாக்ஷிக்க, அக்கௌமோதகியின் அடியால் அரக்கர் அனைவரும் அழிந்தார்கள். அவர்களில் ஒருவன் முன் ஜன்மத்தில் பல யாகம் செய்து பலன் பெற வேண்டிய தருணத்தில் குருவுக்கு யாக தக்ஷிணை அளிக்க மறந்த குற்றத்தால் அரக்கப் பிறவி பெற்றவன். அவன் அப்பாபம் நீங்கப் பெற்றதும், முன் செய்த பாவ புண்யத்தின் பலனாக ஸ்வர்க்கம் புகுந்தான். இந்த தலத்தில் மரித்த காரணத்தினால் அவன் அரக்கர் பிறவி மாய்ந்தது. இவ்வளவு பெருமையுடையது இந்த க்ஷேத்திரம் என்று சநகர் கூற அரசனும் அவரை வணங்கி இத்தலத்தில் எம்பெருமானுக்கு விசேஷமாக திருப்பணிகள் பல செய்து புண்யமடைந்தான்.

பூமிபாலன க்ஷேத்திரம் என்று வடமொழியால் பெயர் பெற்ற இந்த க்ஷேத்திரத்தின் இயல் தமிழ்பெயர் ‘திருப்புளிங்குடி’ என்பது. குருகூரிலிருப்பது போன்று ஒரு பிரஸித்தமான புளியமரம் ஒன்று இங்கும் ஒரு நாளில் இருந்திருத்தல் கூடும்.

(எம்பெருமான் பெயர். காசினிவேந்தன், தேவியர், மலர் மகள் நாச்சியார், புளியங்குடி வல்லித்தாயார்: வருணதீர்த்தம், நிருதி தீர்த்தம்; கிழக்கே திருமக மண்டலம்; பள்ளிகொண்ட திருக்கோலம்; வருணனுக்கும் நிருதிக்கும் பிரத்யக்ஷம்.)



பூமிபாலன் என்ற வடமொழிப் பெயர் காசினிவேந்தன் எனத் தமிழாகியிருக்கிறது. ஆனால் ஆழ்வார் பாசுரத்தில் ‘காய்சினவேந்து’ என்பதுதான் இறைவன் திருநாமமாகக் காணப்படுகிறது. இரண்டுமே பொருந்தலாம். பூமிப்பிராட்டிக் கருளினமையின் காசினிவேந்தனானார். தீக்ஷையிலிருந்ததால் ஒன்றும் செய்ய முடியாத இந்திரனை நலிந்த, அரக்கரைக் காய்ந்த சினந்தையுடையவனாதலின் காய்சின வேந்தானான்.

தீர்த்தங்கள் இரண்டும் வருணன், நிருதி என்ற திக்பாலகர் பெயராலமைந்ததன் காரணமும், அவ்விருவருக்கும் பகவான் பிரத்யக்ஷமான வரலாறும் இப்பொழுது கிடைத்துள்ள குறிப்புகளில் கிடைக்கவில்லை.

இவை தான் இம்மூன்று தலங்களையும் பற்றி யான் முயன்ற வரை கிடைத்துள்ள புராண வரலாறுகள். இதே போல் மற்றைய ஆறு தலங்களின் வரலாறுகளையும் ஓரளவு தெரிந்து கொண்டு அப்பால் ஆழ்வாரின் ஆன்ம வாழ்வில் இத்தலங்கள் எவ்வாறு தொடர்பு பெற்றன வென்பதைத் தொகுத்து ஆராய்வோம்.

## 4. தென்குளந்தை (பெருங்குளம்)

விசுவசகனின் ஆர்வம் பெருகி வருவதைக் கண்ட சனகர் மேலும் கூறுவார். அரக்கனே! உன் பக்தி பாராட்டுதற்குரியது. இன்னும் கேள்! பூமிபால க்ஷேத்திரத்திற்கு (புளிங்குடி) வட கிழக்கே, தென்குளந்தை என்ற பெயர் பெற்ற க்ஷேத்திரம் இருக்கிறது. அங்குள்ள பெரிய தடாகத்தை வைத்து அந்த க்ஷேத்திரம் அப்பெயர் பெற்றது. அவ்வூரில் முன்னாளில் வேதசாரன் என்கிற அந்தணன் மனைவியுடன் வாழ்ந்து வந்தான். அவன் சிறந்த வைணவன்- வெகு காலம் மகப்பேறில்லாமல் வாடிய அவ்வந்தணனும், அவனது மனைவியும் கடவுளை வேண்ட கடவுளருளால் அவர்களுக்குக் கமலாவதி என்ற பெண் குழந்தை பிறந்தது. திருமகள் போல்

அழகுடைய அப்பெண் கொடியை அவர்கள் மிகவும் செல்வமாக வளர்த்தார்கள். அவளும் தன் வளர்த்தியோடு பகவானிடம் அன்பும் வளர உரிய பருவம் எய்தினாள். மணம் கொள்ளும் பருவமடைந்த மகளை, உரிய கணவன் ஒருவனுக்கு மணம் செய்விக்க வேண்டுமென்று தக்கான் ஒருவனைத் தேடத் தலைப்பட்டனர், தாய் தந்தையர். இதையறிந்த கமலாவதி மனம் புழுங்கினாள். அவளுடைய உள்ளத்தில் மாதவனை மணாளனாக வரித்து, அடைந்தால் அவனையே கணவனாகப் பெற வேண்டும். இல்லையேல் மணமின்றியே உயிர் துறப்பது என்று உறுதி கொண்டிருந்தாள். தன் உள்ளக்கிடக்கையை அறியாத தாய் தந்தையரிடம் ஒரு நாள் துணிந்து "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழ கில்லேன்" என்று வெளியிடவும் செய்தாள். ஆனால் அவர்கள் இது இளம்பிள்ளையின் வெற்றுமொழி என்று அசட்டை செய்து தங்கள் முயற்சிலேயே ஈடுபட்டார்கள். அது மட்டுமல்ல, மகளுக்கும் அவள் உறுதியில் ஏலாத் தன்மையையும் பற்றி உபதேசிக்கத் தலைப்பட்டார்கள். இதனால் மனம் வெதும்பிய கமலாவதி அவர் உறவை அறுத்துக் கொண்டு, தன் உறுதிப்படி பலன்பெற வேண்டி, கொடிய நோன்பியற்றினாள். அவள் உறுதியைக் கண்டு வியந்த அச்சுதன், அவள் முன்னே தோன்றி, "ஏன் இவ்வாறு தவம் செய்கிறாய்" என்று வினவினான். அவ்விளங்கொடியும், தன்னுடைய மன உறுதியையும், பின் நிகழ்ந்தவற்றையும் இறைவனிடம் கூறினாள். இறைவனும் பலவாறாக அவள் உறுதிப்பாட்டை சோதித்து தெளிந்து கொண்டு, அம்மங்கையை அவனுடன் இணைத்து தன்னுடைய மார்பிலே விளங்கும் கௌத்துப மணியோடு அமர்த்திக் கொண்டான்.

இதைத் தரிசித்த தேவர்கள், மலர் சொரிந்து வாழ்த்தி, அத்தலத்திற்கும் 'பாலிகாவனம்' என்று பெயர் சூட்டிச் சென்றார்கள். இவ்வரலாற்றை அறிந்த கமலாவதியின் பெற்றோர்கள், அங்கு வந்து இறைவன் திருமார்பில் தங்கள் மகள் விளங்குவதைக் கண்டு பெருமகிழ்ச்சி எய்தினர்.



இவ்விதம் மகிழ்வெய்திய அப்பெற்றோர்கள் அங்கு எம்பெருமானை நாள்தோறும் மலர் தூவி, அர்ச்சித்து, அதன் பலனாக பல புத்திர பௌத்திரர்களைப் பெற்றுக் குறைவின்றி வாழும் நாளில் ஒரு நாள் அவ்வந்தணன் மனைவியான குமுதவதியானவள் குளத்தில் நீராடச் சென்றிருந்தாள். வழியில் அசுமசாரன் என்ற ஓர் அரக்கன் அவளை வலிந்து பற்றி விண் வழியே சென்று இமயச் சாரலில் ஒரு குகையில் அவளைச் சிறை வைத்து விட்டான். இதைக் கேள்வியுற்ற வேதசாரன் இறைவன் பால் சென்று கலச தீர்த்தத்தால், திருமஞ்சனம் செய்து, தன் மனைவிக்கு நேர்ந்த கதியை, எம்பெருமானிடம் விண்ணப்பித்து "எம்பெருமானே! மனைவியில்லாதவன் ஒருவித நற்செயலுக்கும் உரியன் அல்லனே! நான் என் நாட்களை எவ்வாறு கழிப்பது? தேவரீர் தான் அவளை மீட்டுத் தர வேண்டும்" என்று பிரார்த்தித்தான். இறைவனும் உடனே அங்கிருந்த கருடன் மீது ஏறி இமயம் சென்றான். அசுமசாரன் வெளியே சென்றிருந்தான். குகையில் சிறையிருந்த குமுதவதியை எம்பெருமான் கொண்டு சென்று, வேதசாரரிடம் ஒப்புவித்தான். அரக்கன் திரும்ப வந்து, குகையில் குமுதவதியைக் காணாமல் நடந்ததை ஞானத்தினால் தெரிந்து நேரே பாலிகாவனம் வந்து எம்பெருமானுடன் போர் புரிந்தான். இறைவனும் விளையாட்டாக அவனோடு போராடி அப்பால் அவனைத் தூக்கித் தரையில் அறைந்து காளியன் தலையில் நடனமாடியதுபோல அவ்வரக்கன் தலையில் நடனமாடினான். இதைக் கண்ட விண்ணவர்கள் எம்பெருமான் திருவடிகளைக் கங்கா ஜலத்தினால் அபிஷேகம் செய்து வணங்கினார்கள். ஏற்கனவே பெரிதாக இருந்த தடாகம் மேலும் பரந்து பெருக்கெடுத்துப் 'பெருங்குளம்' என்றும் பெயர் பெற்றது. மாயம் செய்த அரக்கன் தலையில் நடனம் செய்த

இறைவனுக்குத் தேவர்கள் “மாயக்கூத்தன்” என்று பெயர்சூட்டி மகிழ்ந்தார்கள். அதிலிருந்து அத்தலம் தென்குளந்தை எனப் பெயர் பெற்றது.

(எம்பெருமான் பெயர்-மாயக்கூத்தன்; தாயார் திருநாமம்-குளந்தவல்லி; பெருங்குள தீர்த்தம்; ஆனந்தநிலைய விமானம்; நின்ற திருக்கோலம்; பிரஹஸ்பதிக்குப் பிரத்யக்ஷம்.)

இங்கும் பிரஹஸ்பதிக்கு பிரத்யக்ஷமான வரலாறு என்ன என்பது தெரியவில்லை.

## 5-6. துலைவில்லிமங்கலம்-இரட்டைத் திருப்பதி

திருப்புளிங்குடிக்கு கிழக்கே சுமார் 3 கல் தூரத்தில் துலைவில்லிமங்கலம் என்ற க்ஷேத்திரம் இருக்கிறது. இதனை இரட்டைத் திருப்பதி எனவும் கூறுவர். இரண்டு இடங்களில் இறைவனுக்குக் கோயில் உள்ளமையால் இரட்டைத் திருப்பதி என்று பெயர். ஆதியில் இத்தலம் ‘கேதார நிலையம்’ என்னும் பெயரை உடையதாய் இருந்தது. முன்னொரு காலத்தில் ஆத்திரேய சுப்பிரபர் என்பவர் அங்கே ஒரு வேள்விச்சாலையை நிறுவி, அதில் ருத்துவிக்குகளுடன் அந்த வேள்விச் சாலையைச் சோதனம் செய்யும்போது, அங்கு ஒளி மயமான ஒரு தராசும், வில்லும் கிடைக்கக் கண்டனர். சுப்பிரபர் மிகவும் ஆச்சரிய முடையவராய் இவ்வில்லும், துலையும் எம்மானுடையதோ என்று ஐயுற்றுமிகுந்த பயபக்தியோடு அவற்றை எடுக்கச் சென்றார். அவர் கைப்பட்ட அளவில் அத்தராசு ஒரு எழில்மிக்க மங்கையாக மாறியது. சுப்பிரபர் வியப்பு மேலிட்டு வில்லைத் தொடலும் அது ஒரு அழகிய ஆண் மகனாக மாறியது. அங்கு கூடியிருந்தோர் அவ்விருவரையும் பார்த்து ‘நீங்கள் யார்? எதனால் இத்தகைய நிலையை அடைந்தீர்கள்’? என்று வினவினர். அந்த ஆண்மகன் அவர்களை வணங்கி, “பெரியோர்களே! நாங்கள் விஞ்சையர்கள். இவள் என் அருமை மனைவி. நானும் இவளும் கேளிக்கையாக இருக்கும்பொழுது அவ்வழி வந்த குபேரனை எங்கள் இன்ப மயக்கில் கவனியாது இருந்துவிட்டோம். குபேரன் கோபங்கொண்டு என்னையும், என் மனைவியையும் வில்லும் தராசுமாகும்படி சபித்துவிட்டான். நாங்கள் பதறிப் போய் எங்கள் பிழையைப் பொறுத்தருளி இச்சாபம் நீங்க, வழியும் கூறவேண்டும் என்று வேண்டினோம். குபேரன் இந்தத் தண்டனை உங்களுக்குத் தக்கதே என்றாலும், கேதாரநிலைய க்ஷேத்திரத்தில் ஒரு வேள்விச்சாலையில் அந்தணன் கைதீண்டப் பெறுவீர்கள் என அருளிப்போனான். அன்று முதல் இன்றளவும் நாங்கள் மிகவும் துன்பமுற்று, இன்று உங்கள் அருளால் மீண்டும் எம் வடிவு பெற்றோம். எங்களுக்குப் போக விடையருள வேண்டும்” என்று அவர்களை வணங்கித் தம் இடம் சென்றனர். அந்த அதிசயத்தில் மூழ்கின அவ்வந்தணர்கள் துலையும், வில்லுமாகத் தோன்றி எல்லோரையும் மகிழ்வித்தபடியால் அவ்விடத்திற்கு, துலைவில்லிமங்கலம் எனப்பெயர் சூட்டினர். அப்பால் அவர்கள் தொடங்க இருந்த வேள்வியைக் குறைவற நடத்தினார்கள். தேவதைகள் ஒவ்வொருவரும் தங்கள் அவியைப் பெற்றுச் செல்ல, முடிவில் தோன்றிய தேவநாதனை அவ்வந்தணர்கள் அப்புண்யத்தலத்திலேயே நித்யவாசம் செய்யும்படி வேண்ட, அத் தேவநாதனும் அவ்வேண்டுகோளை ஏற்று, அங்கேயே அர்ச்சயாக எழுந்தருளினான்.



இத்தலத்திற்கு வடக்கே பத்மாகர தடாகம் என்ற ஒரு தாமரைப் பொய்கை இருந்தது. வேள்விச்சாலையில் எழுந் தருளிய பகவானை குளிர்நீராட்ட சுப்பிரபர் எழுந்தருளி வித்தார். அங்கே பகவானை உபசாரம் பண்ணி அவனை நோக்கி இப்பொய்கையில் செந்தாமரைகளையும் தேவரீர் திருக்கண் தாமரைகளையும் ஒத்திட்டு அழகு பார்த்து சேவிக்கும்படி இங்கும் நித்தியமாய் எழுந்தருள வேண்டு மென்று வேண்டினார். எம்பெருமானும் அவ்வந்தணனது பத்தியையும், ரசனையையும் பாராட்டி அவர் விருப்பத்தின்படி அரவிந்தலோசனன் என்னும் திருநாமத்தோடு அங்கு கோயில் கொண்டருளினார். பகவானின் நியமனத்தின்பேரில் அந்த

சுப்பிரபர் நாள்தோறும் தாமரை மலர்களால் எம்பெருமானை அருச்சித்து வந்தார்.

முன் சுப்பிரபர் செய்த வேள்வியில் அசுவினி தேவதைகளுக்கு அவிசு கொடுக்கப்படவில்லை. அவர்கள் நான்முகனை நண்ணி, தங்களுக்கு வேள்வியில் அவியுணா கிடைக்கும்படி அருளவேண்டும் என்று வேண்டினார்கள். நான்முகன், "உங்களைப் போல் இரட்டையராக எம்பெருமான் கோயில் கொண்டிருக்கும் தொலைவில்லி மங்கலப்பதிக்குச் சென்று, அங்கு எழுந்தருளியிருக்கும் தேவபிரானையும் அரவிந்தலோசனனையும் நோக்கித் தவம் செய்வீர்களானால் உங்கள் எண்ணம் ஈடேறும்" என்று கூறினார். அசுவினி தேவர்கள் அப்படியே இத்தலத்திற்கு வந்து செந்தாமரைப் பொய்கையில் நீராடி, இரு கோயில்களிலும் உள்ள எம்பெருமான்களைத் தொழுது தவம் செய்யத் தலைப்பட்டனர். இறுதியில் எம்பெருமான் அவர்கள் முன் தோன்றினார். அவனிடம் அசுவினி தேவர்கள் தங்கள் குறையைக் கூறி அதை நீக்க வேண்டுமென்று எம்பெருமானை வேண்டினர். அவர்கள் தவமுடிவைக் காணத்தேவரும், முனிவரும், அந்தணரும் கூடியிருந்தனர், எம்பெருமான் அவர்களது பக்தியைமெச்சி, மற்றைய தேவர்களைப் போலவே அசுவினி தேவர்களுக்கும், வேள்வியில் அவியுணா அருளப்பட வேண்டுமென்று உறுதி செய்தான். தவிர அவர்கள் தினம் நீராடி பலன் பெற்ற அத்தாமரை தடாகத்திற்கு 'அசுவினி தீர்த்தம்' என்று பெயர் விளங்குக என்று அருளி இறைவன் மறைந்தான். அசுவினி தேவர்களும் மனநிறைவு பெற்றவர்களாய் தம்மிடம் சென்றனர்.

இமயத்திற்குத் தெற்கில், கங்கை நதிக்கரையில் அகளங்கம் என்று ஓர் ஊர் இருந்தது. அதில் சத்தியசீலன் என்ற ஒரு அந்தணன் இருந்தான். அவனுக்கு வன்னிசாரன், சுவர்ணகேது விபீதகன் என்ற மூன்று பிள்ளைகள் பிறந்தனர்.



அவர்கள் விவாகமாகி இல்லறம் புக்கபின் சத்தியசீலன் மரணமானான். அம்மூன்று பிள்ளைகளும் ஒருவருக்கொருவர் மிக நேசமுடையவர்களாய் வாழ்ந்து வந்தனர். அவர்களில் விபீதகனுக்கு எப்படியோ குஷ்டரோகம் ஏற்பட்டது. அவனுடைய மற்ற இரு சகோதர்களும் எவ்வளவோ சிகிச்சை செய்த போதிலும் விபீதகனுடைய நோய் சிறிதும் குறையாமல், மாறாக நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. சகோதரர்கள் மிகவும் வருந்தி கையற்று நிற்கையில் நாரத முனிவர் அவர்கள் முன் தோன்றினார். அவ்விரு சோதரரும் அவரை உபசரித்து வணங்கி விபீதகனுடைய நோயின் கொடுமையை அவருக்கு உரைத்து, அது தீரும் உபாயம் கூற வேண்டும் என்று வேண்டினர். நாரதர் தன் ஞானக்கண்ணால் நோக்கி, இவன் முற்பிறவியில் அந்தணனாகவே பிறந்தான். இருந்தும் குருவினுடைய பசுவை அபகரித்தான். குருவின் சாபத்தினால் அந்த நோயை அனுபவிக்கிறான். இதற்கு மருந்து கிடையாது. ஆனால் ஒரே ஒரு கழுவாய்தான் உண்டு. அவனை எப்படியாவது தென்திசையில் பொருநையாற்றின் கரையில் உள்ள துலைவில்லிமங்கலம் கொண்டு சென்று அங்குள்ள அசுவினி தீர்த்தத்தில் தினந்தோறும் நீராட்டி, அங்கு கோயில் கொண்டிருக்கும் தேவபிரான், அரவிந்தலோசனன் என்ற இரு எம்பெருமான்களை வழிபடச் செய்தால் இந்நோய் படிப்படியாக நீங்கும் என்று கூறி மறைந்தார். சகோதரர்கள் இருவரும் சிறிதும் மனம் சலிக்காமல் இமயத்திலிருந்து தென்கோடிக்கு வருவதில் உள்ள சிரமத்தையும் பொருட்படுத்தாமல் விபீதகனை அசுவினி தீர்த்தத்தில் நீராட்டி, கோயிலில் எம்பெருமானைச் சேவிக்கப் பண்ணினர். இப்படியே சிலநாள் நடக்க அவன் நோய் முற்றும் தீர்ந்து அவன் தன் பண்டைய வடிவைப் பெற்றான்.

(இரட்டைத் திருப்பதி எம்பெருமானின் இரு மூர்த்திகளின் திருநாமங்கள் தேவபிரான், அரவிந்தலோசனன்; திருத்தாயார் திருநாமம்-கருத்தடங்கண்ணி; குப்தவிமானம்;

தாமிரவருணிநதி அசுவினி வருண தீர்த்தங்கள், கிழக்கே திருமுகமண்டலம் முறையே நின்ற, வீற்றிருந்த திருக்கோலங்கள்; இந்திரன், வருணன், வாயு இவர்களுக்குப் பிரத்தியக்ஷம்)

இதில் இந்திரன், வருணன், வாயு இவர்களுக்கு பிரத்தியக்ஷமான வரலாறும், வருணதீர்த்தம் வந்த வரலாறும் கிடைக்கப் பெறவில்லை.

## 7. திருக்கோளூர்

துலைவில்லி மங்கலத்திற்குத் தெற்கே சிறிது மேற்குத் திசையில், தண்பொருணையாற்றின் தென் கரையில் இத்தலம் அமைந்துள்ளது. வடமொழியில் இவ்வூரின் பெயர் 'அதர்ம பிசுனம்' என்று கூறப்படுகின்றது. அதாவது மரம் இழிவு பெற்ற இடம் என்று பொருள். தலம் மிகவும் உளங்கவரும் சூழ்நிலையில் அமைந்துள்ளது. சுற்றிலும் தோப்பும், துரவும் அவற்றைச் சூழ நெற்கழனியும் அமைந்து நல்ல நீர்வளத்தோடு விளங்குகிறது. ஊரைக்கண்டாலே, ஒருவன் உளத்திலும் உடலிலும் உள்ள சோர்வு நீங்கும். இங்குதான் எம்பெருமான் மற்ற விடங்கள் போலன்றி நன்றாக நீட்டி நிமிர்ந்து தன் இருபுயங்களையும் மேலே தூக்கி மடித்து இரு கைகளையும் தலையின் கீழ் வைத்து அயர்வு நீங்கக் கிடக்கும் பாணியில் பள்ளி கொண்டிருக்கிறான். புளிங்குடியில் கிடக்கை போன்றுதான் இங்கும். இவ்விரண்டு தலங்களிலும் அவன் கிடந்ததோர் கிடக்கை க்ஷீராப்திக் கிடக்கை போலவன்று, அரங்கத்தே அரவணையில் கிடந்தது போலன்று, இது சோர்வு நீங்க, தக்க குளிர்ந்த ரமணீயமான சூழ்நிலையுள்ள இடம் தேடி உடல் சாய்ந்தபடி என்று தான் ஆழ்வார் கருதியிருக்க வேண்டும். அதன் காரணமாகவே ஆழ்வார் திருவாக்கில்,

**"கொடியார் மாடக்கோளூ ரகத்தும் புளிங்குடியும்**
**மடியாதின்னே நீதுயில் மேவி மகிழ்ந்துதான்**
**அடியாரல்லல் தவிர்த்த அசைவோ அன்றேல்இப்**
**படிதான் நீண்டுதாவிய அசைவோ பணியாயே"**

***(திருவாய் மொழி 8- 3- 5)***

என்ற 'வாய்மொழி' வெளி வந்தது.



இத்தலந்தான் ஆசார்ய நிஷ்டையின் சிகரத் தேறிய ஸ்ரீ மதுரகவி ஆழ்வாரைத் தோற்றுவித்தது. வகுளாபரண பாஸ்கரோதயத்தை வடக்கிருந்தே தரிசித்து அவ்வொளியைப் பற்றி வந்து சடகோபனைக் கண்டு, தெளிந்து தன்னை அவனுக்கு அடிமையாக்கிய பெரியார் அவர். அம்மகான் அவதரித்த தலம் நம்மாழ்வாரை மிகுதியும் ஈடுபடுத்தியது. இவ்வூர்த் தல வரலாறு சற்று சுற்றிச் சுழற்றிக் காணப்படுகிறது. அது வருமாறு:-

கைலையிலே உமை, தன்னை எழில் இலங்க அணி செய்து கொண்டு சிவபெருமானுடன் தனித்து இருந்தாள். அன்று உமையம்மையாரின் தோற்றம் வியப்பை உண்டாக்கும் வண்ணம் அமைந்திருந்தது. சிவபெருமானின் உயிர் நண்பனான குபேரன் கைலைக்கு வந்தான். குபேரனுக்கு சிவபெருமான் கோயிலினுட்செல்ல என்றுமே அனுமதி தேவையில்லை. தன் இயல்பிலே உள்ள புக்க குபேரன், பெருமானும், உமையும் தனித்திருந்த இடத்திற்கே வந்து விட்டான். முதலில் உமையை மட்டும் பார்த்த குபேரன் அவளுடைய அலங்காரத்தினால் அவளை அடையாளம் கண்டு கொள்ளாமல், இப்பேரெழில் படைத்தவள் யார் என்று கூர்ந்து நோக்கினான். அதைக் கண்ட பார்வதி சினந்து அக்குபேரனை செல்வம் அனைத்து இழந்தவனாகவும், கண்டார் வெறுக்கும் இழிவடிவுடையவனாகவும் ஒரு கண் இழந்தவனாகவும் ஆகுமாறு சபித்தாள். சாபம் பற்றியதும் குபேரன் தன்னறிவு பெற்றவனாய், தன் செயலுக்கு மிக வருந்தி, சிவபெருமானிடம் நிகழ்ந்ததை விண்ணப்பித்தான். நடந்ததை உணர்ந்த ஈசனும், தன் நண்பனை நோக்கி, 'நீ உமையிடமே சென்று, மன்னிப்புக் கோர வேண்டும்' என்று கூறிவிட்டார். குபேரன் உமையம்மையைக் குறித்து தவம் செய்யச் சென்றான்.

அம்மையின் சாபத்தால் அளகேசனை விட்டு அகன்ற ஒன்பது நிதிகளும் பொருணையாற்றின் தென் கரையிலுள்ள

இவ்வூர் எம்பெருமானை நோக்கித் தவம் கிடந்து தங்களை வைத்துக் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டின. எம்பெருமான் அவற்றின் முன் தோன்றி, வினவலும், அவை உமை, குபேரனை சபித்ததையும் தங்களுடைய ஆதரவற்ற நிலையையும் கூறி, தங்களைக் காக்க வேண்டும் என வேண்டின. எம்பெருமான் அவற்றிடம் இரங்கி, அவைகளை நோக்கி, 'அங்குள்ள தீர்த்தத்தில் நீராடினால் எல்லாத் தீவினைகளும் நீங்கும், எனவே இத்தீர்த்தத்தில் நீராடி, இங்குள்ள வனத்தில் வாசம் செய்வீர்களாக என்று அனுக்ரகித்தான். அந்நிதிகளும் அவ்விதமே செய்து அங்கேயே தங்கின. அதனால் அத்தீர்த்தம் 'நிதிதீர்த்தம்' என்றும், அவ்வனம் 'நிதிவனம்' என்றும் பெயர் பெற்றன. அந்நிதிகளை யெல்லாம் சேமித்துப் பாதுகாத்த காரணத்தால், 'வைத்த மாநிதி' எனப் பெயர் பெற்றான் எம்பெருமான்.

முன் காலத்தில் அறமானது, மறத்தால் நலியப் பெற்று, தங்க இடம் பெறாமல், இந்நிதி வனத்தில் எழுந்தருளிய எம்பெருமானைச் சரண் அடைந்து இவ்வூரிலேயே ஒளிந்து இருந்தன. மறம் மல்கி வருவதைக் கண்ட தேவர்கள், அதைக் குலைக்க விரும்பினர். தருமத்தை எங்கும் நாடி, இறுதியில் இத்தலத்தில் இருப்பதை அறிந்தனர். உடனே தருமத்தை அழித்துவிட்டதாக மார்தட்டிய அதர்மத்திடம், தேவர்கள் தர்மம் இங்கு இருப்பதை உணர்த்தினர். அது கேட்டு அதர்மம் ஆரவாரத்தோடு, இவ்வூருக்கு வந்தது, தர்மம் அதர்மத்தை வென்றது. அதனால் இவ்வூர் 'அதர்மபிசுனம்' (மறம் இழிவுற்ற இடம்) எனப்பெயர் பெற்று இருந்தது.

குபேரன் வெகு காலம் தவம் செய்த பின் உமாதேவி அவனுக்குப் பிரத்யட்சமானாள். குபேரன் அவளை வணங்கித் துதித்துத் தன் வடிவம் முன்போல் ஆக வேண்டும் என்றும், தான் இழந்த செல்வமனைத்தும் மீண்டும் தன்னை வந்தடைய வேண்டும் என்றும், அவ்விதம் சாபநீக்கம் அருளுமாறும் வேண்டினான். பார்வதியும் அவன்பால் அருள் பாலித்து அவனை நோக்கி, "வைச்சிரவணனே மனத்துக் கண் மாசுடன், அன்று என்னை உன் கடைக்கண்ணால் நோக்கினாய். நான் தான் என்று உனக்குத் தெரியாமல் இருக்கலாம். எனினும் உன் குற்றம் மன்னிக்க முடியாததுதான். எனவே உன் ஒரு கண் போனதுதான். உடல் குறை நோய் பற்றியது பற்றியதே. அது மாறாது. ஆனால் உன் செல்வம் கிடைக்க ஒரு வழி உண்டு. அவை அனைத்தும் பொருணைக் கரையிலே உள்ள மறைவிழிவுறு பதியின் கண் எழுந்தருளியுள்ள பெருமானிடம் அடைக்கலம் புக்கிருக்கின்றன. நீ அங்கு சென்று அப்பெருமானை நயப்பித்து, அவற்றைப் பெற முயல்வாயாக, எனக்கூறி, மேலும் சொல்வாள், இன்னும் கேள் குபேரனே, மேற்சொன்ன பொருநை நதியானது என் உடலிலிருந்து தோன்றியது. இவ்வாற்றங் கரையில் பகவான் உன்னுடைய நவநிதிகளின் மேல், அவற்றுக்குப் காப்பாக சயனித்திருக்கிறான். அத்தலம் விசேடமானது. அங்கு போய் பலன் உண்டா என ஐயுற வேண்டா. முன்பொரு காலத்தில் வியாச பரம்பரையில் உதித்த சுவிருதன் என்ற அந்தணனுக்கு தருமதத்தன் என்ற மைந்தன் இருந்தான். அவன் பிருகுவமிசத்திலுதித்த ஒரு பெண்ணை மணந்து எட்டுப் புதல்வர்களையும் இரண்டு பெண்களையும் பெற்றான். ஆனால் புலபுலெனக் கலகலென மக்களைப் பெற்ற அவன் அவர்களைக் காக்க வழியின்றி கைவிடவும் மனமற்று, தன் வறுமையை எண்ணி நொந்தான். மனைவியும் மக்களுமே தன்னைப் பழிக்கும்நிலை ஏற்பட்டுவிடக் கூடுமோ என்று அஞ்சியவனாய் நர்மதை நதிக்கரையில் தவமாற்றும் பரத்துவாச முனிவரைக் கிட்டி வணங்கி, தன் நிலையை உரைத்து அதற்கு ஒரு கழுவாய் கூறுமாறு வேண்டினான் அப்பரத முனியும் தன் ஞானக் கண்ணால் அவனை நோக்கி அவன் நிலையின் காரணத்தைக் கண்டார். பின் அவனை நோக்கி, "அப்பா! நீயும் முற்பிறவியில் அந்தணனாகவே இருந்தாய். அப்போது உன்னிடம் செல்வம்

கொழித்திருந்தது. ஆனால் நீ அச்செல்வத்தை வெளிக்காட்டாது மறைத்துப் புதைத்திருந்தாய், உன் உற்றார் துன்புறுங்காலத்து அவர்களுக்கு ஒன்றுங்கொடாது வறுமை வேடம் போட்டாய். உன் செல்வத்தைப் பற்றிக் கேள்வியுற்ற அரசன் உன்னை அழைத்து உன்னிடம் எவ்வளவு செல்வமுள்ளது என்று வினவ நீ உன்னிடம் யாதும் கிடையாதென்று கையை விரித்தாய். நீயாவது நன்றாக உண்டுடுத்து அச்செல்வத்தைத் துய்த்தாயா? அதுவுமில்லை. கண்டவிடமெல்லாம் திரிந்து மேலும் பொருளீட்டுவதில் முனைந்ததுமன்றி உன் உடலையும் பிறர் சோற்றாலேயே வளர்த்தாய். இந்நிலையில் நீ மறைந்து வைத்திருந்த பொருளையெல்லாம் கள்வர் தட்டிக் கொண்டுபோய் விட்டனர். நீ வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டு புலம்பினாய். உன் சுற்றம் உன்னை இகழ்ந்தது. நீ அப்படியே கொஞ்ச நாள் அலைந்து மாண்டாய், பின் சில காலம் நரகவேதனை அடைந்து மீண்டும் அந்தணனாகப் பிறந்திருக்கிறாய் இம்மையிலும் துன்புற்றாய். ஒரு வழி கூறுகிறேன். தெற்கே "அதர்ம பிசுனம்" என்னொரு தலமிருக்கிறது. அங்கு குபேரனுடைய நவநிதிகளும் பகவான் திருவடிக் காப்பிலிருக்கின்றன. அப்பெருமானைச் சேவித்தால் உனக்கு ஏதேனும் பலன் கிடைக்காமல் போகாது" என்று கூறினார். தர்மதத்தனும் அப்படியே இந்தத் தலத்தை அடைந்து வைத்தமாநிதியை வணங்கி அங்கே அடிமைத் தொழில் பூண்டு கிடக்க, அப்பெருமானருளால் அவனுக்கு மீண்டும் செல்வம் பெருகிற்று. பழைய தவறை நினைந்து அவன் பலவிதமான அறம் செய்து புகழ்பெற்றான். ஆகையால் நீயும் அங்கே சென்று, வேண்டினால் பலன் பெறுவாய்" என்று பார்வதிதேவி கூறி மறைந்தாள்.

அந்த ஆணையைச் சிரமேலேந்தி குபேரனும் இத்தலத்துக்கு வந்து நிதி தீர்த்தத்தில் நீராடி பகவானை அனேகவிதமாக வேண்டலும் பகவான் "உன் தனம் யாவும் இனி உன் பால் வராது. ஒரு பாகம் தான் உனக்குக் கிடைக்கும்" என்று கூறி மறைந்தார். அதன்படி பழஞ்செல்வத்தில் ஒரு பாகம் மட்டும் பெற்றுக் குபேரன் தன் நகரை அடைந்தான். குபேரனுக்கு வைத்தமாநிதிமுன் தோன்றிய நாள் மாசித் திங்கள் வளர்பிறைத் துவாதசியாகும். குபேரன் நீராடிப் பேறெய்திய காரணத்தால் அத் தீர்த்தம் குபேர தீர்த்தம் என்று பெயர் பெற்றது. அன்று அங்குள்ள அப் புண்ணிய தீர்த்தத்தில் நீராடி எம்பெருமானை வணங்குபவர் பொருளோடு இறையருளும் பெறுவர்.



இவ்வூர்த் தலபுராண வரலாற்றில் இதற்கு அதர்ம பிசுனக்ஷேத்ரம் என்று பெயர் காண்கிறது. நெல்லை மாவட்டக் கோயில் வரலாறு என்ற ஒரு நூலில் இவ்வூர்ப் பெயர்க்காரணம் பற்றி "கோள்-கொள்கை, புறக்கூறல். புறங்கூறிப் பகை கொண்டிருந்த சேரசோழ பாண்டியர், ஒன்றுபட்டு வாழ்வதே சிறந்த கொள்கை என்று ஒன்றுகூடி சிவபெருமானை வழிபட்ட இடம் இது. அதனால் கோள் ஊர் என இரு பெயர் பெற்றது. இவ்வூர் சிவலிங்கப் பெருமான் பெயர் சேர சோழ பாண்டீசர் என இருப்பது இவ்வுண்மையைப் புலப்படுத்தும்" என்று கூறுகிறது. ஆனால் பார்வதி சாபத்தால் குபேரனை விட்டு நீங்கித் தாம் க்ஷேமமாக இருக்க இடம் தேடி அலைந்த நிதியம் (திரு) கொள்ளப்பட்ட திருக்கோளூர் என்று கொள்வது பொருந்தும்.

*(எம்பெருமான் பெயர்-வைத்த மாநிதி, தாயார் கோளூர்வல்லி, ஸ்ரீ கரவிமானம், குபேரதீர்த்தம்; தாம்ரபர்ணி நதி கிழக்கே திருமுகமண்டலம்; அரவணைப் பள்ளித் திருக்கோலம்; குபேரனுக்கும், ஸ்ரீ மதுரகவி யாழ்வாருக்கும் பிரத்யக்ஷம்.)*

## 8. தென் திருப்பேரை

இது திருக்கோளூருக்கு இரண்டு மைல் கிழக்கே பொருணையாற்றின் தென்கரையிலே உள்ள தலம். இங்குள்ள

கோயில் புராதனமானது. ஊர் தலவகார அந்தணர் நிறைந்தது. இவ்வூரின் பெயர் திருப்பேரையா, திருப்பேரெயிலா என்பது பற்றி அறிஞரிடையே இன்னும் ஒரு முடிவு ஏற்படவில்லை. ஆனால் புழக்கத்தில் திருப்பேரை என்றுதான் இவ்வூர் வழங்கப் பெறுகின்றது.

திருமகள் கேள்வனுக்கு ஒரு சமயம் ஒரு அபூர்வ யோசனை தோன்றியது. நமக்கு எப்போதும் திருமகள் கேள்வன் என்றும், திருமால் என்றும் இலக்ஷ்மியை இட்டே பெயர் விளங்குகிறது. அவளைப் போல பூமிதேவியும் இருக்க அவள் பெயரை இட்டு நம்மை ஒருவரும் அதிகம் அழைப்பதில்லை. அகல்கில்லேன் இறையும் என்று இலக்ஷ்மி தான் நம்மைவிடாது பற்றியிருக்கிறாள். ஆனால் பூமிதான் நம் திருமேனியோடு ஒட்டிய நிறமுடையவள். ஆகவே பூமியின்பேரில் நாம் கொஞ்சம் விசேஷ பரிவு காட்ட வேண்டியதுதான். அப்போது இலக்ஷ்மி என்ன செய்கிறாள். பூமிதான் நம் விசேஷ அன்பை எப்படி ரஸிக்கிறாள் பார்ப்போமே" என்பது தான் அந்த எண்ணம். அதன்படி இலக்ஷ்மியைக் கொஞ்சம் உதாசீனம் செய்து பெருமான் பூமிதேவியுடன் அதிகமாகக் கூடிக்குலவத் தலைப்பட்டான். இலக்ஷ்மிக்குப் பொறாமை விஞ்சியது. நாயகனைக் கேட்பதும் இழிவு. எனவே உள்ளேயே பொருமி வந்தாள். வெகுகாலமாகத் தன்னையொழித்து.

**"அழைக்கும் கருங்கடலே வெண்டிரைக்**
**கைக்கொண்டு போய் அலர்வாய்**
**மழைக்கண் மடந்தை அரவணை**
**ஏற மண்மாதர்**
**விண்வாய் அழைத்துப் புலம்பி**
**முலைமலைமேல் நின்றும் ஆறுகளாய்**
**மழைக்கண்ண நீர்"**

அருவிசெய்யா நின்றவளாதலின் பெறாப்பேறு கிட்டியபோது பூமிதேவி அதனை முட்டூற்றாக அனுபவித்தாள்.



பெருமாளும் இவ்விருவர் மனநிலையையும் உள்ளே உணர்ந்து ரசித்து வந்தார்.

திருமகள் பொருமல் எல்லை மீறியது, உடனே அவள் துர்வாசரிடம் சென்று தன் குறையைக் கூறினாள். துர்வாசருக்கு இலக்ஷ்மியிடம் பக்தி அதிகம். அவள் மாலை ஒன்றை யானை அலக்ஷ்யம் செய்துவிட்டமைக்காக இந்திரன் செல்வம் கடலினுட்புகச் செய்தவரல்லவா அவர். அவர் இதன் காரணத்தை ஆராய்ந்தார். வெகுநாள் இந்தப் பொன்னியுடன் இருக்கிறோம். பூமி என் நிறத்தோடிருக்கிறாள். அவளைக் கொஞ்சம் விசேஷ கடாக்ஷம் செய்ய வேண்டுமென்று நினைத்திருப்பாரோ என்று தோன்றியது. அதை இலக்ஷ்மியிடம் சொன்னார் அவளுக்குள் தன் நாயகனுக்கும் தன் நிறமொகம்தான் காரணமாயிருக்கலாம் என்று தெரிந்தது, எனவே அவள் துர்வாசரிடம் அவளையும் என்னிறமாக்கிவிடு" என்று கூறினாள். துர்வாசரும் புறப்பட்டு பூமிதேவியின் கோயில் புக்கார். அவர் புக்க காலையில் பூமிதேவி தன் கரிய கோலம் பகவானை மயக்கியதில்தான் மயங்கிச் செருக்குற்று, தன் நாயகன் மடிமீதேறியிருந்தாள். துர்வாசர் வந்ததும் தன் மயக்கில் கீழிறங்காதிருக்கவே கோபத்தால் பெயர் படைத்த முனிவர் சீறி "உன் சக்களத்தியின் நிறம் பெறுவாயாக" எனச் சபித்தார். உடனே பூமிதேவியும் பூமகள் போல பொன்னிறம் பெற்றாள். உடனே மனம் நடுங்கி அவள் முனிவரிடம் நான் அறியாமையால் செய்த பிழையை நீர் பெரிதாகக் கொள்ளக்கூடாது. என் நிறம் யான்பெற ஒரு உபாயம் நீரே அருளவேண்டும் என்று வேண்டினாள். அவரும் இந்நிறம் சிலகாலம் இருந்தே தீரும். பின் பொருநைக் கரையில் உள்ள அரிபத க்ஷேத்திரத்தில் உள்ள நதியில் நீராடி பெருமானை வணங்கினால், உன் பழைய கருமையழகு உனக்கு வரும் என்று கூறிச் சென்றார். தான் செய்ததை இலக்ஷ்மியிடமும் கூறிப்போனார். அரவணையிலே பெருமான் சயனித் திருக்கையில் அவன் திருவடிகளை இரு தேவியரும்

இருமருங்குமிருந்து பிடிக்கையில் பூமியும் தன்னைப்போல் நிறம் பெற்றிருப்பதைக் கண்ட திருமகள் தன் உள்ளே மகிழ்ந்து துர்வாசரைப் புகழ்ந்தாள்.

இப்படிச் சில காலம் சென்றது. பின்பு ஒரு நாள் பூமிதேவி முனிவர் வாக்கை உட்கொண்டு தன் பழைய நிறம் பெறவும் நாயகன் அன்பைப் பெருக்கிக் கொள்ளவும் எண்ணி துர்வாச முனிவர் உபதேசித்த திருவெட்டெழுத்தை உச்சரித்து "பேரை" என்ற பெயர் பூண்டு பங்குனித் திங்களில் மதிநிறை நன்னாளில் அரிபத க்ஷேத்தேரத்தில், நதியில் தர்ப்பணம் செய்ய முயன்றபோது மீன் வடிவமான இரு காதணிகளைக் கண்டாள். அவற்றைக் கையிலெடுத்து, அவற்றின் அழகை வியந்து, இவை நம் நாயகனுக்கே தகும் என்று எண்ணவும், நிகரில்-முகில்வண்ணன் என்ற பெயருடன் அவ்வூரில் எழுந்தருளி யிருக்கும் எம்பெருமான் அவள் முன் தோன்றி எனக்கே இவற்றை சமர்ப்பி" என்று கூறினார். அவளும் மிக மகிழ்வெய்தி அவவ்விரு மகரக்குழைகளையும் எம்பெருமானுக்கு அணிவித்தாள். அப்போது அந்தரத்தில் துந்துபி முழங்கியது. வானவர் அக்குழைகளோடு இறைவனை வணங்கி மலர்மாரி பொழிந்தனர். அக்குழைகளை அணிந்த காரணத்தால் இறைவன் "மகரநெடுங்குழைக் காதன்" எனப் பெயர் பெற்றான். அவை கிடந்த தீர்த்தம் மகரதீர்த்தம் எனப் பெயர் பெற்றது. நிலமகள் "பேரை" என்று பெயருடன் பயன் பெற்ற இடமாதலின் அவ்வூரும் "திருப்பேரை" எனப்பெயர் பெற்றது. மண்மகளும் தன் நிறம் பெற்றாள்.

முன் ஒரு காலத்தில் இந்திரனால் முறியடிக்கப்பட்ட அசுரர்கள் மேல்திசையில் வருணனிடம் தம் கோபத்தைக் காட்டி அவனை அவன் நகரை விட்டே விரட்டி விட்டனர். வருணன் தோல்வியடையக் காரணம் முன்னே குருவான வசிஷ்ட சாபத்தால் அவனுடைய பாசப்படையை இழந்ததுதான். கணவனது பரிதாப நிலையைக் கண்ட வருணன்



மனைவி அவனை மீண்டும் குருவைப் பணிந்து பரிகாரம் பெறப் புத்தி கூறினாள். வருணனும் வசிஷ்டன் திருவடிகளில் வணங்கித் தன் குறையைச் சொன்னான். குரு "உன் கெடுமதியால் இவ்வளவும் பட்டாய். உன் பாசமும் நகரமும் கிடைக்க வழி சொல்கிறேன் கேள். தெற்கே பொருநைக் கரையிலே பேரை என்று ஒரு தலமிருக்கிறது. அங்கே பூதேவியுடன் எம்பெருமான் எழுந்தருளியிருக்கிறான். நீ மகர தீர்த்தத்தில் நீராடி எட்டெழுத்தால் எம்பெருமானை ஏத்தினால் உன் கவலை ஒழியும்" என்று உபதேசித்தார். அவ்விதமே வருணனும் தன் மனைவியுடன் இத்திருப்பதிக்கு வந்து நீராடிப் பெருமானை வழுத்தி பங்குனிப் பௌர்ணமியில் அப்பெருமானுக்குத் திருமஞ்சனம் செய்து வழிபட பகவானும் அம்மஞ்சன நீரில் கொஞ்சம் கையிலெடுத்து விடவும் அதுவே பாசமாயிற்று. வருணன் அதைப் பெற்றுப் போய் அதன் பலத்தால் அசுரரை வென்று தன்நகரையும் பெற்றான். ஒவ்வொராண்டும் பங்குனிப் பூரணையில் வருணன் வந்து பகவானுக்குத் திருமஞ்சனம் செய்து போகிறான்.

பின்பொருக்கால் விதர்ப்ப தேசத்தில் மழையின்றி வறட்சி ஏற்படவே அரசன் சோதிடரைக் கொண்டு காரணத்தை ஆராயப் புகுந்தான். சோதிடர் ஆராய்ந்து இது தெய்வ கோபம். இதற்குப் பரிகாரம் திருப்பேரை எம்பெருமான் திருவுளம் உகப்பப் பூசிப்பது தான் என்று கூறினர். அரசனும் அவ்விதம் இத்தலத்துக்கு வந்து தன் பரிவாரங்களுடன் மகர நெடுங்குழைக்காதனைப் பகுவிதமாக ஆராதனம் செய்ய அதன் பயனாய்த் தீங்கின்றி அவன் நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து செல்வம் கொழித்தது.

(எம்பெருமான் திருநாமங்கள்-மகர நெடுங் குழைக்காதர், நிகரில் முகில்வண்ணன்; தாயார் குழைக்காதவல்லி நாச்சியார்; பத்திரவிமானம்; சுக்ரபுஷ்கரணி; கிழக்கே திருமுக மண்டலம்; வீற்றிருந்த திருக்கோலம்;

சுக்ரனுக்கும், பிரமனுக்கும் பிரத்யக்ஷம்; ஈசான்ய ருத்ரனுக்கும் பிரத்யக்ஷம்;) புஷ்கரணிப் பெயர்க் காரணம் தெரியவில்லை. மூவருக்கும் எப்போது எங்கு எவ்வாறு பிரத்யக்ஷமானார் என்ற விவரமும் கிடைக்கவில்லை.

மேலே சொன்ன அதி அற்புதமான கதையைக் கேட்ட விசுவசகன் சனகரை வணங்கி "சுவாமீ! எட்டுத் திருப்பதிகளின் மகிமையை விளக்கினீர்கள். ஒன்பதாவது தலத்தின் பிரபாவத்தையும் அருளிச் செய்ய வேணும்" என்று பிரார்த்தித்தான். சனகரும் புன்முறுவலோடு "அரசனே! உன் விருப்பம் மிக நல்லதே. இந்த நவ திருப்பதிகளில் மிகச் சிறந்ததாகிய தலத்தின் வரலாறு மிக விரிவானது, சுவையுள்ளது; கவனமாகக் கேள்" என்று கூறத் தொடங்கினார்.

## 9. திருக்குருகூர் (ஆழ்வார் திருநகரி)

முன் சொன்ன திருக்கோளூர்ப்பதிக்குச் சற்று மேற்கே பொருனையின் தென்கரையிலே உள்ளது ஒன்பதாவது திருப்பதியாகிய குருகூர் என்னும் தலம். முன்னொரு காலத்தில் வியாச பகவானை வணங்கி அவர் குமாரர் என்று கூறப்படும் சுகப்பிரம முனிவர் குருகூர் மகிமையைப் பற்றிக் கூறவேண்டும் எனப் பிரார்த்திக்க வியாசர் கூறுவார்:-

பரந்தாமனுக்கு விபூதிகள் இரண்டு. ஒன்று போகத்துக்கு, மற்றொன்று லீலைக்கு. முன்னையது விரஜாநதிக்கு அப்புறமுள்ளது. பின்னையது அந்நதிக்கு இப்பாற்பட்டது. முன்னையது நித்தியமானது. நாராயணன் தன் அலகிலா விளையாட்டாக இந்த லீலா விபூதியைச் சிருட்டித்து, ஆன்ம வஸ்துக்களை அதிலே விளையாட விட்டுப் பார்த்துப் பின் எல்லாவற்றையும் சங்கரித்துத் தன்னுள்ளே ஒடுக்கிக் கொள்கிறான். இப்படி முன் ஒருகால் யாவும் அவனுள்ளே ஒடுங்க அப்பால் அவன் அவற்றை மீண்டும் சிருஷ்டிக்கத் திருவுளம் பற்றித் "தன்னுள்ளே நான்முகனை மூழ்த்த நீருலகெல்லாம் படை என்று முதல்" படைத்தான். அந்த



நான்முகனும் அப்படைப்புக்குப் பூர்வ அங்கமாக நாராயணனைக் குறித்துத் தவம் செய்ய பகவானும் அவனுக்கு முன் தோன்றினார். பிரமன் அவரை வணங்கி "பெருமானே! தேவரீரை வணங்குகிறேன். எத்தனையோ யுகங்கள் கல்பங்கள் இப்படியே நடந்து கழிந்தன. இந்த லீலா விபூதியிலுள்ள பாகவதர்கள் என்றென்றும் தங்களைக் கண்டு தரிசிக்க வாய்ப்பாகத் தேவரீர் ஆங்காங்கே அர்ச்சாவதாரம் செய்தருளி நித்திய வாசம் செய்ய வேணும்" என்று வேண்டினான். பெருமாளும், "பிரமனே! உன் உள்ளக்கிடக்கை நமக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. அண்ட சிருஷ்டிக்குப் பின் உன்னைப் படைக்கு முன் நாம் நோக்கினோம். சம்புத்தீவில் பரதகண்டத்தின் தென் கோடியில் தாம்பரவருணி என்ற நதி ஓடுகின்றது. அதன் தென்பால் நமக்கு மனரம்மியமான ஒரு இடத்தைப் பார்த்தோம். அங்கே நாம் நித்திய வாசம் செய்கிறோம். ஆதியிலே நாம் ஆசைப்பட்ட இடமாதலின் அதற்கு ஆதி க்ஷேத்திரம் என்று பெயரிட்டோம். இனி இந்த அண்ட சிருஷ்டி காலத்துக்கு நாம் அங்கேயே தங்கி அங்கிருந்தே நம் காத்தல் தொழிலை நடத்துவோம். அவதாரங்களையும் செய்வோம். நீ வந்து நமக்கு நாள்தோறும் பூசை செய்வாயாக" என்றருளிச் செய்தார்.

பிரமன் மீண்டும் பணிந்து "சுவாமீ! அடியேன் பேறுபெற்றேன். அடியேனுக்கு இன்னுரை வழங்கும்போது குருகாத்திர தெரிசனம் என்று அருளிச் செய்கையால் அப்பதிக்குக் குருகை என்று பெயர் விளங்க அனுமதிக்க வேண்டும்" என்று வேண்டினார்.

பகவானும் "அப்படியே ஆகட்டும் அயனே! அந்தப்பதியின் சுற்றலும் ஒரு யோசனை தூரத்துக்குப் பரிசுத்த பூமியாயிருக்கும். எவ்வகைப் பாவமும் அணுகாது. அங்கே எல்லாத் தீர்த்தங்களிலும் மேலான தீர்த்தம் இருக்கும். பூதம் பிரேத பிசாசுகள் அணுகாது. நீ இங்கு வந்து நம்மை அர்ச்சிக்கக்

கடவாய். உன் விருப்பம் ஈடேறப் பின்னொருகால் ஒரு பத்தனையிட்டு அங்கே அர்ச்சாவதாரனாய் என்றும் இருப்போம். உன்னுடைய பகல் முடிவில் ஏற்படும் பிரளயம் அந்தப்பதியைப் பாதிக்காது. மீண்டும் சிருஷ்டிக்கும்போது இப்பதி அப்படியே இருக்கும். இப்படி உன் முதல் பரார்த்தம் போய் இரண்டாம் பரார்த்தத்தில் ஏழாவது மனு அந்தரத்தில் இருபத்தெட்டாவது சதுர்யுகத்தில் கலி பிறந்த நாற்பத்து மூன்றாநாள் நம்முடைய பக்தன் வடிவாய் நாமே அவதாரஞ் செய்து வேதங்களின் உண்மைப் பொருளைப் பலரும் அறிய வெளியிட சங்கல்பித்துள்ளோம். அதனை உணர்ந்து அந்த பக்தனை வழிபட்டு அவர் உபதேசப்படி ஒழுகுபவர்களை கலிநலியமாட்டாது. அவர்கள் நமக்கு இனியராய் இங்கு வாழ்ந்து பின் நித்திய விபூதியிலே நம் பெரிய திருவோலக்கத்தை யடைவார்கள்'' என்று அருளி மறைந்தார். பிரமனும் மிகவும் மனச் சாந்தியும் மகிழ்வும் பெற்றவனாய் அந்த ஆதிக்ஷேத்திரமான குருகூருக்கு வந்து அங்கே தங்கி நாராயணனை ஆராதித்துப் பின் சத்தியலோகம் போனான்.

வியாசர் இவ்வாறு கூறி முடிக்க சுகர் அவரை மீண்டும் வணங்கி "ஐயனே! தலம் வந்த வரலாறு மிகவும் ஆச்சரியமானது. அதற்குப் பின் எத்தனை யுகங்கள் கழித்து விட்டனவே. இவற்றுக்கிடையில் எத்தனையோ புகழ்பெற்ற, அதிசய நிகழ்ச்சிகள் அங்கே நிகழ்ந்திருக்குமே. அவற்றில் கொஞ்சமேனும் அடியேன் அறிய அருள வேண்டும்'' என்று இரந்தார். வியாசர் கூறுவார்:-

முன்காலத்தில் முனிவர்கள் அனைவரும் தலயாத்திரையாக புறப்பட்டு ஒவ்வோரிடமாக நீராடி நிமலனை வழிபட்டு வந்து கொண்டிருந்தவர்கள் இந்தத் திருப்பதியை அடைந்தார்கள். அங்கே தாம்பரவருணியில் ஒரு துறையிலே நீராடி இறைவனை வணங்கிச் சில நாள் தங்கினார்கள். அப்போது ஒருநாள் பல்லாயிரம் சங்கங்கள்



சூழ்ந்த வலம்புரிச்சங்கொன்று நதி வழியே வந்து அத்துறையிலே ஏறி அழகாக வலம்புரி முன்னா அணிவகுத்து ஆதிநாதவேதியை பிரதட்சணம் செய்து வணங்கி மீண்டும் அத்துறை வழியே நதியில் இறங்கி மறைந்தன.

மற்றொரு நாள் ஒரு யானையும் வேடனும் தமக்குள் போரிட யானை மடிந்தது; வேடனும் மாண்டான். அவ்விரு ஆத்மாக்ளையும் விஷ்ணு தூதர்கள் வந்து அழகிய விமானத்தேற்றிச் செல்வதை முனிவர்கள் கண்டனர். விஷ்ணுதூதர் சென்ற சிலவிநாடிகளில் அங்கே முனிவர்கள் ஆச்சரியம் தீருமுன்பே இந்திர தூதர்களும் யமபடர்களும் வந்தார்கள். ஒருவரை ஒருவர் வினவ யமபடர்கள் கூறுவர்:- இந்த யானை முற் பிறப்பில் மானிடனாக வாழ்ந்து கணக்கில்லாப் பாவம் புரிந்திருக்கின்றது. அந்தப் பாவத்தின் பலனாகவே விலங்காய்ப் பிறந்தது. இன்னும் எஞ்சிய பாவங்களுக்காக எத்தனையே பிறவிகள் எடுக்க வேண்டும். வேடனாக வந்தவனோ உயிர்வதையே பொழுதுபோக்காக வாழ்ந்து பாவம் செய்தவன். அதற்குரிய நரக வாழ்வை அவன் வாழ்ந்து தீர வேண்டும். அவர்கள் இருவரையும் கொணர நாங்கள் வந்தோம். நீங்கள்?''

இந்திர தூதர்கள் அதுகேட்டு "இரண்டு பேரும் சூரர்களாய் நின்று போர் செய்து போரில் பட்டவர்களாதலாலே அவர்களை வீர சொர்க்கம் கொண்டு செல்ல யாம் வந்தோம். இப்போதே நம்மிருவரையும் நிற்க வைத்து விஷ்ணு தூதர்கள் அவர்களைக் கொண்டு போய் விட்டார்கள்'' என்று கூறினர். "முனிவர்கள் மேலும் ஆச்சரியடைந்து நிற்கையில் வானொலி யொன்று எழுந்து "முனிவர்களே! படைப்பு நாள் தொட்டு இந்தத் திருப்பதி ஸ்ரீமந் நாராயணன் திருவுள்ளம் உவந்த தலமாதலால் இந்த மண்ணிலே உடலைவிடும் ஆன்மாக்கள் வீடு பேறு பெறும்'' எனக்கூறியது. அது கேட்டு இந்திர, யமதூதர்கள் தம் வழியே

போனார்கள். முனிவர்கள் மேலும் வியப்பில் மூழ்கி நிற்க அங்கே வசிஷ்ட முனிவர் வந்தார். முனிவரை உபசரித்து வணங்கி அவ்வூரில் தாங்கள் கண்ட அதிசயங்களை (வலம்புரி முன்னா சங்குகள் அணி வகுத்ததும், விலங்கும் வேடனும் விமானத்தேறிச் சென்றதும்) அவரிடம் கூறி அத்திருப்பதியின் மகிமைகளைக் கூற வேண்டும் என்று இரந்தனர். வசிஷ்டர் கூறுவார்:-

அரிக்ஷேத்திரமான சாளக்கிராம மலைச் சரிவிலே ஒரு அந்தணன் அனேகம் மாணவருக்கு மறையோதிக் கொண்டிருந்தான். அம்மாணவருள் ஒருவன் இத்தனை மறைகளை ஓதிப் பயன் என்ன என்று நினைத்தான். எத்தனையே தடவை குரு சொல்லியும், தண்டித்தும் கேளாமல் அவன் தன் ஐயத்தை விடவில்லை. குரு கோபித்து "நீ மறு ஜன்மத்தில் வேதம் கற்க இயலாத குலத்தில் பிறப்பாயாக" என்று சாபம் இட்டார். அம்மாணவனோ அதைப் பற்றிக் கொஞ்சமும் மனத்தில் கலையுறாமல் அங்கிருந்து போய் நெடுந்தொலை அலைந்து ஒரு விஷ்ணுத் தலத்தைச் சேர்ந்தான். அங்கே கோயிலைச் சுற்றி வளர்ந்திருந்த புல்லை வெட்டிப் பசுமாடு வைத்திருப்போர்க்கு விற்று வாழ்ந்தான். இவனை இறைவன் விசேஷ கடாட்சம் செய்து நமக்கு கைங்கர்யம் பண்ணினான் என்று மதித்து அவன் பெற்றிருந்த சாபத்தையும் எண்ணி, மறுபிறப்பில் குரு சாபமிட்ட குலத்தில் பிறந்தாலும் பரபக்தி, பரஞான, பரமபக்திகளுண்டாகி முத்தனாவான் என்று அருள் செய்தான். அவனும் தன் வாழ்நாள் தீர மறுபிறப்பில் நான்காம் வருணத்திலே பிறந்தான். எனினும் சிறந்த அறவுணர்வுடன் வளர்ந்து, சாதுக்களுக்குக் கைங்கர்யம் செய்து வாழ்ந்துவந்தான். தாந்தன் என்பது அவன் பெயர். அவன் தீர்த்தயாத்திரையாக வந்தவன் விந்திய மலையில் ஒரு பெரிய மரநிழலில் சில காலம் தங்கி இளைப்பாறி அப்பால் தென்திசை வந்து குருகாபுரியிலே வந்து மனம் மகழ்ச்சி நிறைந்தவனானன். அவன் அங்கிருக்கையில் ஒருநாள்



அசரீரியொன்று எழுந்து "இங்கேயே நித்தியவாசம் செய்து வேதியிலே மறைவில் வதியும் இறைவனை ஆராதனம் செய். உன் குலத்தையிட்டு விலக வேண்டாம். உனக்கு மோட்சம் கிடைக்கும்" என்று கூறியது. தாந்தனும் அந்த வானொலியின்படியே நாள்தோறும் பகவானை ஆராதித்து வந்தான்.

அனேகமாக இதே சமயத்தில் அசுரர்களால் நலிவுபட்ட இந்திரன் முதலிய தேவர்கள் பிரமனைச் சரணடைந்தார்கள். பிரமன் அவர்களை நோக்கி "பூமியிலே குருகாபுரியில் வேதியிலே மறைந்து வாசம் செய்கிற ஆதிநாதனை ஆராதியுங்கள். அவர் அருளால் நீங்கள் அசுரரை அழிக்கவல்ல வலிமை பெறுவீர்கள்" என்று கூறினான். தேவர்களும் குருகைக்கு வந்து ஆதிநாதனை மலரால் அருச்சித்துப் போற்ற அவர் அருளால் மன வலிவும் உடல் வலிவும் பெற்று மகிழ்ந்தனர். அச்சமயத்திலே அதே இறைவனைப் பூசிக்கத் தாந்தன் வரக்கண்டு தேவர்கள் அவன் குலத்தையிட்டு அவனை இகழ்ந்து பாகவதாபசாரப்பட்டார்கள். தாந்தன் அவர்களை ஒன்றும் சொல்லாமல் தான் கொணர்ந்த மலர்களுடன் இறைவனிருந்த வேதியின் ஈசானதிக்கில் ஒரு கூப்பிடு தூரம் போய் அங்கே ஒரு திண்ணையைப் பண்ணி அதிலே அந்நிய தேவதையை (இலிங்கத்தை?)ப் பிரதிஷ்டித்துப் பூசை செய்தான். உடனே அவன் இதயத்திலே சங்கசக்கர கதையுடன் திருமகளுடனும் பகவான் தோன்றினார். அதே நேரத்தில் தேவதைகள் தம் பார்வையிழந்தனர். உடனே அவர்கள் நாம் அத்தண்டனை பெற என்ன பாவம் செய்தோமென்று அறியமாட்டாதவராய் ஆதிநாதனை வணங்கி வேண்ட அங்கே ஒரு காணாக்குரல் "பரமபக்தனான தாந்தனை நீங்கள் குலத்தையிட்டு இகழ்ந்தீர்கள். அவன் நான்காம் வருணத்தவனானாலும் விஷ்ணுபக்தி மகிமையால் அவன் நீங்களும் வணங்கத்தக்கவன். அவனிடம் மன்னிப்புக் கேளுங்கள்" என்று கூறியது. தேவதைகள் தாந்தன் பால்சென்று

அவனை வணங்கி நடந்ததைக் கூறித் தங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று குறையிரந்தனர். தாந்தனும் இறைவன் அருளைவியந்து தேவர்களைக் கண்குளிர நோக்கி ஆதிநாதனை மனத்தே நினைந்து அவர்கள் பார்வைபெற அவளுமாறு வேண்டி தேவர்கள் கண்பெற்று வானுலகம் சென்று அசுரரை வெற்றி கொண்டனர், சிறிது காலம் சென்று தியானத்திலே ஒன்றியிருந்த தாந்தன் முன்னே, ஆதிநாதன் நித்திய சூரிகளுடன் தோன்றி தம் பாதபங்கயத்தைத் தாந்தன் தலைக்கணியாய் அணிவித்து அவனுக்கு சாயுச்சியத்தை அருளினார். வானோர் மலர் மாரி தூவினர்.

இவ்வாறு வசிஷ்ட பகவான் கூறவும் முனிவர்கள் மிகவும் வியப்பும் மகிழ்ச்சியுமடைந்து வசிஷ்டரை நோக்கி "சுவாமீ! இத்தலத்தின் மற்ற மகிமைகளையும் சொல்ல வேண்டும். வலம்புரிச்சங்கு வழிபடுகிறதன் பொருள் என்ன?" என்று கேட்டனர்.

வசிட்டர் கூறுவார்:-

"சம்புத்தீவில் சம்புநதி தீரத்தில் சங்கன் என்ற ஒரு இருடி அரிய தவம் புரிந்து கொண்டிருந்தான். அவன் நாராயணனோடு பிற தேவதைகளையும் சமமாகக் கருதி அத்தவம் செய்தான். அத்தவத்தின் கோரத்தையஞ்சி தேவதைகள் இந்திரனோடு கலந்து ஆலோசனை செய்தார்கள். எந்த தெய்வத்திடம் எப்பலன் கருதி அத்தவம் செய்தான் என்று புரியாமல் அவர்களும் இந்திரனும் தயங்கும் நேரத்தில் நாரத பகவான் உரைப்பார்.

தேவர்களே! உங்கள் ஐயம் எனக்கு விளங்கிற்று. எனினும் இச்சங்கன் யார் என்பது தெரிய வேண்டாமா? கேளுங்கள். இவன் முற்பிறவியிலே மதாந்தன் என்னும் பெயருடைய ஒரு வேடன். விந்திய மலைச்சாரலிலே உயிர்க்கொலையே பொழுது போக்காக வாழ்ந்து வந்த கொடியவன். இவன் ஒரு நாள் மகா பாதகங்கள் பல புரிந்து பின் உடல் சோர்வுற்று ஒரு ஆல விருக்ஷத்தடியிலே கிடந்து துயின்றான். அப்படித் துயின்ற விடத்தின் மேன்மையை அவன் அறிந்தவனன்று. அம்மரத்தடி தான் முன் கேட்டீர்களே, தாந்தன் என்ற பக்தன், அவன் பாதத் துளி விசேஷமாகப் படிந்து கிடந்த இடம். அப்புண்ணியசாலி பாத துளி மேலே கிடந்த ஒரே காரணத்தால் மதாந்தன் மறுபிறப்பில் அந்தணப் பிறவி பெற்றான். எனினும் முன்னைய பாவப் பலனால் அவன் நாராயணன் பரதெய்வம் என்ற உண்மை யறியாமல் வறிதே தவம் புரிகிறான். இவ்வெண்ணம் பாவங்களிலெல்லாம் தலையாயது என்று அந்தணனாகியும் அவன் உணரவில்லை, பாவம் அவனை உணர்த்தித் திருத்துவாரும் இல்லை. நான் போய்ப் பார்க்கிறேன்.



இவ்வாறு கூறி நாரதர் சம்பு நதி தீரத்தில் உள்ள சங்கனுடைய குடிலுக்கு வந்தார். சங்கனும் அவரை வணங்கி, ஏற்று உபசரித்து நின்றான். நாரதர் அவனை நோக்கி "சங்கா நீ தவம் பண்ணுகிறாயே. எத்தெய்வத்தை நோக்கி? எப்பலன் குறித்து? எனக் கேட்டார். சங்கனும், "சுவாமி! எல்லா தெய்வங்களையும் நோக்கித் தான்" என்றான். நாரதர் "அப்படிச் சொன்னால்? தெய்வங்கள் யாவையும் ஒன்றுபோல்வனவா?" என்று கேட்க, 'ஆம். நான் அப்படித்தான் கருதுகிறேன். விஷ்ணு முதல் எல்லாத் தெய்வங்களும் சமமே. என் குறிக்கோள் ஒரு திசைகாவலனாக வேண்டும் என்பது' என்று கூறினான். இதைக் கேட்ட நாரதருக்குக் கோபம் பிறந்தது. அத்துடன் 'சங்கா நீ உவர்க்கடலிலே வலம்புரிச் சங்காகப் பிறக்கக் கடவாய்' என்ற சாபமும் பிறந்தது. கேட்ட சங்கன் நடுநடுங்கி அவர் கால்களில் வீழ்ந்து 'சுவாமீ நான் என்ன குற்றம் செய்தேன் என்னைச் சபித்து விட்டீர்களே' என்று பணிவுடன் கேட்க நாரதர் "சங்கா! நான் சூசகமாகக் குறித்துக் கேட்டும் நீ தழைத்த தண்துளவினோன் தேவர் தலைவன் என்று உணராமல் அவனைப் பிற தெய்வங்களோடு சமமாக்கிப் பேசினாய், இது உன் தவவலிவால் வந்த அலட்சியம். ஆனால் நீ இப்போது

மனம் வருந்திக் கேட்பதால் இது நீங்க வழி கூறுகிறேன். முற்பிறவியிலே நீ வேடனாய் அனேக பாவங்களைப் பண்ணினாய். இப்போது நாராயணனைப் பிறதெய்வத்தோடு சமமாக்கிப் பாவம் தேடினாய். இப்பிறவியில் நீ செய்த தவப்பயனாய் நீ பூர்வ ஜன்ம ஞானத்துடன் ஒரு சங்கு ஜன்மமெடுப்பாய். அதில் இப்பாவங்கள் நீங்கி பகவானுடைய மகிமையை யுணர்வாய். அப்பிறவியில் தாமிரபர்ணியின் தென்கரையில் காணுதற்கரியனாய். நித்திய வாசம் செய்யும் பகவானைத் தரிசித்து அவனருளாலே அவனை ஆயிரம் வருடம் பகலெல்லாம் வணங்கி வழிபட்டாயானால் அவனே நேரில் தோன்றி உனக்கு மோக்ஷமளிப்பார். அக்காலத்தில் உன் வேண்டுகோளுக்கிரங்கி அர்ச்சாமூர்த்தியாய்க் கண்ணுக்கிலக் காவார். முன்பே முதல் இருந்தவராதலின் அம்மூர்த்திக்கு ஆதிநாதர் என்றும் திருநாமம் ஏற்படும். நீ தினமும் பொருநை நதி வழியாக கடலிலிருந்து மேலேறி வந்து பகலெல்லாம் பகவானை வணங்கி அந்நதியில் அந்நதிவழியாகவே கடலிற்போய்ச் சேர்ந்து விடு. நீ ஏறிய துறையாதலில் அந்தக் குருகாபுரித்துறைக்குச் சங்கணிதுறை என்று திருப்பெயருண்டாகும். அத்துறை பாவம் நீக்கும் புண்ணியத் துறையாய்ப் பெயர் பெறும் என்று கூறி மறைந்து விட்டார்.

சங்கனும் இது கேட்டு வியப்பெய்தினான். தன் தவறை உணர்ந்தான். தன் யோக பலத்தாலே சரீரத்தை விட்டான். கடலிலே வலம்புரிச் சங்காகப் பிறந்தான். நாரதமுனி கிருபையாலே அவனுக்கு பூர்வஜன்ம ஞானமுண்டாகி தன் தவறுக்கு வருந்தி முனி உரைத்தபடி குருகைக்கு வந்து பகவானை வழிபட உன்னி நதிவழியே பல்லாயிரம் சங்குகள் புடைசூழ வந்து கரையேறினான். ஏறியவன் வடகரையிலே ஒரு தோப்பைக் கண்டு அதுதான் தலமோ என்று ஐயுற்றான். பின் முனி தென்கரை என்று கூறியது நினைவிற்கு வர மீண்டும் ஒரு கூப்பிடு தூரம் மேற்கே போய்க் கரையேறி அதுதான் தலமா என்றறிய நாரதரை நினைத்தான். முனி அவன் முன் தோன்றி



“சங்கா நீ முன் வடகரையில் கண்ட தோப்பு தாந்தன் பகவத் தியானத்திலிருந்து சித்தி பெற்றவிடம் அங்குதான் பகவான் அவனுக்கு நேரே காட்சியளித்தார். ஆனால் இறைவன் உறைவிடமென்று நாம் சொன்னது தென்கரை. இவ்விடத்திலே தென்புறமுள்ள இடம் வராகக்ஷேத்ரம் என்று பெயருடையது. அதற்கு வடக்கே வகுளவிருக்ஷ சமீபமாய் புளியமரங்களுக்குத் தலைமை தாங்கி ஒரு புளி நிற்கிறதே அது ஆதிசேஷன் அம்சமானது. அதனடியிலே பின்னால் பகவானே சடகோபன் என்ற ஒரு பக்தன் வடிவில் திருவவதாரம் செய்யப் போகிறார். எனவே நீ இம்மூன்று தலங்களையும் தினமும் வலம் வந்து வணங்கு எனக் கூறி மறைந்தார்.

அதுமுதல் சங்கராஜன் பரிவார சங்கங்களோடு தினமும் நதி வழியே வந்து இறைவனை வழிபட்டு வந்தான். அதன் பலனாக உயிர்நிலை, இறைநிலை, தக்கநெறி, ஊழ்வினை, வாழ்வு இவற்றின் தன்மையறிந்து தன்னோடொத்த மற்ற சங்கங்களுக்கும் அதை போதித்தான். பரிசுத்த ஜன்மமான அச்சங்கங்களும் அதையுணர்ந்து இறைவனைச் சரணடைந்து அவனை வணங்கி வருகின்றன. இன்னும் இரண்டு மாதங்கள் கழிந்தால் இவற்றில் விரதம் முடிவடையும். அவை மோக்ஷமடையும் வைபவத்தை நீங்களும் ஸேவித்து மகிழுங்கள் என்று கூறி வசிஷ்டர் மறைந்தார்.

இந்த அற்புத வரலாற்றைக் கேட்ட முனிவர்கள் வேட்கையும் வியப்பும் கொண்டவர்களாய் அன்றையப் பகல் கழிய இரவில் நித்திரை போனார்கள். இரவில் கனவில் ஆதிவராகப் பெருமான் பூமிதேவியை மடியிலே வைத்தவராய் அவர்களுக்கு ஸேவை சாதித்து “இப்படியேதான் இங்கே ஆதிகாலந் தொடங்கி வசிக்கிறோம். இவ்வுருவிலேதான் முன் பூமிக்கு ஞானஉபதேசம் செய்தோம். இத்தலத்தில் வாழும் எவருக்கும் பூமிதேவியின் அருளால் ஞானோதயம் உண்டாகும் என்று அருளி மறைந்தார். முனிவர்கள் பகவத் க்ருபையை

வியந்து அங்கே தங்கி அவனை ஆராதித்து வந்தனர். சிலநாள் செல்ல ஒரு பகல் சங்கராஜன் ஆராதனம் முடிந்ததும் பகவான் கருடாரூடனாய் ஸ்ரீ பூமி நிளை சகிதம் தோன்றி சேவை சாதிக்க சங்கனும், சங்கங்களும் முனிவர்களும் ஆனந்தக் கூத்திட்டு அவனை வணங்கினர். சங்கராஜன் தன் உளத்திலே பகவான் லோக க்ஷேமத்திற்காக அப்படியே அர்ச்சையில் அங்கே நித்திய வாசம் செய்ய வேணுமென்று வேண்டிக் கொண்டான். இறைவனும் சங்கராஜனை நோக்கி, "சங்கா, உன் வழிபாட்டை உவந்தோம். உனக்கும் உன்னைப் பின்பற்றி நிற்கும் மற்றச் சங்கங்களுக்கும் மோக்ஷம் தந்தோம். உன் மனோபீஷ்டப்படி இங்கே அர்ச்சாவதாரமாய் என்றும் தங்குகிறோம். நீ ஏறிய துறை இனி சங்கணிதுறை என்று பெயர் பெறுவதாக" என்று அருள சங்கராஜனும், மற்ற சங்கங்களும் தங்கள் சரீரங்களை விட்டுச் சோதி ரூபமாய் இறைவனையடைந்தன.

இத்தலத்தில் பிறப்பார் விஷ்ணுபக்தி மிக்குள்ள வராயிருப்பார்கள். இத்துறை மிகவும் தூயது. எத்தகைய பாவத்தையும் பரிகரிக்கவல்லது என வேத வியாசபகவான் சுகப் பிரம்ம ரிஷிக்கு அருளிச் செய்தார்.

"விச்வசனே! இன்னும் கேள்" என்று சனகர் கூறலானார். "முன்னொருகால் இந்திரன் தன் பத்தினியுடன் மதுபான மயக்கம் மிகுந்தவனாயிருக்க காசியபரும் அதிதிதேவியும் அங்கே வந்தனர். இந்திரன் மதுமயக்கில் அவர்களை உபசரியாமல் இருக்க காசியபர் நீ வாலிபத்தையும் செல்வத்தையும் இழப்பாய் எனக் சினந்து கூறிச் சென்றனர். உடனே இந்திரன் கிழவனானான். மனம் நடுங்கியவனாய் அவன் காசியபரை வணங்கித் தன் பிழையைப் பொறுத்து சாப விமோசனம் அருளுமாறு வேண்டினான். அதிதிதேவியும் இந்திரனுக்குப் பரிந்து கூறினாள். காசியபர் மனம் இரங்கி, "நீ தாம்ரபரணி தீரத்தில் குருகாபுரியில் ஆதிநாதரை ஸேவித்து வந்தால் சில காலத்தில் உன் கிழத்தனம் போகும். உன் செல்வமும் மீளும்"



என்று அருளினார். இந்திரன் அவ்வண்ணமே இந்த க்ஷேத்ரத்துக்கு வந்து ஆதிவராக நயினாரிடம் தன் குறையை விண்ணப்பித்து அவர் அனுமதிபெற்று திருச்சங்கணி துறையில் நீராடி மாலடியை மலரிட்டு அருச்சித்துவர ஒரு சித்திரை வளர்மதிப் பன்னிரண்டாம் நாளில் ஆதிநாதன் அவன் முன் தோன்றி அவனைத் தன் கையால் தடவ இந்திரனது கிழத்தனம் நீங்கிவிட்டது. அவன் செல்வமும் முன்போல் அவனை அடைந்தது. இந்திரன் பகவானைப் பலவிதமாகத் துதித்து மனக் களிப்புடன் தன்னுலகம் சென்றான்.

இன்னொரு அதிசய வரலாறு உண்டு. இராவணவதத்தின் பின் இராமபிரான் சில காலம் ஆட்சி புரிந்து, பின் ஸீதையை வனத்திற்கு அனுப்பிய சிலகாலத்தில் அப்பால், தன் ஏகாந்தத்திலிருக்கையில் வெளியிலே இராமனுத்தரவால் வாயிலைக் காத்தான் இலக்ஷ்மணன். அப்போது துர்வாஸர் உள்ளே வர இலக்ஷ்மணன் பாடு மிக கஷ்டமாய் கடைசியில் அவன் இராமகோபத்துக்காளாக நேர்ந்தது. கோபம் கொண்ட இராமன் இலக்ஷ்மணனை நீ ஸ்தாவரமாகுக எனக்கூற இலக்ஷ்மணன் வணங்கிப் பிரார்த்தித்தார். பெருமாள் இலக்ஷ்மணனை நோக்கி, வருந்தாதே! தாம்ர பரணிநதி தீரத்தில் வராக க்ஷேத்ரத்தில் புளியமரமாக நீ ஆவாய். நாமும் சடகோபம் என்றும் பெயர் தாங்கி உன் நிழலிலே ஒதுங்கி உலகுய்யத் தமிழ் மறையை அருளுவோம். இதோ இம்மோதிரத்தை அணிந்து கொள். இது எங்கே உன் விரலிலிருந்து நழுவி விழுகிறதோ அங்கே நீ திருப்புளியாவாய் என்று கூற இலக்ஷ்மணனும் தமையனுக்கு மீண்டும் கைங்கர்யம் செய்யப் போகிறோம் என்ற மனநிறைவோடு சென்றான். அவன் சஞ்சரிக்கும் நாளில் ஒரு நாள் மோதிரம் காணாமல் போக அங்கே புளியமரமாயினான். அப்புளி இன்றும் உள்ளது. என்றும் இருக்கும். இதனடியில் தான் பின்னால் சடகோபர் அமர்ந்து தமிழ் மறை அருளினார். இதன் பெருமை நான் சொல்லும் நீர்த்தன்று. முன் சொன்ன

சங்கணி துறைத் தீர்த்தம் மிகவும் பாவனமானது, புலி முதலியவற்றால் கலக்குண்ட செந்நாய் ஒன்று மிக வருந்தி இத்துறையில் நீரருந்திற்று. உடனே ஒரு தேவனாய் சுவர்க்க மடைந்தது.

(பெருமான் திருநாமங்கள் ஆதி நாதப் பெருமாள், பொலிந்து நின்றபிரான்; தாயார் ஆதிநாதவல்லி; கோவிந்த விமானம்-தாம்ரபர்ணி நதி; பிரமதீர்த்தம் திருச்சங்கணிதுறை, நின்ற திருக்கோலம்; பிரமனுக்கும் நம்மாழ்வாருக்கும் பிரத்யக்ஷம்.)நவதிருப்பதிகளைப் பற்றி ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களின் அநுபவம்

நவ திருப்பதிகளின் தல வரலாறுகளை ஒருவாறு பார்த்தோம். அவை புராணங்களோடு ஒட்டியனவா அன்றா என்பது நமக்கு விஷயமல்ல. ஆனால் அவ்வரலாறுகள் எந்த அடிப்படையில் எழுந்தன என்பதை நாம் காணவேணும். வரலாறுகள் பின்புள்ளார் கற்பனைகள் என்று கொண்டாலுமே எத்தகைய உணர்வோடு அக்கற்பனைகள் எழுந்தன என்பது நாம் சிந்தித்து மகிழ்தற்குரியது.

இவ்வொன்பது திருப்பதிகளும் நம்மாழ்வார் ஒருவராலேயே பாடப் பெற்றவை என்பது முன்னமே கூறப்பட்டது. நம்மாழ்வாரைப் பிரபன்னஜன கூடஸ்தர் என்று வைணவ உலகம் போற்றும். மற்றைய ஆழ்வார்களைக்காட்டில் நம்மாழ்வார்பால் எம்பெருமான் வேறாக இனியனாய் அவருக்கு விசேஷ கடாட்சம் பண்ணினான். இதனை அவர் வாக்காலேயே நாம் அறிகிறோம்.

**“பெருங்கே ழலால் தம் பெருங்கண்**
**மலர்ப் புண்டரீகம் நம்மேல்**
**ஒருங்கே பிறழ வைந்தார்”** ***(திருவிருத்தம்- 45)***

என்று அவரே தாம் பேறு பெற்றதைக் கூறுகிறார். நம்மாழ்வார் அவதரித்ததும் திருக்குருகூரிலே, அது வராக க்ஷேத்ரம் என்றும் பெயர் பெறும் வராக மூர்த்திபால் நம்மாழ்வாருக்குள்ள



ஈடுபாடு சொல்லும் தரமன்று, “எறிதிரைவையம் முற்றும் ஏனத்துருவாய் இடந்த பிரானை.” ஆழ்வார் “ஞானப்பிரான்” என்றே கூறுவர். அந்த ஞானப்பிரான் சந்நிதியில் கிடத்தப்பட்ட போது அவன் தன் நீண்டு பரந்த திருக்கண் மலர்களை மலர விழித்து இவரை நோக்க அந்த ஞானப்பிரான் சக்ஷு தீக்ஷையில் மயர்வற மதி நலம் பெற்றார் ஆழ்வார். இப்படிப் பேறுபெற அவர் பக்கல் கைமுதலாக நோற்ற நோன்புமில்லை, நுண்ணறிவுமில்லை. நாட்டு மானிடமற்றைக் குழந்தைகள் போல் எவ்வித சேஷ்டிதமுமின்றி ஒன்றுமறியாது உயிர் மட்டும் ஊசலாடிக் கொண்டிருந்த மாமிச பிண்டம் போன்றிருந்த தசையிலே காணும் இவரை அவன் நோக்கியது, அதனாலேதான் அவர் “இவ்வகாலம்” என்று கூறினார். நிர்ஹேதுகமாயிற்று அவன் கடாக்ஷித்தது. இறையறிவு மட்டுமின்றி உலகவறிவும் இல்லாத காலத்திலே அருளினான். “அறியாக் காலத்துள்ளே அறியாத மாமாயத்து அடியேனை அடிமைக்கண் அன்பு செய்வித்து வைத்தாய்” என்று ஆழ்வார் தன் நன்றி தோன்றக் கூறுகிறார். பெற்ற அறிவு அகல் ஞாலத்தறிவு மட்டுமல்ல; மயர்வறுமதிநலம். அப்பேறு பெற்ற மகிழ்ச்சியிலே தாம் பெற்ற பேற்றைத் தாமே சம்மதித்து “ஒருவர் நம்போல் வருங்கேழ்பவருளரோ தொல்லை வாழியம் சூழ்பிறப்பு வருங்கே வரப்பெறுமே சொல்லு வாழி மட நெஞ்சமே” என்று தம் மனத்தோடு உசாவுகிறார். கேழாலார் நோக்கால் தான் பெற்ற பேறு இது என்று தம் மனத்தோடு கூறுவது போல உலகத்தார்க்கும் கூறி, தம்போல உயிர்கள் யாவும் நன்மை பெற வேண்டும் என்று கருதுகிறார். தன் அனுபவமும் பிறவுயிர்களின் இழவும் கண்டு அவற்றின் துயரம் தம் மனத்தே உறுத்த அவர்களை நோக்கி “எறிதிரை வையம் முற்றும் ஏனத்துருவாய் இடந்த பிராணையன்றி வானத்தவர்க்கும் மற்றெல்லாயவர்க்கு ஞானப்பிரான்” இல்லை. இது நான் கண்ட நல்லது, நீங்களும் இந்நன்மையைக் கண்டு பலனடையுங்கள் என்று பறை சாற்றுகிறார்.

இப்படி மயர்வற மதிநலம் பெற்ற ஆழ்வார் இறைவனை இவ்வொன்பது திருப்பதிகளிலும் சேவித்து அனுபவித்த அனுபவங்கள் என்ன? இப்படி இவரை விசேஷகடாக்ஷம் பண்ணித் தன்பக்கல் ஒரு மையலை உண்டாக்கி அவரை இறைவன் அனுபவித்தது எப்படி? இவற்றை நம் ஆசார்யர்கள் எப்படி அனுபவித்தார்கள்? இவ்வனுபவங்களையெல்லாம் காணும் நம் அனுபவம் என்ன என்பனவே நமக்கு இப்போது விஷயம்.

**“அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து**
**அறியாத மாமாயத்து அடியேனை வைத்தாயால்”**

***(திருவாய் 2 -3 -3)***

என்ற ஆழ்வாரின் அடிகளை மேலே பார்த்தோம். அறிவிலாக் காலத்தே அவன் அறிவளித்தான். அறிவளித்ததும் அவர் தன்னை முதலில் அறிந்து கொள்ளும் விதம் தாம் என்னே! மயர்வற மதிநலமாகையாலே தன்னை அடிமைப் பொருளாகவே காண்கிறார் ஆழ்வார். “மாமாயத்து என்னை” என்னாமல் “மாமாயத்து அடியேனை” என்று ஆழ்வார் கூறியது பன்னிப்பன்னி மகிழ்தற்குரியது. ஞானத்தில் மயர்வு கழிந்தால் ஆன்மா தன் சொரூபம் சுதந்தரமல்ல என்பதை உணரும் என்பது குறிப்பு. தன் சொரூபம் அடிமை என்பது கண்டார். யாருக்கு என்ற கேள்வி பிறக்கிறது. ஆன்மாவின் வாழ்வின் குறிக்கோள் என்ன என்பது அடுத்த கேள்வி. அதையடைய உபாயம் என்ன, அதற்குத் தடையாயுள்ளது. எது? இவ்வைந்து பற்றிய அறிவுதான் அர்த்தபஞ்சகம் எனப்படுவது.

ஆழ்வார் அருளிய திருவாய்மொழியின் முதற் பாசுரத்திலே இவ்வைந்து அர்த்தங்களையும் அருளிச் செய்கிறார்.

**உயர்வற உயர்நலமு டையவன் யவன் அவன்**
**மயர்வற மதிநலம் அருளி னன்யவன் அவன்**
**அயர் வறும் அமரர்கள் அதிபதி யவன் அவன்**
**துயரறு சுடரடி தொழுது எழு என் மனனே**

***(திருவாய் 1 -1 -1)***



என்ற இப்பாசுரத்திலே மேற் சொன்ன ஐந்து பொருளும் பொதிந்திருப்பதைக் காணலாம். ஆன்மா எழுந்து அவனைப் பின்னுவது புருஷார்த்தம். அப்படி எழவேண்டுமானால் ஆன்மா தொழுதே எழவேண்டும். அதனால் இதன் தாஸத்துவம் காட்டப்பெற்றது அப்படி எழ உபாயமாகப் பற்றவேண்டியது அவன் திருவடிகளே. இது துயர் அறுசுடரடி என்பதால் காட்டப்பட்டது. இதற்குத் தடையாகவுள்ளன பிறவியடியாக வரும் இன்பதுன்பங்கள். இது துயர் என்ற பதத்தால் காட்டப் பெற்றது. இறைவன் அந்த கல்யாணகுண முடையவன். அவன் இமையோரதிபதி. இது உயர்வற உயர் நல முடையவன். அமரர்கள் அதிபதி என்பதால் காட்டப்பெற்றது. இவ்வைம்பொருள்களையும் உணர்ந்துவிட்டால் ஆன்மா தன் வாழ்க்கைப் பாதையையும் குறிக்கோளையும் தெரிந்து கொண்டதாகிறது.

சரி, மதிநலம் இறைவன் ஒருவன் உண்டு என்பதை அறிவித்தது. அவன் உயர்நலமுடையவன். அதிபதி என்றும் காட்டியது. அவன் யார்? மதிநலம் பயக்கும் வேதம் எத்தனையோ பெயர்களை இறைவன்போல கூறுகிறது. எது உண்மை என ஆராய்ந்தார். “வண்புகழ் நாரணன் திண்கழல் சேரே” என முடித்தார். அவ்வதிபதி தான் இறைவன். அவன் தான் புருஷார்த்தம் என்றார். நம்துயரை அறுக்கும் சுடரடி என்று முன் சொன்னாரே அது நாரணனுடைய ‘திண்கழல்’ என்றார், ஏன் நாராயணன் இறைவன்! ஏனெனில் அவன் தான் நம்மையும் உலகங்களையும் ஆக்கிய முதற்காரணன், நம்மை வைத்துக்காப்பவன். ஆன்ம கோடிகளின் தங்கிடம். அவை உலகில் தோன்று முன்பும், உலகெலாம் அழிந்த பின்னும் அவற்றின் தங்கிடமாக இருப்பவன். அது மட்டுமல்ல எல்லா ஆன்ம வஸ்துக்களையும் தனக்குத் தங்கிடமாகக் கொண்டவன். இப்பொருள் அந்தப் பதத்திலேயே கிடக்கிறது. (நாரம்-ஆன்மவஸ்துக்கள், அயனம்-தங்கிடம், இது இருவகையாகப் பொருள் படும் நாரங்களுக்கு அயனமாயிருப்பவன், நாரங்களை அயனமாக உடையவன் என்று)

பரசொருபம் நாராயணன் என்றால் பின் ஏன் சிலர் அவனை வணங்காமல் வேறு தெய்வங்களை வணங்குகின்றனர்? எனில் அது அவரவர் அறிவின் அளவைக் காட்டுகின்றனது. யார் யாரைப் பரதெய்வம் என்று அவர்கள் அறிவு காட்டுகின்றதோ அவரை அந்த அப்பாவிகள் வணங்குகின்றனர். வேதங்களில் அந்தத் தெய்வம் என்ன பலன் கொடுக்கும் என்று விதிக்கிறதோ அப்பலனை அவர்கள் பெறுவார்கள் என முடித்தார்.

**அவரவர் தம தம தறி வுஅறி வகை வகை**
**அவரவர் இறையவர் என அடி அடைவர்கள்**
**அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்**
**அவரவர் விதி வழி அடைய நின்றனரே**

***(திருவாய் 1 -1 -5)***

சரி, இஷ்டம் போல் வணங்கி அற்பப்பலன் பெற்றுப் போகட்டும். ஆனால் பரதெய்வத்தை இகழவும் செய்கிறார்களே. அப்படி இகழ்ந்து கொடிய பாவத்தை ஏன் சம்பாதிக்கிறார்கள். குறுநில மன்னன் குடிகளுக்கு அம்மன்னன்தான் யாவும் என்றாலும், அவனுக்கு மேல் ஒரு சக்ரவர்த்தி உண்டென்பதை உணராமலிருக்கலாமா இம்மதியிலிகள் என்று அவர்கள் பக்கல் இரங்கினார். அதன் பலனாக அவர்களுக்கு வேத, புராண வாயிலாகவே உண்மையுணர்த்த முற்படுகிறார். இம்முயற்சியே ஒன்றுந் தேவும் என்ற குருகூர்ப்பதிகம்.

1) **ஒன்றுந் தேவும் உலகும் உயிரும் மற்றும் யாதும் இல்லா**
**அன்று நான்முகன் தன்னோடு தேவருலகோடு உயிர் படைத்தான்**
**குன்றம்போல் மணி மாட நீடு திருக்குருகூரதனுள்**
**நின்ற ஆதிப்பிரான் நிற்க மற்றைத் தெய்வம் நாடுதிரே.**

***(திருவாய் 4 -10 -1)***

நாராயணனே பரதெய்வம் என்ற உண்மையை முன்னே இரண்டிடங்களில் நிலை நாட்டினார். 'உயர்வற உயர் நலம்' என்ற பதிகத்தில் அவனது பரமபத நிலையைக் கூறி அவன் பரத்துவத்தைத் தாபித்தார். 'திண்ணன் வீடு' என்ற திருவாய் மொழியில் அவன் விபவ நிலையான அவதாரங்களைக் காட்டி அவன் பரத்துவத்தைக் காட்டினார். அவன் மேன்மையைக் காட்டினார். உலகர் உணர்ந்தாரில்லை. அம்மேன்மையை மறந்து அவன் தன்னைத் தாழவிட்டதைக் காட்டினார். நன்றியில் உலகர் அவனை நயந்தாரில்லை. அந்நிலைகளெல்லாம் இக்காலத்தவர் புலன்வழி நுகரக் கூடாததாய் விட்டன. எனவே தன்னை உளனாக என்றும் காட்டும் வகையில் அர்ச்சையாக நிற்கிறான் இப்போது. இதைக் கண்டாவது தெளிவு பெறுங்கள் என்று அர்ச்சை மூலம் அவன் பரத்துவத்தைப்பல தடைவிடைகள் மூலம் விளக்குகிறார் ஆழ்வார்.



'ஏகோ ஹவை நாராயண ஆஸீத் நப்ரஹ்ம நேசான:' (நாராயணன் ஒருவனே இருந்தான் பிரம்மாவோ ஈசானனோ இல்லை) என்ற வேதவாக்கியத்தை வைத்துத் தொடங்குகிறார். சிருஷ்டிக்கு முன், தேவரும், மனிதரும் உயிர்களும் பொருள்களும் உலகும்யாதும் இல்லாத இக்காலத்து இறைவன் இருந்தான் தனியனாக. மீண்டும் உலகைப் படைக்க உன்னி பஹூஸ்யாம் என்று சங்கல்பம் செய்தான். உலகைப் படைக்க வென்றே நான்முகனைத் தன் கொப்பூழிலே தோற்றுவித்தான். அவனை உலகைப் படை என விதித்தான். நித்தியமான ஆன்ம வஸ்துக்களை அப்படிப்படைக்கப்பட்ட பொருள்களிலே புகவிட்டான். முடிவில் அவ்வநித்தியப் பொருள்களினின்றும் விடுபட்டு ஆன்மா தன்னையடைய வேண்டி அப்பொருள்களைச் சம்மாரம் செய்ய ஒரு மூர்த்தியைப் பிரம்மாவைக் கொண்டே படைப்பித்தான். அவ்வான்மாக்கள் உலகிலே வடிவோடு வளையவருபவற்றைக் காக்கும் தொழிலைத்தானே ஏற்றான். எனவே இறைவன் உலகைப் படைப்பித்து, காத்து, அழிவிக்கிறான். அவனே தலைவன். எவனால் இவை செய்யப்படுகின்றனவோ அவன் தான் தலைவனாகவும் முடியும். அவன் நாராயணன் என்று வேதம் கூறுகின்றதே. இந்த எளிய விஷயத்தைப் புரிந்து கொள்ளாது

மயங்குகிறீர்களே என்று தொடங்குகிறார். அந்த உலகத்தை படைத்த நான்முகனையும் அவன் மூலமாக இதரதேவதைகள், மனிதர், உலகம் இவற்றையும் படைத்து அவற்றுள் தானும் நின்றியங்குகின்ற அந்த நாராயணன், ஆதிப்பிரான் எங்குள்ளான் என்று தேட வேண்டாம். இதோ குருகூரிலே ஆதிநாதன் என்ற திருப்பெயரோடு அர்ச்சாவதாரனாய் நிற்கிறான். நம் ஊனக் கண்ணுக்குப் புலனாகும் வண்ணம் அழகிய உருவோடு நிற்கிறான். உயர்ந்தமாட மாளிகைகள் சூழ்ந்த திருநகரியிலே "நன்னெடுங் குன்றம்" நின்ற தொக்க நிற்கிறான். உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா? குன்றும் தெரியாத குருடாகிவிட்டீர்களா? அப்படிப் பிறர் அசைக்க முடியாதபடி வேதப் பிரமாணங்களாலே திண்ணியனாய் நிற்கும் ஆதிப்பிரானை விட்டு மற்றைத் தெய்வத்தைத் தேடுகிறீர்களே? என்ன பேதைமை என்று பரிவோடு வியக்கிறார்.

### இரண்டாம் பாட்டு

இப்படி உலகர் கண்முன்னே அவர்கள் வழிபடுகைக்கு ஈடாக சுத்த ஸாத்விகனான எம்பெருமான் அர்ச்சை வடிவிலே எழுந்தருளியிருந்தும் மானிடர் ரஜோகுண தமோகுண வயத்தராய் எம்பெருமானைத் தெரிந்து கொள்ளாமல் மயங்குகின்றனர். அம்மயக்கிலே தங்கள் குணங்களுக்கு அனுகுணமான தேவதைகளைத் தேடுகிறார்கள். அது மட்டுமல்ல. அப்படித் தேடிப் பிடித்த தெய்வத்தையே பரம்பொருள் என்று பறை சாற்றவும் செய்கின்றனர். ஐயோ அவர்கள் ஒன்றை மறந்து விட்டார்கள். அப்படி அவர்கள் வேத ப்ரமாணம் காட்டத் தேடும் தெய்வங்களும் அந்நாராயணன் படைப்பே என்ற உண்மையை எளிதே மறந்து விடுகின்றனரே! என்று அங்கலாய்க்கிறார் ஆழ்வார். அந்தத் தெய்வங்களின் புகழும் படைப்புள்ள அளவே ஆகும். நிலையானதன்று. இப்படி உள்ள ஒரு மயக்கத்தை இனியாகிலும் விட்டு



உங்களையும் நீங்கள் தேடிக் கண்டு பிடிக்கின்ற தெய்வங்களையும் உலகோடு படைத்த அழிவில் கீர்த்தியுடைய முதற்காரணப் பொருள் உங்களை உய்விக்கத் திருக்கூரிலே விரும்பிக் கோயில் கொண்டிருக்கிறான். இனியேனும் இவ்வுண்மையை உணர்ந்து அவன் புகழ்பாடி ஆடிப் பரவுமின் என்று போதிக்கிறார். "பல்லுலகீர்" என்பது ஆழ்வார் விளி. உலகில் ரஜோகுண தமோகுணவயப்பட்டவரே பெரும்பான்மையோர் என்பது குறிப்பு.

### மூன்றாம் பாட்டு

இப்படி பல்லுலகோர் தம் தம் குணங்களுக்கு அநுசரணையாகத் தேடிப்பிடித்த தெய்வங்கள் எத்தனையோ! பரந்த தெய்வமும் என்கிறார் ஆழ்வார். அவர்களை நோக்கி "சரி நீங்கள் உங்களுக்குத் தேவையான தெய்வத்தைக் கண்டு பிடித்தீர்கள். ஆனால் அந்த தெய்வங்களின் செயல்களிலிருந்தாவது அவை பரதெய்வமல்ல என்பது தெரிய வேண்டாமா! உங்கள் தெய்வங்களே குருகூர்மேவிய ஆதிப் பிரானைத் தலைசாய்ந்து வணங்குகின்றனவே! வேதங்கள் அவ்வாதிப் பிரான் பிற தெய்வங்களால் வணங்கப்படுகிறான் என்று கூறுகின்றனவே. அதுபோல் அவ்வாதிப்பிரானை ப்ரகாரியாக உடைய ஒரு தேவதை உண்டு என்று பிரமாணமுண்டாகில் என் முன்னே கூறுங்கள் என்று சவால் விடுகிறார் ஆழ்வார்.

### நான்காம் பாட்டு

ஜகத்நாரணனான நாராயணன் தானே மும்மூர்த்திகளில் ஒரு மூர்த்தியாக நின்று அவனோடு வைத்துப் பேசப்படுகின்ற பிரம்மா சிவன் இருவருக்கும் அவனே நாயகனாய் நின்றான். இதில் ஐயத்துக்கு ஏதுவில்லை. பிரமன் தந்தையென்பதையும் மறந்து அவன் தலையை அறுத்தான் மகனான சிவன். அறுத்த தலையின் கபாலம் கையிலே ஒட்டிக் கொண்டது. அந்த சாபம் தீர அப்பிண்டியார் மண்டையேந்திப் பிறர்மனை

திரிதந்துண்ண நேர்ந்தது. எங்கும் போய்க் கடைசியில் நான்முகற்கும் தாதையான நாராயணன் தன் அலங்கல் மார்பின் குருதியால் அக்கபாலத்தை நிறைத்து பின் கபாலம் கையை விட்டு நீங்கிற்று. "இதில் தலையறுத்தான் ஒருவன்" தலையறுப்புண்டான் மற்றவன். அறுப்புண்டதலை அறுத்தவன் கையிலே ஒட்டிக்கொள்ள அச்சாபத்தைப் போக்கினான் மூன்றாமவன். இதில் பரத்துவம் யார் பாலது என்பது கூறியா தெரிய வேண்டும். நீங்களே கண்டு களியுங்கள் என்கிறார் ஆழ்வார். அப்படி அவர்கள் இடரையும் நீக்கியவன் அழகியதாய் ஒளிவீசும் திருநகரியில் உறைகின்றான். "ஐயோ! தாங்கள் வணங்கும் தெய்வத்தின் கொடிய சாபத்தை நிக்கியவன்பால் நன்றியை மறந்து அவனைப் பற்றிக் குறைவாகப் பேசி என்ன பயன் பெறுகிறார்களோ சிலர்?" என்று அவர்கள் பால் பரிகின்றார் ஆழ்வார். சான்றோர் கடனும் அதுதானே!

## ஐந்தாம் பாட்டு

உண்மை இப்படியிருந்தும் அதனைத் தெரிந்து கொள்ளாததுமன்றி, அதனை மறுக்க காரணார்த்தமாக எழுந்த சில கிரந்தங்களை வைத்து, அவை ப்ரமாணங்கள் என்று கூறி வாதம் செய்பவர்களை நோக்கி இரங்குகிறார் ஆழ்வார். சூதபௌராணிகரிடத்திலே இலிங்கத்துக்கு ஏற்றம் கூறும் ஒரு புராணத்தைச் சொல்லவேணும் என்று கேட்டதன் பேரில் பிறந்தது இலிங்க புராணம்.

காரணர்த்தமாகப் பிறந்த கள்ளப்பொய் நூல் சாக்கியம். ப்ரமாணத்தோடு கூடிய தர்க்கமின்றி வெறும் வரட்டு வாதத்தை, அடிப்படையாகக் கொண்டது ஆர்ஹதம். இப்படி எழுந்த நூல்களைப் ப்ரமாணமாகக் கொண்டு பரத்வத்தைச் சாதிக்க இயலுமா? இப்படிச் சாதிக்க வலிந்து வாதம் செய்யும் உங்களையும், உங்கள் வாதங்களினால் சாதிக்கப்படும் தெய்வங்களையும் மறைந்து நின்று இயக்குகின்ற ஒருவன்



குருகூரிலே பொலிந்து நிற்கும் ஆதிப்பிரானே. நான் கூறுவது சத்யமே. பொய்யில்லை. என்னை நம்புங்கள். அவ்வாதிப்பிரானைப் போற்றுங்கள் என்று பிறமதத்தாரை அறிவுறுத்துகிறார்.

## ஆறாம் பாட்டு

அப்படியாயின் உலகில் பல தெய்வம் இருப்பதாகத் தோற்றுவிப்பானேன்? அவனே தன்னை யொழிய பிறதெய்வமும் உளபோல் காட்டுவானேன்? என்ற வினாவைத் தனக்குள்ளேயே எழுப்பி விடை கூறுகிறார் ஆழ்வார்:-

தன் விளையாட்டிடமாக உலகை உண்டாக்கி அதில் நல் வினை தீவினைகளை உண்டாக்கி, பகுத்தறிவையும் ஆன்மாவிற்கு அளித்து இருக்கிறான் இறைவன். இதில் உண்மையைப் பகுத்து அறிந்து இவ்வுலகிலிருந்து விடுபட முயல்கிறதா? அல்லது மாறானவற்றைப் பற்றி இவ்வுலகில் துக்கச் சுழலில் சிக்கி இடற்பட முனைகின்றதா? என்று கண்காணிக்கிறான். எம்பெருமான். இறைவனது இச்செயல் ஒரு தாயன்பினால் விளைவதைப் போன்றதே.

"வத்ஸலையான மாதா பிள்ளை பேகணியாமல் மண் தின்ன விட்டு ப்ரத்யௌஷதமிடுமாப் போலே எவ்வுயிர்க்கும் தாயிருக்கும் வண்ணமான இவனும் ருசிக்கீடாகப் பந்தமும் பந்த மறுப்பதோர் மருந்தும் காட்டுமிறே" எனற ஆசார்ய ஹ்ருதய வாக்கியம் ஆசார்ய 1-14 இவ்வுண்மையையே தெள்ளத் தெளிய அறிவிக்கின்றது. இப்படி இருவகைப் பண்புகள் இல்லையாயின் நன்மை தீமை என்ற பாகுபாடு அற்று, புண்ணிய பாபங்களின் பலன்களைப் பற்றிக் கூறும் சாத்திரங்களின் மரியாதைகள் குலையும். இவ்வாறு பல்சுவைப்பட்ட பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நிற்கும் வியத்தகு ஆற்றல் வாய்த்தவனுடைய மாயத்தை அறியுங்கள். இதுவரை உண்மைக்கு மாறானவற்றைப் பற்றி அவனை விட்டு விலக்கிய உங்கள் இழவுதீர விரைந்து சென்று அவன் காலைக்

கட்டிப்பிடித்து இவ்வுலகக் காற்கட்டை அறுத்துக் கொள்ள பாருங்கள். அந்த ஸர்வசக்தன் தான் திருக்குருகூரிலே எழுந்தருளியிருக்கிறான் என்று காட்டுகிறார் ஆழ்வார்.

### ஏழாம் பாட்டு

தாங்கள் இதுவரை ஓடிஓடி எத்தனையோ தெய்வங்களை வணங்கத்தான் செய்தீர்கள். அந்த தேவதைகளை சாத்திரங்கள் கூறும் விதி வழியே பூசித்தீர்கள். அப்படிச் செய்த பூசனையில் (வெறும் வேஷமன்று) திரிகரண சுத்தியோடு செய்தீர்கள். அத் தேவதைகளும் தங்கள் ஆற்றலளவிற்குரிய பலன்களை அள்ளித் தான் வீசின. ஆனால் கிடைத்த பயன் யாது? இடையறாது சங்கிலித் தொடர் போன்ற பிறவிகளைத் தானே பெற்றீர்கள். இதை நீங்கள் கண்கூடாகக் கண்டும் இருக்கிறீர்கள். அதிலிருந்தாவது நித்யமான ஆத்மா அசித்தின் தொடர்பைவிட்டு முக்தி பெற வேண்டும் என்றால், இதுவரை செய்து வந்தது வழியல்ல என்பதை இப்பொழுதாவது உணர்கிறீர்களா? உணர்ந்து கொண்டீர்கள் என்றால் இனி நீங்கள் செய்ய வேண்டியதைக் கூறுகிறேன். இதோ குருகூர் நகரிலே அதோ கேட்கின்றதே ஒலி; என்ன தெரிகிறதா? நீங்கள் வணங்கும் தெய்வங்களும், பிற தேவர்களும் ஒன்றாகக் கூடி ஆதிப்பிரானை ஏத்தும் ஒலிதான் அது.

உங்களையும் ஆட்கொள்ள கொடியெடுத்து வந்திருக்கிறான் அவன். நீங்கள் செய்ய வேண்டியது சிறப்பாக ஒன்றுமில்லை. நான் எனது என்ற அகங்காரத்தைவிட்டு நீங்கள் அவனுக்குரியவர் என்று உங்களை அர்ப்பணித்துக் கொள்வது ஒன்றுதான் வேண்டியது. மரண பயம் ஒழிய வேண்டுமானால் அந்த ஆதிமூர்த்திக்கு அடிமை புகுவது ஒன்றுதான் வழி.

### எட்டாம் பாட்டு

“அது எப்படிச் சொல்லலாம் மார்க்கண்டன் சிவபெருமானை வழிபட்டு யம பயத்தை நீக்கிக்



கொள்ளவில்லையா? என்று பௌராணிகர் ஆழ்வாரைக் கேட்கிறார். ஆழ்வார் முறுவலோடு பதில் கூறுகிறார். “ஓஹோ அதுவா. புராணத்தைச் சற்று நன்றாகப் பாரும். மார்க்கண்டன் முதலில் வேண்டிய போது யமபயம் விலக்கப்படவில்லை. அவன் இலிங்கத்தையும் சேர்த்துப் பற்றி இழுத்தது தன் பக்தனக்கு வந்த ஆபத்தை நீக்க நாராயணன் அருள் பாலிக்க அதனால் வலிமை பெற்று காலனைக் கடிந்தான். அவ்விதம் அருள் செய்தவன் இதோ திருக்குருகூரிலே ஆதிபிரானாய்த் தோன்றி நிற்கவும் பிறதெய்வங்களைக் கூறுகின்றீர்களே.

### ஒன்பதாம் பாட்டு

இப்படிக் கூறுகின்றீரே. பிணக்கறும் அறுவகைச் சமயமும் நெறியுள்ளியுரைத்த என்று நீரே சொல்லியிருக்கிறீரே என்று சிலர் கேட்கிறார்கள். ஆம். உலகில் மதங்கள் என்றுள்ள எல்லாமே ஒரு வகையாகப் பார்த்தால் அவனால் சொல்லப்பட்டவையே. ஆனால் முன் நான் சொன்னேனே அவரவர் பாட்டில்; அது போலவே அவரவர் அறிவு குணவளர்ச்சிக்கேற்றவாறு அந்தந்த மதம் அமைந்தது அவ்வளவே. அவற்றால் அளந்து காண்பவனல்லன் எம்பெருமான். அந்தந்த மதங்களின் பலன் நிலையற்றது. எனவே உங்கள் ஆன்மாவின் நன்மையை நீங்கள் கருதினால், அவ்வான்மா கடைத்தேற நீங்கள் உண்மையிலேயே விரும்பினீர்களானால் அழகிய வயல்கள் சூழ்ந்த இக்குருகூர் என்னும் திருப்பதியை உங்கள் மனத்திலே நினைவு கூறுங்கள். குருகூரை நினைத்தாலே அக்குருகூரிலே அமர்ந்த எம்பெருமான் உங்ள மனத்திலே அமர்ந்திருக்கக் காண்பீர்கள் என்று பதிலிருக்கிறார் ஆழ்வார்.

### பத்தாம் பாட்டு

ஆகவே செய்ய வேண்டியதென்ன என்பதை இதுகாறும் நான் கூறியவற்றிலிருந்து பொருந்த நோக்கிக் காணுங்கள், எல்லாத் தெய்வங்களும், எல்லா உலகங்களும் தன் வடிவிலே

எவ்விதக் குறைபாடுமின்றி விளங்கும்படி எழுந்தருளி யிருக்கிறான் எம்பெருமான். அவனே எல்லார்க்கும் மேலானவன்: பரம்பொருள். இந்த உண்மையை மனத்தில் கொண்டு நோக்கத் தெரிந்தீர்களென்றால் அவனாலேயே ஒவ்வொரு காரணார்த்தமாக எழுந்த ஒவ்வொரு மதத்தின் உண்மைத் தன்மை தானே தெரியவரும். அப்போது உங்கள் ஞானத்தின் அளவு உங்களுக்கு விளங்கும். அப்படியிலிருந்து மேலேற வழியை நீங்கள் கடைப் பிடிக்க ஏதுவாகும். அவனை மறந்து அந்தந்த மதங்களே மேலெனத் தவறாக புத்தி பண்ணி அதிலே உழல்வீர்களானால் அந்தந்த தேவதைகளால் அளிக்கச் சக்தியுடைய பலன்கள் எதுவோ அதைத்தான் பெறுவீர்கள். ஆனால் ஆன்மா பந்தத்திலிருந்து விடுதலை (மோக்ஷம்) பெற வேண்டும் என்பது உங்கள் குறிக்கோள் ஆனால் அது நாராயணன் ஒருவனால்தான் முடியும். அத்தகைய ஆற்றல்மிக்கான், ஏழுலகம் தனிக்கோல் செல்ல வீற்றிருக்கும் இராஜாதிராஜன் உங்கள் கண்களுக்கு விஷயமாம்படி இதோ குருகூரிலே அர்ச்சை வடிவிலே எழுந்தருளியிருக்கிறான். மூர்த்தியைப் பார்த்து இவனா? என்று எண்ணாதீர்கள்! சிறியனென்றிகழ்ந்து விடாதீர்கள். சிறிய உருவின் பெருமையை மாவலியிடம் தெரிந்து கொள்ளுங்கள். அவன் தான் முன் செய்த யாதவச்சேரியிலே குடக்கூத்தாடியவன். வெறுங்குடக்கூத்தா அது? உவகை வூட்டும் கூத்தல்லவா. ஆகையால் உறுவது எது? என்று கேட்கில் அக்கூத்தனுக்காட்செய்வது தான் என்று தொகுத்துரைத்து உபதேசிக்கிறார் ஆழ்வார்.

### பதினோராம் பாட்டு

நீர் சொன்னபடி அக்கூத்தனுக்கு ஆட்செய்வதால் பலன் பெறலாம் என்பது என்ன நிச்சயம்? என்பார்க்குப் பதிலாகக் கூறுகிறார் ஆழ்வார். அப்படி ஆட்செய்து நான் அவனைப் பெற்றேன். பலன்பெற அருகதையற்ற நான்! கைம்முதலற்ற நான்



பெற்றேன். அத்தகைய வள்ளல் அவன். அவனுக்கு ஆட்செய்யப் பெற்றீராகில் (அதில் உங்களுக்குச் சிரமமே இல்லை) இந்த லீலா விபூதியும், இத்தேகக் கந்தை கழியும்போது வைகுந்த வாழ்வான நித்ய விபூதியும் உங்கள் அகங்கையிலே அடங்கியுள்ளன. வள்ளல் கொடுக்கவென்றே குருகூரில் எழுந்தருளியிருக்கிறான். அத்தகைய வாழ்கைப் பெறுவதும் இழப்பதும் உங்கள் இச்சை என்று உலகோர்க்கு உணர்த்துகிறார் ஆழ்வார்.

ஏன் உணர்த்த வேண்டும்? உலகோர் எல்லோருடைய ஆன்ம வெப்பம் ஆழ்வார்க்குச் சுடுகிறது. அவ்வெப்பம் தீர, அவர் பெற்ற பேறு உலகோர் பெற வேட்கையில் கூறினார். சில கசந்த உண்மையும் இருக்கலாம். என்றாலும் அது பிறர் இழவு காணப்பெறாமல் எழுந்த அருளின் விளைவு. பரதுக்கம் காணப்பொறாமையன்றோ வைஷ்ணவலக்ஷணம். இவ்வரு ளாலன்றோ அடியேன் செய்யும் விண்ணப்பம் என்று தொடங்கி “பொய்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும், இந்நின்ற நீர்மை **இனியா முறாமை**” என்றார். யானுறாமை என்னாது யாமுறாமை என்றதன் கருத்தே நாட்டுக்காகத் தாம் மன்றாடுவதுதானே?

எம்பெருமானுக்கும் ஜீவாத்மாவுக்கும் உள்ள சம்பந்தம் ஒன்பது வகைப்படும் என்பது பெரியோர். அவ்வொன்பதில் ஆண்டான் அடிமை (சேஷ சேஷி பாவம்) என்பது ஒன்று. அதாவது எம்பெருமான் நம் நன்மையையே கருதி ஆட்கொள்ளும் ஆண்டான். அவ்வாண்டான் நிலையில் அவன் நம்மால் செய்யும் செயல்கள் நம் பரிசிலனைக்கு உரியதன்று. அவனுடைய அச்செயல்கள் நம்முடைய அப்போதைய நிலையினின்றும் நம்மை மேம்படச் செய்வதற்காகத் தான் என்ற நம்பிக்கை நமக்கு வேண்டும். அச்செயல்கள் நமக்கு அப்போதைக்குத் துன்பம் விளைப்பதாகக் காணப்படினும் அவை நமது நன்மைக்கே என்ற நம்பிக்கையோடு அச்செயல்களுக்காக அவன்பால் நன்றியும் வேண்டும். இந்தத் தொடர்புதான்

**“வாளால் அறுத்துச்சுடினும் மருத்துவன்பால்**
**மாளாத காதல் நோயாளன்போல் மாயத்தால்**
**மீளாத்துயர்கரினும் வித்துவக் கோட்டம்மாநீ**
**ஆளா உனதருளே பார்பன அடியேனே”**

*(பெருமாள் திரு 5 -4 )*

என்ற குலசேகரப் பெருமாள் பாசுரத்தில் வலியுறுத்தப் பெறுகின்றது. இக்கருத்துத் தான் முன் கூறிய ‘ஒன்றும் தேவும்’ என்ற நம்மாழ்வார் பதிகத்தில் முன்னே கூறப்பட்டது என்பது பெரியோர் கோட்பாடு. மருத்துவன் நோயாளியின் நோய் தீர்க்கும் கால் அவனை அங்கஹீனனாக்கினாலும் அம்மருத்துவன்பால் நோயாளி வெறுப்புக் கொள்வதில்லை. அதுமட்டுமன்றி அவனிடம் மாறாத நன்றியும் உடையவனாய் மேலும் தன் நோய் தீர்க்க அவனையே நாடுகிறான். நம் நோய் நீங்க நம்மை நாம் ஒப்படைக்கும் மருத்துவன் நம் நோய் தீரும்வரை நமது ஆண்டானே, நாம் அவனிட்ட வழக்கில் நிற்க வேண்டிய அடிமைகளே. அதுபோல நம் பவநோயின் மருத்துவன் எம்பெருமான். “மருத்துவனாய் நின்ற மா மணிவண்ணா” என்று பெரியாழ்வாரும் பணித்தார். இவ்வுலகின் ஆன்மாக்கள் பல் சமய நோய்கிலே புக்கு உழல்கின்றவை. அந்நோய்தீர அவனை நம்பி அவனுக்கு அடிமையாகி ஆட்செய்வதுதான் அவ்வான்மாவின் தன்மைக்கு அழகு என்று உண்மையை இப்பதிகம் உணர்த்தும் என்பது அவ்வான்றோர்களின் அபிப்பிராயம்.

“பொய்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும் இந்நின்ற நீர்மையோடு” நண்ணாதார் முறுவலிப்ப நல்லுற்றார் கரைந்தேங்க எண்ணாராத்துயர் விளைக்கும். இவை என்ன உலகியற்கை?” என்று இரங்கி ஏங்கினார் ஆழ்வார். இந்நிலைமை உறாமைக்காக அவனடியே பணிந்து தன் குறையை விண்ணப்பித்தார். அவனருளால் மதிநலம் பெற்றார். இவ்வாழ்வில் ஆன்மா அனுபவிக்கும் இன்பமும், அதனால் அனுபவிக்கப்படும் பொருள்களும் நிலையற்றவை, இழிவானவை என்பதைக் கண்டார். இவ்விழி தகைமை நீங்கி நிலையான வாழ்வு பெற வகை எது என்று ஆராய்ந்தார். நிலையான வாழ்வு ஆன்மா இறைவனையே துய்க்கப்படு பொருளாகக் கொண்டு அவனைத் துய்ப்பதே என உணர்ந்தார். அப்படித் துய்க்கும்போதும் தன்னுடைய தன்மை (ஆன்மாவின் சொரூபம்) கெடாமல் அனுபவிப்பது எப்படி என்று ஆராய்ந்தார். அத்தன்மைக்கு எதிராக இருப்பவை தான், தனது என்ற எண்ணங்களும், தனக்குச் சுதந்திரம் உளதாக எண்ணும் அவிச்சையும் என்று தெரிந்தார். மெல்ல மெல்ல அவற்றைக் கழித்தார். அவை கழியவே அவர் இறைவன்பால் கொண்ட பக்தி இறைவன்பால் காதலாக மாறுகின்ற தன்மையை உணர்கிறார். ஆழ்வார் தன் தன்மை கெட்டு ஒரு உத்தம ஸ்த்ரீயின் மனோபாவம் அவருக்கு ஏற்படுகிறது. ஆழ்வார் பராங்குச நாயகியாகிறார்.



“கந்தல் கழிந்தால் ஸர்வர்க்கும் நாரீணாம் உத்தமையுடைய அவஸ்தை வரக் கடவதாயிருக்கும்” என்பது ஸ்ரீ வசனபூஷண வாக்கியம். (2-139)ஆன்ம சொரூபத்தை உள்ளபடி ஒளிவிடாதபடி அனாதிகாலம் அனுபவித்துப் பேரீந்த வந்தேறியான அவிச்சை முதலிய தோஷம் இறையருளாலே வேர் முதல்மாயுமானால் எல்லா ஆன்மாக்களும் பெண்நலம் எல்லாவற்றாலும் குறைவற்று பெண்களில் தலைமையான பெரிய பிராட்டியாருடைய நிலை “தன்னடைவே வரக்கடவதாயிருக்கும்” என்பது இதன் பொருள்.

## தென்குளந்தை (பெருங்குளம்)

இந்த நிலை ஆழ்வார் மனத்திலே நிகழ்வது, அது முதலில் பலரறியத் தோன்றுகின்றிலது. உத்தமநாயகி நிலையாதலால் பிறர்க்கு மறையாக அது உள்ளேயே அடங்கி நிற்கிறது. குடத்து விளக்குப் போல யாவும் உள்ளிருந்து காணும் இறைவன் இதைக் கண்டான். அந்நிலையை வெளிப்படுத்தத் திட்டமிட்டான். கருடாரூடனாக ஆழ்வார் மனக்கண் முன்னே காட்சியளித்தான். உள்ளே அடங்கி நின்ற காதல் கட்டுமீறியது.

பகவத் காமம் என்னும் மதம் பற்றிய ஆழ்வாருடைய மனம் என்னும் மத்தயானை தறி கெட்டு நிறை என்னும் அங்குசத்தை நிமிர்த்துப் புறம்போந்து அவருடைய உள்ளக்கிடக்கையைப் பலரறிய வைத்தது. இறைவன் பக்தனுடைய பக்திக் காதலை வெளிப்படுத்தினான். ஒரு மாயத்தால் அதன் வசப்பட்டு அவர் படும்பாட்டைக் கண்டு கூத்தாடினான்.

**குடத்து விளக்கேபோல் கொம்பன்னார் காமம்**
**புறப்படா பூந்தார் வழுதி-புறப்படில்**
**ஆபுகுமாலை அணிமலையில் தீயேபோல்**
**நாடறி கவ்வை தரும்**

என்று முத்தொள்ளாயிரம் பேசும். அது போல கையும் திருவாழியுமாக உவணப் புள்மீதே மாயன் தோன்ற ஆழ்வார் காதல் பலரறிய வெளிப்பட்டது.

வந்தமாயன் நின்றானா? நின்றால் மாயன் என்ற பெயர் பொருளற்றதாய்விடுமே. அவன் ஆழ்வார் மனத்தைவிட்டு போகிறான். ஆழ்வாரும் மானஸீகமாகவே அவனைப் பின் தொடர்கிறார். கடைசியில் குளந்தையில் அவனைப் பிடித்துவிடுகிறார். அங்கு அவனைக் கண்டு அவனழகிலே ஈடுபட்டுத் தன் உடைமையான பெண்நலம் யாவும் பறிகொடுக்கிறார். யாவும் இழந்து வறியராய் நின்று விழித்த ஆழ்வாரை அவருடைய தோழியரும் தாயாரும் சூழ நின்று வினவுகிறார்கள். அவர்களுக்கு விடையிறுப்பது போன்று எழுந்தது.

**"கூடச்சென்றேன். இனி என் கொடுக்கேன்?**
**கோல்வளை நெஞ்சத் தொடக்கமெல்லாம்**
**பாடற்றொழிய இழந்து வைகல்**
**பல்வளையார் முனி பரிசழிந்தேன்**
**மாடக்கொடி மதில் தென்குளந்தை**
**வண்குடபால் நின்ற மாயக் கூத்தன்**



**ஆடல்பறவை உயர்தத வெல்போர்**
**ஆழிவலவனை ஆதரித்தே"** ***(திருவாய் 8 -2 -4)***

என்ற பாசுரம்.

தோழியர் வினவுகிறார்கள். "எங்கடீ போனாய்? ஓ! எதையெல்லாம் கொடுத்துவிட்டாய். யாரிடம் இப்படிப் பரிபவப்பட்டாயடீ?" என்று கேட்கும்போதே கைகளை இடித்துக் காட்டிக் கேட்கிறார்கள். அப்போது முன் கை நிறைய அவர்கள் அணிந்துள்ள வளையல்கள் குலுங்கி ஒலிக்கின்றன. ஆழ்வார் தன் வெறுங்கைகளை நோக்கிக் கொள்கிறார். மெல்லப் பதிலிறுக்கிறார். "ஆ! அதுவா? பறவையொன்றின் மேல் வந்தான் அவன். பறவை பறக்கவில்லை. ஆடிக்கொண்டே வந்தது. என் மனவெளியிலே வையாளி வந்தது. வலக்கையிலே ஒரு வளையம் வைத்திருந்தான். அது அவன் கைக்கு ஒரு அணிபோல விளங்கிற்று. அவன் பால் ஈடுபட்டேன். கூட முயன்றேன். போய் விட்டான். ஆடிவந்த பறவை பறந்தது. விட்டேனா! என் மனோவேகத்தின் முன் அதன் வேகம் எம்மட்டு. கூடவே சென்றேன். குளந்தையில் பிடித்து விட்டேன். அழகான ஊர். மாட மாளிகைகள் நிறைந்தது. மாடங்களின் மீது கொடிகள் பறக்கின்றன. அங்கே ஊரின் மேற்புறத்தே நின்றான். கிட்டினேன். அதற்குள் என் நெஞ்சும், நாணும், நிறையும் இவை என்னைவிட்டகன்றன. கையில் ஒருவளை கூட இல்லை. யாவும் என்னைவிட்டு அவன்பால் சேர்ந்தன. யாவும் இழந்தபின் எதைக் கொடுக்க எனவே ஒன்றுமற்றவறியளாய் குணபூர்ணைகளான உங்கள் முன்னே நிறைவளை கையறான உங்கள் முன்னே பரிசழிந்து நிற்கிறேன். அவ்வூரில் கொடிகள் பறக்கின்றனவே அவை எல்லாம் என்னைப்போல் அவனை ஆதரித்து வந்தவர்களை அவன் பரிசழித்த வெற்றிக் கொடிகள் தாம்போலும், நான் யாவுமிழந்து பரிசழிந்து நின்ற நிலையைக் கண்டு கூத்தாடுகின்றான். மாயக்கூத்தன் என்ற பெயர்தான் எவ்வளவு பொருத்தம்! யாவும் இழந்தேன். உண்மை தான். அதனால் என்ன? அந்த மாயக்கூத்தனை ஆதரித்துச் சென்று

இன்னும் எதைத்தான் கொடுக்கமாட்டேன்! எதையும் கொடுப்பேன். உவப்போடு கொடுப்பேன் என்று பல்பொருள் படப் பதில் கூறுகிறார் ஆழ்வார்.

இப்படி மாயம் செய்து ஆதாரம் பெருக வைத்துப் பின் பரிசழித்து அவ்வெற்றிக்கடையாளமாகக் கொடி பறக்கவிட்டான். அவர்கள் பரிசழிந்தமை கண்டு கூத்தாடினான். எனவே மாயக்கூத்தனானான் என்று பொருள் படவே.

**"ஸாதரரை பரிசழிக்கும் சேஷ்டித ஆச்சர்யம்**
**குளத்தே கொடிவிடும்"**

என்று ஆசார்ய ஹ்ருதயம் **(3 -2 -3)** பேசும்.

ஆதாரத்தோடு கூடினாரை பெண்களுக்கியல்பான நாணம் முதலியவற்றை அழிக்கும் ஆச்சர்யகரமான சேஷ்டிதம் திருக்குளந்தையிலே மாடக் கொடிகளாலே ப்ரகாசிக்கும் என்பது பொருள்.

தன்னைக் காக்க வல்லவன் காக்க உரியவன் ஈச்வரனே. அவ்விதம் அவனே காப்பு என்று அவனைச் சரணடைந்த போது அவன் முகம் கொடாதே நம்முடைமையைப் பரித்து இழிவுபடுத்தினாலும் அவன் தான் நமக்குக் கதி என்ற நிலை மாறாது. நம்மை நாமே ரக்ஷித்துக் கொள்வது என்பது உத்தமநாயகிக்கு எடுத்ததல்ல. இன்னும் எதை வேண்டுமானாலும் அவன் பால் இழக்கக் கூசோம் என்று இப்பாசுரம் கூறும். இதையேதான், "தான் நோக்காது எத்துயரம் செய்திடினும் தார்வேந்தன் கோல் நோக்கி வாழும் குடிபோன்று, வித்துவக் கோட்டம்மா! என்பால் நோக்காயாயிடினும் நின்பற்றல்லால் பற்றிலேன்" என்று குலசேரர் (பெருமாள் திருமொழி 5.3) கூறுவர். இரண்டும் இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் இடையே உள்ள ரக்ஷ்ய ரக்ஷக ஸம்பந்தத்தையே கூறுவன என்பது சில பெரியோர்கள் அபிப்பிராயம்.



## திருப்புளிங்குடி

ஆழ்வார் என்ற பக்தர் பராங்குச நாயகியாகித் தன் பெண் நலமெல்லாம் பலர் காண இழந்து திருக்குளந்தை எம்பெருமானிடம் தனக்குள்ள ஆராத காதலை வெளியிட்டமையைக் கண்டோம். இவரை இப்படிப் பரிசழித்து அவ்வெற்றி தோன்றக் கொடியெடுத்த பரமனின் உள்ளம் குதூகலமடைகின்றது. எக்காரணத்துக்காக இவ்வர்ச்சாவதாரம் எடுத்தானோ அது பலிதமாகின்றது என்ற உகப்பு அவனுக்கு, "சரி! நாம் எதிர்பார்த்த பலன் நமக்கு ஓரிடத்திலாவது கிட்டும் போலிருக்கிறது. நம்மை உள்ளபடி அறியக்கூடிய ஒரு ஆன்மாவைத் தேடி அலைந்தோமே, அது இப்போது திருநகரியிலே உருவாகின்றது. அன்று அவ்வான்மா குளந்தையிலுள்ள நம்வடிவில் மயங்கி தன் நலமெல்லாம் இழந்தது. எனினும் சோர்விலாது 'இனி என் கொடுக்கேன்?' என்றல்லவா கூறிற்று அவ்வான்மா? அந்த ஆன்மா எப்படி உருவாகின்றது. விரைவில் பக்குவடையுமா என்று பார்க்க வேண்டுமே" என்ற எண்ணத்தோடு குளந்தையிலிருந்து வந்து பார்க்கிறானாம் இறைவன். வந்தவன் அழகிய சோலை சூழ்ந்த திருப்புளிங்குடியை அணுகியதும் "நம்விடாய் தீர இங்கேயே சற்றுப் படுத்து அந்நாயகி எப்படிப் பக்குவமாகிறாள். பார்ப்போமே" என்று சயனிக்கிறானாம். கொஞ்சகாலம் கழியவும் அச்சயனத்தை விட்டெழுந்து சற்றுத் தொலைவாய் வரகுணமங்கை என்ற தலத்திலே வீற்றிருந்து கவனிக்கிறானாம். மீண்டும் சிலகாலம் போக எழுந்து ஸ்ரீ வைகுந்தம் என்னும் தலம் போய் பராங்குசநாயகியைத் துய்க்க உரியவளாய்ப் பக்குவமானதும் மேல்விழுந்து பற்றற ஆயத்தமாய் நிற்கிறானாம். இம்மூன்று தலங்களிலுள்ள மூன்று நிலைகளும் பரமன் பராங்குசநாயகி உருவாகி வருவதைக் காண ஆத்திரம் அடைந்ததைக் காட்டும் என்பது பூர்வாசாரிகயர்களின் கருத்து. அதனைத் தான் ஆசார்யஹ்ருதயம்.

**"போக்ய பாகத்வரை தெளிந்த சந்தைக்கு**
**முன்னில் மூன்றிலும் பிரகடனம்" (ஆசார்ய 3 -2 -8)**

என்று கூறிற்று. "பசிகனத்தவன் அன்னம் பக்குவமாவ தற்கு முன்னே பதற்றத்தாலே அதற்கு அணித்ததாக வந்து கிடப்பது இருப்பது நிற்பதாமாபோலே போக்யபூதரான ஆழ்வாருக்குப் பரமபக்தி என்ற பாகம் பிறக்குமளவும் அவனுக்குண்டான பதற்றம் தெளிந்த என்கிற சந்தைக்கு முன்சொன்ன "புளிங்குடிக்கிடந்து வரகுணமங்கை இருந்து வைகுந்தத்துள் நின்று" என்று கிடப்பது இருப்பது நிற்பதான திருப்புளிங்குடி, திரு வரகுணமங்கை, ஸ்ரீ வைகுந்தம் ஆகிய மூன்று திருப்பதிகளிலும் தெரியும்" என்பது அதன் பொருள்.

தான் துய்க்க விழைந்த பொருள் எவ்விதம் பக்குவமாகிறது என்று பார்க்க வந்தவன் தான் அவ்விதம் பார்க்க வந்ததையும் ஆழ்வார்க்குஉள்ளத்திலே உணரக் காட்டுகிறான். அப்படி அவன் கொண்ட விழைவும் விரைவுமே ஆழ்வாரின் பகவத் காம உணர்வுக்கு உணவாக நின்று வளர்த்தன. இது அவர் பாசுரத்திலிருந்தே தெரிகிறது என்பதை மேலே பார்த்தோம். இம்மூன்று தலங்களிலும் எம்பெருமான் கொண்ட மூன்று நிலைகளும் ஒரே மெய்ப்பாட்டில் (அதாவது பொருளின் பக்குவம் காணத்துடிக்கும் நிலை) நிகழ்ந்தமையின் மூன்று நிலைகளையும் ஒரு சேர வைத்துப் "பண்டை நாளாலே" என்ற பதிகத்திலே ஆழ்வார் எம்பெருமானைப் போற்றுகிறார். பக்குவம் முதிர்ந்து தன் நாயகனோடு நேர்நின்று பேச மன உறுதி பெற்றுத் தன் நாயகி நிலைகெடாமல் நாயகனிடம் தனக்கும் பிறர்க்குமாகக் குறையிரக்கும் முறையில் அமைந்த இப்பதிகம் கற்றோர் படித்துக்களிக்க வேண்டிய தொன்று, பக்தர்களோ பாடிக்கரைய வேண்டியதொன்று இப்பதிகத்தை இனிக் காண்போம்.

ஆழ்வாரது நாயகித் தன்மையின் பக்குவத்தைக் காண எம்பெருமான் கொண்ட விழைவும் விரைவும் தோன்றும் இடங்கள் தாம் திருப்புளிங்குடி, வரகுணமங்கை, ஸ்ரீவைகுண்டம் என்றும் திருப்பதிகள் என்றும், அப்படித் தாம் கொண்ட விழைவையும் விரைவையும் எம்பெருமான் தானே



ஆழ்வாருக்கு உணர்த்தினான் என்றும், அத்தலங்களிலுள்ள மூர்த்திகளை ஆழ்வார் அனுபவித்ததை விளக்குவது தான் "பண்டை நாளாலே" என்னும் பதிகம் என்றும் முன்னே கண்டோம். அப்படி அவன் காட்ட ஆழ்வார் கண்டகாலம் எது? ஆழ்வாரது அப்போதைய மனநிலை என்ன? என்னும் அவை தெரிந்தால் இத்தலங்களில் ஆழ்வார் பெற்ற அனுபவங்களை நாம் நன்கு புரிந்து கொள்ள இயலும்.

ஆழ்வார் திருவாக்கில் இப்பதிகம் தோன்றிய காலத்தே அவருடைய திருவுள்ளம்

**"கொண்ட பெண்டிர் மக்கள் உற்றார் சுற்றத்தவர் பிறரும்**
**கண்டதோடு பட்டதல்லால் காதர் மற்றுயாதும் இல்லை**
**எண்திசையும் கீழும்மேலும் முற்றவும் உண்டபிரான்**
**தொண்டரோமாய் உய்யலல்லால் இல்லை கண்டீர் துணையே**

***(திருவாய் 9 -1 -1)***

என்று அவனையன்றி இவ்வுலகில் உள்ள அனைத்துறவும் நிலையற்றவை, ஆத்மாவுக்கு எம்பெருமான் ஒருவனே உண்மையான நிலைத்த உறவினன் என்ற உண்மையைத் தாம் உணர்ந்து, அதனை உலகும் உணர்ந்து உய்ய வேண்டும் என்று உலகுக்கு உபதேசித்த நிலையிலிருந்தது. "கொண்டபெண்டிர்" என்று தொடங்கி துணையும், பொருளும், அரணும், சதிரும், இன்பமும், சரணும் அவன் கழலையன்றி வேறில்லை என்று கூறி முடிவில் 'கண்ணனல்லால் இல்லை கண்டீர் சரண்', 'நும் உடைமை உண்டேல் அவனடி சேர்த்து உய்ம்மினோ', இதன் மேல் எண்ண வேண்டியது ஒன்றுமில்லை; அவன் ஒருவனே நிருபாதிக பந்து என்ற உண்மையைப் பரக்கப் பேசி முடிந்த நிலை, இந்நிலையிலே காணும் எம்பெருமான் தன் திருப்புளிங்குடியாதி அவஸரத்தை ஆழ்வார் திருவுள்ளத்துக்கு விஷயமாக்கியது.

எல்லாம் அவனே என்று கொண்ட ஆழ்வார் அவனே இவர் பக்குவத்துக்குப் பரிந்து வந்து கிடந்த இடமான

திருப்புளிங்குடியில் இப்போது அவனைக் கிட்டி நிற்கிறார். ஆனால் அவன் வாய் திறக்கவும் இல்லை. இவர் இருந்த பக்கம் திரும்பி நோக்கவும் இல்லை. அந்த நிலையில் உள்ளத்தின் ஆழத்திலே பொங்கும் குமுறலோடும், தான் நாயகி என்ற துணிவில் ஏற்பட்ட ஓர் உரிமையோடும் எழுந்த பதிகம் தான் “பண்டை நாளாலே” என்று தொடங்கும் திருவாய்மொழி. இனி பதிகத்தின் பாடல்களின் பொருளை ஒவ்வொன்றாக நோக்குவோம்.

**“பண்டை நாளாலே......... கிடந்தானே”**

தெளிந்த நீர் திரை எறியும் பொருனைக்கரையிலே சோலைகள் சூழ்ந்த திருப்புளிங்குடியில் சயனம் கொண்டவனே! நீண்டகாலமாக நிகழ்ந்த உன் திருவருளையும், பிராட்டியின் திருவருளையும் துணைகொண்டு நின் கோயிலிலே பரிசரியை (திருவலகிடுதல் முதலான கைங்கர்யங் களைப்) பண்ணிப் பல்வகையிலும் குடிகுடியாக ஆட்செய்து அதுவே பொழுது போக்காக வாழும் தொண்டர்களுக்கு அருளி உன் ஒளி பொருந்திய திருவாய் திறந்து ஒரு வார்த்தை அருளிச் செய்ய வேணும். உன் தாமரைக் கண்களை மலர் விழித்துக் கடாக்ஷிக்க வேணும் என்பது பாடலின் பருப்பொருள்.

**“தெண்டிரை........ கிடந்தானே”**

என்ன உறக்கமா? மயக்கமா! சோலையின் ரமணீயம் ஆழ்த்தி விட்டதா? சோலைக்கே தன்மையருளும் பொருனையின் குளிர்த்தியனுபவமா? அல்லது தெள்ளிய நீரை மெல்லிய ஓசையோடு எறிகின்றதே அலை-அந்த நாதத்தில் லயமா.

**“பண்டை நாளாலே............... கொண்டு”**

“நேற்று முன்னாளில் வந்த உறவல்லவே மிக நெடும் பண்டைக்கால முதல் அருள் பெற்றவர்களாயிற்றே. உன் அருள் பெற்றவருக்கும் நீ முகம் கொடாதிருக்கலாமா? உன்னருள் மட்டுமா? பங்கயத்தாள் அருளுமல்லவா? பக்கத்துணையாய் நின்றிருக்கிறது. அதோ உன் பாதத்தருகே அமர்ந்திருக்கிறாளே அவளையே கேள்! அவளருள் எங்களுக்குண்டா இல்லையா என்று? அவளருள் துணையாகத் தானே உன்னருள் கிட்டிற்று. இவ்விரு அருளும் பெற்றுமா உன் நோக்கம் பெறாமலிப்பது? என்று கேட்கிறார் ஆழ்வார். இறைவன் அருளுக்கு அடிபப்படை பிராட்டியின் அருள் நோக்கம் என்பதும், அந்த அடிப்படையில் அவனைப் பற்றினால் நிச்சயம் பலன்கிட்டும் என்பதும் வைணவ சமயக் கொள்கை. ஒருக்கால் எம்பெருமான் பிதா என்ற முறையில் நம் தவறுக்கு நம்மை ஒறுக்க முற்படின் தாயான பிராட்டி முன்னின்று நமக்குப் பரிந்து பேசி ரக்ஷிப்பாள் என்பதும் சமயத் துணிவு. இப்படிப்பிராட்டி முன்னாக பற்றுகை புருஷாகாரம் எனப்படும். இங்கு இரண்டு அருளும் உண்டு என்கிறார்.



**“நின்கோயில் சீய்த்து..... தொண்டரோர்க்கருளி”**

இவ்வருள் உண்டு என்று திமிர்த்துத் திரிந்தவரில்லை. பொழுதுபோக்கெல்லாம் நின்கோயிலிலே கைங்கர்யம் செய்கையே என்று கொண்டவர்கள். திருவலகிடுதல் முதலாகப் படிப்படியாகக் கைங்கர்யம் செய்தவர்கள். இப்போது மட்டுமல்ல, பண்டு தொட்டே ஆட்செய்பவர். குடியில் ஒருவர் இருவர் மட்டுமல்ல. குடிகுடியாக ஆட்செய்பவர் “நின்கோயிற் பொறியாலே ஒத்துண்டு நின்று குடிகுடியாட் செய்கின்றவர்கள்”, அடியேனுக்காக அல்லாவிடினும் இத்தொண்டர்களுக்காக வேணும் அருள் பாலித்து விழித்து நோக்காயா? என வினவுகிறார் ஆழ்வார்.

**“சோதிவாய்திறந்து........ நோக்காய்”**

உன் திருவாயின் செய்ய சோதி உன் அதரங்களிலே மின்னிடுகின்றது. எனினும் அந்தச் செம்மலர் முகை நன்கு விரிந்து உள்ளே ஒளிரும் பவள ஒளி காணவும் உன்

திருமிடற்றினின்று ஒரு அமுதமொழி கேட்கவும், உன் முறுவலைக் காணவும் துடிக்கின்றோம், “உன் கோல நறும் பவளச் செந்துவர் வாயினிடைக் கோமள வெள்ளி முளைபோல் சில பல் இலகும்” அழகை நாங்கள் ஸேவிக்க வேணும். அதற்கு மேலாக உன் அருள் நோக்கம் காண ஏங்குகின்றன எம் கண்கள். அந்த நோக்கல்லவா எங்களுக்கு தாரகம். நீ வாய் திறந்து ஒரு வார்த்தை அருளிச் செய்யவேணும். வார்த்தையில் கூறமுடியாத பொருள்களைக் குறிப்பாக உன் திருக் கண்களாலே உணர்த்தித் தலைக்கட்ட வேணும் என்று பிரார்த்திக்கிறார் ஆழ்வார். நாயகியல்லவா. வாய்ச்சொற்கள் பயனிலவாய் கண்ணோக்கினால் உணர்பவளாயிற்றே. எம்பெருமான் திருக் கண்ணோக்கம் பெற்றனுபவித்தவர் அது பெறாதபோது படும் ஏக்கம் சொல்லவரிய தொன்று. இராமன் அயோத்தியைவிட்டு வனம்புகப்புக்க காலத்தே அச்செய்திகேட்டு வருந்திய அவ்வூர் மகளிர் நிலைய வருணிக்கும் கவி “செந்தாமரைத் தடங்கண் செவ்வியருள் நோக்கம் அந்தோ பிரிதுமோ! ஆ! விதியே! ஓ! என்பார்” என்று அவர்கள் ஏக்கத்தை வருணிப்பார். இராமன் பிரிவைக் காட்டிலும் அவன் தாமரைக்கண் அருணோக்கப் பிரிவு காணும் அவர்களுக்குப் பொறுக்க அரிதாயிற்று. இறைவன் திருக் கண் நோக்கின் தன்மை இது. இவ்வாழ்வார் தாமே அந்நோக்கைப் பெற்று அம்மகிழ்ச்சியிலே “பெருங்கேழலார் தம் பெருங்கண் மலர்ப்புண்டரீகம் நம்மேல் ஒருங்கே பிறழவைத்தார் இவ்வகாலம்” என்று பரவிப் புகழ்ந்ததை முன்னே கண்டோமல்லவா?

“திருப்புளிங்குடிக் கிடந்தானே: “இப்படி அடியோங்கள் வேண்டியும் ஒன்றும் கேளாதாய்ப் போலே வெறுமனே கிடக்கின்றவனே. இந்த ஆர்த்த நாதம் காதில் விழவில்லையா என்று வினவுகிறார் ஆழ்வார்.

இப்பாடல் வியாக்கியானத்திலே இரண்டு ஐதிஹ்யங்கள் இடம் பெறுகின்றன.



திருக்கண்ணமங்கை ஆண்டான் என்ற ஒரு பக்தர். இவர் எம்பெருமானே உபாய உபேயம். நாம் ஒரு முயற்சியும் செய்ய வேண்டியதில்லை, ஒரு துரும்பு நறுக்கக் கூடத் தேவையில்லை என்று ஸ்வயத்னமெல்லாம் விட்டவர். அவர் ஒருநாள் பகவான் ஸன்னிதியில் உள்ள ஒரு மகிழ மரத்தடியில் உள்ள சருகுகளைத் திருவலகிடா நிற்க, அவர் கூடவே வாசித்தும் நாத்திகனான ஒருவன் இடக்காக அவரை நோக்கி “சருகை அலகிடுவானேன்? பகவானே உபாயம். நாம் வேறொரு வகையில் பலன் எதிர்பாராதவர். அப்படியிருக்க இதற்குப் பலன் என்ன?” என்று கேட்டான். ஆண்டான்தான் திருவலகிட்ட இடத்தையும், காட்டி இடாத இடத்தையும் இவ்விரண்டிடமும் உன் கண்ணுக்கு ஒன்றாய்க் காண்கிறதா? அலகிட்ட இடம் மற்றையதைவிட சுத்தமாக இல்லையா? இந்தத் திருவலகு கைங்கர்யம் உபாய கோடியில் சேர்ந்ததன்று. அவன் உகந்தருளின் இடம் சுத்தமாகை ஒன்றே பிரயோஜனம் என்றருளிச் செய்தாராம். இதனால் தம் செயலால் இறையருள் பெற்றவர் தம் வீட்டைப் பேணா நிற்பர். பிராட்டியடியாகப் பகவத்க்ருபைக்குப் பாத்திரரானவர் அவன் உகந்தருளின நிலங்களைப் பேணா நிற்பர் என்ற உண்மை விளங்கும் என்பர் பெரியோர். இங்கும் பங்கயத்தாள் திருவருளும் என்றமையின் “நின்கோயில் சீய்த்து” எனப்பட்டமை காண்க,

மற்றொரு ஐதிஹ்யம் வருமாறு: முன்னாளில் திருவாய்மொழி முதலிய பிரபந்தங்களை அபிநயத்துடன் பாடியனுபவிப்பார்கள். அப்படி அபிநயம் பிடிப்பவர்களை அரையர் என்றழைப்பார்கள். ஒருக்கால் ஒரு கோஷ்டியில் தேவப்பெருமான் அரையர் என்பவர் இப்பாடலுக்கு அபிநயம் பிடிக்கையில் “தாமரைக் கண்களால் நோக்காய்” என்றவிடம் வந்தபோது நோக்காய் என்று பன்முறை பாவத்தோடு கூறினாராம். அவர் சொல்லின் குழைவும், ஏக்கமும் அவர் அபிநயமும் கேட்டவர் மனத்தை உருக்க, கோஷ்டியிலிருந்த ஒரு பக்தர் திருவரங்கப் பெருமாள் அரையர் இதைக் கேட்ட

பகவான் உள்ளமும் நாம்படும்பாடு தானே இப்போது படும். இப்படி இவர் குறைப்படும்படி பெருமாள் இவருக்கு என்ன செய்தார்? என்று எண்ணி உடனே எழுந்து அரையரை நோக்கி "என்ன கடாக்ஷம் இல்லை என்று இப்படிப் பெருமாள் திருவுள்ளம் கன்றும்படி குறைப்படுகிறீர் காணும்? உமக்குப் பிள்ளைகளில் குறைவைத்தானா? ஐஸ்வர்யத்தில் குறைவைத்தானா? நல்ல பாடல் தந்ததில் குறையா? உம் சாரீரத்தில் தான் குறை வைத்தானா? பின் என்ன செய்யவில்லை என்று அவன் திருவுள்ளம் கன்றும்படி இப்படி நோக்காய் நோக்காய் என்று பாடுகிறீரே!" என்று கூவினாராம். இக்கதை பிரபந்தங்களை பக்தர்கள் எப்படி அனுபவித்தார்கள் என்பதை ஓரளவு நமக் குணர்த்துகின்றதல்லவா?

**"குடிக்கிடந்து ஆக்கம் செய்து......... கிடந்தானே"**

எங்கும் கொடிகள் கட்டப்பெற்ற அழகிய மதில்களால் சூழப் பெற்றதும், சுற்றிலும் குளிர்ந்த வயல்களையும், சோலைகளையும் உடையதுமான திருப்புளிங்குடியிலே சயனித்திருப்பவனே! வழி வந்த குடிக்கு ஒத்த செயலை உடையவராய் உனக்கே அற்றுத் தீர்ந்து உனக்கு அந்தரங்க கைங்கர்யங்களே செய்பவராய் உன் திருவடிக்குத் தப்பாதே. அடிமையில் எவ்வித கொத்தையுமில்லாதே உன்னை வழிபடுகின்ற அடியவர்களாகிய எங்களுக்கு அருளி, நீ முன்பொருநாள் இப்பூமிப்பரப்பையெல்லாம் அளக்க நீட்டின திருவடித் தாமரையை எங்களுக்குச் சூடாமணியாக எம் தலையிலே சூட்டியருளவேணும் என்பது பொருள்.

**"குடிக்கிடந்தாக்கம் செய்து"........ வழிவருநின்ற அடியரோர்"**

நாங்கள் எவ்வகையிலும் பழுதுபட்டவவர்களல்ல. "ஏழாட்காலும் பழிப்பிலோம் நாங்கள்" என்று சொல்லும்படியன்றோ எம்பரம்பரை. மேலும் மேலும் வந்த குடிக்கு புகழ் பெருகச் செய்யுமவர்களே அன்றி குடியின் புகழ் மாசுண்ணும்படி ஒரு போதும் நடவாதவர்கள். உனக்கே



அற்றுத் தீர்ந்தவர்கள். "தீர்ந்த அடியவர்" என்னும் பெயர்க்கு லக்ஷ்யமாயிருப்பவர். உன் திருவடி கைங்கர்யத்தில் என்றும் ஒரு குறைவு தோற்ற நடவாதவர்.

**"உன் பொன்னடி........ அடியரோர்"**

நீ காலால் கீறின வரை தாண்டாதே நின்றும் அடியவர், தன் மனோரதத்துக்கு நேர்மாறாயினும் உன் அடிக்கோடு மாறாத அடியவர். தம்மனோரதம் நிறைவேறாது போயினும் அதில் கவலை கொள்ளாராய் இப்படி ஒரு கைங்கரியத்துக்கு உன் திருவடியால் நிலம் கீறப்பெற்றோமே என்று மன நிறைவும் மகிழ்வும் கொள்ளும் அடியவர் ஸ்ரீபரதாழ்வானைப் போன்றவர்கள்.

யாம் வேண்டுவது ஒன்றுதான். உன் திருவடியை எங்கள் தலைமேல் வைத்தருள வேணும். உன் திருவடி கைங்கர்யத்தாலே படியுண்டது எங்கள் கேசம்" பின்னி முடித்த கொண்டைக்கும் பூச்சூட்டுவாரைப் போலே எங்கள் தலையிலே உன் திருவடியைச் சூடடியருள வேணும். "கோலமாம் என் சென்னிக்கு உன் கமல மன்ன குரைகழலே' என்று அடியேன் முன்பே பிராத்தித்திருக்கிறேன். அக்குறை நிறையவேணும். இதில் உனக்கு ஒரு சிரமமுமில்லை. "நின்னில் சிறந்த நின் தாளினையவை" ஆதலால் அத்திருவடி எங்கள் தலைக்கு அணியாக நீளுவதில் அவற்றுக்குத் தடையேதும் இருக்க முடியாது. அன்று ஒருநாள் மாவலியிடம் நீரேற்றபோது நடந்ததை நினைந்து பார். இப்பூமிப் பரப்பனைத்தையும் அளந்துகொண்ட உன் திருவடி இன்னும் நீண்டு கொண்டேயிருந்தது. மேலும் நீளாதபடி அதை நீதானே குசையிட்டு அடக்கினாய். நீளுவதில் அதற்கு அருமையில்லை, அதன் நீளத்தை அடக்குவதுதான் உனக்கருமை. எனவே எம் தலைக்கு அணியாக அத்திவருவடி நீளும்படி அநுமதிக்கவேணும். அதற்குத் குசையிட வேண்டாம். அன்று யாவர் தலைக்கும் அணியாய் நின்றதே அவ்வடி. அவர்கள்

எல்லோரும் அதை அணியாகச் சூடத் தகுதி பெற்றவர்களா? உன்னோடு எதிரம்பு கோத்தவர், உன்னை இகழ்ந்தவர், உன்னை ஒழிய வேறு பரதெய்வம் உண்டென்று கொண்டவர், எல்லாவற்றிற்கும் மேலாக ஈச்வரோஹம் நானே பரம்பொருள் என்று அலங்கரித்தவர்கள். இவர்கள் தலைக்குமல்லவா அணியாற்றிறு உன் திருவடி. அவர்களிலுமா நாங்கள் தண்ணியர்? என உரிமையோடு வினவுகிறார் ஆழ்வார். தான் ஒருவனாக இரப்பதிலும் பலர் கூடியிரந்தால் பலன்கிட்டும் என்று கருதி ‘அடியரோர்’ என்று பிறரையும் கூட்டிக் கொள்கிறார்.

இவ்விடத்திலே வனம்புக்க இராமபிரானை மீள அழைக்கச் சென்ற பரதனை உவமையாகக் காட்டுவர் ஆசார்யர்கள். “தான் ஒருவன் போக அமைந்திருக்க நாம் ஒருவனுமேயன்றி பலர் கண்ணநீர் கண்டால் மீளாரோ என்று ஆனை குதிரையகப்படத் திரட்டிக் கொண்டு போனானாயிற்று, பிரிவகற்றாமைக்குத் தன்னில் குறைந்தால் ஒருவரும் இல்லை பரிகரத்தில்” என்பது ஈடுவியாகக்கியானம்.

**“ஆவும் அழுத அதன் கன்றழுத அன்றலர்ந்த**
**பூவும் அழுத புண்அழத கள் ஒழுகும்**
**காவும் அழுத களிறு அழுத கால்வய்ப்போர்**
**மாவும் அழுதவனவான் மன்னவனை மானவே”**

***(நகர் நீங்கு படலம் கம்ப - அயோ - 102)***

என்பது இராமன் வனம்புகப் போகிறான் எனக்கேட்ட திர்யக்குகள் தாவரங்களின் நிலை கூறும் கவி கம்பன் வாக்கு.

**“கிடந்த நாள் கிடந்தாய்.......... கிடந்தானே”**

அழகிய புளிங்குடி என்னும் தலத்திலே பள்ளிகொண்டருளியவனே. என்றோ பள்ளி கொண்ட நீ இன்னும் பள்ளிகொண்டிருக்கிறாய். உன் திருமேனி வருந்த, இப்படி எத்தனை காலம் கிடக்கப் போகிறாய்? இடையீடில்லாமல் தொடர்ந்து உன் திருவடிக்கீழ்க் குற்றேவல் செய்துவரும் பழவடியோமுக்குக் கிருபைபண்ணி, பரந்த



தாமரை போன்ற உன் திருக்கண்களை விழித்து, உன் கிடக்கையினின்றும் எழுந்து உன்னோடு நீங்காது உறையும் பங்கயச் செல்வியும் நீயுமாக. பரந்த மூவுலகும் கண்டு தொழுமாறு வீற்றிருந்து இருவருமாகச் சேர்ந்த சேர்த்தியிலே சேவை சாதிக்கவேணும் என்பது பொருள்.

**“கிடந்தநான்......... அசைய”**

பெருமாள் அசையாது பள்ளிகொண்டிருந்ததைக் காணும் ஆழ்வார் திருவுள்ளம் அவர் திருமேனி வருந்துமே என்று கரைகிறது. கிடக்கிறான்! என்றிலிருந்து? என்று பின்னோக்கிப் பார்க்கிறார் ஆழ்வார். என்றோ? எவனோ வேண்டினான் என்று நீ பள்ளிகொண்டிருக்க வேண்டும். (தலபுராண வரலாறு ஆழ்வார் உள்ளத்தே ஓடியிருக்கிறதோ என்னவோ.) எப்படியோ இருக்கட்டும். ஆனால் நீண்டநாளாக இங்கே இப்படி ஒரே கிடையாகக் கிடந்தால் திருமேனி என்னவாகும்! என்று பரிகிறார் ஆழ்வார். பக்தர் அல்லவா? அவர்கள் கண்களுக்குத் தானே இறைவன் திருமேனி நிலை எளிதிலேபடும். சீதை பிரிந்தபின் அவளைத் தேடித்திரியும் இராமனைப் பின் பற்றிச் செல்லும் கம்பன் கவியுள்ளம் “நென்னல் கண்ட திருமேனி இன்று பிறிதா நிலைதளர்வான்” என்றல்லவா ஏங்குகிறது. ஆழ்வார் உள்ளக்கண்ணும் எம்பெருமான் நீண்டநாள் ஒரே கிடையாகக் கிடந்ததால் அவன் திருமேனியில் அசைவு பெற்றதாகக் காண்கிறது. இப்படி உடம்பு அலசும்படி எத்தனைநாள் கிடப்பது. ஒரு பக்தன் வேண்டுகோளுக்காகச் சயனித்தால் சயனித்தே கிடக்க வேண்டுமா? வேண்டுகோள் மட்டும் தான் காரணமா? திருக்கோளூரிலும் கிடந்தாய். இங்கும் கிடக்கிறாய். இப்படிக்

**கொடியார் மாடக்கோளூரகத்தும் புளிங்குடியும்**
**மடியாதின்னே நீதுயில்மேவி அமர்ந்ததுதான்**
**அடியாரல்லல் தவிர்த்த அசைவோ அன்றேலிப்**
**படிதான் நீண்டுதாவிய அசைவோ பணியாயே**

***(திருவாய் 8 -3 -5)***

என்று முன்பே அடியேன் சங்கித்து வினவியிருக்கிறேனே. அது போல சிரமபரிகாரமாக சயனமா?

**"தடங்கொள் தாமரை......... அருளாய்"**

என்ன செய்ய வேண்டும் என்று பெருமான் வினவுவதாகக் கொண்டு மேலே தன் உள்ளக் கிடக்கையைக் கூறுகிறார். "கிடந்தது போதும். இடமுடைத்தான தாமரை போன்ற உன் திருக்கண்களை விழித்து முதலில் எங்களைக் குளிரக் கடாக்ஷிக்க வேணும். சீரிய சிங்கம் அறிவுற்றது போலே விழித்து ஸிம்மாவலோகனம் போலவே இவ்விடங்கொள் மூவுலகையும் ஒரு பார்வை பார்க்கவேணும்- பள்ளியினின்றும் எழுந்து உன் நடயழகை யாம் காணப்போதரவேணும். போய் அரசு கட்டிலிலே வீற்றிருக்க வேண்டும். தனியேயல்ல! உன்னைவிட்ட கலாதுறையும் பங்கயத்தாளும் நீயுமாகச் சேர்த்தியாக இருந்து அவ்வழகை நாங்களும் மூவுலகோரும் கண்டுதொழும்படி வீற்றிருக்க வேண்டும்" என்று குறையிரக்கிறார் ஆழ்வார். அவனைத் தொழும்போதும் பிராட்டி முன்னாகத் தொழுகையே சொரூபமாகத் தோன்றும் ஆழ்வாருக்கு முன்பும் "பங்யத்தாள் திருவருளும் கொண்டு" என்றார். ஸ்ரீ மந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே என்ற த்வயத்தின் பொருளும் ஒருவாறு இப்பாட்டிலே தேறும்.

## நான்காம் பாட்டு

**"புளிங்குடிக்கிடந்து காணவாராயே"**

திருப்புளிங்குடியிலே கண் வளர்ந்து, வரகுண மங்கையிலே வீற்றிருந்து, ஸ்ரீ வைகுண்டத்திலே நின்று நினைத் தேறித் தெளிந்த என் சிந்தையுள் நின்றும் அகலாதே நின்று என்னைத் தர்ப்பித்து ஆட்கொண்டவனே! எனக்கு விசேஷ கிருபை செய்து உன் குளிர்ந்த சீல குணத்தை மூன்றுலகும் கண்டு வியக்கும்படியும் உன் அடியாரான நாங்கள் மகிழ்ந்து நாவலிட்டுக் கூத்தாடவும் எங்கள் மகிழ்ச்சியைக் கண்டு



தெளிந்த நீரை உண்ட காளமேகத்தில் பவளக்கொடி படர்ந்தாற்போன்ற உன் செவ்வாய் முறுவலாலேமேலும் சிவக்கும்படி முறுவலோடே நீ வந்து நலங்கள் காண சேவை சாதிக்கவேணும்.

இப்பாடல் தான் எம்பெருமானுக்குப் பராங்குச நாயகியாகிய ஆழ்வார் பக்குவமாவதில் உண்டான விழைவையும் விரவையும் காட்டி நிற்பது எனப் பெரியோர்கள் திருவுள்ளம் பற்றியிருக்கின்றனர் என்று முன்னமே பார்த்தோம். ஆழ்வார் வாக்கினின்றும் அது அறியக்கிடக்கின்றது என்றும் அவனுடைய இந்த விழைவும் விரைவும் ஆழ்வாரின் பகவத் காம உணர்வுக்கு உணவாகி நின்று வளர்த்தன என்றும் முன் குறிக்கப்பட்டவனல்லவா? இப்பாடல்தான் அதைக் காட்டுகின்றது.

**"புளிங்குடி............. எனக்கருளி"**

நீ உன் மனத்தே எழுந்த மகிழ்ச்சி தோன்ற புளிங்குடியிலே வந்து சயனித்ததையும், வரகுண மங்கையிலே இருந்ததையும், ஸ்ரீவைகுண்டத்திலே நின்றதையும் நான் என் முயற்சியினாலா தெரிந்தேன்? நீயேயன்றோ என் பக்குவத்தில் உனக்கிருந்த ஆத்திரத்தை என் உளக்கண்முன்னே காட்டினாய். நான் வேண்டியா செய்தாய்? என் மணக்கண் முன்னே காட்சியளித்த நீ என்னை ஆளவேணுமன்றோ? அப்படிக்கின்றி உன் வடிவை ஒளித்துக்கொண்டால் அதைத் தாங்கும் வலியுடையேனா நான்? எனவே என் அகத்தைவிட்டு நீங்காது என்னை ஆட்கொள்ள வேணும். அதுமட்டுமில்ல, இப்படி உன் பெருமையை எல்லாம் நீ காட்டவே நான் என் தன்மையை நோக்கி உன்னைப் பெற நான் அயோக்யன் (தகுதியற்றவன்) என்று விலகி விடாதபடியும் அருள் செய்ய வேணும். என்னை வெகுவாகச் சோதித்து விடக்கூடாது. நான் தாங்கமாட்டேன் என்கிறார் ஆழ்வார். இவ்விடத்திலே வியாக்யானத்தில் பட்டர் வாழ்க்கையின் நிகழ்ச்சியொன்று ஐதிஹ்யமாகக் காட்டப் பெறுகின்றது.

திருநாராயணபுரத்தில் ஸ்ரீ பட்டர் எழுந்தருளியிருக்கும் போது எதிர்பாராத சில தெய்வ சோதனைகளால் பெரிதும் திருவுள்ளம் வருந்தினார். அவ்வருத்தமடியாகத் தோன்றிய அப்போதைய வெறுப்பிலே எம்பெருமானைத் திருவுள்ளத்திலே நினைந்து அவனை நோக்கி "தேவர் ஸ்வாதந்தர்யமெல்லாம் காட்டினாலும் பின்னையும் பண்ணின விச்வாஸத்தில் குலைதலின்றிக்கேயிருக்கும்படி எலும்பு உரமுடைய எம்பெருமானார் போல்வர் பக்கல் செய்யுமத்தை எலியெலும்பனான அடியேன் பக்கலிலும் செய்வதோ? "மஹா விச்வாஸ பூர்வகம்" என்கிறபடியே ஏதேனும் ஒன்று வந்தாலும் "இங்குத்தைக்கு ஒன்று வருவதாய் வந்ததன்று இதுக்கடி நம்முடைய பாபம்" என்று பண்ணின. விச்வாசம் குலையாதார் பக்கலிலே செய்யுமத்தை இதுதானே, ஏதுவாக நெஞ்சு நெகிழும்படி இளநெஞ்சர் பக்கலிலும் அத்தைச் செய்யக்கடவதோ என்றாராம்.

நான் அயோக்யன் என்று அகலாதபடியும் உன் பிரிவாற்றாமையால் முடியாதபடியும் என்னை இதுவரை தரிப்பித்துக் கொண்டு போந்தாய். அதுபோல் இன்னும் செய்து எமக்கு சீவனம் இட வேண்டும்.

**"நளிர்ந்த.............. காணவாராயே"**

'என்னை என்ன செய்யவேண்டுமென்கிறாய்' என்று பெருமாள் வினவுவதாகக் கொண்டு மேல்தம் உள்ளக்கிடக்கையை ஆழ்வார் வெளியிடுகிறார். உன்னுடைய ஸௌசீல்ய, ஸௌலப்ய குணங்களை இம்மூவுலகும் கண்டு வியக்கவேணும். அவ்வியப்பிலே நாங்கள் யாவரும் சேர்ந்து கைகோத்துக் கூத்தாட வேண்டும் என்று வேண்டுகிறார் ஆழ்வார். எம்முறையில் நம் ஸௌசீல்யம் வெளிப்பட வேண்டும் என்று எம்பெருமான் வினவ தெளிந்த நீருண்ட மேகமானது பவளம் பூத்தது போல எங்கள் வியப்பையும் மகிழ்ச்சியையும் கண்டு உன் திருமேனியிலே சிவந்து தோன்றும் நின் அதரம் மேலும் சிவந்து தோன்ற நீ மெல்ல அடிமேல் அடிவைத்து மத்தகஜம் போன்ற உனது கம்பீரமான நடையை



நாங்கள் காணும்படி வந்தருளவேணும். நீ என் பிரார்த்தனையைத் தலைக் கட்டினாய் என்று உன் சீலத்தை எல்லோரும் கண்டு வியக்க வேணும், வியந்த எங்கள் முகங்களை நோக்கி உன்னிடைத் தோன்றும் புன்முறுவலால் உன் அதரப் பழுப்பு ஏறவேண்டும். வியந்த எங்களை நோக்கி உன் நடையழகு தோன்ற நீ மெல்ல எழுந்தருளவேணும், மாறியிடும் உன் கால்களுக்கிசைய நாங்கள் கூத்தாட வேண்டும். இதுவே அடியேன் பிரார்த்தனை என்கிறார் ஆழ்வார். இவ்விடத்திலும் வியாக்யானத்தில் ஒரு ஐதிஹ்யம் காட்டப்படுகிறது. "ஒருநாள் பிள்ளை அழகிய மணவாளப் பெருமாள் அரையர் இப்பாசுரத்தை ஸேவிக்க பெரிய பெருமாள் அரையரை அருளப் பாடிட்டு "நாம் இங்ஙனே நடக்கிறோம். நீ அதுக்கீடாக ஆடிக்காண்" என்ன 'தம்பிரானே என்னால் அந் நடைக்கீடாக ஆடப்போமோ,

**கானகம்படியுலாவி யுலாவிக்கருஞ் சிறுக்கண்குழல் ஊதினபோது**
**மேனகையொடு திலோத்தமை யரம்பை உருப்பசியரவர் வெள்கி மயங்கி**
**வானகம்படியில் வாய்திறப்பின்றி ஆடல் பாடலவை மாறினர்தாமே.**

***(பெரியாழ்வார் 3 -6 -4)***

என்றபடி தேவரீருடைய குழலோசை கேட்டவாறே பாடல் தவிர்ந்தார்கள். தேவரீருடைய ஸ்வாபாவிகமான நடைக்கு தங்களுடைய சிக்ஷாபலத்தாலுண்டான ஆடல் தவிர்ந்தார்கள். குரக்குக்கைகொடு கூழ் துழாவி அடியேன் தேவர் திருமுன்னே ஆடவல்லேனோ என்றாராம்.

## ஐந்தாம் பாட்டு

**"பவளம்போல்...... ஊர்ந்தானே"**

நன்கு செறிந்து படர்ந்த பவளத்தின் கீழ் சங்குகள் தங்கும் பொருளைக் கரையிலுள்ள குளிர்ந்த

திருப்புளியங்குடியிலே கண் வளர்ந்தருளினவனே! கவளம் உண்கையை இயற்கையாக உடைய பெரிய யானையின் துயரம் நீங்கும்படியாக அது நின்ற பொய்கைக்கு, கொடிய கோபத்தை உடைய உவணப்புள்ளை ஊர்ந்து சென்றவனே! கொவ்வைக்கனி போன்ற நின் திருவதரம் மேகம்போல் மேலும் சிவந்துதோன்ற உன்னுடைய பற்களாகிய முத்துக்கள் இளநிலாக் கதிர்வீச முறுவல் செய்து கொண்டு நாங்கள் சேவிக்கும்படி நீ வந்து உன் அழகிய திருக்கண்களாகிய தாமரை விளங்கும்படி நின்றருளவேண்டும்.

**“பவளம்போல் கனிவாய் சிவப்பு”**

“அவாக், அநாதர்” என்கிறபடி ஒன்றுக்கும் மாறுபடாத அவிகாரன் என்னும் பெயர் பூண்ட நீ அடியார்களாகிய எங்கள் திறத்திலே அது மாறாடும்படி உன் அடியார்களான எங்களைக் கண்டதாலே உள்ளே எழுந்த நிறைவு என்னும் அகவேறுபாடு உன் முகத்திலே முறுவலாய்த் தோன்ற நிற்கவேணும், அம்முறுவல் இளநிலவின் ஒளிவிடவேண்டும். எறிநில வொளியல்ல, அந்நிலவொளி உன் திருவாயின் உள்ளடங்காதே புறம்பே தவழ வேண்டும்.

**“உன் திருக்கண்...... நின்றருளாய்”**

“உன் அழகிய கண்களாகிய தாமரை ஒளிவிட நீ பைய நடந்துவர உன் நடைக்கேற்றவாறு நாங்கள் கூத்தாடுதல் கண்டு வியந்து உன் கண்கள் ஒளிவிட, விழிநிலைத்து வைத்த கண் வாங்கமாட்டாதே நீ உன்னை மறந்து நின்றருளவேணும். உன் நடைக்குத் தம் ஆடல் தோற்றார் போன்று எம் பாடலுக்கு நீ நடை தோற்க வேணும்.

**“பவளநான் படர்க்கீழ்........ கிடந்தாய்”**

உன் முறுவல் எப்படி யிருக்கவேண்டும் தெரியுமா? இதோ நீ பள்ளி கொண்டிருக்கும் திருப்புளிங்குடித் துறையிலே செறித்து படர்ந்த பவளத்திலே சங்குகள் நிரையாய்



அணிவகுத்திருக்கின்றதை பார்! அவை போன்று இருக்க வேண்டும். நீ பள்ளி கொள்ளும் தலமே உன் முறுவலைக்காட்டி நிற்கின்றதே, அத்தகைய தலத்தில் பள்ளி கொண்டவனே.

**“கவளமாகளிற்றின்............ ஊர்ந்தானே”**

எப்போதும் கவளம் கொள்கையிலே ஆடையுடைத்தான ஆனை. அது ஆயிரம் தேவ வருடம் உணவுமின்றி இடருற்றது. அதன் இடரை நீக்க இருந்த இடத்திலிருந்தே “விடுத்த திசைக் கருமம் திருத்தும்” திருவாழியை ஏவாதே ஆனை நின்று இடர்ப்பட்ட பொய்கைக் கரைக்கு விரைந்துவனே.

**“காய்சினப் பறவை”**

நீ திருவாழியை ஏவி சங்கரிக்கும் முன்பே தன் கோபத்தாலே தீய்த்து விடுவான் போன்று அடியாரின் விரோதிகள் பக்கல் சினம் கொள்ளும் கருளப்புள்ளை ஊர்ந்து.

**“இடர்”**

அந்த ஆனையின் இடர்போன்றதே என் இடரும். என்னை முடிக்கவல்லது. ஆனைக்குத் தன் கையில் பிடித்தபூவின் செவ்வி மாறிவிடுமே என்ற “நெஞ்சிடர்” உன் பாதபங்கயத்தை என் தலைக்கணியாக நீ சேர்த்தருளவில்லையே என்ற இடர் எனக்கு ஆயிரம் தேவ வருடம் இடரைத்தாங்கும் மனஉறுதியும் உடல் உறுதியும் இருந்தது யானைக்கு நான் எலியெலும்பன் இடவரத் தாங்கவல்லேனல்லேன்.

## ஆறாம் பாட்டு

**“காய்ச்சினப்பறவை............. கடிவானே”**

கொடிய கோபத்தை உடைய கருடனை ஊர்ந்து ஒரு பொன்மலை மேல் மேகம் படிந்ததுபோலக் காட்சி தந்து சுமாலி, மாலியவான் என்ற பிரசித்தமான அரக்கர்கள் போரிலே கெட்டோடும்படி சீறி அவர்முன்னே நின்று

அதனால் காய்ச்சினவேந்து என்னும் திருநாமத்தைப் பெற்றவனே! ஒளிவிடும் திருமுடியைத் தரித்தவனே! செழித்த கழனிகளையுடைய திருப்புளிங்குடியில் நித்ய வாசம் செய்பவனே! காயும் சினத்தையுடைய திருவாழி முதலிய உன்னுடைய பஞ்சாயுதங்களுடனே எம்மிடர் கடிவதற்காக நீ எங்கள் முன்வந்து நின்திருக்கண் தாமரை தயங்க நின்றருள வேண்டும்.

இப்பாட்டு முன்னைய பாடலின் தொடர்ச்சி என்று கொள்ள வேணும். முன் பாட்டிலுள்ள "நின்றருளாய்" என்றதே இப்பாசுரத்துக்கும் வினை முடிப்பாகும்.

**"காய்சினப்பறவை........... கார்முகில் போல்"**

உன் பக்தரக்ஷணத்திலே உனக்கு முன்னே பாரிக்குமவனாதலாலே அடியார் இடர் கண்டால் பக்த விரோதிகளிடம் கொதிக்கும் கோபம் கொள்பவனான வைனதேயன், அவனை ஊர்ந்து பொன்மேனியனான அவன் தோளில் தேவரீர் ஆரோகணித்தால் அது மேருமலையிலே காளமேகம் படிந்தது போன்ற ரமணீயமான ஒரு காட்சியல்லவா. அப்படிக் காட்சிதர வேணும். "காய் சினப்பறவை யூர்ந்தானே!" என்றார் முன்பாசுரத்தில். உடனே அவன் புள்ளூறும் காட்சி அவர் மனத்திரையிலே நிழலாடிற்று. அக்காட்சியை வருணிக்கிறார் இப்பாசுரத்திலே.

இராவண வதத்தை யுன்னி தேவர்கள் பெருமாளைப் பிரார்த்திக்க 'பரகதி யுணர்ந்தவர்க்குதவும் பண்ணவன்' அவர்கள் முன் தோன்றியதை

**"கருமுகில் தாமரைக் காடுபூத்தி எழில்**
**இருசுடர் இருபுறத்தேந்தி ஏடவிழ்**
**திருவொடும் மருவி ஓர் செம்பொற்குன்றின்மேல்**
**வருவபோய் கலுழன் மேல்வந்து தோன்றினான்"**

*(கம்ப. பால. திருவவதாரம் - 12)*

என்று வருணிக்கும்போது கம்பர் திருவுள்ளத்திலே இப்பாசுரம் தானே ஓடியிருக்க வேண்டும்.



உத்தரகாண்டம் பாடிய கவியும், சுமாலி முதலியோருடன் பொருவதற்காகக் கருடன் மேல் தோன்றிய பெருமாளை

**"பொன்னெடு மேருஉச்சிப் பொருசிலை யோடும்கூட**
**மின்னொடு தழுவி நின்று வீங்குகார்மேகம் போன்றான்"**

என்று வருணித்தார்.

**"மாசினமாலி........ வேந்தே"**

பெரிய கோபத்தை உடைய சுமாலி, மாலியவான் என்ற அரக்கர்களது வலியழிந்து புகைந்து போகும்படி அவர்கள் கோபத்துக்கு எதிர்த்தட்டாகத் தானும் கோபத்தை ஏறிட்டுக் கொண்டு, அப்படிக் காயும் சினத்தை மேற்கொண்ட காரணத்தாலே காய்சின வேந்து என்ற திருநாமம் பெற்றவனே. திரிபுவன சக்ரவர்த்தியே!

**"கதிர்முடியானே"**

உலகை நலியும் துஷ்டர்களைப் படுத்த வெற்றியின் அறிகுறியாகக் கவித்த ஒளிமிக்க திருவபிஷேகத்தை உடையனே,

**"கலிவயல் திருப்புளிங்குடியாய்"**

செழித்த வயல்கள் சூழ்ந்த புளிங்குடியில் எழுந்தருளியிருப்பவனே. எங்கோ காது கேளாத இடத்தில் இருப்பவனல்லவே.

**"காய்சின ஆழி......... கடிவானே"**

ஆனையின் இடரை நீக்க எல்லா ஆயுதங்களையும் நீ கொண்டு சென்றாயில்லை. ஆனால் எம்மிடர் நீங்க எல்லா ஆயுதங்களையும் தரித்து வரவேணும்காண். ஆயுதங்கள் பிரயோகம் செய்யவல்ல தேவரீருக்கு அணியாக அணிந்து வர வேண்டுவது. முன் ஒரு கால் "மண்ணும் விண்ணும் மகிழ கூராராழி வெண்சங்கேந்தி வாராய்" என்று பிரார்த்தித்திருந்தேன். அது போதாது. பஞ்சாயுதங்களையும்

தரித்து உன்முடிச் சோதிவிளங்க அவ்வாயுத அணி சோபையோடு நாங்கள் சேவிக்கும்படி எங்கள் முன்னே நின்றருள வேணும்.

## ஏழாம் பாட்டு

**“எம்மிடர்கடிந்து.......... முகப்பே”**

பிறப்படியாக எமக்கு வரும் எல்லாத் துன்பங்களையும் போக்கி இவ்வுலகிலே எம்மை அடிமை கொள்ளுகிறவனே! இமைய வருக்கும் அங்கே அப்படித் தலைவனானவனே, சிவந்த மடல் விரியும் தாமரைகளையுடைய நீர் நிலை நிறைந்த திருப்புளிங்குடியிலே பள்ளி கொண்டவனே! உன் அடியார்களின் ஆரவாரத்தைக் கண்டு நாங்கள் மகிழ்ந்து உள்ளத்தில் பிரேமம் பெருக ஞானமற்ற இவ்வுலகத்தாரும் காணும்படி எங்கள் கண்வட்டத்திலே ஒருநாள் இருந்தருளவேணும்.

**“எம்மிடர்”**

அநாதி காலமாகச் சேர்ந்த பாபமடியாக வந்த எங்கள் துன்பக் குவியல்கள்.

**“இங்கு”**

உன்னை நாங்கள் அறியவொட்டாதே எங்கள் அறிவை மூடி மறைக்கும் தடைகளே நிறைந்த இந்நிலவுலகிலே,

**“எம்மை ஆள்வானே”**

உன் அருளுக்குச் சற்றும் பாத்திரரல்லாத எங்களுடைய துன்பங்களை ஒழித்து எம்மை ஆட்கொள்பவனே.

**“இமையவர்.......... அணையாய்”**

எங்களை மட்டுமா துயர்நீக்கி ஆட்கொண்டது. எங்களைவிட மேலானவர் என்று பிரபலராயிருக்கிற பிரம்மருத்ராதி தேவர்கள் இடரையும், மேலுலகென்று பெயர் விளங்கும் அவர் பூமியிலே, எம்மிடரை இங்கு நீக்கியருளியதுபோலவே அவர் துயரையும் அங்கே நீக்கி அவரையும் எம்போல் ஆட்கொள்பவனே. ஆக பலமற்ற வரோடு, பலமுள்ளவராகப் பிரபலமாகப் பேசப்படுவரோடு வாசியற எல்லோரையும் துன்பம் துடைத்து அடிமை கொள்பவனே!



**“செம்மடல்............ கிடந்தாய்”**

பசியநின் திருமேனியிலே கண், கை, கால், வாய் இவை சிவந்து தோன்ற நீ கிடந்தது போன்று தாமரை மலர்களை ஆங்காங்கே மடல் விரித்துத் தன் பச்சை இலைப் பரப்போடு மிளிரும் நீர்நிலைகளையுடைய திருப்புளிங்குடியில் பள்ளிகொண்டவனே.

**“..... ...... கண் கை கால்**
**தூய செய்ய மலர்களாச் சோதிச் செவ்வாய் முகிழதாச்**
**சாயற் சாமத்திருமேனி தண் பாசடையா தாமரைநீள்**
**வாசத்தடம் போல் வருவானே”**

என்றதும் இவ்வாழ்வார் அனுபவம் தானே.

**“நம்முடை........... கூர”**

உன்னுடைய அடியவர்கள் உன்னை முகமுகமாகக் காணப்பெற்ற அதிசயத்திலே ஆரவாரம் செய்ய அதுகேட்டு நாங்கள் மகிழ,

**“இம்மடவுலகர்............ முகப்பே”**

மௌட்யமே நிறைந்த இவ்வுலகத்தார் காண, ஞானியர் உளக்கண்ணுக்கு எளிதில் புலனாகாத நீ இந்த ஞான சூனியரின் ஊனக்கண்ணுக்கும் இலக்காகி அவர்காண எங்கள் கண் வட்டத்திலே ஒருநாள் தங்கமாட்டாயா? தங்கக் கூடாதா?

ஆங்கு இமையவர்க்கு எப்போதும் காண எளியனான நீ இவ்வுலகோர் காண இங்கு ஒரு நாளாகிலும் இருந்து சேவை சாதிக்கலாகாதா?

# எட்டாம் பாட்டு

"எங்கள் கண்முகப்பே.... கொண்டே" வானத்துச் சந்திரன் சேரும்படி உயர்ந்த மாடங்களையுடைய திருப்புளிங்குடியிலே உறைபவனே. திருவைகுந்தத்திலே நின்றருளியவனே, யாவர்க்கும் இறைவனே, எங்கள் கண் வட்டாரத்திலே உலகத்துள்ளார் அனைவரும் உன் திருவடிகளிரண்டையும் சேவித்து எழுந்து வணக்கத்தோடு தங்கள் அன்பு தோன்ற தங்களாலியன்ற சொற்களாலே ஒருவரை ஒருவர் விஞ்சும்படி உன்னைத் துதிக்கும்படி பரந்த சிறந்த இந்த மண்ணுலகத்தே இந்த இடத்திலும் உன் வீறு பரந்து தோன்றும்படி ஒருநாள் இருந்தருளவேணும்.

**"எங்கள் கண்முகப்பே"**

தாங்கள் உனக்குகந்த அடியார்களாகிய நாங்கள் காணும்படி எங்கள் கண்முன்பே எங்கோ என்றோ யார் முன்போ இல்லாமல் இங்கே இன்றே எங்கள் கண் எதிரிலேயே.

**உலகர்கள் எல்லாம்**

உலக மக்கள் அடங்கலும் ஒருவர் பாக்கியின்றியே எங்கள் குறையிரப்பைக் கேட்டு நீ எழுந்தருளினாய் என்றால் வையம் முற்றுமே வியந்து கூடிவந்து விடாதா. அப்படி எல்லோரும் வரும்படி.

**இணையடி....... இறைஞ்சி**

உங்கள் உபய திருவடிகளையும் சேவித்து எழுந்து வணக்கத்தோடு உன் சன்னிதியிலே நிமிர்ந்து நிற்பரோ? நிற்க முடியுமோ? இணையடி சேவித்தால் உடல்தான் வளையுமே.

**தங்கள் ........... பூசிப்ப**

தங்கள் ப்ரீதி தோன்ற, அன்பு பொங்கிப் பொழிய அப்பொங்குதல் அவர்கள் வாக்குமூலம் மங்களா சாசனங்களாக வெளிவர தந்தாம்கற்ற அளவுக்கேற்ப எந்த



சொல்லில் தங்கள் பிரிய வஸ்துவைப் போற்றுவார்களோ அந்த அன்பு மொழிகளனைத்தையும் கொண்டு இடம் இடமாகத் தாங்கள் நின்ற இருந்தவிடத்திலிருந்தே; ஒருவரை ஒருவர் விஞ்சும்படி உன்னைத் துதிக்க; உனக்குப் பல்லாண்டு பாட.

**திங்கள்.......... குடியாய்**

உயர்ந்த மாடங்களை உடைய திருப்புளிங்குடியிலே உறைபவனே. மாடங்களின் உயர்த்தி சாமானியமா. சந்திரமண்டலத்தளவும் ஓங்கிய மாடம். வானவெளியிலே சுற்றும் சந்திரன் உடல் தளர்வு ஏற்பட்டால் சற்றுத் தங்கி இளைப்பாற அமைத்தது போன்ற உயர்ந்த மாடங்கள். அத்தகைய மாடங்கள் நிறைந்த புளிங்குடியில் சாய்ந்தவனே.

**திருவைகுந்தத்துள்ளாய்**

அடுத்து ஸ்ரீவைகுந்தத்திலே நின்றருளினவனே.

**தேவா**

எமக்கும் பிரம்மாதி தேவருக்கும் தேவனே.

**இங்கண்...... கொண்டே**

உன் தேவனான இருப்பு பரமபதத்திலே என்றாலும் அதே போன்ற உன் திரிபுவன சக்ரவர்த்தித்துவம் தோன்றும்படி வீறு தோன்றும்படி இந்த மண்ணுலகத்திலேயும் இருந்தருளவேணும். அந்தவிடத்துக்குப் பெருமை நீ இருத்தலால் தானே. நீ இல்லாத போது அந்த அழகு இழந்ததுதானே! இம் மண்ணுலகம் ஒன்றும் இழிவானதல்ல. இங்கும் அங்குபோல் நீ எழுந்தருளி வீற்றிருக்கவேணும், அங்கு காலமெல்லாம் இருந்தாலும் இங்கு ஒரு நாளாகிலும் விற்றிருந்து சேவை சாதிக்கலாகாதா. நாங்கள் கண்டுகளிக்கும்படி நீ ஒரு நாளாகிலும் எங்கள் கண்வட்டாரத்திலே வீற்றிருக்கவேணும்.

தங்களன்பார என்றவிடத்தே வியாக்கியானத்தில் ஒரு ரசமான ஐதீஹ்யம் கூறப்படுகிறது.

வங்கிபுரத்து நம்பி என்ற ஸ்ரீ வைஷ்ணவர் பெருமாள் சேவிக்க வந்தார். அங்கே கூட்டமாக எல்லோரும் சேவித்துக் கொண்டிருந்தார்கள். நம்பி தம்மினத்தார் நின்ற இடத்தை விட்டுச் சுற்றிலும் நோக்கினார். ஓரிடத்தில் இடைச்சிகள் சேவித்துக் கொண்டிருந்தார்கள். நம்பி அங்குபோய் அவர்களோடு நின்று பெருமாளை சேவித்துக் கொண்டிருந்தார். இதை ஆண்டான் என்ற ஸ்ரீ வைஷ்ணவர் கண்டு நம்பியையழைத்து ஸ்ரீ வைஷ்ணவரான நாங்களெல்லோரும் இருக்கும் இடத்தைவிட்டு நீர் அங்கு போனதன் மர்மமென்னவோ? என்று வினவினார். நம்பி, நாம் கொஞ்சம் படித்தவர்கள் என்று சொல்லிக் கொள்கிறோமல்லவா? அந்த அளவுக்கு பகவானைத் தந்திரத்தால் இழுத்துவிட முயல்வோம். அவர்கள் ஒன்றும் அறியாதவர்களாகையாலே பகவானுடைய கடாக்ஷம் அவர்களிடத்தே பள்ளமடையாயிருக்குமன்றோ அதனால் அங்கே போனேன் என்றார். ஆண்டான் 'சரி! அங்கு போனீரே? அவர்கள் பெருமாளை நோக்கி என்ன சொன்னார்கள். தேவரீர் என்ன அருளிச் செய்தீர்' என்று கேட்டார். அதற்கு நம்பிகள் "அவர்கள் பெருமாளை பாலுண்பீர், பழமுண்பீர், பொன்னாலே பூணுநூலிடுவீர். நூறுபிராயம் புகுவீர்! அழுத்த இரட்டையுடுப்பீர்" என்றார்கள். நான் 'விஜயஸ்வ! விஜயீபவ! என்று வாழ்த்தினேன் என்றார். கேட்ட ஆண்டான் "ஸ்வாமீ! அங்கே போயும் முருட்டு ஸம்ஸ்க்ருதம் விட்டீரில்லையே. எங்கேயிருந்தாலும் நாம் நாம் காணும்" என்றாராம்.

## ஒன்பதாம் பாட்டு

**"வீற்றிடம்கொண்டு......... வல்லானே"**

செந்நெல்லோடு இளம்வாளைகள் சேற்றிலே உகளும் செழுமையான கழனிகளையுடைய திருப்புளிங்குடியில் வர்த்திக்குமவனாய், அசுரர்க்கு யமனாய் நின்று அவர் குலத்தை



முற்றும் கறுவறுத்த கொடிய செயலைச் செய்த ஆயுதங்களை தரித்தவனே, அடியவரான எங்கள் வாக்கு இடையறாது உனக்கு மங்களா சாஸனம் பண்ணவும் எங்கள் கண்கள் குளிர உன் வடிவழகைப் பருகும்படியும் பரந்த இடத்தையுடைய இந்தப் பூமியிலும் நீ வீற்றிருந்தருள வேணும்.

**வீற்றிடங்கொண்டு....... இருந்திடாய்**

முன்பாட்டில் வேண்டிக் கொண்டதை தன் ஆற்றாமை மிகுதியாலே மீண்டும் விண்ணப்பிக்றார். "என்ன இந்த உலகத்திலா" என்றிறைவன் வினவுவதாக வைத்து 'ஆமாம்' இந்த ஞாலத்துள்ளும் இருந்தருள வேணும். பரமபதத்திலிருக்கும் இருப்பைப் போலவே இங்கும் வீற்றிருக்க வேணும். இரண்டிடத்தும் ஒரே இருப்பாகக் காட்சியளிப்பது உனக்குக் கடினமல்லவே. வேண்டுமென்றால் அங்கும் இக்கோலத்தோடு இருக்க இயலுமே உமக்கு. நீ பிறந்து உன் புகழை அதிகமாக்கிக் கொண்டது இந்தப் பூமி, எனவே இதிலும் நீ வீற்றிருக்கலாம். வீற்றிருக்க வேணும்.

அதனால் உமக்கென்ன பிரயோஜனம் என்கிறீரா.

**"அடியோம் போற்றி ஓவாதே**
**கண்ணிணைகுளிர புதுமலர் ஆகத்தைப் பருக**

உன் திருமேனி வடிவழகை நீ கொலுவிருக்கும் அழகை உன் வீறு தோன்ற இருக்கும் இருப்பின் சோபையை எங்கள் இரு கண்களும் வாரிப் பருக, உன் அழகு வெள்ளமாகத் தேக்கிட எங்கள் கண்கள் முகவையாக நாங்கள் மொண்டு கொண்டு உண்டு களிக்க, உன் அழகு மலராய் மலரா எம் கண்கள் வண்டாய் அதன் மதுவைப் பருக, இப்படியுண்டு கண்ணும் மனமும் குளிர்ந்து உன் வடிவழகுக்குக் கண்ணெச்சில் படாதபடி பல்லாண்டு பாடுவோம். உன் அழகை ரஸித்து வாழ்த்துவோம். இதைவிட என்ன பிரயோஜனம் எங்களுக்கு வேண்டும். உனக்கும்தான் இதன் மேலாக என்ன வேண்டுமோ? எங்கள் பூரிப்பில் நீ பூரிக்க

இப்படி இருதலையும் மகிழ்வெய்த நீ இங்கு ஒரு நாளாகிலும் வீற்றிருக்கவேணும்.

இறைவன் அழகை அனுபவிக்கும் பக்தர்களின் கண்களை வண்டாகவும் இறைவன் அழகை பூவில் தேங்கிய மதுவாகவும் வர்ணித்தல் கவிகட்கியல்பு.

தசரதன் சொல்லின்பேரில் மந்திராலோசனை சபைக்கு இராமனை அழைக்கச் சென்ற சுமந்திரன் கண்ட காட்சியை, கம்பர்

**"பெண்ணினின் னமுதன்னவள் தன்னோடம் பிரியா**
**வண்ண வெஞ்சிலைக் குரிசிலும் மருங்கினிதிருப்ப**
**அண்ணலா ண்டிருந்தான் அழகு அருநற வெனத்தன்**
**கண்ணும் உள்ளமும் வண்டெனக் களிக்கின்ற கண்ணான்"**

*(கம்ப. அயோத்தி - மந்திர - 52)*

என வருணித்தார்.

யாகசாலை வந்த இளம் குமரரான இராம லக்ஷ்மணர்களின் அழகில் ஈடுபட்ட ஜனகன்,

**"இருந்த குலக்குமரர்தமை இருகண்ணின் முகந்து**
**அழகுபருக நோக்கி"** (கம்ப. பால - *மிதிலை* - 157)

என அழகுறக் கூறினார்.

**அடியோம் போற்றி ஓவாதே**

நாங்கள் இடைவிடாது மங்களா சாஸனம் பண்ண, நித்ய சூரிகள் மத்தியிலே இருக்கும் இருப்புப் போலவே இம் மண்ணுலகத்தும் நீ எழுந்தருளி வீற்றிருக்க உன் திவ்ய மங்கள விக்ரகத்துக்கு அடியவர்களாகிய நாங்கள் பச்சை வழித்துப் பல்லாண்டு பாடி வாழ்த்தும்படி.

**சேற்றிள........ குடியாய்**

பண்ணைகளிலே வாளைகள் வாலிபர்கள் போன்று களிப்புடனும் மிடுக்குடனும் துள்ளி விளையாட தங்களுக்கு



வேண்டியவை தட்டி;னறிக் கிடைத்தலாலே கவலையற்று வாளைகள் களித்துத் திரிவனவாயிற்று. இது அத்தல விசேஷம். அத்தகைய திருப்புளிங்குடியிலே வர்த்திக்கும் நீயும் எங்களுக்குத் தேவையானவற்றை யருளி எங்கள் ஆசைகளைத் தலைக்கட்ட வேண்டாமோ.

**கூற்றமாய்....... வல்லனே**

தேவர்கள் பிரார்த்திக்க அவர்கள் வேண்டுகோள் நிறைவேற வேண்டி கொடிய செயலைச் செய்யும் ஆயுதங்களனைத்தையும் கொண்டு அசுரர்க்கு எமனாய்த் தோன்றவில்லையா. அவர்கள் அபிமதம் தலைக்கட்டினது போன்று எங்கள் குறையையும் நிறைவேற்றவேணும். இங்கு படைகள் கொடுவினை செய்யக்கூடத் தேவையில்லை. உமக்கு அணியாய் விளங்கினால் போதும். உம் சௌகரியம் காட்ட வேண்டியதில்லை. உம் ஸௌலப்யத்தைத் தானே குறையிரக்கிறோம்.

## ஒன்பதாம் பாட்டு

**"கொடுவினைப்படைகள்...... செய்யாயே"**

பகைவரகளை யழிக்க, கொடிய தொழிலுடைத்தான ஆயுதங்களைக் கையாள வல்லவனே! அப்படி ஆயுதங்களைத் தரித்து தேவர்களுக்குத் துன்பம் தீரும்படி அசுரர்க்குத் துன்பம் செய்கின்ற கொடிய விஷம் போன்றவனே. எனக்கு அமுதானவனே, செழித்த வயல்கள் சூழ்ந்த திருப்புளிங்குடியிலே எழுந்தருளியிருப்பவே.ன வடிவழகுக்கு இணையே இல்லாதபடி அழகுடைய இலக்ஷ்மீ தேவியும். அது போன்றது என்று சொல்லலாம்படி வடிவுடைய பூமிப்பிராட்டியும் பிடிக்கும்படியான மென்மையான உன் திருவடிகளை கொடிய பாவத்தைப் பண்ணினவனான நானும் பிடிக்கும்படி நீ என்னை அங்கே உன்னருகே அழைத்துக் கொள்ளவோ அல்லது இங்கே வந்தருளவோ செய்ய வேணும்.

**“கொடுவினைப்படைகள் வல்லையாய்......**

*எளிவரும் இயல்வினனானவன்தான் நீ. எனினும் வேறு வழியின்றிப் போனால் கொடிய ஆயுதங்களையும் எடுத்து ஆளவல்லாய். உன் எளிமையையும் மாயச் செய்யும்படி அபராதம் செய்தபோது படையெடுப்பாய். முடியும் மட்டும் பார்த்துப் பின்னை வேறு வழியின்றித் திருவுள்ளத்தில் கன்றலோடே கண்ணும் கண்ண நீருமாயன்றோ நீ ஆச்ரித விரோதிகளை அழிப்பது. விபீஷணனுக்கு ‘இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன்’ என்று வாக்களித்த பின்பும் அன்றோ அங்கதனை இராவணனிடம் தூதனுப்பியது? தீரக்கழிய அபராதம் பண்ணினவனிடம் தூதனுப்பிபியது தான் கருணையின் நிலையமான தாலன்றோ? உன் திருவுள்ளத்தில் எத்தனை கன்றலிருந்தது என்பதை இளையவன் அறிந்து கூறினானன்றோ?*

**“அறந்தருதவத்தை ஆயும் அறிவினாவற்றை முற்றும்**
**மறந்தனை எனினும் மற்றில் விலங்கையின் வளமைநோக்கி**
**இறந்திது போதல்தீது என்றி ரங்கினைஎனினும் எண்ணில்**
**சிறந்தது போரே என்றான் சேவகன் முறுவல் செய்தான்”**

***(கம்ப - யுத்த -அங்கதன்- 7)***

*என்றார் கம்பர். யாரிடம் இரங்கினான்?*

**தேசியைச் சிறையில் வைத்தான் தேவரை இடுக்கண் செய்தான்**
**பூசுரர்க் கலக்கணீந்தான் மன்னுயிர் புடைத்துத் தின்றான்**
**ஆசையின் அளவுமெல்லா உலகமும் தானே ஆள்வான்**
**வாசவன் திருவும் கொண்டான் வழியிலா வழிமேல் சென்றான்**

**(4)**

**“வாழியாய் உன்னை அன்றுவரம் பறு துயரின் வைகச்**
**சூழ்விலா மாயம் செய்துன் தேவியைப் பிரிவு சூழ்ந்தான்**
**ஏழைபால் இரக்கநோக்கி ஒருதனி இகல்மேல் சென்ற**
**ஊழிகாண்கிற்கும் வாணாள உந்தையை உயிர்பண்டுண்டான்.”**

**(5)**

*இது இராவணன் குற்றபரம்பரை. சாதாரண குற்றமா? தேவியைப் பிரித்தான். அதற்கும் மேலாக நம் பிதா ஜடாயுவை முடித்தான். இதன்மேல் அவன் செய்ய வேண்டிய அபராதம் உண்டா? அண்ணா!*



**“அன்னவன் தனக்கு மாதைவிடுக என்று அருளுவாயேல்**
**என்னுடை நாமம் நிற்கும்அள வெலாம் இலங்கை மூதூர்**
**மன்னவன் நீயே என்று வந்தடைந்தார்க்கு வாயால்**
**சொன்னசொல் என்னாம் முன்னம்சூளுற வென்னாம் தோன்றால்!”**

**(6)**

*என்று இலக்ஷ்மணன் அடுக்கிய பின்னும் அங்கதனை அனுப்பினான்.*

*முதல்நாள் போரில் இராவணனைத் தனியனாக்கி உன் வலியின்திறம் கண்டாயே! போ! நன்கு ஆலோசனை செய். “போர்க்கு நாளைவா” என்றனுப்பினான். சரணாகதியானால் சீதையை அழைத்துக் கொண்டு இன்றே இப்போதே வா என்பது குறிப்பு.*

*அதுபோன்றே கும்பகருணனையும் கூடுமேல் கூட்டிக்கொண்டு நின்றதுபுரிதும் என்றுதானே விபீஷணனை அனுப்பினான். போன விபீஷணன் வந்து ‘பெய்திற னெல்லாம்பெய்து பேசினன் பெயரும்தன்மை செய்திலன் குலத்து மானம் தீர்ந்திலன் சிறிதும், என்றுகூற பெருமாள் ‘கொய்திறச் சடையின் கற்றைக் கொந்தளக் கோலக்கொண்டல் நொய்தினில் துளக்கி’ ‘செய் திறன் இனி வேறுண்டோ விதியை யார் தீர்க்கற்பாலார்” என்று கன்றலோடன்றோ கும்பகருணவதையில் மனம் வைத்தார்.*

**அமரர்க்கிடர்கெட........... செய்**

*நன்மையின்பாற்பட்ட தேவர்களது துன்பம் நீங்க அசுரர்க்கு இடர் செய்யும். தேவர்க்குத் துன்பம் செய்யாதிருந்தால் அசுரர்க்கு இடர் இவண் செய்யான். எனவே தனக்காகவன்று அசுரர்க்கு இடர்செய்தது.*

**கடுவினை நஞ்சே என்னுடைய யமுதே**

*தீவினை செய்வார்க்குத் தீய நஞ்சு போன்றவனே அவர்க்கு நஞ்சல்ல தீவினைக்கு அருநஞ்சு.*

*என்போன்றார்க்கு அமுது போன்றவனே, தேவருடைய “உப்புச்சாறு போலவன்று” என்பது வியாக்கியானம்.*

தேவர்களது அமுதத்துக்குக் கடல் கடையவேணும், வேறிடம் செல்லவேணும். என்னுடைய அமுதமோ

**“கலிவயல் திருப்புளிங்குடியாய்”**

செழித்த வயல்சூழ்ந்த திருப்புளிங்குடியிலேயே கிட்டக் கூடியது.

**வடி விணையில்லா மலர்மகள்**

தன்வடிவிற்கு உவமையற்றவள். ஈடும் எடுப்புமில்லா அழகை உடையவள். தன் அழகுக்கு பகவத் தத்துவமும் ஒப்பில்லாதது என்று சொல்லத்தக்க அழகுபடைத்தவள் இலக்ஷ்மீதேவி.

**“நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்**
**கொம்பினைக் காணுந்தோறும் குரிசிற்கும் அன்னதேயாம்”**

***(கம்ப - பாலா -கார்முக- 43)***

என்றல்லவா கம்பன் கூறினான்! பெருமாளைக் காணச் சீதாபிராட்டிக்கு ஆயிரம் கண்வேண்டும் என்றால், அத்துணை அழகாயிருந்தது பெருமாள் மணப்பந்தலுக்கெழுந்தருளும் போதைய கோலம், திரும்பினார் கவி, சீதையைப் பார்த்தார். பெருமாள் அழகும் பின்னிடும்படியாயிருந்தது பிராட்டியின் சௌந்தர்யம். ‘கொம்பினைக் காணும்தோறும் குரி சிற்கும் அன்னதே’ என்றார். பிராட்டி அழகை அனுபவிக்க ஆயிரம் கண்மட்டும் போதாது புதுப்புதிதாக ஆயிரம் ஆயிரமாகக் கண்கள் வேண்டும். ஒருதரம் பார்த்துப் பழகின கண் பழையதாயப் போக வேறு கண் தேவைப்படும் அளவுக்கிருக்கும் பிராட்டியின் அழகு என்றார்.

தன் அழகின் வெற்றி தோன்றப் பூக்களில் சிறந்த தாமரையை இடமாக உடைய இலக்ஷ்மி,

**மற்றைநில மகள்**

அதுபோன்று அழகுடையவள் என்று சொல்லலாம் படி அழகுடைய பூமிதேவி, பொன்னிற அழகிற் பொலியும் இலக்ஷ்மி போன்று நீனிற அழகிற் பொலியும் பூமிப்பிராட்டி,



**பிடிக்கும் மெல்லடியை**

தேவியர் இருவரும் அருகே திருவடியின் இருமருங்கிலுமிருந்து மெல்லப் பிடிக்கின்ற திருவடி. சாயன்மிக்க இருதேவிமாரும் மெல்லப்பிடிக்கும் திருவடி அவர்களது மென்மயான தளிர்போன்ற கரங்கள் அழுந்தப் பிடித்தால் கன்றிவிடும் போன்று அவர்களும் கூசித் தொடவேண்டும்படியான மென்மையான பாதங்கள். அவ்வளவு நொய்ம்மையை இயல்பில் உடைய பாதங்கள்.

மாவலியை யிரந்து மூவடி மண்பெற்று ஓரடியால் உலகையும், மற்றொன்றால் விசும்பையும் காடும் ஓடையும் ஒழியாமல் அளந்து கொண்டு, மூன்றாமடியால் மாவலியைப் பாதாளத்தழுத்தி மீண்டும் தன் வியூகத்தலமான பாற்கடலில் பள்ளி மேவினான் இறைவன். கணவன் கால்கள் படியெல்லாம் நீண்டு தாவியதால் அசைவுற்றிருக்கும் என்று கருதித் திருமகள் திருவடியருகிலிருந்து அதை மெல்லப் பிடித்தாளாம். உடனே சடக்கென கை வாங்கினாளாம். அவள் கை பட்டதும் குங்குமமாகச் சிவந்ததாம் பெருமாள் திருவடி. அத்தனை சுகமார்யம் திருவடிகளுக்கு. கம்பர் அதனை எத்தனை ரஸனையோடு அனுபவிக்கிறார்!

**“உரியதிந் திரற்கென உலகம் ஈந்து போய்**
**விரிதிரைப் பாற்கடல் பள்ளி மேவினான்**
**கரியவன் உலகெலாம் கடந்த தாளிணை**
**திருமகள் கரந்தொடச் சிவந்து காட்டிற்றே”**

***(கம்ப - பாலா -வேள்வி -38)***

வசிட்ட சண்டாளரோடு வாயகிற, மலையும் மரனும் மற்றும் பொருள்களும் தீண்டியளக்கும்போது சிவக்கவில்லை திருவடி. அப்போது அவை ஒரு செயலை மேற்கொண்ட மையின், பின் பாற்கடலில் பள்ளிகொண்டபோது அத்திருவடிகள் தம் இயல்பான நிலையைப் பெற்றன. திருமகள் தளிர்க்கரம் தீண்டவும் தாங்கப்பெறாது சிவந்தன.

**அப்படிப்பட்ட நொய்ய திருவடிகளை**
**கொடுவினை யேனும்பிடிக்க**

மஹாபாபியான அடியேனும் பிடிக்க, "அவர்களும் ஸந்நிஹிதராய் ப்ராப்தியும் உண்டாயிருக்க நான் இகழ்ந்திருப்பதே என்று பாவியேன் என்பாரைப் போலே கொடுவினையேன் என்கிறார்" என்பது வியாக்கியானம்.

**ஒருநாள்**

ஒரு நாளாகிலும் அவர்கள் நெடுங்காலம் உன் திருவடி பிடிக்கிறார்கள். நானும் அவர்களோடொக்க 'நாரீணாம் உத்தமமாவது', என்றது போன்று உனக்கு நாயகி என்ற தசைக்கு யோக்யமாய்ப் பக்குவமானேன் என்று நீதானே அருளினாய். அப்படியிருந்தும் ஒருநாளாவது அவர்பெற்ற பேறு பெறவருள வேண்டாமா.

**கூவுதல் வருதல் செய்யாய்**

ஒன்று என்னை அங்கே நீ பள்ளி கொண்ட விடத்தே நாகபர்யங்கத்தே கூவிக்கொள்ள வேணும். அல்லது இங்கே நான் உன் திருவடிகளைப் பிடிக்கும்படி ஸுலபனாக எழுந்தருளவேணும்.

**"கூவுதல் வருதல் செய்திடாய்..... ஓர்வாரே"**

ஒலிக்கின்ற கடலைக் கடைந்தவனான பெருமாளை ஒன்று என்னை அங்கே கூவிக் கொள்ள வேணும் அல்லது இங்கே வந்தருள வேணும். இரண்டிலொன்று செய்யவேணும் என்று பிரார்த்தித்து அப்பிரார்த்தனை செய்ததனாலே க்ருத்க்ருதயராய்த் தன்னை மதித்து இந்நிலத்தே பொருந்தியவரும், பரந்த நீர்ப்பரப்பையுடைய தாம்ரபர்ணிக் கரையிலுள்ள திருவழுதி வளநாட்டையுடைய ஆழ்வார் திருநாவில் பயின்றருளிய பாடல்களாயிரத்துள் இப்பதிகம் வல்லராவார் இடையறாது தம் மனத்தே உலகளந்த பெருமானுடைய திருவடியை நினைக்கப் பெறுவார்கள்.



இப்பாடலில் பதிகப்பயன் கூறுகிறார்.

**"கூவுதல் வருதல் செய்திடாய்"**

என்னை உன்பால் கூவிக்கொள்ள வேணும். 'முகப்பே கூவிப் பணிகொள்ளே' என்று முன்பே வேண்டினேன். அது செய்தாயில்லை. அன்றி இங்காவது எழுந்துவந்து ஸேவை ஸாதிக்க வேணும். அங்குத்தை யிருப்பையாம் காணவேணும் முன்னையது முறை கேடாகும். பின்னையது முறையாகும். உடையவனான நீ உடைமையை வந்து பற்றிச் சொல்லல்தானே முறை. எப்படிச் செய்ய வேண்டுமென்றாலும் அது உன் திருவுள்ளம். எப்படியும் அடியேன் உன்னை சேவிக்க வேணும்.

**குரைகடல் கடைந்தவன் தன்னை**

பாற்கடலைக் கடைந்தவனை தன்னோடு எதிரம்பு கோப்பாருக்கும், ஈச்வரோஹம் என்றிருப்பார்க்கும் நன்றியில்லவருக்கும் உபகரிக்கப் பாற்கடலைக் கடைந்தவனை, அப்படிப்பட்டவன்ன நீ என் பக்கல் இரங்கமாட்டாயா.

**மேவி நன்கமர்ந்த**

இப்படி அவனைக் கிட்டி தன் பிரார்த்தனையை ஸமர்ப்பித்து நாம் செய்ய வேண்டியதைச் செய்து விட்டோம். இனி அருளுவதும் அருளாததும் அவன் பொறுப்பு என்று நிர்ப்பரராய்த் தரையிலே கால் பாவின.

**வியன்புனல் பொருநல்**

பரந்து பெருகும் தாம்ரபர்ணி நீரோடு ஞானத்தை அதிலும் தெளிந்த ஞானத்தை யூட்டும் பொருநல்.

**நாவியல் பாடல்**

ஆழ்வார் நாவில் தவழ்ந்த பாடல், அவர் நாமுதல் வந்து புகுந்து பத்தர்க்குச் சொல்லப்பட்ட பாடல்கள்.

**ஓவுதலின்றி ஒழிவின்றி காலமலாம்.**

**உலகம் மூன்றளந்தான் அடியிணை:** திரிவிக்ரமனுடைய திருவடிகளை அவனை த்யானித்தாலே கிடைக்கும் பலன் "பல்லூழி நின் பாத பங்கயமே மருவித்தொழும் மனமே தந்தாய்" என்பதல்லவா. மேலும் அத்திருவடிகள் தாமே தகுதி நோக்காது எல்லோருடைய சிரசையும் அலங்கரித்தது.

அந்தத் திருவடி ஸ்மரணை என்றும் உள்ளத்திலே ஓடப்பெறுவர்கள் இப்பதிகம் கற்றவர்கள் என்று பயன் கூறி முடிக்கிறார் ஆழ்வார். ஸொபாதிக பந்துக்களை விட்டு நிருபாதிக பந்துவான பெருமானைப்பற்ற வேணுமென்ற மன நிலையிலே எழுந்தது இப்பதிகம். இதில் ஆழ்வாரின் பலவித மனோரதங்களையும் காண்கிறோம். இதைக் கற்பாற்கும் இந்த அவா எழும் என்பது ஆழ்வாரின் துணிபு. ஆசியும் கூட.

இத்தலத்தைப் பற்றிய வரலாற்றிலே வந்த செய்தியை நாம் நினைப்பூட்டிக் கொண்டோமானால் இப்பதிகத்தின் இறுதிச் செய்யுளான 'கொடுவினைப் படைகள்' என்ற பாசுரத்தின் ரஸம் இன்னும் அதிகமாகும். கமலையோடு ரமிக்க ரமணீயமான இடம் தேடின பகவான் இந்தத் தலத்தைத் தேர்ந்து ஸ்ரீ தேவியோடு களித்திருக்க மணமாது பொறாமை கொண்டு, சீறிப்பாதலம் புக்காள். அவளைத் தேற்றி பகவான் இலக்ஷ்மியோடு சினேகம் செய்துவைத்து இருவரோடும் அப் புளிங்குடித் தலத்திலே தங்கினன் என்பது தலபுராணத்தில் கண்ட வரலாறு. பூமிதேவியைத் தேடி அலைந்த சிரமம் தீர அவன் சயனிக்க பகவான் திருவடிகளைத் தேவியர் இருவரும் பிடித்தனர். அப்படி வடிவிணையில்லா மலர்மகளும் நிற்றை நிலமகளும் பிடிக்கும் திருவடியைத் தானும் பிடிக்க வேண்டினார் ஆழ்வார். கோபித்த நாயகியைச் சாந்தம் செய்து அவள் பிடிக்க திருவடியை நீட்டியவன் நீ. இந்த தலத்தில் உன் பெருமை அது, அப்படிப்பட்ட நாகரிகம் உள்ள நீ எனக்கும் அப்பேறளிக்க வேண்டும். நான் கோபித்த நாயகியல்ல. நான்



நாயகியாக பக்குவமாவதில் ஆத்திரம் காட்டி வந்து தங்கினாய் நீ. அப்படிப்பட்ட எனக்கு உன்னைத் தேடிவந்த எனக்கு கோபித்துச் செல்லும் நாயகிக்குக் கிட்டும் பேறுகிட்ட வேண்டாமா என்பது த்வனி.

ஸ்ரீ வைகுண்டம், ஸ்ரீ வரகுணமங்கை, திருப்புளிங்குடி மூன்று தலங்களும் இறைவனது போக்ய பாகத்வரையை விளக்கும் தலங்கள் என்பது முன்பே கண்டோம். எனவே இப்பதிகம் முழுவதும் பகவானது ஒரு மனநிலையைப் பற்றியெழுந்தது என்பது விளங்கும்.

இப்பதிகத்தில் சேதனனுக்கும் ஈச்வரனுக்கும் இடையேயுள்ள நவவித சம்பந்தங்களில் உடையான் உடைமை, ஆதார ஆதேயம், போக்தா போக்யம் என்ற மூன்றும் கூறப்படுவதாகச் சில மஹனீயர்களது யோஜனை. இம்மூன்று சம்பந்தங்களும் குலசேகரரது "நின்னையே தான் வேண்டி," "வெங்கட்டின் களிறடர்த்தாய்," "எத்தனையும் வான் மறந்த" என்ற மூன்று பாடல்களும் கூறுகின்றன. அந்த பாவம் இப்பதிகத்தும் காண்கிறோம் என்பது அபிப்பிராயம். இனி அம்மூன்று நிலைகளையும் பார்ப்போம்.

## 1. ஸ்வாமி ஸ்வம்

***உடையான் உடைமை***

உலகனைத்தும் இறைவன் அதீனமாதலின் அவன் நம்மை உடையவன். நாம் அவன் உடைமைப் பொருள். உடைமைப் பொருள் உடையவனை அடைவதுதான் நியதி. அவ்வுடைமையை உடையான்வந்து கைக்கொள்வது முறை. அதை உடையான் உடைமையை உபேக்ஷித்தால் உடைமைதான் சேர்விடம் கிடைக்கவில்லையே என்று ஏங்கி உடையவன் தன்னைக் கைக்கொள்ள வேண்டும் என்ற சிந்தையிலேயே இயங்குகின்றது. பரம்பொருளை வேண்டிச் செல்வத்தை ஒருவன் உதாசீனம் செய்கிறான். ஆனால்

செல்வமோ தனக்கு உடையவன் அவன் என்பதை உணர்ந்து விட்டால் அவன் உபேக்ஷயை இலக்ஷியம் செய்யாமல் அவனையே சேர முயல்கிறது. அதுபோல எனக்கு உடையான் நீ என்பதை நான் உணர்ந்துகொண்டேன். நீ பாவியேனைப் பல காட்டிப் படிப்பினும், நெறிகாட்டி நீக்கினும் உன்னால் ஆளப்படுவதையே வேண்டி நிற்பன் நான் என்பது குலசேகரரின் நின்னையேதான் வேண்டி என்ற பாடலின் பருப்பொருளும் உட்பொருளும். இதுதான் உடையான் உடைமை சம்பந்தத்தின் ஒருபக்கமான் உடைமையின் தன்மை உணர்த்திற்று. இதன் மற்றொரு பக்கமான உடையான் நிலையை இப்பதிகத்தில் "கூவுதல் வருதல்" செய்யாய் என்றவிடத்தே காட்டப்படுகிறது. உன் உடைமையான என்னை நீ வந்து கைப்பிடித்து அழைத்தல் முறை. அந்த முறைப்படி என்னை நீ வந்து கைக்கொள்கிறாயில்லை. இல்லை, முறைகேடாக என்னை ஆளிட்டழைக்கின்றனையோ உன் பக்கலிலே என்றால் அதுவுமில்லை, எனவே உன் உடைமைப் பொருள் உன்னையடைய வேண்டும் என்று ஏங்கி நிற்பதைத் தவிர வேறு வழியில்லை. இவ்வாறு அடியேனை உபேக்ஷிக்கும்படி அடியேன் தகாத பொருளாகி விட்டேனா? அல்லது "ஈங்கிவள் ஓர் பொருளோ எனும் இகழ்வோ." அன்றி நீ ஆட்கொள்ளத்தக்க பொருள்களின் கோடியினின்று புறம்பாகிவிட்டேன் என்ற எண்ணமா. என்னை அப்படி உதாசீனம் செய்துவிடாமல் எனக்கு அருள்செய்து என்னை உன் உடைமையாக ஏற்று ஆட்கொள்ள வேணும் என்பதெல்லாம் "என்னை ஆள்வாய்" என்ற விடத்திலே சூசகம்.

இனி ஆதார ஆதேயம் இப்பதிகத்திலே எங்கு கூறப்படுகிறது என்பதை நோக்குவோம். முன் குறித்தபடி குலசேகரது வெங்கண் திண்களிறடர்த்தாய் என்ற பாடல் இந்த சம்பந்தத்தை கூறகின்றதென்பதும் 'எனக்கருளி' என்ற இப்பதிக வாக்கிலே அது காட்டப்படுகிற தென்பதும் சில அறிஞர் கொள்கை.'வெங்கண்' என்ற பாடலில் எங்குப்போய் உய்கேன் உன் இணையடியே அடையலல்லால் எங்கும்போய்க் கரைகாணாது எறிகடல் வாய் மீண்டேயும், வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே என்றார் குலசேகரர். கப்பலின் பாய்மரத்தின் முனையிலே தங்கினால்போதும். கப்பல் தன்னைக் கடலைக் கடத்திக் கொண்டு போய்விடும் என்று அதில் தங்கிற்று பெரிய பறவை ஒன்று. கொஞ்சதூரம் சென்றதும்தானே தானே பறந்து சென்று கரையை அடையலாமே இப்பாய்மரம் எதற்கு என்ற விபரீத எண்ணம் உண்டாகவே பாய்மரத்தைவிட்டுப் பறந்தது. பறந்தது! பறந்தது! கரையைக் காணவில்லை. பரந்த கடல்தான் எங்கும் காட்சியளித்தது. பறந்த காலத்தில் பலதடவை கடலிலே விழுந்து மேலெழ மாட்டாமல் திண்டாடியது. அதன் பரிய உடல், அது அழுந்த ஏதுவாயினதே ஒழிய அது கடலைக் கடக்க உதவவில்லை. தன் முயற்சி பலிக்காமல் இறக்கைகள் ஓய்ந்து முடிவில் பழைய பாய்மரமே கதி என்று அதற்கே மீண்டுவந்து சேர்ந்தது அப்பறவை. அதுபோல இந்த பிறவிக்கடலில் மத்தியில் சிக்குண்டு தவிக்கும் நான் என்முயற்சியால் அக்கடலைக் கடக்க முடியுமா, நான் கற்ற கல்வி என்னை நன்கு பிறவிக்கடலில் அழுத்தவே உபயோகமாறிற்று. என் கல்வியால்தானே தலைவன் என்று கொண்டுவிடுகிறேனல்லவா. எனவே எனக்கு ஓய்வு வேண்டுமானால் உன் திருவடியைச் சேர்ந்தால் அன்றி இப்பிறவிக் கடலை நீங்க முடியுமா? உன் திருவடியே தஞ்சம் எனறார் குலசேகரர். இவ்வுண்மை 'எனக்கு அருளி என்ற பதத்திலே கிடப்பதாக அறிஞர் கூறுகின்றனர். திருப்புளிங்குடியிலே நீ வந்து சேவை சாதித்தது நாள் இரக்கவோ செய்தது? உன் கிடையழகைக் காட்டியும், உருப்பழகைக் காட்டியும். நிலையழகைக் காட்டியும் என்னைத் தெளிவித்து உன் குணங்களின் நினைவு என்ற போஷாக்காலே என்னை நீயல்லவா தரிப்பித்துக் கொண்டு போந்தாய். உன்னையல்லால் எனக்கு வேறு ஆதாரம் ஏது? என்று ஆழ்வார் திருவுள்ளம் என்பது பெரியோர் துணிபு.

இனி போக்தா போக்யம் என்ற ஸம்பந்தமும் இப்பதிகத்திலே கூறப்படுகிறது.

என்பார் குலசேகரர் ‘எத்தனையும் வான்மறந்த காலத்தும்’ என்ற பாசுரத்திலே விவரித்த பொருள் இங்கே “என் அகம் கழியாமே என்னை ஆள்வாய்” என்றவிடத்தே கூறப்படுகிறது என்பது அவர்கள் அபிப்பிராயம்.

அகத்துறையிலே வாடும் பயிரை நாயகியாகவும் தலையளி அளிக்கும் நாயகனாக மாரியை (மேகத்தை)யும் கூறுவதுண்டு. வெகுநாள் பிரிந்து பின் சிலநாள் வந்து நாயகியுடன் தங்கி மீண்டும் பிரியவுன்னும் நாயகனை நோக்கிக் கூறியதாகவரும்,

**“மாரிக் காவுற்றுப் பீள்வாடும் நெல்லிற்கு ஆங்கு**
**ஆராத்துவலை யளித்தது போலுநீ**
**ஓர்யாட் டொருகால் வரவு”**

*(பீள் - கதிர்வரும் பருவத்துள்ள நெற்பயிர்; ஓர்யாட்டு- ஒரு வருடத்துக்கு)*

என்பது கலித்தொகை. அம்முறையிலே குலசேகரர் கூறிகிறார். மேகம் எவ்வளவு தான் பயிரை மறந்தாலும் பயிர் மேகத்தை மறக்குமோ, மறக்கத்தான் முடியுமா. பயிர் எவ்வளவு தான் தீவிரமாக நினைத்தாலும் மேகத்தை வரச்செய்ய இயலுமா, மேகம் தானாகத் தானே வர வேண்டும். அதுவும் அது இஷ்டப்பட்ட போது, அதுபோல நீ என்னை எவ்வளவுதான் மறந்தாலும் உன் முகம்காண வேண்டித்தானே நான் தவிக்கிறேன். உன்னை நான் மறக்க முடியுமா? நீ வந்து முகம் காட்டுவதும் நீ இஷ்டப்பட்டபோது தானே. யான் வேண்டும்பொழுது நீ வருவது என்பதுண்டோ. எனவே பயிர்கள் மேகத்தின் வரவை நோக்கிக் காத்திருப்பதுபோல் அடியேனும் உன் வரவை எதிர்நோக்கி என் சித்தத்தை உன்பாலே திருப்பி வைத்திருக்கிறேன். அதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும். என் சிந்தை சோர்வுற்று வாடிவிடாதபடி நீதான் பல தடவை காப்பாற்றியிருக்கிறாய். என் சிந்தையைத் தெளிவித்தவன் நீயன்றோ. நான் வேண்டியா வந்தாய். நீயாகத் தானே வந்தாய். மேகம் பயிர் வாடாமல் காக்கத் தானே வருவது போல் என்று குலசேகரர் பாசுரங்களையும் இப்பாடலையும் இணைத்துப் பொருள் காண்பர்.



இனி அடுத்துள்ள துலைவில்லிமங்கலம் என்ற இரட்டைத் திருப்பதி அனுபவத்தைக் காண்போம்.

### தொலைவில்லிமங்கலம்

நம்மாழ்வார் பராங்குசநாயகியாகி இறைவனை நாயகனாகக் கொண்டு பாடிய பதிகங்கள் பல. அதேபோலத் தன் தன்மையை மற்றொருவர் வாயிலாக வெளியிடும் பதிகங்களும் பல. தன் தன்மையைத் தாய் பேசுவது போலவும் தோழி பேசுவது போலவும் அமைவன இப்பதிகங்கள். அப்படி ஆழ்வார் தன் தன்மையைத் தாயாருக்குத் தோழி கூற்றாகக் கூறுவது ‘துவளில் மாமணி மாடம்’ என்ற பதிகம். தொலைவில்லிமங்கலம் என்ற இரட்டைத் திருப்பதியிலுள்ள இரு பெருமான்களையும் ஸேவித்து அதே மோகமாய் மயங்கிக் கிடக்கும் மகளின் தன்மையைப் பற்றித் தாய்மார்கள் நாயகியின் தோழியிடம் கூறிப் பரிகாரம் வினவ தோழி அவர்களுக்கு விடையிறுப்பதாக அமைந்தது பதிகம்.

இப்பதிகத்துக்கு முன்னையது ‘குரவை ஆய்ச்சியர்’ என்னும் பதிகம். அப்பதிகத்திலே ஆழ்வார் கிருஷ்ணாவ தாரத்தில் எம்பெருமான் செய்த ஆனைத் தொழில்களையும் ஆச்சர்ய சேஷ்டிதங்களையும் மனத்திலே நினைந்து அனுபவிக்கிறார். அவனுடைய திருவிளையாடல்களையே நினைந்தும் பேசியும் பொழுது போக்கிய எனக்குக் குறையேது நிகர் எவ்வுலகத்துண்டு, நோவேது, வேண்டுவதேது, கல் ஏது, மனப்பரிப்பு ஏது, இவ்வுலகில் நிகர் ஏது, கலக்கமேது, மண்மிசைமாறு ஏது என்று தன்னைத் தானே வியக்கின்றாரோ

என்று சொல்லத் தக்க முறையில் தன் மனம் பெற்ற மகிழ்ச்சியின் நிறைவை வெளியிட்டுக் கடைசியாக

**மண்மிசைப் பெரும்பாரம் தீர ஓர்பாரதமா பெரும்போர்**
**பண்ணி மாயங்கள் செய்து சேனையைப் பாழ்பட**
**நூற்றிட்டுப் போய்**
**விண்மிசைத்தன தாமமேபுக மேவிய சோதி தன்தாள்**
**நண்ணி நான் வணங்கப் பெற்றேன் எனக்கார் பிறர் நாயகரே**

***(திருவாய் 6 -4 -10)***

என்று அந்த ஜோதி சொரூபனான க்ருஷ்ணனுடைய திருவடிகளைக் கிட்டிப் பணிசெய்யும் கைங்கர்ய சாம்ராஜ்யத்தைப் பெற்றுப் பூரித்திருக்கிற எனக்கு வேறு எவர் நாயகர்? என்று முடித்தார். அந்த அனுபவம் பூராவும் மானஸீகமாகவேயிருந்தது. அது பற்றாதே வெளிப்படி அவனைக் கிட்டிப் பணி செய்து அனுபவிக்கவேணும் என்ற அவர் பிறந்தது. அந்த அவாவே நினைவாய்த் துடிக்கும் நாயகியை (ஆழ்வாரை) அவள் தாய்மார்கள் தங்களோடு தொலைவில்லிமங்கலத்துக்கு அழைத்துச் சென்று பெருமாள் ஸேவை பண்ணிவைத்தால் தீருமென்று கொண்டு அவளைத் தொலைவில்லிமங்கலம் கொண்டுபோய் தேவ பிரானையும், அரவிந்தலோசனனையும் ஸேவிக்கப் பண்ணினார்கள். அவர்கள் செயல் உள்ளே கனிந்து கொண்டிருக்கும் நெருப்புக்குமேலே நெய்வார்த்தது போலவாகி அவள் நோய் முறுகி அதுவரை வாய்திறவாதிருந்தவள் அவன் பெயரைக் கூவிப் புலம்ப ஆரம்பித்தாள். தாய்மார்கள் பயந்து செய்வதறியாராய் நாயகியின் தோழியைக்கூவி நீதான் இப்பெண்ணை எங்களைவிட நன்றாக அறிந்தவள். இப்பெண்ணுக்கு வந்த நோய்க்கு மருந்துதான் ஏது? இந்த தசையிலிருந்தும் இவளை மீட்ச வழி என்ன? என்று வினவினார்கள். தோழி இவளுடைய மையல்நோயை நீங்களே உங்கள் செயலால் வளர்த்துவிட்டீர்கள். முன்பே அது தீராவியாதியாயிருந்தது. இப்போது இன்னும் முற்றிவிட்டது. இந்த தசையில் அவளை மீட்க நினைப்பது முடியாத காரியம். அவள் உயிருக்கு தாரகம் இந்த அனுபவம் தான். ஆகவே இனி



உங்கள் மகளாக மீண்டு வருவாள் என்ற ஆசையை விடுங்கள். நீங்களும் இதன் காரணமாக அவளை வெறுக்காமல் அவள் ஆசை நிறைவேற உதவி செய்து அவளை வாழ்வியுங்கள் என்கிறாள் மகள் நிலைமை அவள் தாயாருக்குத் தோழி சொல்லுகிறாள். இதற்கு காரணமாக இலக்ஷ்மணன் தன்மையைப் பரதனுக்கு குகக்பெருமான் சொன்னதை ஆசார்யர்கள் காட்டுவர்.

**“அல்லையாண்ட மைந்தமேனி யழகனும் அவளும் துஞ்ச**
**வில்லை யூன்றியகை யோடும் வெய்துயிர்ப்போடும் வீரன்**
**கல்லையாண் டமைந்த தோளாய் கண்கள் நீர் சொரியக்கங்குல்**
**எல்லைகாண்பளவும் நின்றான் இமைப்பிலன் நயனம்”**

***(கம்பன் -அயோ -குக-42)***

என்று இலக்ஷ்மணனோடு ஒன்றாய்ப் பிறந்து வளர்ந்த பரதனுக்கு இலக்ஷ்மணனை ஒரிரண்டு நாள் மட்டுமே அறிந்த குகன் கூறினானல்லவா?

மானஸீகமாக அனுபவித்த கிருஷ்ணானுபவம் முறுகி விளைத்த அவத்தையை ஆழ்வார் தோழிபேச்சாகக் கூறும் இப்பதிகத்தைப் பற்றி “கிருஷ்ண குணாநுபவத்தைப் பண்ணா நிற்கச் செய்தே, குடிக்கிற தண்ணீர் விக்கி அதுதானே பாரவச்யத்தை விளைப்பிக்குமா போலே அவ்வநுபவந்தானே ரஸாந்தரத்தே முட்டத் தமக்குப் பிறந்த அவஸாதத்தை அந்யாப தேசத்தாலே பேசுகிறார் என்று ஈடுவியாக்கியானம் கூறும்.

**இனி பதிகத்தை நோக்குவோம்**

**துவளில்மா மணிமாட மோங்கு தொலை**
**வில்லிமங்கலம் தொழும்**
**இவளை நீர்இனி அன்னைமீர்! உமக்கு**
**ஆசையில்லை விடுமினோ**
**தவள ஒண் சங்கு சக்கரமென்னும்**
**தாமரைத் தடங்கண் என்றும்**

குவளை ஒண்மலர்க் கண்கள் நீர்மல்க
நின்றுநின்று குமுறுமே (திரு. 6-5-1)

குற்றமற்ற பெரிய மாணிக்கங்கள் கொண்டு நிரூபிக்கப் பெற்ற மாடங்கள் உயர்ந்திருக்கிற தொலைவில்லைமங்கல க்ஷேத்திரத்தை வணங்கி நிற்கும் இந்த நாயகியை, ஓ! தாய்மார்களே இனி நீங்கள் விட்டுவிடுங்கள். அவள்பக்கல் ஆசை வைக்கை இனி இல்லை. ஏனெனில் இவள் வெண்மையான சங்கு என்றும், சக்கரம் என்றும் தாமரைத் தடங்கண் என்றும் நீலோத்பலம் போன்ற தன் கண்களில் நீர்பெருகக்கூற வுன்னி வாயால் சொல்ல முயன்று முடியாமல் உள்ளேயே குமுறிக்கொண்டிருக்கிறாள்.

**துவளில்......... தொலைவில்லிமங்கலம்**

குற்றமற்ற மாணிக்கங்கள். மாணிக்கங்கள் மட்டுமேயோ ஊரடங்கலும் குற்றமற்ற பண்டங்களே. இறைவனைக் குற்றமணுகாது. அவ்வூரிலுள்ளாரிடம் தவறி ஏதேனும் குற்றமிருப்பினும் பெருமாளனுக்கிரகத்தாலே நீங்கும். எனவே உயிருள்ளதும் இல்லதும் அவ்வூரில் குற்றமற்றவைகளாயின.

**ஓங்கு**

மாடங்கள் உயர்ந்த, "மாடங்களின் நிழலீடு திருநகரியளவும் வந்து காணுமிருப்பது" என்பது ஈடு. நாயகன் நாயகியை மாளிகையின் அருகிலேயே பிரிந்துபோனான். மாடத்தையும், மாணிக்கத்தையும் பார்த்து வைத்த கண் வாங்காதே யிருந்தாள் நாயகி.

**தொழும்**

அவ்வூரையே தொழும், தொழுகையே சுபாவமாக உடைய "துருப்புக் கூடாக அவ்வூரையன்றோ இவள் உகந்தது" அதாவது அவ்வூரில் தக்கது தகாது என ஒன்றின்றி ஊரில் எல்லோரையும் தொழும்.



**இவளை**

தொழுதுகொண்டே யிருக்கும் இவளை. அதுவே தேகயாத்ரையாயிற்று இவளுக்கு.

**நீர்**

இவள் தன்மையறிந்தும் தொலைவில்லிமங்கலம் கொடு போந்த நீர்.

**அன்னைமீர்**

நல்ல தாய்மார் நீங்கள். அவள் உள்ள நெருப்பிலே நெய் வார்க்கும் தாய்மார்கள்.

**இனி**

இந்த தசையை அவள் அடைந்த பின்பு.

**ஆசை இல்லை விடுமின்**

மீட்கலாம் என்ற ஆசை இனிக்கிடையாது. அந்த ஆசையைக் கட்டோடு விடுங்கள். அவள் காதல் முறுகுவதன் முன்னமாயினும் ஒருகால் மீட்டிருக்கலாம். இனி முடியாத காரியம். நீங்கள் செய்ய வுன்னும் செயலும் நேரிதன்று. நீங்கள் பெற்றவர்களேயானாலும் இவள் திறத்தே செய்யத் தகாதவற்றை செய்ய இழியலாமோ?

**உமக்காசையில்லை**

இவள் பருவம் நிரம்பப் பெற்றாள். எனவே இவள் பக்கல் பெற்றவர்க்கு இனி என்ன வுண்டு. அவள் புகுமிடத்தை நாடிக் கொண்டாள். அதுவும்தான் தகாதவிடமா? கிடைத்தற்கரிய இடமல்லவா தேடிக் கொண்டாள். அவளைப் பெற்றமுறை கொண்டு மீட்கவா! முடியாது. கூடவும் கூடாது என்கிறாள்.

உடன்போன தலைவியைப் பற்றி "என் மகள் ஒருத்தியும் பிறள் மகன் ஒருவனும் தம்முளே புணர்ந்த தாமறி புணர்ச்சியர் அன்னார் இருவிரைக் காணிரோ பெரும்" என்று எதிர்ப்பட்ட

முக்கோல் பகவர் ஒருவரை வினவ பகவர் சந்தனம், முத்து, யாழ் இவை பிறந்தவிடத்துக்கு இன்பம் பறவாது. உன் மகளும் அத்தன்மையளே. ஆகவே "இறந்த கற்பினாட்கு எவ்வம் படரன்மின் கிறந்தானை வழிபடீஇச் சென்றனள் அறந்தலைப்பிரியா ஆறும் மற்றதுவே" என்று வரும் கலித்தொகை அடிகள் இவ்வுண்மையைத் தானே வற்புறுத்திற்று.

**விடுமின்**

உங்கள் ஆசையைவிட்டால் மட்டும்போதாது, அவளையும் அவள் போக்கில் விடுங்கள். நீங்கள் வேறு ஒன்றும் செய்ய வேண்டா. "இவளுடைய அநுபவத்துக்குத் தண்ணீர்த் துரும்பாகாதே இத்தைக் கண்டு கொடுநிற்க அமையும்" என்பது ஈடு.

**தவள ஓண்சங்கு**

உலகளந்தான் வாயமுகம் உண்டே வளரும் ஸ்ரீ பாஞ்சஜன்யம். தான் விரும்பும் பேற்றினை பெற்றசங்கு.

**சக்கரம்**

பத்தர் கண்களுக்கு அணியாயும் சத்ருக்கள் கண்களுக்குக் கூற்றாயும் தோன்றும் சக்கரம். விசேஷணம் தேட வேண்டாத அழகுடைய திருவாழி.

**தாமரைத் தடங்கண்**

அன்றலர்ந்த பங்கயம்போல அழகியதாய் விரிந்த கண்மலர். இந்த ஆயுதங்களையும் கண்களையும் காட்டியன்றோ இவளை அவன் அகப்படுத்தியது.

**குவளை........ மல்க**

கருநெய்தல் போன்ற இவள் கண்கள் நீர்பெருக. உண்மையில் இவள் கண்கண்டு அவன் தாமரைக் கண்கள் நீர்மல்கவேணும். ஆனால் இவள் கண்கள் நீரைப் பெருக்குகின்றன. குவளைப் பூப் போன்ற நிறம் மட்டுமல்ல அப்பூவின் தன்மையும் உடைய கண்கள். குவளைப் பூ மேகத்தைக் கண்டால் நீர் பெருக்குமாம். எனவே கணவன் நினைவில் கண்ணீர் பெருக்கும் காரிகையார் கண்களுக்கு குவளையை உவமைகாட்டல் கவி மரபு. "இவட்கே சுனை மாண்நீலம் கார் எதிர்பவைபோல் இணைநோக்குண்கண் நீர் நில்லாவே" என்பது கலித்தொகை. இங்கு சங்கு, சக்கரம் தாமரைக்கண் என வாய் வெருவவே அவன் கார்மேகத்திருமேனி அவள் மனத் திரையிலே நிழலாடுகிறது. கார்கண்ட குவளைபோல் அவள் கண் நீர் பெருக்குகிறது.



**நின்று நின்று குமுறும்**

முதலிலே, சங்கு சக்கரம் என்று வாய் வெருவ, பின் அது நின்று கண் நீர் சோர, பின் செயலற்று நெஞ்சு தடுமாறிக் குமுறி நின்றாள்.

இப்படி அவன் வசமேயாய் நிற்கிற இவளையா மீட்க நினைக்கிறீர்கள். அடாது விடுங்கோள் என்கிறாள்.

இங்கே ஈட்டிலே ஒரு நிகழ்ச்சி குறிக்கப் பெற்றிருக்கின்றது."நின்று குமுறும்" என்பதைப் பின்பாடலில் 'குமிறும்' என் வருவதை வைத்து 'நின்று குமிறும்' எனக் கொண்டு அதை நின்று உகும் இறும் என்று மொழிப்பாகுபாடு பண்ணினானாம் ஒருவன் ராஜசபையிலே, அங்கிருந்த விக்ரமசிங்கன் என்பான் ஒருவன் 'கறவா மடநாகுதன் கன்றுள்ளினாய்போல்' என்ற பாடலை உளங்கொண்டு "அங்ஙனல்ல, கன்றைக் கடக்கக் கட்டி வைத்தால் முலைக்கண் கடுத்துப்பசு அலமந்துபடுமா போலே உள்ளோடுகிற கிலேசம் வாய்விடமாட்டாதே நோவுபடுகிற இவளுக்கு இது வார்த்தையே" என்றானாம்.

இப்பாட்டு திரிகரணங்களாலும் அந்நாயகி தொலைவில்லிமங்கலத் திறைவனையே தொழுது, பேசி,

*நினைந்து வாடினான் என்பர். 'தொழும்' என்றதனால் காயத்தின் செயல் கூறிற்று. சங்கு சக்கரமென்றும்' என்றதால் வாக்கின் செயல் கூறிற்று குமுறும் என்றதால் மனத்தின் செயல் கூறிற்று என்று காட்டப்படுகிறது.*

**குமிறுமோசை விழவொலித் தொலைவில்லிமங்கலம் கொண்டு புக்கு**
**அமுதமென் மொழியாளை நீர் உமக்காசையின்றி அகற்றினீர்**
**திமிர்கொண்டா லொத்துநிற்கும் மற்றியவள் தேவதேவ பிரானென்றே**
**நிமியும் வாயொடு கண்கள் நீர்மல்க நெக்கொசிந்து கரையுமே.**

***(திருவாய் 6 -5 -2)***

*(முழங்குகின்ற பல்வகை ஒலிகள் நிரம்பிய திருவிழாச் சந்தடியுடைய தொலைவில்லி மங்கலத்திலே அமுதம் போன்ற சொற்களையுடைய இந்நாயகியைக் கொண்டு போய் அதன்மூலம் அவளிடத்தில் உமக்கு ஆசையின்றி உறமற்றுப் போகும்படி செய்துவிட்டீர்கள். அவளோ செயலற்றவளாய் நிற்கிறாள் அன்றி தேவர்கள் நாதன் என்று கூற வாயெடுத்து உதட்டை நெளித்து கண்கள் நீர்வர உடல் குலைந்து தளர்ந்து நீராய்க் கரையா நின்றாள்.)*

**குமிறும் ஓசை விழவொலித் தொலைவில்லிமங்கலம்**

*பல்வகையான கோஷங்கள் ஒலிக்கும் விழாவுடைய ஊர், ஒன்றையொன்று முந்தி யொலிக்க ஒன்றையும் உருத்தெறிய முடியாதபடி கலந்த கோஷம்.*

**வங்கியம்பல தேன்விளம்பின வாணிமுந்தின பாணியின்**
**பங்கியம்பரமெங்கும் விம்மின பம்பை பம்மின பல்பறை**
**பொங்கியம் பலவும்கறங்கின நூபுரங்கள் புலம்பவெண்**
**சங்கியம்பின் கொம்பலம்பின சாமகீதம் நிரம்பவே.**



***(கம்பர். அயோ- கைகேசி சூழ்வி- 60)***

*என்று விழாவறா அயோத்தியைக் கம்பன் கூறினான். அது போன்று என்றும் விழாவொலி மாறாத தொலைவில்லிமங்கலம் "ஒத்துச் சொல்லுவார். ஸங்கீர்த்தனம் பண்ணுவார், பாடுவார்' இயல் விண்ணப்பம் செய்வாராய் எழுத்தும் சொல்லும் பொருளும் தெரியாதபடி விரவிக் கொண்டெழுகிற த்வனியையுடைய திருநாளில் ஆரவாரம்.*

**கொண்டு**

*இந்த விழாவொலி கேட்டவுடனேயே இவளை அங்கே கொண்டுபோகாமே இருந்திருக்க வேண்டாமோ. இவள் படி அறிந்துவைத்தும் நீங்கள் இவளை அவ்வூர்க்குக் கொண்டு போனீர்கள்.*

**புக்கு**

*கொண்டுதான் போனீர்கள். அங்கே ஊர்க்குப் புறத்தே தங்கி எட்டிநின்று விழாவைக் கண்டுவிட்டுத் திரும்பியிருக்கலாம். அப்படியும் செய்தீர்களில்லை. இவளை ஊர்க்குள்ளே கொண்டு புக்கீர்.*

*அவள் போகவேண்டாமென்று புறப்பட்டாளா? இல்லை, நீர் தாமே அவளைக் கொண்டு போனீர்.*

**அமுதமென் மொழியாளை**

*அமுதினமினிய சொல்லுடைய இவளை, ஒப்புக்கு அமுதத்தைச் சொல்லலாமேயன்றி இவள் மொழிக்கு அது உவமையன்று,*

**"குயிலும் கரும்பும் பெருந்தேனும் குழலும் யாழும் கொழும் பாகும்**
**அயிலும் அமுதம் சுவை தீர்த்தமொழி"**

*என்று பிராட்டியின் மொழியைக் கவி கூறினான். இந்நாயகியும்*

அந் 'நாரீணாம் உத்தமை'யின் சுபாவத்தைத் தானே உடையவள்!

**நீர் உமக்காசையின்றி யகற்றினீர்**

அப்படிப்பட்ட மென்மொழியாளை உங்கள் வார்த்தைக்கு மறுவார்த்தை கூறாதவளை இப்போது உங்கள் வழிப்படாதபடி விலக்கிவிட்டீர்கள். பலன்.

**திமிர்கொண்டா லொத்துநிற்கும்**

ஒன்றும் பேசாமல் திமிர்வாதமுற்றவள்போல் செயலற்று நிற்கிறாள்.

**மற்று**

அல்லது முன்நிலையை விட்டு சற்று மாறுதல் தெரிகிறதாயின்

**தேவதேவ பிரான் என்றே**

அயர் வறுமமர்கள் அதிபதீ என்று கூற வாயெடுத்தவள்

**நிமியும் வாயொடு**

அவ்வார்த்தையைக் கூறுமுன்பே அத்துணைப் பெரியவன். இப்படி எளியனாவதே என்று வியந்து அவ்வியப்பிலே பேச வந்தது சொல்லி தலைக்கட்டமாட்டாதே உதட்டை நெளித்து

**கண்கள் நீர்மல்க**

அவன் சீலத்தையுன்னி அம்மகிழ்விலே கண்கள் நீர்தேக்கிட

**நெக்கு**

உடல்குலைந்து, ஒசிந்து - தளர்ந்து, கரையும் - அக்கண்ணீரிலேயே தன்னைக் கரைத்துக் கொள்ளும் படியானாள். பெருவெள்ளத்திலே ஆற்றின்கரை பையப்பைய உடைந்து நீரிலே விழுந்து கரையுமா போல.

இப்படி இந்நிலைக்கு இவளை நீங்களே கொண்டு வந்துவிட்டு இப்போது இவளை இத்தசையிலிருந்து மீட்க முயல்கிறீர்களே, இயலுமா என்கிறாள் தோழி.

**கரைகொள் பைம்பொழில் தண்பனைத்**
**தொலைவில்லிமங்கலம் கொண்டு புக்கு**
**உரைகொள் இன்மொழி யாளைநீர்**
**உமக்காசையின்றி யகற்றினீர்**
**திரைகொள் பௌவத்துச் சேர்ந்ததும்**
**திசைஞாலம் தாவியளந்ததும்**
**நிரைகள் மேய்த்தது மேபிதற்றி**
**நெடும்கண் நீர் மல்க நிற்குமே. (திருவாய் 6 -5 -3)**



இருபுறமுமுள்ள கரையைத் தமக்கே உரித்தாக்கிக் கொண்ட பசியசோலைகள் சூழ்ந்ததும், குளிர்ந்த கழனிகளை உடையதுமான தொலைவில்லிமங்கலத்துக்கு பகவத்குணானு பவத்திலே பெயர் பெற்ற இனியமொழியுடைய இவளை நீர்கொண்டுபோய் அவ்வூருள் புக்கு அச்செயலின் பலனாக அவள் பக்கல் உமக்கு இனி ஆசையில்லையென்று சொல்லும்படியான அளவுக்கு அவளை அகலச் செல்ல விட்டுவிட்டீர்கள். பலன்? அவள் அவன் திருப்பாற் கடலிலே பள்ளிகொண்டருளினபடியையும், திக்கெல்லாம் அகப்பட இப்பூமியை அளந்துகொண்டதையும், அவன் பசுக்கூட்டங்களை மேய்த்ததையும் நினைத்து அதே பிதற்றலாய் நீண்ட தன் கண்களில் நீர் பெருக்க நிற்கிறாள்.

**"கரைகாள் பூம்பொழில்"**

கரையில் பூமியகப்பட்ட இடமெல்லாம் மரமும் செடியுமாய் வியாபித்துக் கொண்ட பொழில். அப்படித் தனக்கே ஏகமாய்க் கரையைக் கொண்ட கிழ்ச்சி தோன்ற பசுமை விளங்கத் தோன்றும் சோலைகள்.

**தண்பணை**

பொருனையின் குளிர்த்தி யனைத்தையும் ஸ்வீகரித்துக் கொண்ட வயல்கள்.

**"உரைகொள் இன்மொழியாளை"**

இவள் இயல்பு இன்று திடீரென்று தோன்றியதல்லவே. பகவத் குணானுபவத்திலே இவளுக்குண்டான ஈடுபாடு தான் உலகறிய பிரஸித்தமன்றோ. அவளை தொலைவில்

லிமங்கலத்துக்குக் கொண்டு போவார்களா, அவ்வூர்ப் பொழில்கள் கரையையும் கழனிகள் தன்மையையும் தமக்கே உரித்தாக்கிக் கொண்டவையாயிற்றே. அத்தன்மை கண்டால் இவளும் பகவத் குணங்களனைத்தையும் தனக்கேயாகக் கொண்டுவிடுவாளே என்று உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டாமோ,

**"இன்மொழியாளை"**

இயல்பிலே மதுரமான மொழியுடையவளை கோபித்தாலும் மொழி கடினம் பெறாத இயல்புடையாள்.

**"நீர் உமக்காசையின்றி யகற்றுவீர்"**

உண்மையில் அவளிடம் உமக்கு ஆசையில்லை. இருந்தால் இப்படிச் செய்திருப்பீரா. இச்செயல் நீர் செய்ய ஏற்கனவே உங்களை மெல்ல மெல்ல உள்ளத்தினின்றும் அகற்றிக் கொண்டிருந்த அவள் இப்போது வெகுதூரம் அகன்று போகவழி செய்தீர். அவள் இவ்விதம் உங்களைவிட்டு அகல வழிவகுத்த நீங்கள் உண்மையில் அவளை உங்களைவிட்டு அகற்றினீர்களே, யாவீர்கள்.

அரக்கரைக் கூட்டம் கூட்டமாக அனுப்பி மாருதி கைக்குப் பலியாக்கிய இராவணனை நோக்கி இந்திரஜித்து "கொன்றார் அவரோ கொலை சூழ்கென நீ கொடுத்தாய்" என்றான். மாருதியின் கைவரிசை தெரிந்தபின்பு என்போல்வாரை அனுப்பாமல் சாதாரண அரக்கரை அனுப்பிப் பலியிட்ட நீ உண்மையிலே அவர்களைக் கொலைக்குட்படுத்தியவன் தானே என்கிறான் இந்திரஜித்து. அதுபோல நீங்களும் அவளியல்பறிந்தும் அவளை இவ்வூரில் கொண்டு புக்கதனால் அவளை உங்களிடமிருந்து அகற்றினவர்கள் தானே.

**திரைகொள் பெளவத்துச் சேர்ந்ததும்**

அதன் பலன்? அவள் அவன் குணாநுபவங்களிலே



ஆழ்ந்தாள். முதலில் ஆர்த்தநாதம் செவிப்பட அவன் தன் மேன்மையான இருப்பைவிட்டுச் சமீபமாக க்ஷீராப்தி (பாற்கடல்)யிலே வந்து சாய்ந்த தண்மையில் ஈடுபடுகிறாள்.

**திசைஞாலம் தாவியளந்ததும்**

அடுத்து இந்திரனுக்காக வாமனனாய் வந்து விக்ரமனாய் வளர்ந்து அகில புவனங்களையும் கைக்கொள்ளும் வியாஜத்தாலே திருவடி ஸ்பர்ஸம் எல்லா உயிர்களுக்கும் கிடைக்கும்படி அடியால் உலகளந்த தயை அவள் நெஞ்சை அள்ளுகிறது.

**"நிரைகள் மேய்த்ததுமே"**

அதற்கு மேலாக தன் மேன்மையை யெல்லாம் சூரிகள் பாடிப் பரவாநிற்க அதை உதறித் தள்ளி ஞானம் நடையாத குலத்தில் அவதரித்து நிர்யக்குகளை மேய்த்துநின்ற அவனது ஸௌலப்யம் (எளிமை) அவள் நெஞ்சை இருக்குகிறது.

**"பிதற்றி........ நிற்குமே"**

இப்படி அவனுடைய இந்த குணங்களையே மனம்நினைக்க அக்குணங்கள் தோன்ற அவன் செய்த செயல்களை அவள் வாய் பன்னிப் பன்னிப் பிதற்றுகிறது. அவள் உள்ளம் கரைந்து கண்கள் வாயிலாகக் கண்ணீர் உருவில் பெருக்கெடுத்து வழிகிறது. கரைந்த உள்ளம் கண்ணில்முட்டி வெளிப்பட்ட காரணமாகவே அவள் கண்கள் பெரிதாய் விட்டன என்கிறாள் தோழி.

## நான்காம் பாட்டு

**"நிற்கும் நான்மறை வாணர்வாழ்**
**தொலைவில்லி மங்கலம் கண்டபின்**
**அற்கம் ஒன்றும் அறவுறாள் மலிந்தாள்**
**கண்டீர் இவள் அன்னைமீர்**
**கற்கும் கல்வியெல்லாம் கருங்கடல்**

**வண்ணன் கண்ணபிரான் என்றே**
**ஒற்கம் ஒன்றுமிலள் உகந்துகந்து**
**உள்மகிழ்ந்து குழையுமே." (திருவாய் 6 -5 -4)**

*தாய்மார்களே! நிலைத்து நிற்கும் நாலு வேதங்களையும் கற்றவர்களான மறையவர் வாழும் தொலைவில்லி மங்கலத்தைப் பார்த்தபின்பு அடக்கம் என்பதை இவள் அறவே விட்டுவிட்டாள். நம்போல்வார் தேற்றித் தணிவிக்க முடியாதபடி அக்காதல் மிகுத்துக் காணப்படுகிறாள். சொல்லும் சொல் எல்லாம் அவனுடைய திருப்பெயர்களும் அவன் கல்யாண குணங்களுமாய் அவற்றையே சதாகாலமும் அழிவின்றிப் பேசி அதில் இளைப்பற்று உள்ளம் மகிழ்ந்து அம்மகிழ்ச்சியிலே உள்ளமும் உடலும் குழைத்து துவண்டு போனாள்.*

**"நிற்கும் நான்மறை"**

*குறைவின்றிக்.. காலதத்துவமுள்ள வரை கலக்கமின்றி நிலைத்து நிற்கும் நால் வேதங்கள், உலகழியும் தாமழியாதன அற்கம் ஒன்றும் அறவுற்றாள்:- முற்றிலும் அடக்கம் என்ற குணாநுபவத்தையே பெறாதவளானாள். இன்ன செய்யலாம், செய்யக் கூடாதென்று தாய்கூற அவள் வார்த்தைக் கடங்கி நின்றிருந்தவள் இப்போது 'தாய் வாயிற் சொல்கேளா' தவளானாள். தாய் மட்டுமல்ல "அன்னை என் சொல்லிலென் ஊரென் சொல்லிலென் தோழிமீர்" என்றல்லவா கூறுகிறாள்.*

**மலிந்தான்**

*அவன்பால் காதல் மிகுத்துப் பெருகி நிற்கிறாள். 'காதல் கடலின் மிகப்பெரிதால்' என்னுமளவுக்கு மிஞ்சி நிற்கிறது. அவன் உள்ளே கட்டுண்டு அடங்கி நிற்கும் அளவிலல்ல அது.*

**"கற்கும்..... பிரான் என்றே"**

*சொல்லும் பேச்செல்லாம் அவன் வடிவழகைப் பற்றியும் அவன் நீர்மையையும் எளிமையையும் பற்றியவாறே*



*இருக்கின்றன. கண்டவர்தம் மனம்வழங்கும்படியான தர்சநீயமான அவன் கடல்நிற வண்ணமும், கட்டி யடிக்கும்படிக்கு தன்னைத் தாழவிட்ட அவன் எளிமையும் அவளை ஆட்கொள்ள அவற்றைப் பேசுவதே அவள் காலக்ஷேபமாயிற்று.*

**ஒற்க மொன்றுமிலள்**

*அப்படி அவற்றைப் பேசுவதில்தான் ஒருபோதேனும் ஒரு சலிப்புக் கண்டோமா. அதுதான் இல்லை!*

**"உகந்து.... மகிழ்ந்து"**

*ஒவ்வொரு தடவை சொல்லும்போதும் உகப்பு மிக்குக் காணப்படுகிறாள். அவள் சரீராவஸ்தை அதைக் காட்டுகிறது. உள்ளமும் படிப்படி மகிழ்ச்சி மேலிட்டு வருகிறது, அதை அவள் பேச்சு வெளிப்படுத்துகிறது.*

**"குழையும்"**

*இப்படி மனமும் உகப்பிலே ஆழ்ந்து கரையவே சரீரம் தன் வயமின்றித் துவண்டு போகிறாள்.*

## ஐந்தாம் பாட்டு

**"குழையும் வாள்முகத் தேழையைத்**
**தொலைவில்லி மங்கலம் கொண்டுபுக்கு**
**இழைகொள் சோதிச் செத்தாமரைக்**
**கண்பிரான் இருந்தமை காட்டினீர்**
**மழை பெய்தாலொக்கும் கண்ணநீரினோடு**
**அன்றுதொட்டும் மையாந்து இவள்**
**நுழையும் சிந்தையள் அன்னைமீர் தொழும்**
**அத்திசை உற்று நோக்கியே." (திரு 2 -3 -3)**

*அவன் நினைவின் காரணமாக மனமும் உடலும் குலைபவளாகிய ஒளிபொருந்திய திருமுகத்தையுடையவரும் இளகிய மனமுள்ளவளுமான இவளைத் தொலைவில்லி*

மங்கலம் கொண்டு அழகிய அணிகலன்களைத் தரித்து, தாமரைக்கண்ணனாய், ஜோதியுடன் விளங்கும் அவளுடைய ஸ்வாமியான எம்பெருமான் இருந்த இருப்பை நீங்கள் காட்டினீர்கள். அதன் பலனாக பெய்யும் மாமுகில் போல் கண்ணீர் பெருக அன்றுமுதல் மயக்கம் கொண்டவள்போல் முகத்தில் பசப்பூர, அவன் அழகிலே நுழைந்து ஈடுபட்டு சிந்தையளாய இவள் அவனிருந்த திசையைக் கூர்ந்து நோக்கித் தெண்டனிடா நிற்பாளாயினாள்.

**குறையும்**

முன் சொன்னதுபோல் அவன் குணசிந்தையிலே தன்னையழித்துத் துவளும்.

**வாள்முகத்து ஏழையை**

ஒளிபொருந்திய முகத்தையுடையவளாயிருந்த தவிர்க்கமுடியாத சபலமுடையவளை தன்னை அவன் ஈடுபாட்டினின்றும் பறித்துக் கைவாங்க சக்தியற்றவளை.

**இழைகொள் சோதிச்செந்தாமரைக்கட்பிரான்**

சகலவிதமான ஆபரணங்களையும் அணிந்து இயல்பிலே தனக்குள்ள ஜோதியோடு இவ்வாபரண ஜோதியும் கலக்க ஜாஜ்வல்யமாகப் பிரகாசிக்குமவன். ஆபரணசோதி இவள் முகத்தே பிரதி பலித்ததா, இவன் ஜோதி ஆபரணங்களிலே பிரதிபலித்ததா எனத் தெரியமுடியாதபடி ஒளிவிடுமவனை முடிச்சோதியாய் உனது முகச் சோதி மலர்ந்ததுவோ என்று முன்னே ஐயமுண்டாயிருக்கிறதல்லவா இவளுக்கு.

சிவந்த தாமரைபோலும் கண்ணையுடையவன். இவளுடைய தலைவன். ஸர்வஸ்வாமியானாலும் இவள் பக்கல் அளவில் காதல் விளைத்த தலைவன்.

**இருந்தமை காட்டினீர்**

தன் அழகால் இவளை ஆட்கொண்ட வீறு தோன்ற



வீற்றிருக்குமவன். அவனிருந்தவிடம் இவளைக் கொண்டுபோனதே தவறு. அப்படியிருக்க நீங்களோ அவளைக் கூவி அவன் இருக்கும் இருப்பின் அழகை அவளுக்குச் சுட்டியும் காட்டினீர்கள்.

**“மழைபெய்தால்....... நீரினொடு”**

அதன் பலனாக, பெய்யமாமுகில்போல் வண்ணனான அவனை ஸேவித்ததன் பலனாக இவள் கண்கள் மழை மேகம் போல் கண்ணீரைச் சொரியா நின்றன.

அன்று தொட்டும் மையந்து: அவனை அடையாமை யாலே, அவன் பிரிவிலே உளம் மயங்கி அவள் வாள்முகத்திலே ஒரு பசப்புப் படர ஆரம்பித்தது. இப்போது அவள் முகம் பழைய ஒளியோடா விளங்குகிறது. முகம் பசப்பூர்ந்து மங்கியல்லவா காண்கிறது.

நாயகம் தன்னைப் பராமுகம் செய்தான் எனில் மாதர் ஒளி முகங்களிலே சந்திரன் மேலே மேகம் படர்வது போன்று பசப்பொன்று பரவுதல் இயல்பு.

**‘நீயே, செய்வினைமருங்கில் செலவயர்ந்தி யாழநின்**
**கைபுனைவில்லின் ஞாணுளர் தீயே**
**இவட்கே செய்வுறுமண் டிலம்மை யாப்பதுபோல்**
**மையில் வாண்முகம் பசப்பூரும்மே**

என்ற பாலைக்கலிப் பாட்டுள்ளும் பிரிதற்கு தயாராகும் நாயகன் செயல்கண்டு தலைவி முகம் பசப்பூர்ந்தமையைத் தோழி கூறியது காண்க.

**நுழையும் சிந்தையள்**

கூர்ந்து ஆராயும் மனமுடையவள். அவனுடைய ஸௌந்தர்யங்களிலே தன்னையுட் செலவிட்டு அநுபவிக்கும் நெஞ்சுடையாள்.

**தொழுமத்திசை உற்றுநோக்கியே**

அப்படிச் சிந்தையைச் செலுத்தி அவனிருப்புக்

கண்டவள் போல அவனிருக்கும் திசையை நோக்கித் தொழுதுகொண்டேயிருக்கிறாள். இதுவே அவளுக்கு இப்போதைய காயிக வியாபாரமாயிற்று என்கிறாள் தோழி.

## ஆறாம் பாட்டு

**"நோக்கும் பக்கமெல்லாம் கரும்பொடு**
**செந்நெலோடு செந்தாமரை**
**வாய்க்கும் தண்பொருநல் வடகரை**
**வண்தொலை வில்லிமங்கலம்**
**நோக்குமேல் அத்திசையல்லால் மறுநோக்கிலன்**
**வைகல் நாடொறும்**
**வாய்க்கொள் வாசகமும் மணிண்ணன் நாமமே**
**இவள் அன்னைமீர்!" (திரு. 6 -5 -6)**

கண் திரும்பும் இடமெல்லாம் கரும்பும் நெல்லும் தாமரையுமே யாய்த் தோன்றும்படி கழனிகளைச் செழிப்பாக்கி விளைவிக்கும் இயல்புடைய தாம்ரபர்ணியின் வடமருங்கி லேயுள்ள தொலைவில்லி மங்கலத் திருப்பதியைக் கண்ணில் கண்டால் அந்தத் திசையை விட்டு மறுபக்கம் பார்க்கவே மாட்டேனென்கிறாள். இப்போதெல்லாம் நாள்தோறும் இவள் வாய் கூறம் பேச்செல்லாம் அந்த நீலமணி நிறத்தவன் திருநாமங்களே யன்றி வேறல்ல.

**"நோக்கும்....... பொருநல்"**

கரையருகே நின்று கண்ணை ஓட்டினால் எங்கும் ஒரே கரும்பும் நெல்லும் தாமரையுமாயிற்றுக் காண்பது. அது ஒரு பக்கம் மட்டுமல்ல. எப்புறம் நோக்கிலும் அதே காட்சி தான் தென்படும் அப்படி இருபுறமும் திருமகள் உறையுளாய் பண்ணுகிற" இயல்புடையது பொருநல் தமிழை வளர்ப்பது மட்டுமல்ல செல்வமும் கொழிக்க வைப்பது இந்நதி.

அதன் வடகரையிலே அமைந்தது தொலைவில்லி



மங்கலப்பதி.

**நோக்குமேல்...... நோக்கிலள்**

அவனை நினைந்து சுற்றும் பார்க்கிறாள். அப்படிச் சுற்றி நோக்கும்போது தொலைவில்லிமங்கலம் கண்ணில் பட்டுவிட்டால் போதும். அங்கு வைத்த கண் வாங்கமாட்டாதே பார்வை அத்தலத்திலேயே ஊன்றி விடுகிறது நுழையும் சிந்தையள்! உற்றும் நோக்குகிறாளா! அவனைக் காண்கிறாளோ என்னவோ. கண்ணை அங்கு நின்றும் பறிக்கும் ஊற்றம் பெற்றிலள். பார்த்துக் கொண்டிடேயிருக்கிறாள்.

**வாய்க்கொள்.... நாமமே**

பார்க்கிறாளா. அவனைத்தான் கண்டிருக்க வேண்டும். எப்படிச் சொல்கிறேன் என்கிறீர்களா? கண் பார்த்துக் கொண்டேயிருக்கிறதா! பார்த்துக் கொண்டிருக்கும் போதே வாய்க்குள் ஏதோ சொல்கிறாள். அருகில் சென்று கேட்டால் எல்லாம் அம்மணிவண்ணன் திருநாமங்கள். வேறு ஒரு வார்த்தை கிடையாது எனில் அவனை அவள் கண்ணில் கண்டுகொண்டே தானேயிருக்க வேண்டும்!

**வைகல் நாடொறும்**

இது ஒரு நாளல்ல. இரு நாளல்ல. நாள்தோறும் இப்படித் தான். நாளிலும் இவ்வேளை என்றல்ல. சதாசர்வ காலமும் இதுவே இவள் வாக்கு வியாபாரமாய்க் கழிகிறது இப்போது என்கிறாள் தோழி.

**அன்னைமீர் அணிமாமயில் சிறுமானிவள்**
**நம்மைக் கைவலிந்து**
**என்ன வார்த்தையும் கேட்கிறாள்**
**தொலைவில்லிமங்கலம் என்றல்லால்**
**முன்னம் நோற்ற விதிகொலோ?**
**"முகில்வண்ணன் மாயம் கொலோ" அவன்**
**சின்னமும் திருநாமமும் இவள்**

**வாயனகள் திருந்தவே. (திரு. 6 -5 -7)**

தாய்மார்களே! அழகிய மயில்போன்ற சாயலும், சிறிய மான் போன்ற கண்ணும் துடிப்பும் உள்ள இவள் எப்போதும் தொலைவில்லி மங்கலம் என்று பிதற்றுகின்றாளே ஒழிய நான் சொல்லியும் என் வார்த்தையையும் கேட்கிறாளல்லள். முற்பிறப்பில் அவள் செய்த தவமோ? கார்மேகவண்ணன் மாயமோ அறியேன். அவன் சின்னங்களும் நாமங்களும் இவள் வாயிலிருந்து வரும்போது புதிய அழகோடு வருகின்றன.

**அன்னைமீர்!**

இவளைப்பெற்ற தாய்மார்களே! என்ன ஆச்சர்யம் பார்த்தீர்களா!

**அணிமாமயில் சிறுமானிவள்**

இவள் பருவமென்ன, இயல்பென்ன இளம் மான்கன்று போல மருண்ட நோக்குடையவள். இளமை தோன்றத் துள்ளிக் குதித்தோடும் மான் குட்டிபோல எங்களோடு விளையாடி வந்தவள் சரீரமே மயில் போன்ற சாயலும் மென்மையும் கொண்டது. இப்படிப்பட்ட இவள்,

**நம்மைக் கைவலிந்து**

தன் பருவத்துக்கேற்ப உங்களுக்குள் எனக்கும் படிந்து நம் சொல்கேட்டு வளரவேண்டியவள் அப்படியேதான் வளர்ந்தவளும்கூட. ஆனால் இப்போது எப்படியிருக்கிறாள். நம் கட்டுக்குள் அடங்காதவள் ஆனாள் "என் சிறகின் கீழடங்காப் பெண்ணைப் பெற்றேன்" என்று நீங்கள் அங்கலாய்க்கும்படி கட்டுமீறினாள்.

**என்ன வார்த்தையும் கேட்கிறாள்**

'தாய் வாயிற் சொற்கேட்கிறாள்' என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள் முன்னமே. அது போகட்டும் ஆனால்



அப்போ தெல்லாமாவது என்னை அந்தரங்கமாகக் கொண்டு தன் ரகசியங்களை என்னுடன் சொல்லி ஆறுவாள். நானும் அவ்வப்போது யோசனை கூறுவேன். அதைப் பின்பற்றி நடந்து வந்தாள். ஆனால் இப்போதோ என்னுடைய வார்த்தையையும் கூடவல்லவா உதறித் தள்ளுகிறாள்.

**தொலைவில்லிமங்கலம் என்றல்லால்**

எது கேட்டாலும் "தொலைவில்லை மங்கலம்" என்ற ஒரே பதில் தான் அவளிடமிருந்து கிடைக்கிறது. அவள் அகராதியில் வேறு வார்த்தையே இல்லை போலிருக்கிறது.

**முன்னம் நோற்ற விதிகொலோ?**

நானும் ஆராய்ந்தேன். சிறியவள் அநுபவமற்றவள். நாம் வளர்க்க வளர்ந்து நாம் கற்பிக்கக் கற்றவள். ஆனால் நம்மை எவ்வளவு விஞ்சிவிட்டாள். நாமும்தான் தொலைவில்லி மங்கலம் போனோம். எம்பெருமான் நாமங்களையும் சொல்கிறோம். இப்படியா தன் வசமிழந்து பிச்சேறினோம். அப்பித்து மக்கு ஏன் வரவில்லை. நம்மைவிடக் கற்றவளில்லையே அவள். அனுபவமும் குறைந்தவள். பின் அவள் இப்படிப் பைத்தியமாக வேண்டுமென்றால முன் ஜன்மத்தில் செய்த தவமாகத்தானிருக்க வேண்டும் என்று எனக்குப்படுகிறது. அந்த விட்டகுறை இப்போது தொலைவில்லிமங்கலம் கண்டபின் பற்றிக் கொண்டிருக்க வேண்டும்.

**"முகில்வண்ணன் மாயம் கொலோ"**

அல்லது அந்த மாயப்பிரானின் ஆச்சர்ய சேஷ்டைகளில் இதுவும் ஒன்றாயிருக்க வேண்டும். அவன் தான் மாயத்தின் கொள்கலமாயிற்றே, ஒன்றா? இரண்டா? அவன் மாயச்செயல்கள். நாம் பெறமுடியாத அநுபவத்தை அவளுக்கு அவன் தானே கொடுத்து அவளை இப்படிப் பிச்சேற்றியிருக்க

வேண்டும். இந்த இரண்டில் ஒன்றுதான், இவளுடைய இந்த நிலைக்குக் காரணம்.

**அவன் சின்னமும்..... திருந்தவே"**

மேலும் ஒரு அற்புதம் கண்டீர்களா? அவன் சின்னங்களையும் அவன் திருப்பெயர்களையும் நாமும்தான் பல தடவை கூறி அவனை வணங்கியிருக்கிறோம். பிறர் கூறுவதையும் கேட்டிருக்றோம். ஆனால் இவள் அழகிய வாயிலிருந்து அச்சின்னங்களின் பெயரும் அவன் திருநாமமும் வெளிப்படும்போது அவை தனியழகு பெற்றல்லவா வருகின்றன. அவள் 'தவள ஒண்சங்கு' 'சக்கரம்' என்று கூறும்போது அச்சங்கும் ஆழியும் முன்னிலும் அழகு பெற்று வருவதாக நாம் உணர்கிறோமே. அதுபோல அவள் அரவிந்த லோசனன் 'தேவபிரான்' என்று கூறும்போது அவை நம் காதுகளில் என்றுமில்லா இன்பத்தோடும் பொருளோடு மல்லவா ஒலிக்கின்றன. உன் வாயால் என்னைக் கூறு என்று அவன் சின்னங்களும், அவன் பெயர்களும் போட்டியிட்டல்லவா அவள் வாயிலிருந்துப் புதுப்புகர் பெற்று வருகின்றன! இந்த அதிசயத்தை நீங்கள் என்போல் உணர்ந்திருக்கிறீர்களா என்று கேட்கிறாள் தோழி.

## எட்டாம் பாட்டு

**திருந்து வேதமும் வேள்வியும்**
**திருமா மகளிரும் தாம்மலிந்**
**திருந்துவாழ் பொருநல் வடகரை**
**வண் தொலைவில்லி மங்கலம்**
**கருந்தடங் கண்ணி கைதொழுத**
**அந்நாள் தொடங்கி இந்நாள்தொறும்**
**இருந்திருந்து அரவிந்த லோசன**
**என்றென்றே நைந்திரங்குமே. (திரு. 6 -5 -8)**

திருத்தமுடைய வேதமும், வேள்வியும், திருமகளும்



தானுமாக சந்துஷ்டியுடனே அவன் நித்யமாய் வாழுகின்ற பொருநலுக்கு வடகரையிலுள்ள வளப்புமிக்க தொலைவில்லி மங்கலத்தை கரிய விசாலமான கண்ணையுடைய இவள் கை தொழுத நாள்தொடங்கி இன்றுவரை இருந்தவிடம் பெயராதே, எப்போதும் அவன் திருநாமமாகிய அரவிந்தலோசனா! என்றே கூவி நைந்து அந்த ஈடுபாட்டிலே தன்னையிழந்தவளானாள்.

**திருந்து வேதமும்**

தொலைவில்லி மங்லத்துள்ளார் பயில்கையாலே முன்னை விடத் திருந்தி விளங்கும் வேதம் பயிலப் பயிலத் திருந்துவதாயிற்று அது. பயில்வார் உண்மைப் பொருள் தெரிந்து பொருள் விளங்க சுஸ்வரத்தோடு ஓத ஓத முன்புத்தையிலும் திருந்தித் திருந்தி விளங்கும் வேதமும்.

**வேள்வியும்**

உண்மையான யக்ஞும், ஐஹிகப் பலன்களை விரும்பிச் செய்யப்படும் சாதாரண அசுவமே தியாகா திகளன்றிக்கே பகவத் ப்ரீதிக்கனுகுணமானதும் பாகவதர்க்கனு கூலமானதுமான ஆராதனங்கள்.

**திருமாமகளிரும்**

இப்படித் திருந்தின வேதமும், உண்மை வேள்வியாகிய பகவத்பாகவத ஆராதனமும் மிகவே திருமகள் மகிழ்ந்து வர்த்திக்கத் துடங்குகிறாள். அத்தகைய வேதகோஷமும் ஆராதனமும் நித்தியமாய்க் குறைவின்றி நிறைவேறும்படி கொழிக்கும் செல்வமும்.

**தாம்**

இம் மூன்றும் செழிக்கும் செழிப்பைக் காணும்தான். எம் பெருமான்.

**மலிந்திருந்துவாழ்**

அவற்றைக் கண்டு களித்து அவன் ஒரேயிருப்பாக நித்யவாஸம் செய்கிற தன் உள்ளத்துக்கு போக்யமாகக் கொண்டு அவன் வாசம் செய்யும். 'கோனேரி வாழும் குருகினமே' என்றாற் போல, அங்குத்தை அவ்வாழ்வுதானே போக்ய ரூபமாயிருக்கை 'பரமபதத்தில் உள்வெதுப்புப் போலே யாகாதே இருப்பது'' என்பது ஈடு. அங்கிலும் இங்கு உள்மகிழ்வோடே காணும் வாழ்வது.

**பொருநல் வடகரை வண்தொலை வில்லிமங்கலம்**

விரஜைக்கு அக்கரைப்பட்டதென்று பரமபதத்தைச் சொல்லுமாபோலே பொருநலுக்கு அக்கரை என்கிறாள். பராங்குச நாயகி வர்த்திக்கும் பிரதேசமான குருகை பொருநலுக்குத் தென்கரையாதலாலே. மேலே கண்ட வளம்மிக்க தலமான தொலைவில்லி மங்கலம்.

**கருந்தடங்கண்ணி**

கரிவாய் விசாலமான கண்களையுடைய இவள் 'மைய கண்ணாளிலும்' மேலான இம் ''மைத்தடங்கண்ணி'. அவள் அழகை அநுபவித்தே மலர மலர விழித்து அதனாலே விசாலமான கண்களையுடையவள். 'மாதிரம் அனைத்தையும் அளக்கும்' கண்ணிறே ''கஞ்சத்தினளவிற்றேனும் கடலிலும் பெரிய கண்கள்' என்று ராம ஸௌந்தர்யத்தை அநுபவித்தே விரிந்த கண்களையுடைய சீதையை மகாகவி கம்பன் கூறினது போல

**கைதொழுத....தொறும்**

என்று நீர் கொண்டு போய்க் காட்ட அவள் கைகூப்பி வணங்கினாளோ அந்தக் காலம் முதல் இதுகாலம் வரை. தான் ஸத்தை பெற்ற காலம் முதல் தான் அஞ்ஞானத்திலே அழுந்திக் கிடந்த இருப்பிலிருந்து எழுந்த காலம்முதல். தொழுதமைதானே எழுச்சிக்குக் காரணமாயிற்று. 'தொழுதெழென் மனனே'' என்றதும் இவர் தானே.



**இருந்திருந்து**

ஒரேயிருப்பாய் இருந்து வேறு வியாபாரமின்றிக்கே இருந்து.

**அரவிந்தலோசன!**

ஹே அரவிந்தலோசன! தாமரைக்கண்ணா என்று.

**என்றென்றே**

அப்படி ஒருகால் இருகாலல்ல. எப்போதும் இதுவே கூக் குரலாயிற்று.

**நைந்திரங்குமே**

இப்படி வாய் ஓயாமல் கூவி உடலும் உளமும் நைந்து போயிற்று. அப்படி இரங்கி அவ்வீடுபாட்டிலே தன்னையிழந்து மூழ்கியிருக்கிறாள்.

## ஒன்பதாம் பாட்டு

**"இரங்கி நாள்தொறும் வாய்வெரீஇ**
**இவள் கண்ணநீர்கள் அலமர**
**மரங்களும் இரங்கும் வகை**
**மணிவண்ணவோ! என்று கூவுமால்**
**துரங்கம் வாய்பிளந்தான் உறை**
**தொலைவில்லி மங்கலம் என்றுதன்**
**கரங்கள் கூப்பித்தொழும் அவ்வூர்த்**
**திருநாமம்கற்றதற் பின்னையே."** **(திரு. 6 -5 -9)**

இப்படி ஈடுபட்டு உள்நெகிழ்ந்து தினந்தோறும் வாய்விட்டு தன் கண்ணீர்கள் பெருக கேட்கும் அசேதனங்களும் இரக்கப்படும்படி மணிவண்ணா என்று அலறுகிறாள். அவ்வூர்ப் பெயர் தெரிந்தபின் கேசியை வாய் பிளந்தவன் வாசம் செய்யும் தொலைவில்லி மங்கலம் என்று கைகூப்பித்

தொழுகிறாள்.

**இரங்கி**

இப்படி அவன் விஷயத்திலே நெஞ்சழிந்து.

**வாய்வெரீஇ**

அவன் பெயரை முணுமுணுக்கிறாளில்லை. நன்றாக யாவரும் கேட்க வாய் விட்டு,

**கண்ணீர்கள் அலமர**

வாய் அப்பெயரைக் கூறும்போதே கண்கள் தாரை தாரையாக நீரைப் பெருக்கா நின்றன.

**“மரங்களும் இரங்கும்வகை”**

அக்கூப்பீடு தான் கேட்டது நாம் மட்டுமோ. இப்படி அலறுகிறாளே என்று அவள் பக்கல் இரங்குவது நாமேயோ. மரங்கள் முதலான சேதனப் பொருள்களுமல்லவா இவள்பாடு கண்டு இரங்குகின்றன. இவளது அன்புநிலை கண்ட அவ்வன்புக்குப் போக்கு வீடின்றி இவள் தவிப்பது கண்டு மலர்களாகிய தம் கண்களை அகல விழித்து மது தாரையாகிய கண்ணீரைப் பொழிகின்றன மரங்கள். மற்ற அசேதனப் பொருள்களும் அவ்வாறே அவள் கூப்பீட்டின் தன்மை அவற்றையும் கரைக்கின்றது.

**“அன்புநிலை யாரறிவர் என்பனபோல்**
**மரங்கள் அலர்மலர்க்கண் ணீரருவி**
**அகமுடைந்து தூவ”**

என்றார் ஒரு கவி.

ராமவிச்லேஷத்தில் பரதன் பட்டபடி கண்டு “தாவர சங்கமம் என்னும் தன்மைய யாவையும் இரங்கிட” என்று கம்பர் கூறினார். பெருமாள் திருக்குழலோசை கேட்டு “மரங்கள் நின்று மதுதாரைகள் பாயும்; மலர்கள் வீழும்; வளர் கொம்புகள் தாழும்” என்றார் பெரியாழ்வார். இவ்விடத்திலே ஈட்டில் ஒரு ஐதிஹ்யம் காண்கிறது. “சேதனா சேதன விபாகமற அழியும்படி காணும் இவள் வாய்விட்டுக் கூப்பிடுவது. எம்பாரை ஒருவர் “மரங்களும் இரங்கக் கூடுமோ?” என்று கேட்க, “இது அருளிச் செய்த அன்று தொடங்கி எத்தனை பாவ சுத்தியில்லாதார் வாயிலே புக்கதென்று தெரியாது. இங்ஙனேயிருக்கச் செய்தே, யமநியமாதி க்ரமத்தாலே பதஞ்செய்யப் பார்த்தாலும் சுக்கான் பருக்கைபோலே நெகிழாதேயிருக்கிற நெஞ்சு இன்று அழிகிற படி கண்டால் ஸம காலத்தில் மரங்கள் இரங்கச் சொல்ல வேணுமோ” என்றருளிச் செய்தார்.



**மணிவண்ணவோ என்று கூவுமால்**

ஓ மணிவண்ணா என்று திசையனைத்தும் கேட்கும்படியாயிற்று கூப்பிட்டது. “கடுத்தகராம் கால்கதுவக்கையெடுத்து மெய்கலங்கி உடுத்திசையனைத்தினும் சென்று ஒலிகொள்ள” அலறிற்றே ஒரு வாரணம். அது கூவிய பெயராலே கூவுகிறாள் “நாராயணா ஓ மணிவண்ணா!” என்றல்லவா அலறிற்று. நாராயணா என்று கூப்பிட்டு வாராமையோ என்னவோ ஓ மணிவண்ணா என்று அது அலறிற்று.

**“துரங்கம்வாய்...... மங்கலம்**

அன்று கேசியைக் கொன்று உலகுக்கு உபசரித்தவன் இன்று எனக்கு உபகாரம் செய்வான் என்று அவன் பெயரை நினைத்த அவன் வந்து நித்யவாசம் செய்யும் “தொலைவில்லி மங்கலம்” என்று.

**கரங்கள் கூப்பித்தொகும்**

அவ்வூர்ப் பெயரைவாய் சொல்லும் போதே கைகள் தானே தலைமீது குவிகின்றன.

**“அவ்வூர்த்திருநாமம் கற்றதற்பின்னையே”**

இதற்குக் காரணம் நீங்கள்தான். அவளை அங்கே கொண்டு போனீர்கள். ஊருக்குள் கொண்டு போனீர்கள். அவனிருந்தமை காட்டினீர்கள். எல்லாவற்றுக்கும் மேலாக அவ்வூர்ப் பெயரையும் சொன்னீர்கள். அதன் விளைவு இவள் அப்பெயர் தெரிந்த கால முதல் "தொலைவில்லி மங்கலம்" தொலைவில்லி மங்கலம் என்கிறாள். கை கூப்பித் தொழுகிறாள். அப்பெயரைத் தான் சொன்னால் அவள் சொல்லும்போதுள்ள இனிமையில்லையாகையாலே "அவ்வூர்" என்கிறாள் தோழி.

## பத்தாம் பாட்டு

**"பின்னைகொல்? நிலமாமகள் கொல்?**
**திருமகள் கொல் பிறந்திட்டாள்**
**என்ன மாயங்கொலோ? இவள்**
**'நெடுமால்' என்றே நின்று கூவுமால்**
**முன்னி வந்தவன் சென்று**
**நின்றுறையும் தொலைவில்லி மங்கலம்**
**சென்னியால் வணங்கும் அவ்வூர்த்திருநாமம்**
**கேட்பது சிந்தையே." (திரு. 6 -5 -10)**

"ஒருவேளை நப்பின்னைதான் இவளாக இப்போது அவதரித்திருக்கிறாளோ? அன்றி பூமிதேவியோ? இல்லை திருமகளே வந்தாளோ, என்றல்லவா எனக்கு ஐயம் எழுகின்றது. பின் என்ன மாயம் அம்மா இது? இவள் எப்போதும் 'நெடுமால்' என்று கூவுகிறாள். அவன் முற்பாடனாய் வந்து நித்ய வாசம் செய்யும் தொலைவில்லி மங்கலம் நோக்கித் தலைதாழ்த்து வணங்குகிறாள். அவள் உள்ளமும் அப்பெயரே கேட்க விழைகின்றது. வேறு என்ன காரணம்?

### பின்னைகொல்

ஒருக்கால் நப்பின்னைதான் முன்னைய யுகத்தில் கிடைத்த அநுபவம் போதாது இப்போது இந்நாயகியாக அவதரித்திருக்கிறாளா.



### நிலமாமகள் கொல்

அன்றிக்கே பூமிப்பிராட்டிதான் முன் ஏனமாய் நிலங்கீண்டவன்று கிட்டிய அநுபவம் மீண்டும் பெற வந்தாளோ.

### திருமகள் கொல்

அல்லாது பெரியபிராட்டியே முன்னைய அவதாரங்களிற் போல இவ்வர்ச்சையிலே அவனை அனுபவிக்க இப்படி வந்து பிறந்தாளோ என்று சிலசமயம் தோன்றுகிறது. ஆனால் சில சமயங்களில் இவளுடைய ஆசை மிகுதியை நோக்கும்போது அவர்கள் மூவரும்தான் இவளுக்கு ஸமமாவரோ என்று கூட நினைக்கச் செய்கிறது.

ஈட்டிலே திரு, பூமி, பின்னை மூவரையும் குறித்து ஒரு ரஸமான குறிப்புக் காண்கிறது "ஸர்வேச்வரனுடைய ஸம்பத்தாயிருக்குமவள் பிறந்திட்டாளோ (இதுதிரு) அஸ்ஸம்பத்து விளையும் பூமியா யிருக்கு மவள் பிறந்தாளே! (இது நிலமங்கை) அவ்விளை பூமியினுடைய பல (பயன்) ரூபமாயிருக்குமவள் பிறந்தாளோ (இது நப்பின்னை)

### பிறந்திட்டாள்

இப்போது அவதரித்திருக்குமவள் பின்னைகொல்? நிலமகள் கொல்? திருமகள் கொல்? அல்லவே அல்ல. அவர்களும் இவளுக்கு ஒப்பாவரா, இவள் தன்மையில் ஒவ்வொரு சமயம் ஒருவகைக்கு வேண்டுமானால் அவர்கள் ஒப்பாகலாம். இவளை வேண்டுமாயின் பிறர்க்கு ஒப்பாக்கலாம். ஒருவரும் இவளுக்கு நேராகார்.

### என்ன மாயமோ

என்ன ஆச்சர்யம்? ஒரு வேளை இது ஏதேனும் மாயமாயிருக்கலாமோ. அவன் படைப்பிலே நிகழக் கூடாதது என்று ஒன்றுண்டோ, ஒரு வேளை அவன் மாயமேயோ?

**நெடுமால் என்றே நின்று கூவுமால்**

மிகவும் மாலையுடையன். எனக்கு அவன் பாலுள்ள மையலில் காட்டில் என் பக்கல் அதிக மையலை யுடையவனே என்று கூவுகிறாள்.

**முன்னிவந்து**

அதனாலேயே எனக்கும் முந்தத் தான் இங்கு வந்து, நான் பிறந்தவூருக்கு எதிர் முகப்பிலே வந்து

**நின்றுரையும்**

ஒரொருகால்மட்டும் தோன்றி மறையாதே என்றும் என் கண்ணுக்கிலக்காம்படி நித்யவாசம் பண்ணா நின்ற.

**சென்னியால் வணங்கும்**

முன்கரங்கள் கூப்பித் தொழுது கொண்டிருந்தாள். இப்போது உடல் நைந்துகையைக் கூப்பவும் சக்தியற்றவளானாள். ஆகவே தலையை மட்டும் வணங்கி அவ்வூரை நோக்கித் தொழுகிறாள்.

**அவ்வூர்-சிந்தையே**

அவள் உள்ளமோ எப்போதும் அவ்வூர்ப் பெயரைக் கேட்பதையே விரும்பா நின்றது. தான்மட்டும் சொன்னால் போதாதாம். பிறர்வாயிலாகவும் அத்திருப்பெயரைக் கேட்டு மகிழ வேண்டும் என்று அவாவி நிற்கிறது அவள் உள்ளம்.

## பதினோராம் பாட்டு

**சிந்தையாலும் சொல்லாலும்**
**செய்கையினாலும் தேவபிரானையே**
**தந்தைதாய் என்றடைந்த**
**வண்குருகூரவர் சடகோபன்**
**முந்தை ஆயிரத்துள் இவைதொலைவில்லி**



**மங்கலத்தைச் சொன்ன**
**செந்தமிழ் பத்தும் வல்லார்**
**அடிமை செய்வார் திருமாலுக்கே (திரு. 6 -5 -11)**

மேலே சொன்ன விதமாக தன் மனத்தாலும், வாக்காலும், செயல்களினாலும் அவ்வூரிலே மற்றொரு கோயிலில் எழுந்தருளியுள்ள தேவபிரானையே தாயும் தந்தையுமாகக்கொண்டு அவனை அடைந்த வளம் மிக்கத் திருக்குருகூரிலவதரித்தவரான ஸ்ரீ சடகோபன் அருளிச் செய்த பழைய மறைப் பொருளான ஆயிரம் பாடல்களிலே தொலை வில்லிமங்கலம் என்ற இத்திருப்பதி விஷயமாகக் கூறப்பட்ட செந்தமிழ்ப் பாசுரங்கள் பதத்தையும் கற்று வல்லார் திருமால் திருவடி கைங்கர்யம் செய்யும் பேறு பெறுவர்கள் என்று இப்பதிகப் பயன் கூறப்படுகிறது.

**சிந்தையாலும்.... செய்கையினாலும்**

“ஒண்தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு” என்றபடி உள்ளமும் ‘வாய் அவனையல்லது வாழ்த்தாது’ என்றபடி வாக்கும், “கையுலகம் தாயவனையல்லது தான் தொழா’! என்றபடி அவன் மனோவாக்குக் காயங்கள் அவனிடத்திலே ஊன்றி நிற்பனவாய்

**தேவபிரானை..... அடைந்த**

அவ்வூரிலெழுந்தருளி யிருக்கும் தேவபிரானையே ‘பெற்ற தாய் நீயே பிறப்பித்த தந்தை நீ’ என்று கொண்டு அடைந்தது. இனி நீர் தாய்மார் என்ற பற்றுடன் அவளிடம் பேசிப் பயனில்லை, உமக்கு இனி “ஆசையில்லை விடுமினோ” உங்களைத் தாயாக மதித்தாலல்லவா அவள் உங்கள் சொல் கேட்கப் போகிறாள். அவனே ‘அன்னையாய் அத்தனாய்’ அவளை ஆண்டு கொண்டான்.

**முந்தை ஆயிரம்**

முந்தைப் பொருளைக் கூறும் ஆயிரம் பாக்கள்.

பழைமையான வேதங்களின் தெளிந்த உண்மையைக் கூறும் ஆயிரம். தான்றோன்றியாக வந்ததல்ல.

**‘தொலைவில்லி மங்கலத்தைச் சொன்ன’**

இந்தத் தொலைவில்லி மங்கலப்பதியிலெழுந்தருளியிருக்கும் அரவிந்தலோசனன் தேவபிரான் என்ற இரண்டு திருநாமங்கள் விஷயமாக ஆழ்வார் தன் அநுபவத்தைச் சொன்னதாகிய

**‘செந்தமிழ் பத்தும் வல்லார்’**

தமிழ்ப் பாசுரங்கள் பத்தும், இனிய பாஷையிலே சொன்ன பத்தும், முருடு நீங்கிய பாஷையிலே சொன்ன பத்தும் அதிலும் செம்மையான தமிழிலே சொன்ன பத்தும், தமிழிலே சொன்னதாலே சொன்ன பொருளே தமிழ் (இனியது) ஆயிற்று. அப்படி இனிப்புப் பெற்ற பத்தும் கற்று வல்லவர்.

**அடிமை செய்வார் திருமாலுக்கே.**

ஒரு ஜீவாத்மா பெற வேண்டிய பேறு பெறுவர். அதுதான் திருமால் திருவடியில் நித்ய கைங்கர்யம். உற்றேன் உகந்து பணி செய்து உன் பாதம் பெற்றேன்' என்றபடி பெறுவர் ‘உன் திருவடிக்கீழ்க் குற்றேவல் முன்செய்ய முயலாதேன்’ என்ற குறைதீர அவன் அடியிலே கைங்கர்யம் செய்கையாகிய ஸ்ரீயைப் பெறுவர்கள்.

இப்பதிகம் இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் இடையே உள்ள நவவித சம்பந்தங்களுள் பிதா புத்ரஸம்பந்தத்தையும் ஞாத்ருஞே சம்பந்தத்தையும் விளக்கும் என்பது சில பெரியோர்களுடைய அபிப்ராயம். ‘சிந்தையாலும்’ என்ற பாசுரமும் “திருந்து வேதமும்” என்ற பாசுரமும் அவற்றைக் குறிப்பன என்பர். சிந்தையாலும், சொல்லாலும், செய்கையினாலும் தேவ பிரானையே தந்தை தாய் என்றடைந்த வண்குருகூரவர் சடகோபன் என்று வருகையால் இறைவனே தந்தை தாய் முதலிய சகல பந்துவும் என்பது குறிக்கப்படுகின்றதைக் காட்டி இது பிதாபுத்ர சம்பந்தத்தை விளக்குமென்பர். பிதா என்பது மற்ற பந்துக்களுக்கும் உபலக்ஷணை. மேலும் இப்பாடல் குலசேகரரது “தருதுயரம் தடாயேல்” என்ற பாசுரத்தோடு ஒத்தது என்றும் கூறுவர். ‘அரிசினத்தால் ஈன்ற தாய் அகற்றிடினும் மற்றவள் தன் அருள் நினைந்தே அழும் குழவியது போன்றிருந்தேனே” என்ற பாசுரத்தாலும் இதே சம்பந்தம் கூறப்படுகிறதைக் காட்டுவர். இங்கு ‘தாய்’ என்பது பிதாவுக்கு உபலக்ஷணம்.



அதுபோல ‘திருந்து வேதமும்’ என்ற பாடலில் ‘கருந்தடங்கண்ணி கைதொழுத அந்நாள் தொடங்கி இந்நாளொறும் இருந்திருந்தரவிந்தலோசனன் என்றென்றே நைந்திரங்குமே’ என்ற அடிகள் அறிகின்ற ஆன்மா அறியப்படு பொருளான இறைவனைக் கண்டதும் அந்த ஞானம் பெற்று, அவ்வாறு பெற்ற பிள்ளை வேறொன்றும் அறியாதாய் அவனையே சதா நினைந்து பிதற்றியமையைக் காட்டும் என்பர். இப்பாடல் குலசேகரரது “செந்தழலேவந்து அழலைச் செய்திடினும் செங்கமலம் அந்தரம் சேர் வெங்கதிரோர்க் கல்லால் அலராவால்” என்ற பாசுரத் தோடொக்கும் என்றும் கூறுவர். திருந்து வேதமும் பாடலில் வரும் கருந்தடங்கண்ணி என்ற பதம் ஆன்மாவின் ஞானத்தைக் குறிக்கும் என்பர். நாயகி நாயக பாவத்தில் வரும் மொழிகளிலே ஸ்வாபதேசத்திலே கண் என்பது ஞானத்தைக் குறிக்கும் என்பர் பெரியோர். எனவே ‘கண்ணி’ என்பது அந்த ஞானம் பெற்றவளைக் காட்டுமென்று கூறுவர். கண்ணும் தாமரையும் ஒப்புப் பொருளாகையாலே குலசேகரருடைய செங்கமலம் ஞானத்தைக் குறிப்பதாகும். தாமரை வேறெதனாலும் மலர்ச்சி பெறாமல் சூர்யனொருவன் சன்னிதியிலே விகாசம் பெறுமா போலே ஆன்மா மலர்ச்சி பெறுவது இறைவன் சன்னிதியிலேயன்றி மற்றிடத்தில்லை, இவ்விரண்டு பாடலையும் ஒற்றுமை காட்டி செங்கமலம் அந்தரம் சேர் வெங்கதிரோன் சன்னிதியிலே மட்டும் மலர்ச்சி பெறுமா போலே இக்கருந்தடங்கண்ணி (ஆன்மா) உள்ள

விகாசம் பெற்றது அரவிந்தலோசனன் சன்னிதியிலே என்று காட்டுவர்.

### தென்திருப்பேரை

இப்பதிகத்துக்கு முந்தின ‘கங்குலும் பகலும்’ என்ற பதிகத்திலே பராங்குசநாயகி அரங்கநாதனை அவாவி அவன் நினைவேயாய் “இட்ட காலிட்டகையளாய்” தன் வசமிழந்து அவனை நினைந்து புலம்பிக் கிடந்தமை கண்ட தாய்மார் இவளுக்கு என்ன நேருமோ என்று அஞ்சிப் புலம்பியமை கூறப்பட்டது. பதிகத்தின் முடிவில் “அடியடையாதாள் போல் இவள் அணுகியடைந்தனள் முகில் வண்ணனடியே” என்று தாய்மார் கூறினார்கள். விஷயம் ஸ்ரீரங்கநாதனைப் பற்றியதாகப் பதிகம அமைந்ததெனினும் தாய்மார் ‘முகில் வண்ணா தகுவதோ என்னும்’ என்றும், “மணிவண்ணா என்னும்” என்றும், “கடல்வண்ணா கண்ணனே என்னும்” என்றும், “அஞ்சன வண்ணனே என்னும்” என்றும், “நிலமகள் கேள்வனே என்னும்” என்றும் அந்நாயகி வாய்வெருவியதாகக் கூறினார்கள். பத்தாம் பாசுரத்திலே “அடியடையாதாள்போல் இவள் அணுகியடைந்தனள் முகில் வண்ணன் அடியே” என்று முடித்தார்கள். தாய்மார் பாசுரங்களை அரைக்காதாகக் கேட்டாள் நாயகி. “காக்கை வாயிலும் கட்டுரை கொள்வர்” என்று பழமொழியன்றோ. எனவே தாயர் வார்த்தையில் அவளுக்குத் தேறியது ஒரு முடிவு. அவனுடைய கரிய திருமேனியின் ஈடுபாட்டிலேயே லயித்திருக்கிறது. அவள் மனம். அவன்தானே விரும்பித் தன் திருவெயிற்றினால் இடந்து தூக்கி அதியாதரத்தோடு அணைத்த பூமிப்பிராட்டியின் பேற்றிலே மனம் சென்றிருக்கிறது. அந்நினைவேயாய் அவள் தலை சாய்த்தது ‘முகில் வண்ணன்’, அடியிலே இவற்றை எல்லாம் ஒருவிதமாகச் சேர்த்து எண்ணினாள். பளிச்சென்று ஒரு உண்மை வெளியாயிற்று. உள்ளத்தில் ஒரு தெளிவு பிறந்தது. அந்தத் தெளிவிலே உள்ளத்தே ஒரு உறுதி ஏற்பட்டது. அந்த



உறுதியைப் பெற்றுவிடும் துணிவும் உண்டாகிவிட்டது. அந்தத் துணிவிலே பிறந்ததுதான் “வெள்ளைச் சுரிசுங்கொடாழியேந்தி” என்ற தென்திருப்பேரை எம்பெருமான் விஷயமான பதிகம்.

இப்பதிகத்துக்குள் இறங்குமுன் அன்பர்கள் இத்திருப்பதியைப் பற்றிவந்த தலவரலாற்றை நினைவுகூர்ந்து கொள்ள வேணும். எம்பெருமான் தன்போலக் கறுப்பிலக்கியான பூமிப்பிராட்டியின்பால் விசேஷ கடாக்ஷம்பண்ண, தன் கருமையழகில் செருக்குற்ற அவனிமாது, திருமகள் வேண்டுகோளின்பேரில் வந்த துருவாச முனியைக் கொஞ்சம் கவனியாதிருக்க அவர் சபிக்கவே அச் சாபத்தால் நிறமிழந்து பொன்னிறம் பெற்று பின் சாபவிமோசனமாக இத்திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் நிகரில் முகில்வண்ணன் சந்நிதியிலே பேரை என்னும் திருநாமம் பூண்டு தவங்கிடந்து மீண்டும் தன் நிறம் பெற்றாள் என்பது தலவரலாறு. தாய்மார் அவன் கரிய வண்ணத்தையும் நிலமகள் கேள்வனே என்று பூமிப்பிராட்டியை அவன் விரும்பிச் சென்றதையும், முகில்வண்ணன் அடியை அடைந்ததையும் சொன்னதைக் கூட்டி எண்ணுகிறாள் நாயகி. அருகேயுள்ள தலத்தின் காட்சி அவள் மனக்கண்ணே தோன்றுகிறது. அடடா என்ன தவம் இதோ கூப்பிடு தூரத்திலிருக்கிறது. இதை உணராதே இவ்வளவு இடர்ப்பட்டோமே என்று தன்னை நொந்து கொள்கிறாள். இனி என்ன யோசனை. தன் மாயை பசப்பூர்ந்து நிறம் பிறிதானது நீங்க மருத்துகைக்குள்ளாயிற்று. சென்று பெற வேண்டியது என்று துணிகிறாள். அத்துணிவு பிறந்ததும் அவளிடையே நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் அவள் தாய்மார் தோழிமார் அதன் காரணமாகப்பட்ட பாட்டினையும் கூறுவது தான் இப்பதிகம். இனி பதிகத்தை அணுகுவோம்.

## முதற்பாட்டு

**வெள்ளைச்சுரி சங்கொடாழியேந்தி**
**தாமரைக்கண்ணன் என்நெஞ்சினூடே**

**புள்ளிக்கடாகின்ற ஆற்றைக்காணீர்**
**என்சொல்லிச் சொல்லுகேன் அன்னைமீர்காள்**
**வெள்ளச்சுகமவன் வீற்றிருந்த**
**வேதவொலியும் விழாவொலியும்**
**பிள்ளைக்குழா விளையாட்டொலியும்**
**அறாத்திருப்பேரெ யிற்சேர்வன் நானே.**

வெண்மை நிறத்தையும், வலமாகச் சுழித்த சுரியையும் கொண்ட சங்கோடு சக்கரத்தையும் உயர ஏந்தி தாமரை போன்ற கண்களையுடையவன் தான் ஏறிய பறவையை என் நெஞ்சிடத்திலே செலுத்துகின்ற விதத்தை தாய்மார்களே நீங்கள் காண்கிறீர்களில்லை. அதை என்ன சொல்லி நீங்களறிய விளக்குவேன்! (இனி எனக்கு இங்கு செயலொன்றுமில்லை) கொள்ளை கொள்ளையாகச் சுகமுடையன் தன் வீறுதோன்ற விருப்பது, வேதகோஷங்களும், திருவிழா முழக்கும், சிறு குழந்தைகள் விளையாட்டொலியும் என்றும் நீங்காததுமான தென் திருப்பேரை என்னும் தலத்திலே நான் போய்ச் சேருவேன். இது நிச்சயம்.

தாய்மார் பேச்சில் தன் மனதுக்குகந்த வாசகங்கள் சிலவற்றைச் சேர்த்து தனக்குள்ளேயே சிந்தித்தாள். நிறக் கொடுப்பானாகிய நிகரில் முகில்வண்ணன் அருகிலேயே இருப்பது பளிச்சென்று நினைவுக்கு வருகிறது. அவனை அவள் மனம் தீவிரமாக நினைக்கவே அவள் நெஞ்சிடர் தீர்க்க அவன் தோன்றுகிறார். ஆனையின் நெஞ்சிடர் தீர்க்கத் தோன்றினாற் போலே, அங்கு தோன்றியபடியே 'தொழுங்காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே' என்று அவன் தோன்றிய விதத்திலே இதயம் பறிகொடுத்தவரல்லவா? எனவே இங்கும் அவன் புள்ளூர்ந்து தோன்றுகிறான்.

**வெள்ளைச் ...... ஏந்தி**

அவன் எட்ட வரும்போதே அவன் கைகளில் சுடரும்



சங்கமும் ஆழியும் அவள் கண்ணிலே படுகிறது. அதிலும் முதலிலே தோன்றுவது சங்கமாயிற்று. ஓரினமாகையாலே 'உன்னோடுடனே ஒரு கடலில் வாழ்வாரை' என்றது காண்க. வெண்மையும் சுரியும் உடைய சங்கு. பரிசுத்தமான அவன் உள்ளம்போல தூய வெண்மையான நிறமுடைய சங்கு. பகவானை தன் வலைக்குட்படுத்திச் சுழித்து வாங்கும் இவள் உள்ளம் போலே சுரிகளையுடைய சங்கு. அச்சங்கோடு எதிர் அணியாக விளங்கும் சுதர்சனம் இரண்டையும் உயர ஏந்தி, அவன் வருகையைத் தம் காந்தியாலே அறிவிக்கும் சங்கும் ஆழியும்.

**தாமரைக்கண்ணன்**

அப்போதலர்ந்த செந்தாமரை போன்று பரந்து விரிந்து குளிர்ந்து சிவந்த கண்களையுடையவன்.

**என் நெஞ்சினூடே**

'எங்கே வந்தான்' என்றா கேட்கிறீர்கள்? இதோ என் நெஞ்சிடத்திலே. ஆம் என் உடலினுள்ளே யிருக்கும் நெஞ்சு இருக்கிறதே. அதையே அரங்காகக் கொண்டு உள்ளே வந்தான்.

**புள்ளைக் கடாகின்ற ஆற்றைக் காணீர்**

'வந்து என்ன செய்கிறான்?' என்கிறீர்கள். ஐயோ! என்ன கேள்வி தெரியவில்லையா உங்களுக்கு? இதோ அவன் கருட வாகனத்தின்மேல் ஏறி என் நெஞ்சிலே சுற்றிச் சுற்றிச் சாரிகை திரிகின்றானே. உங்களுக்குத் தென்படவேவில்லையா? இப்படிப் பாருங்கள், கண்களைத் தெளிய வைத்துக் காணுங்கள்.

**என் சொல்லிச் சொல்லுகேன்**

தெரியவில்லையா? இன்னுமா? என்ன! எங்கேடீ. எங்கிருக்கிறான். என்ன செய்கிறான்? எப்படிச் சாரிகை வர முடியுமடீ நெஞ்சிலே என்றா கேட்கிறீர்கள். அட அப்பாவித் தாய்மார்களே அதை எப்படிச் சொல்வது. என்ன சொல்லி உங்களை நம்ப வைப்பது. அதற்கு வார்த்தை ஏது.

சொல்லியுணரும் காட்சியா அது. பிறர்சொற் கேட்டுப் பெறும் அனுபவமா அது. அடடா, ஆஹா....

**சேர்வேன் நானே**

சரி, இனி இங்கு தங்குவதில் பயனில்லை. அவன் வந்து தன்னைக் காட்டி என் நெஞ்சிலே வலமும் இடமுமாக சுழன்று அந்தப் பறவை என் நெஞ்சையழித்துவிட்டது. அவனிருக்குமிடம் தெரிந்து கொண்டேன். இனி அவனிருக்குமிடம் போய்ச் சேர வேண்டியது தான். போய் வருகிறேன் அம்மா!

**தென்திருப்பேரையில்**

எங்கேயடி போகப் போகிறாய். பைத்தியமா உனக்கு என்று கேட்கிறீர்கள். வெகு தூரமில்லை. இதோ பக்கத்திலிருக்கிற தென்திருப்பேரைக்குத்தான்.

**வேத ஒலியும்....... அறா**

எந்த ஊர் என்றா கேட்கிறீர்கள் மீண்டும். பக்கம்தான் என்றும் கேட்கிறதே வேதகோஷம்; ஆயிரத்தெண்மர் சாமகானம் பாடிக்கொண்டே யிருப்பார்களே தினமும் அவ்வூர்தான் என்றும் நித்யோத்ஸவமாகச் செல்கிறதே அவ்வூர்தான். குழந்தைகள் முதல் அவன் பேர் சொல்லி அவன் கோயிலமைத்து அவனுக்கு விழாக்கொண்டாடிக் குதூகலித்து மகிழும் ஒலி எப்போதும் விடாது கேட்குமே அவ்வூர். அந்த ஓசைகளும் கேட்கவில்லையா உங்களுக்கு? அதுதான் நம்மூருக் கருகேயுள்ள தென்திருப்பேரை.

**வெள்ளச் சுகமவன் வீற்றிருந்த**

அங்கு என்ன விசேஷம் என்றே தெரியாதா. அங்குதான் சுகமனைத்தும் ஒருங்கு திரண்ட வடிவோடு ஆனந்தமயன் இருக்கிறான். அவன் "சுகவெள்ளம் விசும்பிறந்து" பாய்கிறது. அவ்வானந்தத்தைப் பெருக்கிக் கொண்டு அங்கே



வீற்றிருக்கிறான். அவன் அவ்வாறு வீற்றிருக்கும் தென்திருப்பேரையில் போய்ச் சேருவது என்று தீர்மானித்து விட்டேன்.

**என் நெஞ்சினூடே புள்ளைக்**
**கடாகின்ற ஆற்றைக் காணீர்**

காதலிக்கு காதலன் நினைவேயானபோது அவன் வடிவம் அவள் நெஞ்சில் யானையின்மேல் பவனி வந்து விடுகிறான் காதலன். கண்ட கண் வழியாக உட்புகுந்து அவள் நெஞ்சிலே இடங்கொள்கிறான். காதலி கெட்டிக்காரி. கண்ணை இறுக மூடிக் கொள்கிறாள். தாய்மார் வந்து கண்டு என்னடீ கண்ணைப் பொத்தியிருக்கிறாய். கையை எடுத்துக் கண்ணைத் திற என்ன,

**தனையவிழும் பூங்கோதைத் தாயரே ஆவி**
**கனையினும் என்கண்திறந்து காட்டேன்-வளைகொடுபோம்**
**வன்கண்ணன் வாள்மாறன் மால்யானை தன்னோடும்போந்**
**தென்கண் புகுந்தான் இரா" (முத்தொள்ளாயிரம்)**

என வரும் பாடல் அக்காதலியின் மன நிலையை நமக்கு நன்கு காட்டும். இரவு முழுதும் கையை வைத்துக் கண்ணை மூடியிருந்திருக்கிறாள் அவள்.

கம்பன் காட்டும் காதலி இன்னும் துடிப்பானவள். அவள் கண்வழி நுழைந்து நெஞ்சில்புக்கான் காதலன். முத்தொள்ளாயிரக் காதலிபோன்ற அசடல்ல அவள். கனி கண்டவள் தோலுரிக்கக் காத்தா நிற்பாள். உடனே கண்ணைப்பொத்துகிறாள். தோழீ என்று கூப்பிடுகிறாள். தோழி வரலும், இதோ அவனை அடைத்துவிட்டேன். கண்ணைத்திறந்தால் வெளிவந்து ஓடிவிடுவான். என்னை மெல்ல என் படுக்கையில் அழைத்துச் சென்று விட்டுவிட்டுக் கதவை மூடிச்சென்றுவிடு என்று குறிப்பிலே என்ன ரஸமான பகுதிகள்!

காதலுள்ளத்திலே அறிவாராய்ச்சிக்கு இடமேது. அவர்கள் உணர்வுக்கு அவர்களே அதிகாரி. அவர்கள் உள்ளம் புரியவேண்டுமானால் அவ்வுளப்பான்மையை நாம் கற்பித்துக் கொண்டாலன்றி அவ்வுணர்வை ரஸிப்பது துர்லபமே. பராங்குச நாயகியின் தாய்மார்கள் பாடுதான்.

தென்திருப்பேரையில் ஸாமகானத்திலே ஈடுபட்டான் இறைவன். அதினிலும் மேலாக பக்தர்கள் உளம் மகிழ்ந்து பக்தியோடு எடுக்கும் திருவிழாக்களை ரஸித்தான். அவற்றுக்கெல்லாம் மேலாக குழந்தைகள் கள்ளம் கபடமற்ற தங்கள் பிஞ்சுள்ளங்களிலே இறைவனைப் போற்றித் தம் விளையாட்டுகளிலேயும் அவனுக்குக் கோயிலெடுப்பதும், விழா வயர்வதுமாகி எழுப்பும் ஆரவாரத்திலே தன் நெஞ்சைப் பறிகொடுத்தான் என்பது குறிப்பு.

எம்பெருமானார் வாழ்க்கையில் நிகழ்ந்த சம்பவம் அன்பர்கள் நினைவு கூர வேண்டும். இறைவனிடம் மனம் வைக்கக் கல்விவேண்டாம் வயது வேண்டாம். உடையவர் ஒரு தெருவழியே செல்ல அங்கு சிறுவர்கள் சிலர் மண்ணாலே கீறி இது மதில், இது கோபுர வாயில், இது அர்த்தமண்டபம், இது கர்ப்பக்கிரஹம் என்றெல்லாம் கூறிவந்ததை உடையவர் கண்டு ரஸித்துப் பக்கத்திலே நின்றார். கடைசியில் ஒரு சிறுவன் ஆஸ்தானத்திலே ஒரு செங்கல்லை ஸ்வாமீ இதுதான் பெரிய பெருமாள் என்று பிரதிஷ்டை பண்ணவும் உடையவர் சாஷ்டாங்கமாக விழுந்து சேவித்தார் என்று வரும் சரிதம் இங்கு நினைக்கத் தகும்.

அப்படிக் குழந்தைகள் முதல் அவன் குணம்பாடும் ஊர். அங்குபோய்ச் சேர்வேன் என்கிறாள் நாயகி.

முத்தொள்ளாயிரம், கம்பன், இவர்கள் காட்டிய காதலி போன்று அவன் நெஞ்சிலே புள்ளைக்கடாவி நிற்கும்போதே இவள் அவனை அங்கே சிறைசெய்ய அயர்ந்துவிட்டாள்.



எனவே அவன் இவளை நெஞ்சழித்து விட்டு "வேகப் பறவை"யை இன்னும் வேகமாக நடாத்தி வெளியே போய் விடுகிறான். நல்ல வேளையாக அவன் தன்னை இனம் காட்ட அவள் கண்டுகொண்டதால் என்னை நெஞ்சழித்த வீறுதோன்ற அவனிருக்கும் ஊருக்கு நான் போவேன் என்று தீர்மானிக்கிறாள். "இங்கே போதக் கண்டீரே" என்று அவன் போன திசை தெரியாதே வினவிச் செல்லவேண்டிய கஷ்டமின்றி இருப்பிடமாவது தெரிந்து கொண்டாள்.

## இரண்டாம் பாட்டு

**நானக்கருங்குழல் தோழிமீர்காள்!**
**அன்னையர்காள் அயல் சேரியீர்காள்**
**நானித்தனிநெஞ்சம் காக்கமாட்டேன்**
**என் வசமன்றிது இராப்பகல்போய்**
**தேன் மொய்த்த பூம்பொழில் தண்பனைசூழ்**
**தென்திருப் பேரெயில் வீற்றிருந்த**
**வானப்பிரான் மணிவண்ணன் கண்ணன்**
**செங்கனி வாயின் திறத்ததுவே.**

(நறுமணம் மிக்க கண்ணத்தின் கந்த முடைத்தாய் கரிய சுழன்ற கூந்தலையுடைய தோழிமார்களே! தாய்மார்களே! அயலார்களே! சுதந்தரம் பெற்றுத்திரியும் என்னுடைய நெஞ்சத்தை அடக்கி நிறுத்த முடியாதவளானேன். அது இப்போது என் வசமான தன்று. இரவுபகல் வாசியற என்னைவிட்டுப் போய்விடுகிறது. போய், வண்டுகள் மொய்க்கும் பொழில்சூழ்ந்த தென் திருப்பேரையிலே தன்வீறு தோன்ற இருக்கும் இமையோர் தலைவன், நீலமணிவண்ணன், கண்ணனுடைய சிவந்த கொவ்வைக் கனி போன்ற அதரங்களின் அழகிலே ஈடுபட்டு நிற்பதாயிற்று.)

நான் தென்திருப்பேரையில் போய்ச் சேர்வேன் என்று இவள் சொல்லலுமே தாய்மார்கள் மனம் பதறுகிறார்கள்

இதுவரை நம் சிறகின் கீழிருந்தாள். இப்போது அதில் அடங்காள் போன்றிருக்கின்றதே அவளுக்கு அந்தரங்கமான தோழியர் சொன்னாலாவது கேட்பாளா பார்ப்போம் என்று தோழியரை அழைக்கிறார்கள். இச்செய்தி பரவி அயலார்களும் வந்து சேருகிறார்கள். எல்லோருமாகச் சேர்ந்து நாயகிக்கு இதவசனம் கூறி, ஒரு பெண்ணுக்கு இருக்க வேண்டிய குணங்களை எல்லாம் எடுத்துரைத்து இப்படி நெஞ்சை அடக்கமின்றி, அலைய விடுவது பெண் குணத்துக் கொவ்வாது இதென்ன மயக்கம். மனத்தைக் கட்டுப்படுத்தவேண்டும். அதற்கான வழிகளைப்பார் என்று உபதேசிக்க அவர்கள் அனைவரையும் நோக்கிக் கூறுகிறாள் நாயகி.

**நானக் கருங்குழல் தோழிமீர்காள்**

நான் ஒன்றும் மயக்கத்தில் இல்லை. அறிவுத் தெளிவோடு தான் இருக்கிறேன். தோழிகளே! ஆஹா உங்கள் கரிய சுருண்ட கூந்தலின் நறுமணம் மூக்கைத் துளைக்கின்றது. சுண்ணம்தான் என்ன மணம் பார்த்தீர்களா என் இந்திரியங்கள் நன்கு செயல்படவே செய்கின்றன. மயங்கி உணர்விழந்து சொல்லவில்லை என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் குழலும் அதன் மணமும் அவனுடைய "மைவண்ண நறுங்குஞ்சி"யை யல்லவா நினைவூட்டுகிறது!

**அன்னையர்காள்**

அருமைத் தாய்மார்களே. நீங்கள் தான் என்னைச் சீரும்சிறப்புமாக வளர்த்தீர்கள் அது தெரியாமல் பேசவில்லை.

**அயல் சேரியீர்காள்**

அயலார்களே! அயல் சேரியீர்களே, ஓகோ. இது இத்தெரு மட்டுமல்ல பக்கத்துத் தெருவுக்குமா பரவி விட்டது! வாருங்கள் நீங்களும் கேளுங்கள்.

நல்ல புத்தித் தெளிவோடுத்தான் பேசுகிறேன். நீங்கள்



சொன்னவற்றையெல்லாம் வாங்கி, உணர்ந்துதான் பேசுகிறேன். எனக்கு எவ்வித மயக்கமும் இல்லை.

**நான் இத்தனிநெஞ்சம்**
**காக்கமாட்டேன் என் வசமன்றிது**

என் நெஞ்சானால், எனக்கு பவ்யமான நெஞ்சானாலல்லவா, நான் அதை அடக்க அது இப்போது என் காவலைவிட்டு மீறிச் சுதந்திரம் கொண்டாடத் தலைப்பட்டு விட்டது. ஆகவே அதைக் கட்டுப்படுத்தும் சக்தி எனக்கில்லை இப்போது. முடியும் காரியத்தையல்லவா செய்யலாம். நான் எப்படி உங்களை மீறி விட்ட நிலையிலிருக்கிறேனோ அதேபோல் என்னை மீறிவிட்டது என் நெஞ்சம். பின் உன் நெஞ்சு எங்கே போயிற்று என்றா கேட்கிறீர்கள்.

**தேன்மொய்த்த........... வீற்றிருந்த:-** அவன் சுகம் எப்படி வெள்ளமிடுகின்றதோ அது போல மது வெள்ளமிடுகின்ற பொழிலிலுள்ள பூக்கள் அதனால் வண்டுகள் எப்போதும் மொய்த்துக் கொண்டே இருக்கின்றன. அத்தகைய பொழில் சூழ்ந்த தென்திருப்பேரையில் வீற்றிருக்கிறானே; என் நெஞ்சைப் புள்ளைக்கடாவி அழிமதி செய்த வீறுதோன்ற அமர்ந்திருக்கிறானே.

**வானப்பிரான்:-** ஏன் அழித்தாய் என்று ஒருவர் கேட்க முடியாத நாயகன் ஞானத்துக்கு மட்டுமல்ல விசும்போர்க்கும் பிரான். யார் அவனைக் கேட்பது.

**மணிவண்ணன்:-** அவன் அழித்தலால் துன்பமா? இல்லை. அவனால் மனம் அழிக்கப் பெற்றோமே என்று மகிழும்படியான நீலமணி போன்ற அழகிய நிறத்தையுடையவன்.

**கண்ணன்:-** நீர்மையிலே இணையற்றவன். பார்த்தவர் கண்களிலே என்றும் நின்று காட்சியளிப்பவன்.

**வீதிவாய்ச் செல்கின்றான்போல்**
**விழித்திமை யாமல்நின்ற**
**மாதரார் கண்களூடே**
**வாவமான் தேரில்செல்வான்**
**யாதினும் உயர்ந்தோன்தானே**
**யாவர்க்கும் கண்ணன்என்றே**
**ஓதிய பெயர்க்குத்தானே**
**உறுபொருள் உணர்த்திவிட்டான்"**

**(கம்ப. பால -உலாவி-6 -5 -6)**

என்று மிதிலையிலே பவனிவந்த இராமனைக் கம்பர் வருணித்தார் என்று நெஞ்சிலே புள்ளைக்கடாவி என் கண்ணில் நின்று நிலைத்திருப்பவன் என்கிறாள் நாயகி.

**செங்கனிவாயின் திறந்தது:-** அப்படிப் போன நெஞ்சு அவனது அதரங்களையே நோக்கி நின்று கொண்டிருக்கிறது. கொவ்வைக்கனி போன்று சிவந்த அவன் அதர அழகிலே ஈடுபட்டது. அவ்வதரத்தை அனுபவிக்கப் பாரித்து நின்றது.

முதலில் அவன் வரும்போது என் கண்ணில்பட்டது அவன் சங்கு. அது அவனை அனுபவிப்பது அவன் கொவ்வைக்கனி வாய் மூலமாக என் நெஞ்சும் அதுபோல் அவன் திருமுன்பே சென்று அவ்வதர அழகிலே ஈடுபட்டு நிற்கிறது. அக்கோலச்சுரி சங்கை அம்மாயன் செவ்வாயின் குணம் வினவி நிற்கின்றதோ என்னவோ?

## மூன்றாம் பாட்டு

**செங்கனி வாயின் திறத்ததாயும்**
**செஞ்சுடர் நீள்முடி தாழ்ந்ததாயும்**
**சங்கொடி சக்கரம் கண்டுகந்தும்**
**தாமரைக் கண்களுக்கற்றுத் தீர்ந்தும்**
**திங்களும் நாளும் விழா வறாத**
**தென்திருப்பேரையில் வீற்றிருந்த**
**நங்கள் பிரானுக்கென் நெஞ்சம்**



**தோழீ நாணும் நிறையும் இழந்ததுவே.**

தோழீ! சிவந்த கனிபோன்ற அவன் அதர சோபையின் வசப்பட்டதாயும் செம் பொற்சுடர் சோதி வீசி உயர்ந்த அவன் திருவபிஷேகத்தைக் கண்டு அதற்கு தலைதாழ்த்தியதாயும் அவன் சங்கு சக்கரங்களைக் கண்டு மகிழ்ந்தும், அவன் தாமரைக் கண்களின் அழகிலே அனைத்தையும் இழந்து வெறிதாயும், போன என் நெஞ்சு நாடோறும் திருவிழா நீங்காத தென்திருப்பேரையில் தன் மேன்மை தோன்ற இருந்த நம் தலைவன் விஷயமாக நாணத்தையும் அடக்கத்தையும் இழந்து விட்டது காண்.

தோழியும் தாய்மாரும் அயலாருமாய் வந்து தேற்றித் தெளிவித்து இவளை இவள் சங்கலபத்தினின்றும் விலக்க முயன்று பார்த்து அவள் தன் வசமில்லாது பேசுவதைக் கண்டு தோழி தான் அவளுக்கு எப்போது உசாத் துணையாதலால் அவளை மட்டும் விட்டு நாயகியை நலவுசொல்லித் திருத்த நியமித்து விலக, தோழியும் "என்னடீ இது. பெண் என்றால் அடக்கம் வேண்டாமா? மகளிர்க்கு நிறைகாக்கும் காப்பே தலையாயதன்றோ. இவ்வாறிருப்பது நம் குடிக்கு ஒக்குமா? நெஞ்சை அடக்க வேண்டாமா. இது வெட்கமாயில்லையா?" என்று இடித்தும் பரிந்தும் கூற தனியே தன் அருகுள்ள தோழியை நோக்கி நாயகி கூறுகிற பாசுரம் இது.

***செங்கனிவாயின் திறத்ததாயும்:-*** சிவந்த கனி போன்ற அவளுடைய அதரங்கள் அவன் ஏதோ சொல்ல வாயெடுத்து சொல்ல மாட்டமையால் தழுதழுக்க அப்போது நெளிந்த நெளிவிலே ஈடுபட்டு, "பிரிந்து கடக்க இருக்கிலென்; உன் கண் வட்டத்திலே கிடக்கிலென், இது உன் சரக்கன்றோ? என்று சொல்ல உபக்ரமித்துத் தழுதழுத்து வருகிற திருவதரத்திலே அகப்பட்டபடி" என்பது ஈடு.

***செஞ்சுடர் நீள்முடி தாழ்ந்தததாயும்:-*** கண்ணைக் குத்தும் வெறிக்கும் சுடரின்றிரே பார்த்த கண்கள் குளிரும்படியான செம்பொற்காந்தி வீசுகின்ற திருமுடி. அவன்

மேன்மையின் உயர்வைக் குறித்து நிற்கும் நீண்ட திருவபிஷேகம். அதைக் கண்டவாறே அவன் பெருமையுணர்கிறது நெஞ்சு. அவன் பெருமை உணரவே தன் தாழ்வும் சிறுமையும்தானே தெரிகிறது. தெரியவே தன் இயல்புக்கேற்பத் தாழ்கிறது.

**சங்கோடு... உகந்தும்:-** அவன் கைகளுக்கணியாக விளங்கும் பாஞ்சஜன்யத்தையும் சுதர்சனத்தையும் மாறி மாறிப் பார்த்து அவ்வழகை அனுபவித்தும்.

**தாமரைக் கண்களுக்கு அற்றுத் தீர்ந்தும்:-** மலர்ந்த செந்தாமரை போன்று பரந்து விரிந்து கருணையொழுகும் திருக் கண்ணழகிலே தனக்குள்ளவற்றையெல்லாம் இழந்து அவனுக்கே உரியதாய்- "கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்ட அப்பெரியவாய் கண்கள் என்னைப் பேதமை செய்தனவே" என்றார் அவளுடைய கண்ணழகில் துவக்குண்ட மற்றொவர்.

**திங்களும்........... வீற்றிருந்த:-** நாள் தவறாமல் மாதம் தவறாமல் திருவிழாக்கோலாகலமாய்த் திகழும் தென்திருப்பேரையில் எழுந்தருளியிருக்கிற அங்கே தன் மேன்மை தோற்ற வீற்றிருக்கும்.

**நங்கள்பிரானுக்கு:-** நம்மை ஆட்கொண்டு உபகரிக்கவே இப்படி எழுந்தருளியிருக்கும் தலைவனுக்கு. நம் போன்ற பாவ ஜென்மங்கள் கடைத்தேற வந்து முகங் கொடுத்துக் கொண்டிருக்கிற நாயகனுக்கு. "பரத்வம் நித்ய முக்தர்க்கு: வ்யூஹம் முக்த ப்ராயர்க்கு; விபவம் புண்ணியம் பண்ணினார்க்கு; அர்ச்சையாகிற இவ்விருப்பு பாபம் பண்ணின சம்சாரிகளுக்கு" என்பது ஈடு.

**என் நெஞ்சம்:-** என்னுடைய நெஞ்சு எனக்கே பவ்யமாயிருந்த நெஞ்சு. ஆனால் இப்போது சுதந்திரம் கொண்டாடும் என் நெஞ்சு.

**நாணும் நிறையும் இழந்ததுவே:-** நாணத்தையும் அடக்கத்தையும் இழந்தே விட்டது.

**பெண்வழி நலனொடும்**



**பிறந்த நாணொடும்**
**எண்வழி உணர்வும்**
**நான் எங்கும் காண்கிலேன்"**

*(கம்ப-பால -மிதிலைக்காட்சி- 55)*

என்கிறாள் முதலில் மிதிலையில் இராமனைக் கண்ட சீதை.

நாணும் நிறையும் மட்டுமா இழந்தது. "அது இழவாதது உண்டோ" என்பது ஈடு எல்லாவற்றையும் பறிகொடுத்துவறிதாயிற்று நெஞ்சம். தேவர்களுடைய எல்லாவற்றையும் கொடுத்து வெறிதான கடல் போல.

**"தழங்கிய கலைகளும் நிறையும் சங்கமும்**
**மழுங்கிய உள்ளமும் அறிவும் மாமையும்**
**இழந்தவள் இமையவர் கடைய யாவையும்**
**வழங்கிய கடல்என வறியன் ஆயினாள்"**

*(கம்ப-பால -மிதிலைக்காட்சி- 44)*

என்பது கம்பர் வாக்கு.

அவனைக் கண்டதன் பயன் ஒவ்வொருவர் தம்தம் உடைமைகளில் ஒன்றோ பலவோ இழந்தார்கள். "நான் தன்னை (சுய உணர்வை) இழந்தேன்; தாய்மார் தோழிமார் என்னை இழந்தார்கள்; நெஞ்சு நாணும் நிறையும் இழந்தது" என்பது ஈட்டு பங்க்தி.

## நான்காம் பாட்டு

**இழந்த எம்மாமைத் திறத்துப்போன**
**என் நெஞ்சினாரும் அங்கே ஒழிந்தார்**
**உழந்து இனியாரைக் கொண்டு உசாகோ**
**ஓதக்கட லொலிபோல எங்கும்**
**எழுந்த நல்லோதத் தொலிநின்று ஓங்கு**
**தென்திருப் பேரையில் வீற்றிருந்த**
**முழங்கு சங்கக்கையன் மாயத்து ஆழ்ந்தேன்**

**அன்னையர்காள் என்னைஎன் முனிந்தே.**

இழந்துபோன என் மாமை நிறத்தின் பொருட்டுப் போன என் நெஞ்சும் அங்கேயே தங்கிவிட்டது. இனிமேல் கஷ்டப்பட்டு யாரை உசாத்துணையாகக் கொண்டு என்ன பேசிப்பொழுது போக்கவல்லேன். எல்லாப் புறங்களிலும் வேதகோஷம் கடல் போல நிலையாய் நின்று ஓங்கி ஒலிக்கின்ற தென் திருப்பேரையில் தன் வீறுதோன்ற இருந்து முழங்கும் சங்கயையுடைய கையனது ஆச்சர்ய சேஷ்டிதங்களிலே நானும் அழுந்திப் போனேன். தாய்மார்களே என்னை நீங்கள் கோபிப்பதில் பயனென்ன?

**இழந்த........ போன!**

முன்பே என் நிறம் என்னைவிட்டுப் போய் விட்டது. அது போனபின் தான் நாணும் நிறையும் போயின. மாமை போனது முதலிலே தெரியாமல் நாணும் நிறையும் இழந்த பின்தான் தன் இழவை யுணர்ந்தது நெஞ்சு. அவனை நிறம்கொள்ள விருந்தது போக என் நிறமாயிற்று இழந்தது. அப்படி இழந்து போன மாமையை மீண்டும் பெற வேண்டிச் சென்றது நெஞ்சு.

**என் நெஞ்சினாரும் அங்கே ஒழிந்தார்.**

போன நெஞ்சு 'இதோபோய் மாமையை மீண்டும் பெற்று வருகிறேன்' என்று மார்தட்டி வீரவாதத்தோடு தான் போயிற்று. அப்படிப்போன அம்மகாவீரர் என் நெஞ்சினார் இருக்கிறாரே, அங்கே போய் என்ன செய்தார். மாமை பெற்ற பாடில்லை. பெறமுடியவில்லை என்றா வந்தாரா. வரவும் திராணியில்லை. அங்கேயே அவன் ஸந்நிதியிலேயே தங்கிவிட்டார். போன காரியம் மறந்து போய் தன் ஸ்வதந்த்ரமும் இழந்து, தன்னையும் என்னையும் மறந்து ஒழிந்துவிட்டது. என் நெஞ்சு தான். எனக்கு பவ்யமாயிருந்த நெஞ்சுதான். திடசித்தத்தோடு போன நெஞ்சுதான் எனினும் அங்கே தங்கித் தொலைந்தது என்று சிறிது வெறுப்பும், கலக்கமும் தோன்றக் கூறுகிறாள் நாயகி.



**மடநெஞ்ச மென்றும் தமதென்றும்**
**ஓர்கருமம்கருதி**
**விடநெஞ்சை யுற்றால் விடவோ**
**அமையும் அப்பொன்பெயரோன்**
**தடநெஞ்சம் கீண்டபிரானார் தமதடிக்**
**கீழ்விடப் போய்த்**
**திடநெஞ்சமாஓ எம்மை நீத்து**
**இன்றுகாறும் திரிகின்றதே**

***(திருவிருத்தம் 46)***

என்று முன் நெஞ்சைத்தானே அவன்பால் அனுப்பி அது மீண்டு வராமல் அலைந்துதிரிந்ததைக் கூறின ஆழ்வார்தான் இப்போதும் கூறுகிறார் முன் அதுபோய்ச் செய்த செயல் தெரியும். அதனால் நான் அதை அனுப்பவில்லை. அதுதானே வீரவாதம் செய்து போயிற்று என்பது "போன" என்றதன் குறிப்பு.

அப்படிப் போயிற்றே காரியம் கைகூட வில்லையானால் திரும்பி வந்துவிடக்கூடாதா. அங்கே கண்டவற்றில் மயங்கித் தன்னையும் என்னையும் மறந்து செயலற்று அங்கே கிடக்கிறது. என்ன மயக்கம் அவன் அழகிலேதான் ஈடுபட்டு அவனோடு முயங்க எண்ணி அவன் ஸந்நிதியையே சுற்றுகிறது.

"மடநெஞ்சமென்னும் பாடலையும்" "இழந்த வென்மாமை" என்ற இப்பாடலையும் உட்கொண்டு தானே வைஷ்ணவ சிகாமணியான பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.

**நீரிருக்க மடமங்கைமீர் கிளிகள்**
**தாமிருக்க மதுகரமெலாம்**
**நிறைந்திருக்க மடவன்னம் முன்னம்**

**நிரையாயிருக்க உரையாமல் நான்**
**ஆர்இருக்கிலும் என் நெஞ்ச மல்லதொரு**
**வஞ்சமற்ற துணை இல்லை என்று**
**ஆதரத்தினோடு தூதுவிட்ட குறை**
**யாரிடத்து உரைசெய்து ஆறுவேன்**
**சீரிருக்கும் மறைமுடிவு தேடரிய**
**திருவரங்கரை வணங்கியே**
**திருத்து ழாய்தரில் விரும்பியோ கொடு**
**திரும்பியே வருதலின்றியே**
**வார்இருக்கும் முலைமரல் மடந்தைஉறை**
**மார்பிலே பெரியதோளிலே**
**மயங்கி இன்புறமுயங்கி என்னையும்**
**மறந்துதன்னையும் மறந்ததே.**
**(திருவரங்கக் கலம்பகம் 24)**

*என்று பாடினார்.*

**உழந்து......... உசாகோ!**

*என இரகசியமான குறைகளை எல்லாம் இதுவரை என் நெஞ்சுடன் கூறி ஆறியிருந்தேன். இனி என்னுடன் எப்போதும் உறைந்து என் கவலையுணர்ந்து என் குறை மொழிக்குச் சோம்பாமல் செவிசாய்த்து என்னுடன் சம்பாஷிக்கும் ஒரு துணையை கஷ்டப்பட்டாலும் வேறு எங்கே தேடிப் பெறுவேன். முன் மாமை இழந்தேன் பின் நாண் இழந்தேன், நிறையிழந்தேன். இப்போதோ அவ்விழவையெல்லாம் சொல்லியாறுவதற்கு வசமாயிருந்த நெஞ்சையும் இழந்துவிட்டேன். இனி என் கவலையை என்னுள்ளே அடக்கி அதிலே மாயவேண்டியவளாய் விட்டேன்.*

**ஓதக்கடலொலி........ ஓங்கும்**

*வேதகோஷமானது ஒருகால் இருந்தது. சிலபோதில்லை என்னாதே நித்யமாய் நிரந்தரமாய் நிலைத்து ஒலிக்கின்ற கடலில் அலைபோல என்றும் சப்திக்கின்ற கடலில் அலை ஓய்ந்தாலும் தன் ஒலி ஓயாத.*



**தென்திருப்பேரையில் வீற்றிருந்த**

*தென் திருப்பேரையிலே தன்னை உடைய கொள்ள எண்ணிய என் மாமையும், நாணும் நிறையும் முன் பறித்து இப்போது என் நெஞ்சையும் தன்காலிலே கட்டி அடிக்கின்ற வீறு தோன்ற இருக்கின்ற,*

**முழங்கு சங்கக்கையன்**

*அப்படி என்னைத்தான் கொண்ட வெற்றியை மறைவாக வையாதே என் விபூதியெங்கும் பறைசாற்றும் சங்கத்தையுடையவன்.*

**மாயத்து ஆழ்ந்தேன்**

*இப்படி என் உடைமையை எல்லாம் சிறுகச் சிறுகப் பறித்து விளையாடும் சேஷ்டி தங்களை உடையவனது விளையாட்டிலே என்னை நான் பறிகொடுத்தேன். அவனது அழகு வெள்ளத்திலே நான் முழுகிவிட்டேன்.*

**அன்னையர்காள்..... முனிந்தே**

*இது இயல்பிலே நடந்தவை. நான் திட்டமிட்டுச் செய்தவையல்லவே என்னால் இப்படி நடவாது தடுக்கக்கூடியதா. என்னையும் மீறி நடந்த இவற்றுக்கு தாய்மார்களே! நீங்கள் வீணே என்னைக் கோபிப்பதால் ஏதேனும் பயனுண்டா யோசனை செய்யுங்கள்.*

*இங்கே ஈட்டிலே ரஸமான பகுதி ஒன்று காணக்கிடைக்கிறது. நாயகியிடம் மார்தட்டிப்போன நெஞ்சு படையற்று அவரழகிலே ஈடுபட்டது என்று கூறி இராமாயணத்திலே சுகசாரணர் வானரப்படை வலியை ஒற்ற வந்த வரலாற்றை உதாரணம் காட்டினார் நம்பிள்ளை. வந்த ஒற்றர் மீண்டு போய் இராவணனிடம் செய்தி சொல்லும் போது "ராஜா ஹ்யோஷ விபீஷண." என்று கூறியதாக வான்மீகர் கூறியதைக் காட்டுவர். கம்பனும்,*

**தார் உலாமணி மார்ப உன்தம்பியே**

**தேர் உலாவுகதிர்கள் இரண்டும்தான்**
**பேர் உலாவளவும் எய்தப் பெற்றனன்**
**நீர்உலாவும் இலங்கை நெடுந்திரு**

***(கம்ப -ஒற்றுக்கேள்வி -61)***

விபீஷண ராஜா என்றும், இலங்கை ராஜ்யம் விபீஷணன் பெற்றாய் விட்டது என்றும் அவ்வொற்றர் இராவணனிடம் கூறினார்களாம். அப்படி இராவணன் சோற்றையுண்டும் அவர்கள் விபீஷணனை இராஜா என்பானென் என்னில், "எழுத்து உருவறியாதே கிடந்தாலும் புள்ளி குத்தினால் அத்தைக் கழித்து மேலே போமாபோலே முடிகொடுக்குமவர் கையாலே கொடுக்கையாலே, என்றாலும் இராவணன் க்ரௌர்யத்தை அறிந்து வைத்தும் கூசாதே இங்ஙன் சொல்லுவான் என் என்னில் "சித்ரம் குத்துமோ என்றிருந்தார்கள்" என்பது ஈடு. ஏடுகள் எழுதும்போது ஒரு எழுத்தை விடவேண்டுமென்றால் அதை அடித்து எழுதமாட்டார்கள். அதன் கீழே ஒரு புள்ளியைக் குத்துவார்கள். ஏடு படிப்போர் வார்த்தையைப் படிக்கும் போது புள்ளியைக் கண்டு அந்த எழுத்து அடிபடாமல் ஏட்டிலிருந்தாலும் அதைவிட்டுப் படிப்பார்கள். அதுபோல இராமன் விபீஷணனுக்கு இராஜ்யதானம் பண்ணினபோதே இராவணனுக்குப் புள்ளி குத்தப்பட்டது. எனவே உயிரோடு இராவணன் இருந்தாலும் அவன் விட்டெண்ணப்பட வேண்டிய எழுத்துப் போலே இருந்தவர் கோஷ்டியில் எண்ணப்பட வேண்டியவனாய் விட்டான். இனி அவன் கேவலம் ஒரு பொம்மை. பொம்மை கத்துமா என்று எண்ணி அவனிடம் பயமின்றி ஒற்றர் விபீஷணனை இராஜா என்றார்களாம். கம்பனும் இக்கருத்தைக் கொண்டே விபீஷணன் இலங்காராஜ்யம் அடைந்தாய் விட்டது என்று ஒற்றர் வாக்கிலே இறந்தகால வினையையிட்டுக் கூறினான்.

## ஐந்தாம் பாட்டு

**"முனிந்து சகடமுதைத்து மாயப்பேய்**



**முலையுண்டு மருதிடைபோய்க்**
**கனிந்த விளவிற்குக் கன்றெறிந்த கண்ணபிரா**
**னுக்கென் பெண்மை தோற்றேன்**
**முனிந்தினி என்செய்திர் அன்னைமீர்காள்**
**முன்னி அவன்வந்து வீற்றிருந்த**
**கனிந்த பொழில் திருப்பேரையிற்கே காலம்**
**பெற என்னைக் காட்டுமினே."**

கோபித்துச் சகடத்தை உதைத்து மாயத்தால் தாய் வடிவு கொண்டு வந்த பூதனை என்னும் பேயின் முலைப்பாலுண்டு, மருதமரங்களிடைய தவழ்ந்துபோய் பழுத்த விளங்கனியாய் நின்ற அசுரனைக் குறித்து கன்றாய் வந்த அசுரனை ஏறிந்த கிருஷ்ணனாகிய தலைவனுக்கு என் பெண் தன்மையை இழந்தேன். தாய்மார்களே என்னைக் கோபித்து என்ன காரியம் செய்தீர்கள்? அவன் முற்பட வந்து எழுந்தருளியிருக்கிற கனிகள் நிறைந்த பொழிலை உடைத்தான தென் திருப்பேரைக்குக் காலம் தாழ்த்தாமல் கொண்டுபோய்க் காட்டுங்கள்.

### முனிந்து சகடம் உதைத்து

தாய்ப்பால் கிடைக்கக் காலம் தாழ்த்தது பொறாமல் கோபித்து அக்கோபத்திலே சிசுவாயிருந்த இப்பிறப்பிற்கேற்பக் கால்களை மடக்கி நீட்டுகையில் பட்ட சகடம் துகளாக நொறுங்க அதிலே கம்ஸனேவலாலே வந்து ஆசேவித்திருந்த அசுரன் மடிய, அசுரன் வந்திருக்கிறான் என்று முனியவில்லை. தற்செயலாக நிமிர்த்த அடிபட்டுப் பொடிந்தான் அசுரன்.

### மாயப்பேய் முலையுண்டு

தாய்ப்பாலுக்குக் கரையும் மகவைத் தாய்வடிவிலே வந்து நச்சுப்பால் கொடுத்து மாய்க்க மாயத்தால் யசோதையாகவே வந்த பேய் பூதனை. அம்மாயக்காரியையும் மாயத்தால் பாலுண்ணும் பாவனையிலே அவன் முலைக்காம்பில் வாய்வைத்துப் பாலோடு உயிரையும் பற்றி உண்டவன்.

### மருதிடைபோய்

தாய் வெண்ணெய் திருடினான் என்று உரலோடு அவள்

தன்னைக் கட்டும்படி தன்னைத் தாழவிட்டு அவன் போனவாறே உரலையும் சேர்த்து இழுத்துத் தவழ்ந்து புணரேய் நின்ற மருதிடையேதான் நுழைந்து நுழையாத உரலையிழுக்கும் பாவனையில் அம்மரங்களிரண்டையும் சாய்த்து அம்மரங்களாய் நின்ற யமளார்ச்சுனர்களை பொடிபடுத்தி.

## கனிந்த விளவிற்றுக் கன்றெறிந்த

பழுத்த விளாமரமாய் நின்றான் ஒரு அசுரன். கண்ணனால் மேய்ப்புறும் கன்றுகளோடு ஒரு கன்றாய் நின்றான் மற்றவன். கன்றைக் காலை வாரிப்பற்றி விளாவின்மேல் எறிந்து இருவரையும் முடித்தவன். மாயம்வல்ல இருவரும் என்ன செய்கிறான் என்று எண்ணுமுன்னே காரியத்தை முடித்தவன்.

## கண்ணபிரானுக்கு

இப்படி தன் பக்கல் வன்மமுடையார்க்கு வன்மஞ்செய்து ஆச்ரிதர் பக்கலிலே தன்னை அழியமாற்றித் தன் எளிமை அனைத்தையும் அள்ளிச் சொரிந்த கிருஷ்ணனுக்கு, அவ்வசுரர்க்குத் தான் தப்பித் தன்னை ஆச்ரிதர்க்கு எழுதிக்கொடுத்தவனுக்கு அப்படி எழுதிக் கொடுத்ததனாலேயே தலைவனானவனை. “சேஷியான தன்னை உண்டாக்கி சேஷத்வத்தினுடைய எல்லையிலே என்னை நிறுத்தினவனை” என்று ஈடு கீதையில் ‘எல்லையில்லா அவதாரங்கள் நான் எடுத்தேன்’ என்றானே அவ்வவதாரங்களனைத்தையும் ஒரு தட்டி விட்டாலும் பின்னும் அத்தட்டு மேலேயே உயரும்படி யாய்த்து பாய்ந்து கிருஷ்ணாவதாரம் என்பர். இவ்வவதாரத்தில் மேல்கண்டபடி அவன் முனிந்த முடிவுகளெல்லாம் பத்தர் பக்கல் அவனுக்குள்ள பரிவைக் காட்டும் முனிவுகள் என்பர் நம்பிள்ளை. “ஜாநாதி புருஷோத்தமம்” என்று அவனே சொன்னபடி தன் ஆணழகனைத்தையும் காட்டியன்றோ



எல்லோருடைய உள்ளங்களையும் ஈர்த்தது.

## என்பெண்மை தோற்றேன்

அந்த ஆணழகனுக்கு என் பெண்மை தோற்றது. இதில் வியப்பில்லையே என்கிறாள், தோற்காதிருந்தால் வியப்பு. ஒன்று இவளுக்குப் பெண் தன்மையில்லை அன்றி அவனுக்கு ஆண்மை நிறைவில்லை என்று ஏற்படும். அவன் “புருஷோத்தமன்” என்றால், இவள் ‘நாரிணாமுத்தமை’ என்றால் பின்னர் பெண்தோற்கை இயற்கைதானே.

**“கூசமுன்றுலகும் காக்கும்**
**கொற்றத்தென் வீரக்கோட்டி**
**பேசுவா ரொருவர்க் காவிதோற்கிலன்**
**பெண்பால் வைத்த**
**ஆசைநோய் கொன்ற தென்றால்**
**ஆண்மைதான் மாசுணாதோ”**

என்றான் இராவணன் பிராட்டியிடம். ஆனால் “ஆயிரநாமத்தாழி அரியினாக்கேவல் செய்வேன் நாயினை விரும்புவேனோ நாண் துறந்தாவிநச்சி” என்று சீறினாள். அவள் புருஷோத்தமன் முன் “நாயெனத் தகுவமன்றே காமனும் நாமுமெல்லாம்” என்று இராவணனே ஒப்புக் கொள்கிறான். எனவே புருஷோத்தமனிடம் தோற்ற பெண்மை முன்னே உண்மையில்லா ஆண்மை மாய்கிறது.

## முனிந்தினி என்செய்திர் அன்னைமீர்காள்

இனி என்னை மீட்டுவிடலாமென்ற எண்ணமா? ஈடேறுமா. என்ன காரியம் செய்யத் துணிந்தீர்கள் தாய்மார்களே. தாய்மார் என்றால் என் இதத்தையல்லவா நாடிச் செயல்பட வேண்டும். செயத்தக்க செய்து நிற்கும் என்னை முனிகிறீர்கள். செயத்தகாததைச் செய்கிறீர்கள். இது உங்கள்

*தாய்மைக்கு அடுக்குமா?*

**காலம்பெற என்னைக் காட்டுமின்**

நலங்கள் செய்வது தகாதது என்றால் பின் உன் இதம் நாடி நாங்கள் செய்யவேண்டுவதென்ன வென்கிறாய் என்று வினவுகிறார்கள் தாயார். காலம் தாழ்த்தாமல் என்னைக் கொண்டு போய்க் காட்டுங்கள். இதுவரை அது இது என்று செய்து காலத்தை விரயம் செய்து விட்டீர்கள் இனியேனும் காலவிளம்பம் வேண்டாம். எங்குக் கொண்டுபோக என்று தாய்மார் கேட்க,

**கனிந்தபொழில் திருப்பேரையிற்கே**

காலம் என்று ஒன்று வேண்டாதே எல்லாக் காலமும் கனிகள் நிறைந்த பொழிலையுடைய சோலைகளை உடைய தென்திருப்பேரைக்கு என்னைக் கொண்டு போய்க் காட்டுங்கள் “கனிந்த மரம் என்றால் அசுரன் ஆவேசமுண்டு என்று அஞ்ச வேண்டாத சோலை” என்று ஈடு. ஏன் அவ்வூர் என்று கேட்கிறீர்களா?

**முன்னி அவன் வந்து வீற்றிருந்த**

அவன் முந்துற முன்னம் எம்போலியர்க்கு முகங்காட்டவென்றே வந்து தன் வீறெல்லாம் தோன்ற அங்கே எழுந்தருளியிருக்கிறான்.

## ஆறாம் பாட்டு

**“காலம்பெற என்னைக் காட்டுமின்கள்**
**காதல் கடலில் மிகப்பெரிதால்**
**நீலமுகில் வண்ணத் தெம்பெருமான்**
**நிற்கும்முன்னே வந்து என்கைக்கும் எய்தான்**
**ஞாலத்து அவன் வந்து வீற்றிருந்த நான்**
**மறையாளரும் வேள்வி ஓவாக்**
**கோலச் செந்நெற்கள் கவரிவீசும்**
**கூடுபுனல் திருப்பேரை யிற்கே.”**



நீருண்ட காளமேகம் போன்ற நிறத்தை உடையவன் கண்ணுக்கு இலக்காகும்படி இதோ முன்னே நிற்கிறான். ஆனால் கைக்ககப்படாமல் அம்மேகம் போலே, தூரஸ்தனாயுமிருக்கிறான், அதனால் அவன் கடல் புரைய விளைவித்த காதல் கடலை விடப் பெரிதாயிற்று. இந்த பூமியிலே அவன் வந்து வீறு தோன்ற இருப்பதும், சதுர்வேதமும் வல்லவர் அவனுக்காராதனமான வேள்வியை இடைவிடாமல் செய்து கொண்டிருப்பதும் அழகிய செழுமையான நெற்கதிர்கள் கவரிபோல வீசுவதும், நீர்ப்பெருக்குடையதுமான தென் திருப்பேரைக்கு விரைவிலே என்னைக் கொண்டு போய் காட்டுங்கள்;

**காலம்பெற என்னைக் காட்டுமின்கள்**

கொண்டு போகவா வேண்டாமா என்று சிந்தனை செய்து காலம் தாழ்த்தற்குரிய போழ்தன்று. கடுகக் கொண்டு போய்க் காட்டுங்கள். இனி நீங்கள் தாமதப்படுத்தினால் மேல் நிகழ்பவைக்கு நான் பொறுப்பன்று. அவன்தான் வந்தருளட்டுமே என்றிருக்க வொண்ணாது. அவனருள் பெறுமளவு ஆவி நில்லாது அது மட்டுமல்ல.

**காதல் கடலில் மிகப்பெரிதால்!**

என் ஆசை திசையெலாம் கடந்து பெருகிற்று. கடல்புரையும் காதலை அவன் விளைவித்தான். ஆனால் அது அதோடு நில்லாமல் வளர்ந்துகொண்டே போகின்றது.

**நீலமுகில்........ முன்னே**

அக்காதலை விளைவித்த காரமர் மேனியன், இப்போதும் என் கண் முன்னே நின்று மேலும் காதலைப் பெருக்குகிறான். ஆஹா என்ன வடிவு சிரமம் தீர்க்கவல்ல குளிர்ந்த நீருண்ட மேகம் போன்ற திருமேனி. அது முன்னே நின்றுகொண்டே இருந்தால் காதல் வளராமல் என்ன செய்யும்.

**என்கைக்கும் எய்தான்!**

முன்னேதானே நிற்கிறான் பற்றிக் கொள்வோமே என்றால் அவன் கைக்கப்படும் எல்லையைத் தாண்டியல்லவா நிற்கிறான். மேகம் போன்றவன் அம்மேகம் கண்ணுக்கு விஷயமாய் கைக் கெட்டாது நிற்குமா போலே எட்ட நிற்கிறான்.

**ஞாலத்து அவன் வந்து வீற்றிருந்த**

தன் மேன்மையான இருப்புப்போல எட்டாத்தூர மின்றியே சென்று சேர்தற்கு எளிதாயிருக்கவே, இந்தப் பூமியிலே வந்திருக்கிறான். பாபஜன்மங்கள் மலிந்த இப்பூமியிலே. ஒருவர் வேண்டாத தானே தன் அளிதோன்ற அர்ச்சையாய் வந்து, பரமபதத்திருக்கும் போதுள்ள மேனாணிப்புக்கு எவ்வளவும் குறையாதே தன் பெருமை தோன்ற எழுந்தருளியிருக்கும்.

**நான் மறையாளரும் வேள்வி ஓவா**

சதுர்வேதிகள் எப்போதும் ஆராதனம் செய்கின்ற ஆராதனமில்லாதபோது என்று ஒரு காலமின்றிக்கே ஸர்வதா ஆராதனம் நிகழ்த்துகின்ற,

**கோலச் செந்நெற்கள் கவரி வீசும்**

அழகிய செந்நெற்கதிர்கள் காற்றிலே அசைந்து அவனுக்குத் திருவாலவட்ட கைங்கர்யம் செய்யப் பெற்றதான, அங்குள்ள தாவரங்களும் பகவத் கைங்கர்யத்தில் ஈடுபட்டபடி.

**கூடுபுனல் திருப்பேரையிற்கே**

செந்நெற்கள் ஆலவட்டம் பரிமாறா நிற்க அவை வாடாதபடி அவற்றுத்தாரகமாக குளிர்ந்தநீர் எப்போதும் பெருகி நிற்கும் தென் திருப்பேரையிலே, ஒரு நீரல்ல ஆற்று நீர், ஊற்று நீர், மழைநீர் முந்நீரும் கூடி நெல் வளர்க்கும் தேசம். அவற்றின் பாகவத கைங்கர்யமிருந்தபடி

## ஏழாம் பாட்டு

**"பேரெயில் சூழ்தடல் தென்னிலங்கை**



**செற்ற பிரான்வந்து வீற்றிருந்த**
**பேரையிற்கே புக்குஎன் நெஞ்சம்நாடிப்**
**போர்த்து வரவுஎங்கும் காணமாட்டேன்**
**ஆரை இனி இங்கு உடையும் தோழீஎன்**
**நெஞ்சம் கூவ வல்லாரும் இல்லை**
**ஆரை இனிக்கொண்டு என் சாதிக்கின்றது**
**என் நெஞ்சம் கண்டதுவே கண்டேனே"**

பெரிய மதிளாலே சூழப்பட்டுக் கடல் மத்தியிலே இருந்த அழகிய இலங்கை நகரை அழியச் செய்த தலைவன் வந்து எழுந்தருளியிருக்கும் தென் திருப்பேரையில் புகுந்து அவனை நாடிய என் நெஞ்சு அங்கு நின்றும் திரும்பிவரும் செயலை நான் காணவில்லை. இனி எனக்கு வேண்டியவர் என்றிருப்பார் யாரை நான் உடையனாவேன். போன என் நெஞ்சைத் திரும்ப வரக்கூவவல்லார் ஒருவரும் இல்லை. இனி யாரைக் கொண்டு என்ன காரியம் சாதிப்பது? ஒன்றுமில்லை. ஆகவே என் நெஞ்சைப் பின்பற்றி அது கண்டதையே நானும் காணத்துணிந்தேன்.

**பேரெயில் சூழ்கடல் தென் இலங்கை**

பெரிய மதிலை உடைத்தான இலங்கை. "கலங்கலில் கடும் கதிர்கள் மீது கடிது ஏக, அலங்கல் அயில் வஞ்சகனை அஞ்சி எனல் அன்றால், இலங்கை மதில் இங்கிதனை ஏறல் அரிது என்றே விலங்கியல்கின்றனர் விரைந்து" என்று கடல்கடந்த மாருதி கண்டு வியக்கும்படியான மதிலையுடைய இலக்கை ஒன்றல்ல பல மதில்களால் சூழப்பட்டது. மதில் மட்டுமேயோ கடலும் சூழ்ந்தது மதிலை ஏதேனும் செய்து ஏறவோ தகர்க்கவோ செய்து பார்ப்போமென்று எண்ணினும் கிட்ட வரவொண்ணாதபடி கடல்சூழ்ந்த இலங்கை. கிட்டவந்தாலும் அதன் அழகை நோக்கினால் வந்த பகைவனுக்கும் அழிக்க மனம்வராத அழகையுடைய நகர் (தென்-அழகு). அங்கதனைத் தூதனுப்பப் பெருமாள் சிந்தனை செய்ய அது கூடாது என்று மறுக்கும் இளையபெருமாள் பெருமாள் திருவுள்ளத்திலே இலங்கை நகரின் அழகு பதிந்து

அவ்வுணர்விலே இதனை யழிக்காமலிருக்க வழியுண்டா என்று பெருமாள் ஆராய்வதாக எண்ணுகிறார்.

**"மற்றிவ் விலங்கையின் வளமை நோக்கி**
**இறந்திது போதல் தீது**
**என்று இரங்கினை எனினும் எண்ணில்**
**சிறந்தது போரே என்றான்"**

*(கம்ப.-யுத்த-அங்கதன்-தூது-7)*

என இலக்குவன் வாக்காகக் கம்பர்.

**செற்ற**

அவ்விலங்கையை ஈடழித்த.

**பிரான்**

தலைவன்.

**வந்து வீற்றிருந்து**

தானே என்னைக் காண எழுந்தருளி அருகிலே வீற்றிருக்கும். இலங்கை செற்ற அன்று முகத்தை மாறவைத்துக் கொண்டிருந்தாற் போலன்றிக்கே இப்போது பிரஸன்ன முகத்தராய் எழுந்தருளியிருக்கும்.

**பேரையிற்கே புக்கு என் நெஞ்சம் நாடி**

தென் திருப்பேரை நகரிலே புகுந்து என்னுடைய நெஞ்சு அவரைத்தேடி. இலங்கையைப் போல இதுவும் அழகிய நகர். ஆனால் அதுபோல செறவேண்டிய நகரன்று. இலங்கையைச் செற்றவனே மனம் விரும்பி வர்த்திக்கும் நகர் அந்நகரிலேபோய் அவனைத் தேடுகின்றது என் நெஞ்சு.

**பேர்த்துவர வெங்கும் காணமாட்டேன்**

போன நெஞ்சு கண்டால் வந்து எனக் குரைத்து என்னையங்கே அழைத்துச் செல்ல வேண்டும். காணா விட்டால் காணோம் என்றாவது வந்து சொல்லவேணும். என் நெஞ்சோ திரும்பவரும் சுவடே காணப்பெறுகிலேன்.



**ஆரை இனி இங்கு உடையம் தோழீ**

இனி எனக்கு ஆப்தராக நான் யாரை உடையேன். தோழீ நீயே சொல். என்னவானாலும் நீ அன்னியள்தானே என்னில் முன் அவனுக்கு மாய்பவள்தானே, என் நெஞ்சே என்னை மறந்த பின் எனக்கு வேண்டியவர் ஆர்.

**என் நெஞ்சம் கூவ வல்லாரும் இல்லை**

போய் அங்கேயே தங்கிவிட்ட உள் நெஞ்சை இங்கே திரும்ப வரக்கூவ வல்லவரையும் காண்கில்லேன். "கண்ணன் வைகுந்தனோடு என் நெஞ்சினாரைக் கண்டால் என்னைச் சொல்லி அவரிடை நீர் இன்னம் செல்லீரோ இதுவோதகவு என்றிசைமின்களே" என்று ஹம்ஸங்களையே நான் பிரார்த்தித்து அவைக் குடிச்சீர்மையில் அன்னங்களாய்ப் போனமை நீ அறிதியே. அவையே அப்படி ஆனபின் இனி என் நெஞ்சைக் கூவவல்லார்யாவர்.

**ஆரைஇனி.... சாதிக்கின்றது**

ஆப்தரும் போய்த் தங்கினால், அவரைக் கூவ வல்லாரும் இல்லையானால், இனி யாரை எனக்கு வேண்டியவன் என்று கொள்வது. என்ன காரியம்தான் சாதிப்பது. ஒன்றுமில்லை அதனால்,

**என் நெஞ்சம் கண்டதுவே கண்டேனே!**

என் நெஞ்சு எதைக் கண்டு அங்கே தங்கிற்றோ அதையே நானும் போய்க்காண்பது என்று நிச்சயித்து விட்டேன்.

## எட்டாம் பாட்டு

**கண்டதுவே கொண்டு எல்லாரும் கூடிக்**
**கார்க்கடல் வண்ணனோடு என்திறத்துக்**
**கொண்டு அலர் தூற்றிற் றதுமுதலாக் கொண்ட**
**என்காதல் உரைக்கில் தோழீ**
**மண்திணி ஞாலமும் ஏழ்கடலும் நீள் விசும்பும்**

**கழியப் பெரிதால்**
**தெண்திரை சூழ்ந்தவன் வீற்றிருந்த தென்திருப்**
**பேரையில் சேர்வன் சென்றே.**

என்னுடைய உடலிலே ஏற்பட்ட மாறுதல்களைக் கொண்டு தாய்மாரும் ஊராரும் யாவரும் ஒன்று சேர்ந்து கரிய கடல் போன்ற நிறமுடையனோடு என்னிடமுள்ள நிலைமையைக் கொண்டு கூட்டி பழிதூற்றினார்கள். அந்தப் பழியையே கை முதலாகக் கொண்டு என்னை இடம் கொண்ட காதலைச் சொல்லப் போனால் மண்செறிந்த பூமியும், ஏழ்கடலும், வானமும் கொள்ளாத அளவு மிகப்பெரிதாயிற்று. அதனால் அவன் வீற்றிருப்பதும், தெள்ளிய அலைநீர் சூழ்ந்ததுமான தென்திருப்பேரை போய்ச் சேரக்கடவேன்.

**கண்டதுவே கொண்டு**

நான் ஒன்றும் செய்யவுமில்லை. தவறுதலாகப்படும்படி பேசவும் இல்லை. "ஊழியாய் உலகேழு முண்டான் என்றிலன் பழம் கண்டின்னே ஆழிகளாம் பழவண்ண மென்றேற்கு" என்று சொல்லப்படுவதுபோல பிதற்றவில்லை. உன் உள்ளத்திலே அவன் புள்ளோடு சாரிதிரிந்தான் ஒருநாள். நிகழ்ந்ததை உள்ளபடி உரைத்தேன். அவ்வளவுதான். என் மேனி என்னவோ நிறமிழந்து நிற்பது உண்மை இதைப் பார்த்து.

**எல்லாரும் கூடி**

தாயும் ஆயமும் கூடி வெளியார் ஏதேனும் கட்டிவிட்டால் தெரியாதவர்கள் சொல்லி விட்டுப் போகிறார்கள் என்று அசட்டை செய்துவிடலாம். என்னை அறிந்து வைத்த என் தாய்மார்களும் அல்லவா ஊராருடன் சேர்ந்து கொண்டார்கள்.

**கார்க்கடல்..... கொண்டு**

கருமையான கடல்போன்ற மனத்துயர் போக்கும் வடிவுடையவனோடு, என்னிடத்தேற்பட்ட மாறுதல்களைப் பொருத்திப் பார்த்து, இரண்டையும் முடித்து.



**அலர் தூற்றியது**

அந்தத் தாய்மார் ஊரார் கூட்டம் என் பேரில் பழியைப் பரப்பிற்று. ஓடும் நிலை என்னவென்று தெரிந்தா பேசுகிறார்கள். ஏதோ தகாதது நடந்ததுபோல குதிக்கிறார்கள். என் உள்ளத்திலோடும் எண்ணங்களைப் புரிந்து கொள்ளும் உணர்ச்சியே இல்லாத வெறும் ஜடங்கள்.

**அது முதலா**

அப்படி அதுகள் பழி தூற்றத் தலைப்பட்டனவா அப்பழியையே கைமுதலாக்கி.

**கொண்ட என்காதல்**

என்னை முற்றிலும் ஆட்கொண்ட என் காதல். என் உள்ளத்திலே ஒரு மூலையிலே பதுங்கிக் கிடந்த என் காதல் வளர ஆரம்பித்தது. அதன் வளர்ச்சியை எப்படி நீ அறிய உரைப்பது.

**தோழீ!**

என் மனதுக்குகந்த துணைவியல்லவா நீ. தாயும் ஊராரோடு கூடிப் பழிகூறத் தலைப்பட்டபின் உன்னைத் தவிர வேறு யார் கிட்டியவர்கள்.

**உரைக்கில்**

என் காதலின் வளர்ச்சியை ஒருவாறு சொல்லுவோம் என்று முயன்று பார்த்தால்

**மண்திணி.... பெரிதால்**

மண்செறிந்த இந்நிலவுலகனைத்தும், பரந்த ஏழு கடல்களும், கண் போன திசையெல்லாம் கவிந்து பரந்து காணும் வானமும் இடம் போதாதென்று சொல்லும்படி வளர்ந்து கொண்டே போகும் பேரளவுடையதாயிற்று என்

காதல். அதனால்,

**தெண்டிரை சூழ்ந்தவன் வீற்றிருந்த**
**தென்திருப் பேரையில்**

தெளிந்த அலைவீசும் புனல் எங்ஙனும் சூழ்ந்து குளிர்ந்து விளங்கும் தென்திருப்பேரையிலே, அவன் தன் வெற்றி தோன்ற வீற்றிருக்கும் ஊரிலே.

சூழ்ந்த என்பதை வேறாக்கி என் காதலைப் பெருக்க வளைத்தவன் என்பது பன்னீராயிரப்படி. அப்படியாயின் என்னைத் தன் மயக்கிலே வீழ்த்தத் திட்டமிட்டு என் உள்ளத்திலே புள்ளோடு சாரிகை திரிந்து, அந் நிலத்திலே காதலை என்னையும் அறியாது கடல் புரைய விளைவித்த சூழ்ச்சியையுடையவன், தன் சூழ்ச்சியின் வென்றி தோன்ற வீற்றிருக்கும் தலம்.

**சேர்வன்சென்றே**

இப்படிப் பெருகும் காதலைத் தாங்கும் வலிமையுடையவளா நான், முடியாது. அவன் வந்தாலும் வரலாம் என்று காத்திருக்கவும் பொறுமை கிடையாது. ஆகையால் நானே போய் அத்தலத்தைச் சேர்வது என்று நிச்சயித்து விட்டேன்.

**அலர் தூற்றிற்றது முதலா**

காதற் பயிரே தனிப்பண்புடையது. பிறர் பழி கூற ஆரம்பித்தால் அது எரியும் தீயில் எண்ணெய் ஊற்றியது போல வளருமே ஒழியக் குறையாது. ஊரார் பழி அப்பயிருக்கு எரு அன்னையர் தடுப்புமொழி வண்டல்நீர். **ஊரவர் கவ்வை எருவிட்டு அன்னைசொல் நீர்மடுத்து ஈரநெல் வித்துமுளைத்த நெஞ்சப் பெருஞ் செய்யுள் பேரமர் காதல் கடல்புரைய விளைவித்த.** ***(திருவாய்மொழி. 5 -3 -4)***

என்பது இவ்வாழ்வாரின் பாசுரமே.



**“ஊரவர் கவ்வை எருவாக அன்னைசொல்**
**நீராக நீளும் இந்நோய்”**

என்பது குறள். இந்த அலர் (பழி) தான் இக்காதலர்க்குத் தாரகம்.

**“அலர்எழ ஆருயிர் நிற்கும் அதனைப்**
**பலர் அறியார் பாக்கியத்தால்”**

என்றார் வள்ளுவர். இது தலைவன் கூற்று. ஊரில் பழியாய் விட்டது என்று கூறும் தோழியிடம் அவன் கூறுவதாக வருவது. எங்கள் காதல் எங்களுக்குள்ளேயே தங்கி இருவரும் மணந்து வாழ இயலாது போய் விடுமோ என்று பயந்தேன். இது ஊரறிந்ததன் பயனாக உரம் பெற்றுவிட்டது. இனி அது நிலைக்கும். ஊரார் பேச்சே அதை நிலைநாட்டி விடும். பாவம் ஊரார். தங்கள் பழியால் எங்கள் காதல் மாயும் என்று நினைக்கிறார்கள். எங்கள் காதல் அவர்கள் பழியால் நிலைக்கும் என்பதை அவர்கள் அறியார்கள். பாவம், எங்கள் பாக்கியம் அது. அறிந்தால் நிறுத்தி விடுவார்கள் அல்லவா? என்கிறான் தலைவன்.

பராங்குச நாயகியின் காதலும் அவர் நூற்றியது காரணமாகவே நீள் விசும்பும் சுழியப்பெருகுகிறது.

## ஒன்பதாம் பாட்டு

**“சேர்வன் சென்று என்னுடைத் தோழிமீர்காள்!**
**அன்னையர்காள்! என்னைத் தேற்றவேண்டா**
**நீர்கள் உரைக்கின்றதென் இதற்கு நெஞ்சும்**
**நிறைவும் எனக்கு இங்கு இல்லை**
**கார்வண்ணன் கார்க்கடல் ஞாலமுண்ட**
**கண்ணபிரானுக்கு என் பெண்மை தோற்றேன்**
**ஏர்வள ஒண்கழனிப் பழனத் தென்**
**திருப்பே ரையின் மாநகரே.”**

என் தோழிமார்களே! தாய்மார்களே! நீங்கள் என்னைத்

தேற்ற வேண்டாம். நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள். நீங்கள் சொல்கிற படி நடப்பதற்குத் தேவையான நெஞ்சமும், நிறையும் எனக்கு இங்கே இல்லை. கரியமேகம் போன்ற மேனியை உடையவனும் கருங்கடலால் சூழப்பட்ட பூமியை அமுது செய்தவனுமாகிய கிருஷ்ணனுக்கு என் பெண்மை தோற்றது. ஆகையால் ஏர்களாலே வளம் பெற்ற கழனிகள் மிக்க மருத நிலமான தென் திசைக்கு அழகு செய்வதும் பெரிய மதில் சூழ்ந்ததுமான அவனுடைய நகரான திருப்பேரையின் போய்ச் சேர்வேன்.

**என்னுடைத்..... வேண்டா**

என்னுடைய நிலையை நோக்கி பேசும் என் தோழிமாரே! என் தாய்மார்களே! என்னை மறந்து நிற்கும் என்னைக் காணுகிறீர்களே ஒழிய என்னையே மறக்கச் செய்த அவனைக் காணுகிறீர்களில்லை. அவனைக் கண்டாலல்லவா என் உண்மை நிலை உங்களுக்கு விளங்கும்? என்னை உங்கள் உடைமையாகப் பாவிக்கும் நீங்கள் என்னைத் தேற்ற முற்பட வேண்டாம். பயனில்லை.

**நீங்கள் உரைக்கின்றது என்**

நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள். என் உண்மை மன நிலையறிந்து சொன்னால் நல்லது அதற்குத் தாரகமாக ஏதேனும் செய்யவோ சொல்லவோ இல்லை. என்ன வெல்லாமோ பேசுகிறீர்கள். ஏதேதோ, தகாது புறப்பட்டால் பழி சூழும், குடிகேடாகும் என்றெல்லாம் கூறுகிறீர்களே.

**இதற்கு நெஞ்சும் நிறையும் எனக்கு இங்கில்லை**

இவற்றையெல்லாம் கேட்டு ஏற்று அதன்படி என்னை நடக்கச் செய்ய என் நெஞ்சும், நீங்கள் சொல்வதுபோல் இப்படி நான் துணிவது பழிப்புக்கிடமாகும் என்று உணரச் செய்ய இன்றியமையாத அடக்கமும் இப்போது என்னிடத்திலே இல்லையே. முன்னமேயே சொன்னேனே "நாணும் நிறையும் இழந்ததுவே" என்று. அதுபோல என் நெஞ்சும் என்



காவலைவிட்டு இராப்பகலாய் அவன் செங்கனிவாயின் திறத்ததாய் அங்கே ஒழிந்தது. உங்கள் சொல்படி கேட்டு என்னைச் செலுத்தி வைக்கக்கூடிய சாதனங்களே என்னிடமில்லாதபோது ஏன் வீணே கண்டபடி பேசி என்னைத்தேற்ற முயல்கிறீர்கள். வேண்டுமாகில் அங்குப்போய் என் நெஞ்சினிடமும் நிறையிடமும் கூறுங்கள்.

**கார்வண்ணன்....... தோற்றேன்**

என் பெண்மை தோற்றுவிட்டது. நெஞ்சும்போய் நிறையும் போனபின் பெண்மை தோற்காமல் என்ன செய்யும். ஆனால் ஒன்று. என் பெண்மையாரிடம் தோற்றது. அது தெரியாமல் கூச்சலிடுகிறீர்கள். ஆஹா, கருணை கொழுந்துவிடும் கார்மேகம் போன்ற வண்ணமுடையவன். ஆபத்துக் காலத்தே இக்கடல் சூழ்ந்த சகத்தையெல்லாம் அமுது செய்து தன் திருவயிற்றிலே வைத்துக் காத்தவன். அவன்தானம்மா கிருஷ்ணன். அவனிடம் பெண்மை தோற்காமல் என்ன செய்ய முடியும்? ஒன்றல்ல இரண்டல்ல பதினாயிரும் பெண்கள் தங்கள் உள்ளங்களை பறி கொடுத்தார்களே, அந்த அழகன். அவர்களுடையதைவிட என் பெண்மை வலியதா? அதுவும் தோற்றது. ஆகையால்

**"ஏர்வள.... நகர் சேர்வன் சென்று**

ஏர்களால் வளப்படுத்தப்பட்டதும், அப்படி ஏர்கள் வளமுறச் செய்யவேண்டிய நீர்மிக்கு, நல்ல வயல்கள் நிறைந்த மருதவைப்பானதும், பெரிய மதில் சூழ்ந்துள்ளதுமான நகரிலே போய்ச் சேர்வேன். அந்நகர் எதுவென்றா கேட்கிறீர்கள். அது தான் தென்திசைக்கே அழகு செய்வதான தலம் தென் திருப்பேரை! அங்கே வந்து அவன் தன்வீறு தோன்ற, பதினாராயிரம் பெண்களை ஈடழித்த வெற்றி தோன்ற வீற்றிருந்தான். இன்று என் பெண்மையையும் தோற்கடித்த வெற்றியும் தோற்ற வீற்றிருக்கிறான்.

அதனால் வீணாக என்னைத் தேற்றுவதாகச் சொல்லித் தடை செய்வதில் பயனில்லை நான் மீளவோ, வழியில் நிற்கவோ செய்யப் போவதில்லை.

## பத்தாம் பாட்டு

**"நகரமும் நாடும் பிறவும் தேர்வேன்**
**நாண் எனக்கில்லை என்தோழி மீர்காள்**
**சிகரமணி நெடுமாட நீடுதென்**
**திருப்பேரையில் வீற்றிருந்த**
**மகரநெடும் குழைக்காதன் மாயன்**
**நூற்றுவரை அன்றுமங்க நூற்ற**
**நிகரில் முகில் வண்ணன் நேமியான்**
**என்நெஞ்சம் கவர்ந்து எனை ஊழியானே"**

என் தோழிமார்களே சிகரங்களை உடையதாய், மணிகள் பதிக்கப் பெற்றவையான மாடங்கள் உயர்ந்து விளங்கும் தென் திருப்பேரையில் எழுந்தருளியிருக்கும் நீண்ட மகரக்குழை களணிந்து அதனாலே விளங்கும் காதுகளை உடையவனும் மாயம் வல்லவனும், துரியோதனாதியரை மங்கும்படி பாரதப் போரை நடத்திய ஒப்பற்ற மேகவண்ணனும், சக்ராயுதத்தையுடையவனுமான என் தலைவன் என் நெஞ்சைக் கவர்ந்து எத்தனை காலத்தவன். அதனால் அவனை நகரிலும், நாட்டிலும் பிறவிடத்தும் தேடி ஆராய்வேன். இதில் எனக்கு நாணம் என்பது இல்லை.

**என் தோழிமீர்காள்......**

என் நல் வாழ்விலும், என் நற்பெயரிலும் நோக்குடைய என் தோழிமார்களே.

**சிகரமணி....... வீற்றிருந்த**

ஊரெல்லாம் மாடங்கள்! மாடங்களும் ஒன்றையொன்று போட்டியிட்டு உயரும் மாடங்கள்!



மாடங்கள் தோறும் சிகரங்கள். அச்சிகரங்களிலும் மாடங்களிலும் நிறையப் பதிக்கப் பெற்று ஒளிமயமாகவே காட்சியளிக்கும் இரத்தினங்கள். இத்தகைய மாடங்கள் நிறைந்த தென்திருப்பேரையிலே தன் வீறு தோன்ற எழுந்தருளி இருக்கும்.

**மகரநெடும் குறைக்காதன் மாயன்**

நீண்ட மகரக்குழைகள் தோள்கள்வரை தாழ்ந்து ஊசலாடும் காதுகளை உடைய ஆச்சர்ய சேஷ்டிதங்களை உடையவன்.

**நூற்றுவரை அன்று மங்க நூற்ற**

பாண்டவ நண்பனாய் அன்று துரியோதனன் முதலிய நூறு பேரும் அவர் படைகளும் மங்கியொழியும்படி பாரதப்போரை நடத்தியவன் போர் ஆரப்பமாகும் முன்பே அவர்கள் மாளசங்கல்பித்தவன்; 'பார் அர்ச்சுனா. இவர்களெல்லாம் என்னால் முன்பே கொல்லப்பட்டவர்கள். ஒப்புக்காகத் தான் நீ இவர்களைக் கொல்லப்போகிறாய்' என்று இவனே கீதையில் கூறினானல்லவா?

**நிகரில் முகில் வண்ணன்**

ஒப்பாரில்லாத, கார்மேகம் போன்ற குளிர்ந்த கரியநிறத்தை உடையவன்.

**நேமியான்**

அடியார் படுதுயரை நிரந்தரமாக அழிக்க வென்றே தன் கையில் சக்கரப்படையை ஏந்தியவன்.

**என் நெஞ்சம் கவர்ந்து எனை ஊழியான்**

அவன் என் நெஞ்சைக் கவர்ந்து எத்தனை காலத்தான். இன்றா? நேற்றா? அவன் இப்படிக் கவர்ந்து அதனால் எனக்கும் அவனுக்கும் ஏற்பட்ட உறவு "நேற்று இன்று வந்த உறவல்லடீ"

தாங்கள் உற்றார்களாய் நெடும் காலமாயிற்று. இற்றைக்கும் எழேழ்பிறவிக்கும் அவன் தன்னோடு நான் உறவானவனே. பிறப்பெல்லாம் அவன் எதிர் சூழல் புக்கு எனக்கே அருள்கள் செய்த முன்னமே விதி சூழ்ந்திருக்கிறதடீ! இன்று புதிதல்ல. ஆகையால்

**நகரமும் நாடும் பிறவும் தேர்வேன்**

அவனிருக்கும் இடம் தேடி, நகரமோ, நாடோ, பிறவோ எல்லாம் போய்ப்புக்கு, அவனை நான் தேடுவேன். தேட உரிமையுண்டு.

**நாண் எனக்கில்லை**

என் உரிமையிருக்கும்போது, என் உரிமையை நான் உணர்ந்துவிட்ட போது வெட்கத்துக்கு ஏதடீ இடம். நாயகி தன் நாயகன் இருக்கும் இடம்தேடிப்போவது வெட்கமற்ற செயலா. நீங்கள் போற்றும் வெட்கத்தைப் பற்றி என் நாயகனை இழப்பதா. முடியாது. நான் போய்த் தேடத்தான் செய்வேன் என்கிறாள்.

“நாட்டாரும் நகரத்தாரும் பழி சொல்கிறார்களே? என்கிறாயா? அதுதான் முன்னமே சொன்னேனே. அவர்கள் ‘அலர் எழ ஆருயிர் நிற்கும்’ என்று அவர்கள் கூறும் பழிச்சொல்லே என் உயிருக்குத் தாரகமாகக் கொண்டு தேடுவேன்.

## பதினொன்றாம் பாட்டு

**ஊழி தோறூழி உருவும் பேரும் செய்கையும்**
**வேறவன் வையம் காட்டும்**
**ஆழிநீர் வண்ணனை அச்சுதனை**
**அணிகுரு கூர்ச்சடகோபன் சொன்ன**
**கேழில் அந்தாதி ஓராயிரத்துள்**
**இவை திருப்பேரையின் மேயபத்தும்**



**ஆழியங்கையனை ஏத்தவல்லார் அவர்**
**அடிமைத் திறத்து ஆழியாரே.**

ஒவ்வொரு ஊழியிலும் தன்னுடைய வடிவமும் பெயரும் வெவ்வேறாகக் கொண்டு உலகங்களைக் காப்பவனாய், கடல் நீர்போல நிறமுடையனாய் தன் படைப்புக்களை நழுவவிடாதவனாய் இருப்பவனை உலகுக்கே அழகு செய்யும் திருக்குருகூரில் அவதரித்த சடகோபன் அருளிய ஒப்பில்லாத அந்தாதியாக வரும் ஆயிரம் பாடல்களில் தென்திருப் பேரையில் பொருந்தின சக்கராயுதனை இந்தப் பத்துப் பாசுரங்களையும் கொண்டு போற்றவல்லவர்கள் அவனடியார் என்ற நிலையில் ஆழ்ந்தவர்களாகப் பெறுவார்கள்.

**ஊழிதோறூழி.......... வேறவன்**

கல்பங்கள் எண்ணில். அக்கல்பங்கள் தோறும் ஒவ்வொரு கல்பத்திலே ஒவ்வொரு பெரும் வடிவம் கொணடவனாய்

**வையம் காக்கும்**

அப்படி அந்தக் கல்பங்களுக்கு வேறு பெயரும் உருவும் கொண்டு இந்த சகத்தைக் காக்கும் என்ன செய்தேனும் தன் படைப்பைக் காத்தலைத் தன் பேறாகக் கருதுமவன்.

**ஆழிநீர் வண்ணன்**

கடல் நீர்போல கரும்பசுமை நிறமுடையவனை தன்னிடமுள்ள விலையற்ற பொருள்களை எல்லாம் பிறர்க்குதவத்தானே கொண்டு கரையிலொதுக்கும் வண்மையுடைய கடல்நீர் போன்ற வண்ணத்தோடு அதன் குணத்தையுமுடையவன்.

**அச்சுதனை**

தன்னடியார்களைத் தன் ரக்ஷணக்குறைவால் நழுவிப்

போய் விடாதே காப்பவன். தன் நிறம் என்றும் குறையாதவன்.

**அணி..... சொன்ன**

இவ்வுலகுக்கே ஒரு மணிபோன்று விளங்கும் திருக்குருகூர் அவ்வூருக்கும் உலகுக்கும் நிரந்தரமான புகழ் அளித்து வரும்படி அவதரித்த சடகோபன். அவன் திருவாய் மலர்ந்தருளிய.

**கேழில்..... பத்தும்**

ஒப்பற்ற ஆயிரம் அந்தாதித்தொடையாகிற திருவாய் மொழி. அவற்றிலே தென் திருப்பேரைப் பதியைப்பற்றி வரும் இப் பத்துப் பாசுரங்களையும் உலகுக்கு அணியான ஊரில் அவதரித்த உலகோர்க்கணியானவன் உரை ஆயிரத்திலே தென் திசைக்கணியான திருப்பேரையைப் பற்றி வரும் பத்து பாடல்களையும்; இப்பாடல்களையே துதியாகக் கொண்டு

**ஆழியங்கையனை ஏத்தவல்லார்**

சக்கரப் படையைக் கையிலே தரித்தவனைப் பாடவல்லவர். தென்திருப்பேரையில் முகில் வண்ணனாய், மகர நெடும் குழைக்காதனாய்க் காட்சியளிப்பினும் ஆழ்வாருக்கு அவ்வுருவிலும் உள்ளே தோற்றுவது திருவாழிக்கையான. “கூராராழி வெண்சங்கேந்திக் கொடியேன்பால் வாராய்” என்ற கூப்பீடிட்ட வரல்லவா. தன் விரோதி யழிகைக்கும், தன்னைக் காக்கைக்கும் உடலாயிருக்கும் திருவாழியோடு சேவை சாதிக்கும் எம்பெருமானே ஆழ்வார் நெஞ்சில் என்றும் நிலைத்தோடுமவர். அவரைப் போலே திருப்பேரைக் குழைக்காதர் உருவிலே ஆழிக்கையனைக் கண்டு பாடல் வல்லார் எவர்.

**அவர் அடிமைத்திறத்து ஆழியாரே**

அம்மனப்பான்மையுடையவன் அவனடியார் என்ற தன்மையிலே, பாகவதன் என்ற மனப்பண்பிலே,



ஆழங்கால்பட்டவராவார். பகவத் கைங்கர்யத்திலே ஊன்றி ஆழ்ந்து ஆழ்வார் என்றே சொல்லத்தக்கவராவார்கள் என்று பதிகப்பயன் கூறுகிறார் ஆழ்வார்.

இந்தத்தலம் தென்திருப்பேரை என்றே வியாக்கியானங்களில் கூறப்படுகிறது. ஆனால் வியாக்கியானங்களைப் பதிப்பித்த சே.கிருஷ்ணமாசாரியார் தன் பதிப்பில் “9-ம் பாசுரத்தில் தென்திருப்பேரெயில் மாநகரே என வருவதனையும், அதன் வியாக்கியானங்களையும் 5,6,7 பாசுரங்களில் பேரெயிற்கே” என வருவதனையும் ஊன்றிப் பார்த்தால் நம்மாழ்வார் “திருப்பேரெயில்” என்றே இந்த திவ்ய தேசத்தைக் கொண்டு வழங்கினார் என்பது தெற்றென விளங்குவதால் திருப்பேரெயில் என்றே பதிப்பிக்கலாயிற்று. இச்சொல் பிற்காலத்தில் திருப்பேரை என மருவி வழங்கலாயிற்று என அறிக” என்று ஒரு குறிப்புக் காண்கிறது.

முடிச்சூர் அப்பாவு முதலியாரவர்களால் பரிசோதிக்கப்பட்டு ஸ்ரீ கந்தாடை கிருஷ்ணமாசாரியார் பிரதிக்கிணங்க திருஎவ்வுளூர் ஸ்ரீ ஸ்ரீனிவாசராக வாசாரியாரால் பார்வையிடப் பெற்றுப் பதிப்பிக்கப்பட்ட நாலாயிர திவ்யப்ரபந்தப் பிரதியில் எங்கும் திருப்பேரை என்ற பாடமே கொள்ளப்பட்டிகதிறது. ஸ்ரீ அண்ணங்கராசாரியார் பதிப்பில் பேரெயிற்கே என்று பாடம் காண்கிறது. பல பிரதிகளை ஒப்புநோக்கிப் பதிக்கப் பெற்ற “மூர்ரே ராஜம்” அவர்கள் பதிப்பிலும் பேரெயிற்கே என்றே பாடம் காண்கிறது.

சே. கிருஷ்ணமாசாரியார் பகவத் விஷயம் பதிப்பில்:-

**முதற்பாட்டில்**

ஆறாயிரப்படி, ஒன்பதாயிரப்படி, பன்னீராயிரப்படி, இருபத்து நாலாயிரப்படி, ஈடு எல்லாவற்றிலும் திருப்பேரை என்றே முதலில் அவதாரிகையில் காண்கிறது.

வியாக்கியான உரையில் திருப்பேரெயில் என்று

காட்டப்படுகிறது.

**இரண்டாம் பாட்டில்**

6,9 ஆயிரப்படி அவதாரிகைகளில் 'தென் திருப்பேரை' காண்கிறது 12,24 ஆயிரப் படிகளிலும் ஈட்டிலும் அவதாரிகையில் ஒரு பெயரும் இல்லை. சிலவிடங்களில் வியாக்கியானத்தில் 'பேரெயில்' எனக் காட்டப்படுகிறது.

**மூன்றாம் பாட்டில்**

6,9 வியாக்கியானத்தில் பேரை என்றேயிருக்கறது. பன்னீராயிரப் படியில் திருப்பேரெயில் எனப் பதம் காட்டப்பட்டும் உரையில் திருப்பேரெயில் என்றே காண்கிறது. 24 ஆயிரப் படியில் ஒரு பெயரும் இல்லை ஈட்டிலும் இல்லை.

**நாலாம் பாட்டில்**

6, ஆறாயிரப்படி 'பேரை' தான். 9-ல் பெயரில்லை. பன்னீராயிரப்படியில் பதம் 'பேரெயில்' எனக் காட்டப்படினும் 'பேரை' என்றே உரை 24 ஆயிரப்படியில் பெயர் இல்லை. ஈட்டிலும் இல்லை.

**ஐந்தாம் பாட்டில்**

6,9 ஆயிரப்படி வியாக்கியானம் 'பேரை' தான். பன்னீராயிரப் படியில் 'பேரெயில்' பதம் காட்டப்படுகிறது. உரை இல்லை. 24 ஆயிரப்படியிலும் ஈட்டிலும் பெயர் இல்லை.

**ஆறாம் பாட்டில்**

ஆறாயிரம் ஒன்பதாயிர வியாக்கியானம் 'பேரை' 12-ல் வியாக்கியானத்தில் 'பேரெயிற்கே' எனக் காட்டப்பட்டது 2-ம் பெயரில்லை. ஈடு அவதாரிகை 'பேரை'' வியாக்கியானத்தில் "பெரெயில்' பதம் காட்டப்படுகிறது. உரை இல்லை.

**ஏழாம் பாட்டில்**



6,9 ஆயிரப்படி வியாக்கியானம் 'பேரை' பன்னீராயிரப்படி வியாக்கியானத்தில் 'பெரெயில்' என்று காண்கிறது. 24-ல் பெயரில்லை. ஈடு அவதாரிளக 'பேரை' வியாக்கியானத்தில் பதம் 'பேரெயிற்கே' உரை 'பேரெயில்'.

**எட்டாம் பாட்டு**

6,9 வியாக்கியானம் 12 அவதாரிகையும் 'பேரை' 12 வியாக்கியானத்தில் பதமும் உரையும் "பேரெயில்' எனக் காட்டப்படுகிறது. 24 அவதாரிகையில் 'பேரெயில்' வியாக்கியானத்தில் பெயர் இல்லை. ஈடு அவதாரிகை 'பேரெயில்'. வியாக்கியானம் "பேரை".

**ஒன்பதாம் பாட்டு**

6,9 "பேரெயில்" எனக் காண்கிறது.12,24, ஈடு 'பேரெயில்'

**பத்தாம் பாட்டு**

6,9 'பேரை 12 அவதாரிகை 'பேரை' வியாக்கியானத்தில் பதம் 'பேரெயில்' உரை 'பேரை' 21-ல் பெயர் இல்லை ஈட்டில் பதம் காட்டவில்லை. உரை 'பேரை'

**பதினொன்றாம் பாட்டு**

ஆறாயிரப்படி "பேரை' 9-ல் பெயரில்லை. 12-ல் பதம் 'பேரெயில்' உரையில்லை. 24-ல் பெயரில்லை. ஈட்டில் பதமில்லை. உரை 'பேரை'

மேலே காட்டியவற்றால் நெடுகிலும் பூர்வாசாரியர்கள் தென்திருப்பேரை என்ற பெயரையே கொண்டனர் என்று காண்கிறது. 9-ம் பாட்டில் 'தென்திருப்பேரெயில் மாநகர்' என்பது நகருக்கு அடைமொழியாகவே வந்திருக்கலாம். வேறு ஒரு இடத்திலும் நகர்ப்பதம் இல்லை. இதை வைத்து ஊர் திருப்பேரெயிலாகவே இருந்திருக்க வேண்டும் எனக் கூறுகின்றனர். இதுசற்று ஆராயவேண்டிதேயாகும்.

தலத்தில் எழுந்தருளியிருக்கும் எம் பெருமானுக்கு முகில்வண்ணன் என்று திருநாமம் கூறப்படுகின்றது. இப்பெயர் முன்னைய பதிகத்தில் கூறப்பெற்றமையும் இப்பதிகத்துக்குத் தோற்றுவாயாக விருந்திருக்கலாம் என்று முன்னர் காட்டப்பட்டது. தல புராணத்தைச் சற்று நாம் பார்க்க வேண்டும். பூமிப்பிராட்டி தன் நிறமிழந்து "பேரா" என்ற திருநாமத்தோடு இத்தலம் எழுந்தருளி துர்வாசர் கூறியபடி எம்பெருமானை வணங்கி வழிபட மீண்டும் தன் நிறம் பெற்றாள். இங்கு பாரங்குச நாயகி அவனை விட்டாமல் தன் நிறமிழந்துவாட அவள் நெஞ்சு அவளைவிட்டு நீங்கிய அவள் நிறத்தை மீண்டும் பெற்றுவரப் போயிற்று என்று ஆழ்வாரே கூறுகிறார். அப்படிப் போன நெஞ்சு, ஒரு பிராட்டி இழந்த நிறத்தை மீண்டும் பெற்ற வரலாறை நினைக்கிறது. அந்த இடத்தைச் சென்று சேர்கிறது. "பேரா" நிறம்பெற்ற இடம் அவள் பெயரை இட்டுப் பெயர் பெற்றது. "பேரை" என்று 'பேரா' என்ற வடமொழி தமிழில் 'ஐ' ஈறுபெற்று பேரை' ஆயிற்று. நிறமிழந்த நாயகியின் நிறம் பெறவே நெஞ்சு போனமையின் இவ்வூரை நாடிற்று. "இழந்த என் மாமைத்திறத்துப் போன என் நெஞ்சினாரும்" என்ற பாசுரம் தான் உயிர்ப்பாட்டு. எனவே நெஞ்சு நிறம்பெறவே போயினதென்றால், முன்னொருத்தி இத்தலத்தே இழந்த தன் நிறம் பெற்றாள் என்றால், அவள் 'பேரா' என்ற திருநாமத்தாள் என்றால் அவளையிட்டுப் பெயர்பெற்ற தலம் 'பேரை' என்றுதான் இருந்திருக்க வேண்டும் என்பதில் ஐயம் எழ ஏதுமில்லை. 9-ம் பாடலில் உள்ள 'பேரெயில்' என்பது நகருக்கு அடைமொழி என்று கொண்டால் ஒருவித இடர்ப்பாடும் இல்லை. பூர்வர்கள் திருவுள்ளம் 'பேரை' என்பதே. அதுவே பலவிடங்களிலும் காண்கிறது. 'எயில்' பதம் பின்புள்ளார் ஐயத்தின் மேல் வந்தது. அதனாலே வியாக்கியானங்களில் ஒருசில இடங்களில் இதைக் காண்கிறோம். மற்றொன்று,



ஏடெழுதுவார் பலர் கிரந்த லிபிகற்றவர்கள் 'ஐ' என்பதை 'டெ' என்று இரண்டு கொம்பிட்டு ஏடெழுதும் வழக்கம் இருந்திருக்கலாம். எழுதுங்கால் ஒரு கொம்பு தவறாகவிடப்பட்ட தன் நிமித்தம் சிவ சுவடிகளில் "பேரெயில்" என இருக்கவேண்டியது 'பேரெயில்' என எழுதப்பட்டிருக்கலாம். ஆனால் பூர்வர்கள் திருவுள்ளப் போக்கையும், 'இழந்தவன்' என்ற பாசுரத்தையும், தல வரலாறையும் நோக்குமிடத்து இத்தலத்தின் பெயர் 'தென்திருப்பேரை' என்பதே எனக்கொள்ளுதலே ஏற்புடைத்து என்பது அடியேனுடைய அபிப்பிராயம். இதனைப் பெரியோர் சிந்திக்குமாறு பிரார்த்திக்கிறேன்.

இனி இந்தப் பதிகம் பர்த்ருபார்யா ஸம்பந்தத்தைக் காட்டும் என்பர் பெரியோர். இப்பதிகமும் குலசேகரருடைய "கண்டார் இகழ்வனவே" என்ற பாசுரமும் ஒரு வகையில் இந்த நாயகி நாயக உறவைக் காட்டும் என்பர். தனது நாயகன் தன்பரிசை எல்லாம் அழித்து தன்னைப் பிறர் பரிகசிக்கும்படி கைவிட்டுப் போனாலும் அவனையன்றி வேறொருவரைத் தன் துணையாகக் கொள்ளாத உத்தம நாயகியைப் போல என்னைக் கைகொண்டு ஆளாமல் போனாலும் என் குறைதீர வேறொரு வரை நாடேன் சப்திக்கின்ற கழல்களணிந்த உன் திருவடிகளையே நாடுவேன் என்றார் குலசேகரர். இவ் வாழ்வாரும் ஏறக்குறைய அதே கருத்தை இப்பதிகத்திலே விளக்குகிறார். இப்பதிகம் தோன்று முன் பராங்குச் நாயகியின் நிலை 'கங்குலும்பகலும்' என்னும் பதிகத்தில் தாய் வார்த்தையாக விளக்கப் பெறுகின்றது. நாயகன் இவளை விட்டகன்று போக, அவனே நினைவாக இவள் சரீர தசையை நோக்கினால் அவன் இவளைப்படுத்தியுள்ள பாடு தெரியும் கங்குலும் பகலும் கண்துயில் இல்லை; கையால் வாரியிரைக்கலாம்படி கண்ணீர் வெள்ளமிட்டோடுகின்றது; தன் விதியை நோகிறாள்; வானத்தை அண்ணாந்து

நோக்குகிறாள்; மயங்குகிறாள்; காதலே கஷ்டம் என்று காதலையே ஓரளவு பழிக்கிறாள்; யோசனையில் ஆழ்கிறாள்; கையை விரித்து அலமருகிறாள்; மீண்டும் ஆகாயத்தை நோக்கி இமைகோட்டாது விழிக்கிறாள்; கைகால்கள் போட்டது போட்டபடியாம்படி செயலறுகிறாள். இப்படிப் பலவிதத்திலும் நைந்து போகிற நாயகியைக் கண்ட தாய்மார் நாயகனை எண்ணி இவளை இப்படிப் பரிசழிக்கின்றானே இது தகுமா. இப்படியும் ஒரு நாயகன் செய்வானா என்று அவனை இகழ்ச்சி தோன்றப் பேசுகின்றார்கள். தாய்மார் தன் நாயகனைப் பற்றியும் தமக்குள்ளே பேசிய பேச்சைக் கேட்டே கிடந்த நாயகி அவர்கள் பேச்சில் வந்த சில வாசகங்களைக் கேட்டு அவ்வாசகங்கள் அவளுக்கு ஒரு வழியை உணர்த்த அதன்படி தென்திருப்பேரை போய்ச் சேர்வதென்று தீர்மானிக்கிறாள். அத் தீர்மானத்தைத் தாய்மார் தெரிந்து இவளைத் தகைய அவர்களை மீறிய இவள் துணிவைக் கூறுவது இப்பதிகம். உத்தமமான நாயகியாதலால் தன்நிலை நோக்கித் தாய்மார் நாயகனைப் பழிக்கவும், தன் துணிவைத் தாய்மார்கள் நாயகன் அடாச் செயல் காட்டியும் பிறகொண்டும் தடுக்கவும் செய்தும் அவர்களை எல்லாம் ஒதுக்கி அவனையே சேர்வேன் என்று அவன் ஊர் நோக்கிப் புறப்பட ஆயத்தமாகிறாள். இந்த மனோபாவம் குலசேகரருடைய 'கண்டார் இகழ்வனவே' என்ற பாசுரத்தில் குறிக்கப்பட்ட மனநிலையை ஒத்திருக்கின்றது என்பது அப்பெரியோர்கள் திருவுள்ளம், ஆசார்ய ஹ்ருதயம் இப்பதிகத்தைப் பற்றி கூறும் போது 'சென்று சேர்வார்க்கு உசாத்துணை அறுக்கும் ஸௌந்தர்யம் மாநகரிலே கோஷிக்கும்' **(ஆசார்ய. 3 -2 -1)** என்று பேசும். தென்திருப்பேரையில் எழுந்தருளியிருக்கும் எம் பெருமானது பேரழகு அங்கு சென்று சேர நினைப்பாரை பந்துக்கள் போன்றார் தகைந்தாலும் அவர்கள் உறவை அறுத்துக் கொண்டேனும் இந்நகர் நோக்கி அவர்கள் ஈர்க்கும் வன்மையுடையது என்று கொண்டாடும். இந்தப் பேரழகின் வெற்றியைப் பாடும் வேதங்கள் இடையறாது ஒலிக்கும் நகர் என்று வருணிக்கும். இது ஓரளவு மேலே சொன்ன ஆழ்வார் நிலையை ஒட்டியது. தன்மானம் முதலியவையெல்லாம் இழந்து பல்வளையார் முன் பரிசழியச் செய்தவனானாலும், அவனை ஒழிய உசாத் துணையில்லை என்று கொண்டு "உழந்து இனி யாரைக் கொண்டு என் உசாகோ" என்று உங்களோடு பேசிப் பலன் என்ன? என்று அந்தத் தாய்மாரோடு உசாத்துணை யறுக்கிறாளல்லவா நாயகி. எனவே "இழந்த வென்மாமை" என்ற பாடல் தான் இப்பதிகத்தின் உயிர்ப்பாட்டு. ஆசார்ய ஹ்ருதய வசனப்படியும், பாசுரத்தின் பொருளின் நோக்கின்படியும் இப்பதிகம் குலசேகரரின் "கண்டார் இகழ்வனவே" என்ற பாசுரத்தோடு ஒன்றுபட்டுக் காண்கிறதென்றும் நாயக நாயகி உறவையே இப்பதிகம் பேசும் என்றும் அப்பெரியோர்கள் கூறுவர். ஆசார்ய ஹ்ருதய மூலத்தில் 'மாநகர்' என்றுதான் குறிக்கப்பட்டுள்ளது. வியாக்கியானமிட்டே மாமுனிகள் மஹாநகரமான தென்திருப்பேரையிலே என்று உரையிட்டார். மாமுனிகள் காலத்தும் இது தென்திருப்பேரை என்றே பெரியோர்களால் அறியப்பட்டிருந்தது என்பது தெரிகிறது. உபயகவி அப்பா இயற்றிய நம்மாழ்வார் நூற்றெட்டுத் திருப்பதித் தாலாட்டு என்று நூலில் திருப்பேரை என்றே குறிக்கிறார். அஷ்டப்ரபந்த ஆசிரியரும் தென்திருப்பேரை என்றே கூறுவர். சடகோப திவ்ய சரிதமும் திருப்பேரை என்றே கூறும்.



### திருக்கோளூர்

நவதிருப்பதிகளில் எட்டுத் திருப்பதிகளைப் பற்றிய ஆழ்வார் பிரபந்தங்களின் பொருளை அநுபவித்தோம். ஒன்பதாம் பதியாகிய திருக்கோளூரைப் பற்றிய பதிகத்தைப் பார்ப்போம்.

இப் பதிகம் எழுமுன் பராங்குச நாயகியின் நிலை என்ன என்று பார்க்க வேணும். நாயகன் நினைவேயாய், அவன்

வராமையாலே மனம் மிகவும் நொந்து அம் மனோவியாதி காரணமாக நாயகி தன் உடைமை எல்லாம் இழந்து நலத்தின் திறத்திலும் வெறிதானவளாய் நின்றாள் என்று தாய் வார்த்தையாக ‘மாலுக்கு’ என்ற முந்தின பதிகம் பேசும். அப்பதிகத்திலே மகள் நலங்களை ஒவ்வொன்றாக இழந்ததை ஏலக்குழலி இழந்து சங்கே என்றும், மங்கை யிழந்தது மாமை நிறமே என்றும், இழந்தது பீடே என்றும், இழந்தது பண்பே என்றும், இழந்தது கற்பே (மனத்திண்மை அல்லது ஞானம்) என்றும், தோற்றது மெய்யே என்றும், இழந்தது சாயே என்றும், இழந்தது மாண்பே என்றும் தோற்றது பொற்பே என்றும் கடைசியாக இழந்தது கட்டே என்றும் இவையெல்லாம் அவன் காரணமாய் நிகழ்ந்தது என்றும் பலவிதமாகத் தாய் பேசுகிறாள். இப்படி எல்லாவற்றையும் இழந்து வெறுங்கையளாய் நின்ற நாயகி தாய் புலம்பலைக் கேட்கிறாள் அவன் பெயரையும் கேட்கிறாள். “நாமோ யாவையும் இழந்துவிட்டோம். தாரகமாக ஒன்றும் இங்கில்லை. இனி அவனிருந்தவிடம் ஏறச்சென்று என்னை இப்படி வறியளாக்கி நிறுத்துவது ‘தக்கதே’? என்று கேட்போம். என் காதல் மிகுதியைக் கண்ட பின்பாவது, அதுவும் அவனிருக்குமிடம் தேடிவந்து குறையிரப்பதைப் பார்த்தாவது என்னைக் கடாக்ஷித்து அருள் செய்து ‘செம்மையுடைய திருமார்பில் சேர்த்தானேல் நன்று’; அன்றிக்கே “மெய்ம்மை சொல்லி முகநோக்கி விடைதான் தருமேல் மிகநன்று” என்று உள்ளம் துணிகிறாள். இந்தத் துணிவு அவள் பெண்மைக்கு இயல்பிலே உண்டான அச்சத்தை விரட்டுகிறது. மனத்தீர்மானம் உடலுக்கு வலியளிக்கிறது. இரவிலே தாய்மார் தோழிமார் உறங்குகையில் வீட்டைவிட்டுத் தன்னந்தனியளாய் வெளியே கிளம்பிப் போய்விடுகிறாள். அவளைத் தேடி, விடிந்ததும் மகளை எழுப்பவந்த தாய் படுக்கையிலே மகளைக் காணவில்லை. தன் மகள் மனநிலையையும், அவள் வாழ்க்கையையும், செயல்களையும் கொண்டு ஆராய்கிறாள். “சரி, அவள் நம்மை விட்டு அவனிடம் தேடிச் சென்றுவிட்டாள். என்று அறுதியிடுகிறாள். மகளை இழந்தோம் என்ற ஏக்கம் அவள் மனத்தைச் சூழ்கிறது. அந்த ஏக்கத்திலே தன்மகள் செயலையும், அவள் உடல் நிலைமையையும், அவள் அவ்விதம் போனமையால் அவளுக்கும், குடிக்கும் வரக்கூடிய இன்னல்களையும் கூறிப் புலம்புவதாக அமைந்தது இப்பதிகம்.



இந் நாயகியே போன்று பரகால நாயகியும் தாய் வீட்டை விட்டுப் புறப்பட்டுச் செல்ல அந்நாயகியின் போக்கை உன்னி அவள் தாய் புலம்பியதாக ‘கள்வன்கொல்’ எனவரும் பதிகம் ஒன்றுள்ளது. ஆனால் இவள் போக்குக்கும் அவள் போக்குக்கும் ஒரு மாறுபாடுண்டு. இவள் தனியே தாய் வீட்டை விட்டு நாயகன் இடம் தேடிப்போனாள். அவள் நாயகனோடு உடன் போக்காகப் போனாள், ஆனால் இரண்டிலும் மகளை இழந்த தாய் புலம்பலே கூறப்படுகிறது. இவ்விடத்திலே ஈட்டின் அவதாரிகையில் ஒரு ஐதிஹ்யம் காணப்படுகிறது. நம் பூர்வாசாரியர்கள் பிரபந்தத்துக்கு வியாக்கியான மிடுமையில் சாதாரண உரைகாரர்கள் போன்றின்றிப் பாசுரங்கள் நிலையுணர்ந்து அப்பாசுரம் பாடிய பாத்திரமேயாகி, அப்பாத்திரங்களின் மனநிலையைத் தானும் அனுபவித்து அந்த ஸ்வாநுபூதி(தான் துய்க்குநிலை)யிலே நின்று வியாக்கியானமிட்டார்கள் என்பது அவர்களது வியாக்கியானம் கற்றவர் உணர்வர். அதனாலேயே பாசுரங்களில் வரும் பதங்கள், நிலைகள் முதலியன சாதாரண பண்டிதர் ஒருவருக்குத் தெரிவதைக் காட்டிலும் மிகுந்த சுவைமிக்க அவர்கள் உள்ளங்களுக்குத் தோன்றின. அவற்றின் தொனிப்பொருளை உணர்ந்து அவர்கள் வியாக்கியானம் அருளினார்கள். அதனால்தான் நம் கண்களுக்குத் தோன்றாத யோசனைகள் அவர்களுக்குத் தெற்றெனப்பட்டன என்பதை நாம் பலவிடங்களில் காணமுடியும். அதுமட்டுமல்ல ஓரளவு அவர்கள் வழியிலே போய் நம்மையும் அதில் ஈடுபடுத்திக் கொண்டால்தான் அவர்கள் யோசனைகளை நம்மால்

புரிந்துகொள்ளமுடியும், அவற்றை நாம் ரஸிக்க முடியும்.

இப்படிப்பட்ட ரஸிகர் கோஷ்டியிலே பரமாசார்யரான ஆளவந்தார். இப்பதிக வியாக்கியானம் அருளிச்செய்ய, முன்னமே "கள்வன்கொல்" பதிக வ்யாக்கியானம் கேட்டிருந்த ரஸிகர்களில் ஒருவர் "உண்ணுஞ்சோற்"றிற் பிராட்டிக்கோ "கள்வன்கொல்"லிற் பிராட்டிக்கே அஞ்சவேண்டுவது?" என்று கேட்டாராம். இருந்த மற்ற ரஸிகர்கள் "இருவராய்ப் போனவர்களுக்கு வயிறெறிய வேணுமோ? தனிவழியே போனவளுக்கன்றோ வயிறெறிய வேண்டுவது!" என்றார்களாம். ஆளவந்தார் "அங்ஙனன்று காணுங்கோள்! இருவராய்ப் போனவர்களாகையாலே இருவர்க்கும் அஞ்சவேணும். தனியே போனவளுக்கு ஒரு பயமுண்டோ? என்றருளிச் செய்தார் என்றுகூறி நம்பிள்ளைவாக்காக "அதுக்கடி-இருவரும் இருவர்க்கும் ஊமத்தங்காயாய் கடித்ததும் ஊர்ந்ததும் அறியார்கள்; இவள் அங்கே புக்கல்லது தரியாள் என்று கருத்து. "அள்ளலம் பூங்கழனி அணியாலி புகுவர் கொலோ? அன்றிமே லங்காவாரத்திலோ புகுவர் போகினும் இருவராயல்லது இராது அங்கு? 'தனியே போன இவள் என்படுகிறாளோ' என்று மிகவும் நொந்து கூப்பிடுகிறாள் இவளுடைய திருத்தாயார் (ஊமத்தங்காயாய் என்பது பிச்சேற்றும் சரக்காய் என்று பொருள்படும்.)

இப்படிப் போன நாயகியை உன்னி, இப்படி எங்களை எல்லாம் நினையாதே போவளோ! ஏ பூவைப்புட்களே கூறுங்கள், போன அவள் கண்ணீர்மல்க என்படுகிறாளோ! ஐயோ இவள் இடை நோவுமே! அங்குப்போய் மனம் களிப்புறுவளோ! மனம் நைவளோ! எப்படிப்போய்ச் சேர்வளோ! மனம் கசிவளோ! குடிப்பழியைக் கருதாதே போய்விட்டாளே என்றெல்லாம் எண்ணிப் புலம்புவதாக வருவது இப்பதிகம். இனி பதிகத்தை நோக்குவோம்.

## முதற்பாட்டு



**உண்ணும் சோறு பருகுநீர்**
**தின்னும் வெற்றிலையும் எல்லாம்**
**கண்ணன் எம்பெருமான் என்றென்றே**
**கண்கள் நீர் மல்கி**
**மண்ணினுள் அவன் சேர்**
**வளம் மிக்கவனூர் வினவித்**
**திண்ணம் என்இளமான்**
**புகும்ஊர் திருக்கோளூரே.**

உண்ணுகின்ற சோறும், பருகும் நீரும், மென்றுதின்னும் வெற்றிலையும் இவையெல்லாம் எனக்கு ஸ்வாமியான கிருஷ்ணன்தான் என்றே பலகாலும் தியானித்து கண்கள் நீர் சோர்ந்து இப்பூமியிலே அவன் குணங்கள் நன்கு செழித்த ஊரைக்கேட்டு என்னுடைய மான்போன்ற கண்களை உடைய சிறுமி போய்ச்சேரும் இடம் திருக்கோளூர்தான். நிச்சயம்.

### உண்ணும் சோறு

உயிரைப் போக்காது காத்து அதற்குத் தாரகமாக நிற்கும் சோறு. பருக்கை. சோறு என்பது எல்லா உணவுக்கும் மூலக்கணை. உயர்ந்த உணவுமட்டுமல்ல உயிரை ஒரு மயிரிழையில் ஊசலாடும்படியாவது காக்கும் புற்கை. அதி அல்பமான சோற்றுப் பருக்கை முதல் எல்லா உணவுப் பொருள்களும்.

### பருகு நீர்

குடிக்கும் நீர். நீர் என்பது நாம் உட்கொள்ளும் எல்லா திரவ பதார்த்தங்களுக்கும் உபலக்ஷணம். உண்ட சோற்றைச் சமிப்பித்து சத்தை உடலில் எங்கும் பரப்ப உதவும் போஷகப் பொருளான நீர்ப்பண்டங்கள்.

### தின்னும் வெற்றிலை

போக்யப் பொருளான வெற்றிலை. இது பிற போக்கியப்

பொருள்கள் எல்லாவற்றுக்கும் உபலக்ஷணம். ஒரு உயிர் உலகில் விரும்பும் தாரக போஷக போக்யப்பொருள்கள் அடங்கலும்.

**கண்ணன் எம்பெருமான்**

என் ஸ்வாமியான கண்ணனே. அப்பொருள்கள் தாரகமல்ல. கண்ணனே என் ஸத்தைக்குத் தாரகன். அவனையொழிந்த அப்பொருள்கள் பயனற்றன. என் உயிர்க்குத் தாரகன் அவனே. அவனையே உண்பேன் அவனையே பருகுவேன். அவனே போகப் பொருள். அவன் புகழ்தான் என் உயிருக்குத் தாரகம். "கணை நாணில் ஓவாத் தொழில் சார்ங்கன் தொலைசீரை நன்னெஞ்சே! ஓவாத ஊணாக உண்" என்று தன் நெஞ்சைப் பயிற்றியவளல்லவா.

**என்றென்றே**

இந்நினைவு ஒருகால் இருகால் அல்ல. ஒருநாள் இருநாளல்ல. எந்நாளும், எப்போதும் இதுவே நினைவு இதுவே கொள்கை.

**கண்கள் நீர்மல்கி**

எப்போதும் கண்களிலே நீர்தேக்கிட. அவன் நினைவிலிருந்தால் மகிழ்ச்சியிலே நீர் தேக்குகின்றது. அவன் அவள் மனத்திலிருந்து தன்னை மறைத்துக்கொண்டால் பிரிவுத்துயரிலே கண்ணீர் வெள்ளமிடுகின்றது. இப்படி எவ்வகையிலேனும் கண்ணீர் நீர்த்தேக்கம் மாறாதவன். இப்போது அவனிருக்கும் இடம் நாடித் துயரக் கண்ணீர் சோர.

**மண்ணினுள்**

இந்த பூமியிலே "வைகுண்டேது பரே லோகே" என்றபடி அவன் ஏழுலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருக்கும் இடம் நாடியல்ல. இந்த அவனுடைய லீலா விபூதியிலே. அவன் தன் எளிமை தோன்ற அங்கிருந்து சேதனர்க்கு



முகங்கொடுக்கவென்றே எழுந்தருளியுள்ள இந்த பூமியிலே.

**அவன் சேர் வளமிக்கவனூர்**

இங்கேயும் அவன் கல்யாண குணங்களெல்லாம் செழித்துத் தோன்றும்படியிருக்கும் அவனுடைய ஊர். அதுவும் ஒருநாள் இரு நாள் தங்கிப் போகை யன்றிக்கே அவன் உகந்து நித்யவாசம் செய்யும் ஊர்.

**வினவி**

கேட்டு, தானறிந்தவளேயானாலும் நல்ல சிஷ்டையாதலால் பெரியோரிடமும் கேட்டு, தன் மனத்தில் தெரிந்ததைப் பிறர் வாயிலும் கேட்டு உறுதி செய்துகொண்டு.

**என் இளமான் புகும் ஊர்**

மான் போன்ற மருண்ட பார்வை உடைய என் பெண். பருவம் முதிராதே இளையளான என் சிறுமி. அவள் போய்ச் சேரும் இடம்.

**திருக்கோளூரே**

திருக்கோளூர் என்னும் தலம்தான். வேறு ஊராக இருக்க முடியாது.

**திண்ணம்**

இது நிச்சயம். இதில் ஐயமே இல்லை. மனையை நீத்து வெளிப்போந்த தன்மகள் எங்கு போயிருப்பாள் என்று தாய் ஆராய்கிறாள். தன் மகள் தன்மையை வெகுகாலமாக அறிந்தவளாதலின் அம் மகள் நினைவுகளையும் பேச்சுக்களையும் கொண்டு ஆராய்ந்து இப்படிப்பட்ட மனநிலையுடைய என் மகள், போக வேண்டுமானால் அவள் இவ்வூருக்கே போயிருக்க வேண்டும் என்று துணிகிறாள்.

**கண்கள் நீர்மல்கி**

இவ்விடத்திலே ஈட்டில் ஒரு ஐதிஹ்யம் காண்கிறது. "நஞ்சீயர்" பிள்ளை திருநறையூரரோடே மூன்று திருவாய் மொழி கேட்டேன். அதில் எனக்கு ஒருவார்த்தைகளும் போகாது. ஒரு திருவாய் மொழியைப் பிரஸ்தாவியா அவர் சிதிலராய்க் கண்ணும் கண்ண நீருமாய் இருக்கும் இருப்பை நினைத்திருப்பன்" என்றார். இப்படி அவன் சீர்கேட்டு உருகிக் கண்ணீர் பொழிய நிற்பாரைக் காண்பரே ஒருபெரும்பாக்யம் என்பது குறிப்பு.

ஈட்டிலே மற்றொரு குறிப்பும் காட்டப்படுகிறது. "அநந்தாழ்வான் சோழகுலாந்தகனிலேகிருஷி பண்ணி யிருக்கிறான். ஒரு ஸ்ரீ வைஷ்ணவனைக் கண்டு 'உம்முடைய ஊர் எது? என்று கேட்க, 'என் ஊர் திருக்கோளூர்' என்ன 'அங்கு நின்றும் போந்ததென்?' என்ன 'தேஹ யாத்ரை நடவாமே போந்தேன்' என்ன 'அவ்வூரில் கழுதையை மேய்த்து ஜீவிக்க மாட்டிற்றிலையோ? நிலை நின்ற ஜீவனத்தை விட்டுப் போந்தாயாகாதே?' என்றானாம். திருக்கோளூர் எம்பெருமான் ஸேவை ஆன்மாவுக்கு நித்ய தாரகமாய்க் கிடைத்திருக்க அதைவிட்டு தேக போஷனையே பெரிதென்று எண்ணி நித்ய வஸ்துவை இழந்து வந்தாயே என்று அநந்தாழ்வான் அந்த வைஷ்ணவனுடைய இழவுக்குப் பரிந்தார். கழுதையை மேய்த்துத் தான் வயிற்றைக் கழுவவேண்டும் என்ற இழிநிலை வந்தாலும் திருக்கோளூர் தலம் விட்டுப் போக வொண்ணாதபடியாயிற்று அவ்வூர் எம்பெருமான் குண ஸௌந்தர்யங்களின் நிலை என்பது குறிப்பு.

மற்றொரு ரஸமான குறிப்பும் ஈட்டிலே காட்டப்படுகிறது. "எம்பெருமானார் தெற்கே எழுந்தருளா நிற்க எதிரே வருகிறாள் ஒரு பெண்பிள்ளையைக் கண்டு 'எங்கு நின்றும்?' என்ன 'திருக்கோளூரில் நின்றும்' என்ன 'திருக்கோளூரில் நின்றும்' என்ன அவ்வூரில் புக்க பெண்களும் போகக்கடவராயிருப்பர்களோ? என்றருளிச் செய்தார்."

ஆண்களே பெண்களாய் மாறிப் புகத்தேடுமூராயிற்றே



திருக்கோளூர். பெண்ணான நீ எப்படி அவ்வூரை விட்டு வந்தாய் என்பது தொனி. அவ்வெம்பெருமானின் சௌந்தர்ய சோபை இருக்கும்படி அது.

## இரண்டாம் பாட்டு

**"ஊரும் நாடும் உலகமும் தன்னைப்போல்**
**அவனுடைய**
**பெரும் தார்களுமே பிதற்றக் கற்பு வானிடறி**
**சேரும் நல்லவளம்சேர் பழனத்திருக் கோளூர்க்கே**
**போருங்கொல் உரையீர் கொடியேன் கொடி பூவைகளே!"**

தான் பிறந்த ஊரும், ஊரையுடைய நாடும், நாட்டையுள்ளடக்கிய உலகமும் தன்னைப்போலவே அவனுடைய திருநாமங்களையும் திருச்சின்னங்களையும் அழைத்துப் புலம்பும்படியாக, பெண்களுக்குரிய சிறந்த வரம்புகளை உதைத்துத் தள்ளி விட்டு நல்ல வளம் சிறந்த கழனிகளை உடைத்தான திருக்கோளூர் போகவென்று புறப்பட்ட, மஹாபாபம் செய்தவளாகிய என்னுடைய, கொடி போன்ற நாயகி அங்குபோய்ச் சேர்வாளா. ஏ பூவைகளே உரையுங்கள்!

**ஊரும் நாடும் உலகமும்**

அவள் பட்டபடியெல்லாம் அவள் பிறந்த இவ்வூரும், இவ்வூரை ஒரு பகுதியாகக் கொண்ட இந்நாடும், இந்நாட்டை ஒரு மூலையில் உடைய இவ்வுலகமும், உலகமும் என்பது அதில் வாழ் உயிர்களுக்கு ஆகுபெயராய் நின்றது. எலலா சீவராசிகளும்.

இவ்வூரைவிட்டு இவள் போவானேன்? இங்கென்ன குறை அவளுக்கு. அவளோடு உசாவிப் பொழுதுபோக்க ஆளின்மையா? இல்லை போகுமிடம் இதனிலும் மேலென்று போனாளா? அல்லது இங்குள்ளாரைத் தன்னைப் போலாக்கியதுபோல அங்குள்ளாரையும் திருத்தப்

போனாளா?

**தன்னைப்போல்........ பிதற்ற**

ஊரிலும் நாட்டிலும் உலகத்திலும் உள்ள உயிர்களெல்லாம் தன்னைப் போலாம்படி பண்ணினவள் "இன்று நம்மளவும் வரவேறிப் பாயும்படியிறே இவள் ஸம்பந்தம் வெள்ளமிட்டபடி" என்பது ஈடு. தன்னைப் போன்ற மனித வர்க்கம் மட்டுமேயல்ல "காலை எழுந்திருந்து கரிய குருவிக் கணங்கள் மாலின் வரவு சொல்லி" என்றபடி பறவைகளும் அவன் பேர் சொல்லிப் புலம்ப வைத்தவள். அவை எல்லாம் இவள்பால் மோகித்த அவன் இவளிருந்த இடம் தேடி வந்தமை கூவிற்று. இவளோ இவன் பேர் பிதற்றி அவனிருந்தவிடம் தேடிப் போயினாள் என்கிறாள்.

**கற்பு வான் இடறி**

வான் கற்பு இடறி என்று கூட்டுக. அடக்கவொண்ணாத பெண் வரம்புகளைக் கடந்து; மலைபோலத் தடுத்து நிற்கும் நியதிகளை ஒரு சிறு கல்லை இடறுவதுபோல் உதைத்துத் தள்ளி. கற்பு-நிறை. நிறைய மட்டுமன்று பெருங்கரையை எறிந்து செல்லும் வெள்ளம் மற்றச் சிறு கரைகளையும் அழித்தேறுவது போன்று நாண் மடம் அச்சம் முதலியவற்றையும் உதறி. இவ்விடத்திலே வான் கற்பு என்றதற்கு வலிய அறிவு என்றும் பெரிய ஞானம் என்றும் இரண்டு வேறுவித யோசனைகள் ஈட்டிலே கூறப்பெறுகின்றன.

**சேரும்**

"இங்கே பிறர் உபசாரம் செய்ய இருப்பவள் அங்கே தன் வயிறு (தானே) வளர்க்கப் போவதே! இங்கே பிறர் திருந்தும்படியிருக்கிற இவள் அங்கே திருந்தின இடம் தேடிப் போவதே!" என்பது ஈடு. தன் மரியாதையைக் குலைத்துக் கொண்டு போய்ச் சேரவென்று புறப்பட்ட,

**நல்வளம் சேர் பழனத் திருக்கோளூர்க்கே**



நல்லவளம் செறிந்த கழனிகளையுடைய திருக்கோளூருக்கே. அவனும் விரும்பி வந்து நித்யவாசம் செய்யும்படியான கண்ணுக்கினிய செழிப்புடைய கழனிகள் சூழ்ந்த தலம்.

**போருங்கொல்**

போய்ச் சேர்வளா. இடரின்றிப் போய்ச் சேர்வளா? வழியில் தடையின்றி யிருக்க வேண்டுமே. ஆபத்தின்றி யிருக்கவேணுமே என்று பரிகிறாள் தாய்.

**கொடியேன்**

கொடிய பாபத்தைப் பண்ணினவள் நான். இல்லாவிடில் என் அரவணைப்பில் இதுகாறும் வளர்ந்தவள் இப்படி என்னைவிட்டுப் போவளா? இது என் பாபமா? குடியின் பாபமா? "பெற்ற தாயாரை விட்டகலுகை குடிஸ்வபாவம் போலே காணும். 'கள்வன் கொல்லிலும் நல்லதோர் தாமரைப் பொய்கையிலும் உண்டிறே" என்பது ஈடு.

**கொடி**

கொடிபோன்ற மென்மையுடையவள். தன்மை யுடையவள்! என் பெண். தனி வழி போகும் உரமுடையளல்லள். உடல் மென்மையானாலும் தன்பற்றிடம் தான் தேடும் தன்மையுடைய கொடிபோன்று உற்றபற்றுக்கோடு தேடிப்போனவள். "கோல் தேடியோடும் கொழுந்ததே போன்றதே மால் தேடியோடும் மனம்" என்றபடி அவனைத் தேடும் மனமுடைய கொடி.

**பூவைகளே உரையீர்!**

ஏ! பூவைகளே! என் பெண் வளர்த்த பூவைகளே! அவளை வளர்த்த எங்களைப் பிரிய ஒருப்பட்டாலும் தான் வளர்த்த உங்களைப் பிரிய ஒருப்படாதவளல்லவளா அவள். அவள் பிரிவில் நாங்கள்படும் துன்பம் உணராதவளாயினும் அப்பிரிவில் நீங்கள் படும் துன்பத்துக்கிரங்குபவளாயிற்றே.

அதனால் எங்களிலும் அவளை, அவள் தன்மையை நன்கறிந்த பூவைகளே.

**உரையீர்**

சொல்லுங்கள். அவள் எங்களை மறந்தாலும் நீங்களாவது எங்கள் பேரில் அருள் கூர்ந்து சொல்லுங்கள். இங்கு "போருங்கொல்" என்பதற்கு வேறு ஒரு பொருளும் கூறப்பெறுகின்றது. என் மகள் திரும்ப வருவாளா? என்று எங்களைத் தான் நினைந்து வாரவிட்டாலும் உங்களை நோக்கியாவது அவள் திரும்ப வருவாளா?

இரண்டு பொருளிலும் தம்மைவிடப் பூவைகள் பால் தலைவிக்குப் பரிவு அதிகம் என்பதே அடிப்படை உண்மைதானே? இராமனோடு உடன்சென்றனர் ஸீதை இலக்ஷ்மணன் இருவரும். நள்ளிரவில் நகரமக்களை உறங்கவைத்துப் பிரியும் இராமன் சுமந்திரனிடம் சில கூறியனுப்புகிறான். இலக்ஷ்மணனும் கோபத்தில் பேசுகிறான். கடைசியாக சுமந்திரன் ஸீதையிடம் உனக்கேதேனும் செய்தி உண்டா என்று கேட்க அவள் மாமியர்க்கு வணக்கம் கூறி,

**யான்வளர் பொன்னிறப் பூவையும் கிளியும்**
**போற்றுகென்று என்னுடை எங்கையர்க்கு**
**உணர்த்துவாய்"** *(கம்ப.அயோ -நகர்நீங்கு 40)*

என்றல்லவா முடித்தாள். எங்கள் பிரிவில் வருந்தாமலிருக்க வேண்டும் விரைவில் வந்துவிடுவோம் என்று மாமியாரையும் அன்னைமாரையும் தேற்றும் என்று கூறவில்லை. நான் வளர்த்த பூவையும் கிளியும் என் பிரிவால் வருந்தும் அவற்றைத் தேறி வளர்க்கும்படி என் தங்கைமாரை நான் வேண்டியதாகக் கூறும் என்றல்லவா சானகி கூறினாள். வளர்ப்புண்ட பாசத்தினும் வளர்த்த பாசம் மிகுதி என்பதைத்தானே இது காட்டுகின்றது. அம்முறையில்தான் நாயகியின் தாயும் தன்னைவிடப் பூவைகள் தன் மகளுக்கு அந்தரங்கம். அவள் பரிவு அவற்றினிடம் மிகுதி என்ற முறையிலே பூவைகளைக் கேட்கிறாள்.



## மூன்றாம் பாட்டு

**பூவை பைங்கிளிகள்**
**பந்து தூதை பூம்புட்டில்கள்**
**யாவையும் திருமால்**
**திருநாமங்களே கூவி எழும்என்**
**பாவைபோய் இனித்**
**தண்பழனத் திருக்கோளூர்க்கே**
**கோவை வாய் துடிப்ப**
**மழைக்கண்ணோடு என்செய்யுங் கொலோ**

பூவைகள், பச்சைக்கிளி, பந்து, சிறு சோற்றுப்பானை, பூம்புட்டில் இப்படிப்பட்ட அவள் விளையாட்டுப் பொருள்களால் கிட்டும் இன்பமெல்லாம் திருமாலின் திருநாமங்களையே சொல்லிப் பெற்றெழுபவளாகிய என் பாவை போன்ற மகள் இனி குளிர்ந்த பழனங்களையுடைய திருக்கோளூர்க்குப் போய் அங்கே தன் கொவ்வைப் பழம் போன்ற உதடுகள் துடிக்க மழைபோல் கண்ணீர் பெருக நின்று என்படுகிறாளோ!

**பூவை**

அவள் வளர்த்து வந்த பூவைகள்.

**பைங்கிளிகள்**

அதேபோன்று அவளால் வளர்க்கப்பட்ட பச்சைக் கிளிகள்.

**பந்து**

அவள் தோழிமாரோடு இடை நுடங்க ஓடி அடிக்கும் பந்துகள்.

**தூதை**

தோழியரோடு மணல் வீடுகட்டி சிறு சோறு சமைக்கும் சிறு மண் சட்டிகளும்.

**பூம்புட்டில்கள்**

அழகிய மலர்களைக் கொய்து அவள் இட்டுவைக்கும் பூக்குடலைகள்.

**யாவையும்**

இவையெல்லாம் என்பது ஒரு பொருள்; இவற்றை எல்லாம் என்பது ஒரு பொருள்; இவற்றால் அவள் பெற்றுவந்த மனமகிழ்வெல்லாம் என்பது ஒரு பொருள்.

**திருமால் திருநாமங்களே கூவி எழும்**

ஸ்ரீமந் நாராயணனுடைய பெயரையே கூவி எழுவனவாயின என்பது ஒரு பொருள்; அவைகளை எல்லாம் என்மகள் திருமால் திருப்பெயரையிட்டே அழைப்பள் என்பது ஒரு பொருள். அவள் பெற்ற மனநிறைவை எல்லாம் திருமால் திருநாமங்களையே சொல்லி அதன்மூலம் நிறைவு பெறுபவளான என் மகள் என்பது ஒரு பொருள்.

முன் 'யாவையும்' என்பதில் சொன்ன மூன்று பொருள்களோடு இம்மூன்று பொருள்களும் நிரல்நிறையாக்கிச் சேர்த்துக் கொள்ள வேண்டும். இம் மூன்றிலும் முதலாவதான பொருள் பொருந்தாது. யாவையும் அவன் பெயரும் கூறிஎழ கரிய குருவி கணங்கள் மாலின் வரவுசொல்லி என்றாற்போல என்று சொல்லலாமோ எனில் ஒருவேளை பூவைக்கும் பைங்கிளிக்கும் சேரலாம். அசேதனப் பொருளான பந்து தூதை பூம்புட்டில்கள் இவற்றோடு அப்பொருள் சேராது. இதை ஈட்டில் வெகு நயமாகக் காட்டப்படுகிறது. "ஊரும் நாடும் உலகமும் தன்னைப்போல் அவனுடைய நாமத்தைச் சொல்லிற்றானாலாகாதோ" என்று பெற்றி (வ்யாக்யானம் கேட்டவரில் ஒருவர்) நம்பிள்ளையைக் கேட்க "அதுக்கு வ்யபிசாரமுண்டு; பந்து தூதை என்ற விடத்தே தட்டுப் பிறக்கும் என்ன "அங்ஙனயிறே" என்று இசைந்து போனார் என்பது ஈடு. இனி இரண்டாவது பொருளான



இவற்றை எல்லாம் திருமால் திருப்பெயரிட்டே அழைத்தாள் என்பது மிகவும் பொருந்துவது போன்றும் ரஸமாகவும் காணப்படினும் அப்பொருள் "உண்ணும் சோறுபருகு நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்" என்றிருக்கும் இவளுடைய பக்தியின் முதிர்வுக்குச் சேராது என்று அதைக் கழித்தனர் ஆசார்யர்கள். இவற்றில் இரண்டாவது பொருளிலேயே மூன்றாவது பொருளின் பாவம் தொனிக்கத்தான் செய்யும். "எல்லாம் கண்ணன்" என்ற மனநிலை ஏற்பட்டால் தான் போகோபகரணப் பொருள்களை அவன் பெயரை இட்டே அழைக்கத் தோன்றும். அந்தந்தப் பொருளை அனுபவிக்கும் போது அப்பொருள் கண்ணனே என்ற நிலையோடு அனுபவிக்கையில் பிறர் அப்பொருளைத் துய்க்கும்போது அடையும் இன்பம் போன்றின்றி தனித்த ஒரு இன்பநிலை தோன்றத்தான் செய்யும். இப்படி அப்பொருள்களை எல்லாம் அவன் பேர் கொண்டே அழைத்து அவற்றோடு அவள் பெற்ற அனுபவமெல்லாம் அவனோடு பெற்றதாகவே உணரும் என்மகள் என்று பொருள் கொள்ள இடம் இருப்பதாகத்தான் நம் போல்வார்க்குக் காண்கிறது.

எனினும் மஹாசார்யர்கள் தனியாக ஒரு பொருள் காட்டியிருக்கின்றனர். அவர்கள் திருவுள்ளப்படி என்று அவன் திருநாமத்தைச் சுவைபடச் சொல்லி அதில் லயித்து அனுபவம் பெறக்கற்றாளோ அன்றுமுதல் அதுவரை அவளுக்கு விளையாட்டுப் பொருள்களாக உபயோகப்பட்டவை யெல்லாம் இன்னாவாயின. அவற்றைப் பற்றிக் கூறி அவற்றோடு அவள் விளையாடி அனுபவிக்க வேண்டாமா என்று கூறினாலும் போதும் அவற்றைக் கொண்டு கொடுக்கக்கூட வேண்டாம் அவள் சீறி விழும்படியாயிற்று. அவள் நிலை" என்று திருவுள்ளம் பற்றி "உந்தையோ இறந்தனன். உம்முன் நீத்தனன். வந்ததும் அன்னைதன்வரத்தின் மைந்த! நீ அந்தமில் பேரரசளித்தி" (கம்ப-அயோ-ஆறுசெவி-11) என்று கூறிய வசிஷ்டரை தன் சிஷ்யக் கிரமத்தையும் மறந்து சபைநடுவே

“நஞ்சினை நுகர் என நடுங்குவாரினும் அஞ்சினன் அயர்ந்தன”னாய் (கம்ப-அயோ-ஆறுசெவி-12) “மூன்றுல கினுக்கு ஒரு முதல்வனாய் முதுல் தோன்றினன், இருக்கயான் மகுடம் சூடுதல் சான்றவர் உரைசெயத் தருமமாயதே! ஈன்றவள் செய்கையின் இழுக்குண்டாகுமோ” (கம்ப-அயோ-ஆறுசெவி-14) என்றும் இதை நீர் நன்று என்றலின் “இடைவரு காலமீண்டிரண்டு நீத்தது. கடைவரு காலத்தின் கலியின் ஆட்சியோ” **(கம்ப-அயோ-ஆறுசெவி-15)** என்று தன்னைமறந்து பேசிய பரதன் நிலையை உவமை காட்டுவர் ஆசிரியர்கள். (ஈட்டில் வால்மீக இராமாயண ச்லோகங்கள் ஆளப்பட்டன. ஓரளவு அவற்றை ஒட்டிய கம்பர் பாட்டுக்கள் இங்கு காட்டப்பெற்றன.)

**என்பாவை**

சிலையில் வடித்தாற்போன்ற வடிவையுடைய என் பெண். பிற பெண்களுக்கில்லாத வடிவழகும் பெண்தன்மையும் உடைய என் மகள்.

**இனி**

‘லீலோபகரணங்களால் கொள்ளும் கார்யமும் அவனேயாம் படியான இந்த ப்ராவண்யத்துக்கு (காதல் முதிர்ச்சிக்கு) மேலே அங்குப் போய்ப் பெறுவது என்னாகப் போனாளோ’ என்பது ஈடு.

**போய்**

இவ்வளவு அன்புடன் பெற்று வளர்த்த என்னை நீங்கிப்போய் போகிறேன் என்று ஒரு வார்த்தைகூடச் சொல்லாதே அவள் எங்குபோனாளோ என்று நான் தவிக்கும்படி என்னைவிட்டுப்போய்.

**தண்பழனத் திருக்கோளூர்க்கே**

குளிர்ந்த மருத வைப்பையுடைய திருக்கோளூர்க்கு.



அவ்வூரில் சென்று.

**கோவை வாய் துடிப்ப**

கொவ்வைப் பழம்போன்ற தன் அதரங்கள் நெளிக்க. ஆங்கு போய் ஏதேனும் பேசுவளோ! பேசத்தான் மனத்திண்மையிருக்குமோ! இராது. “போகும்போது அவளைக் கண்டவுடன் “பிரியேன் என்று பிரிந்தாய்; வருகிறேன் என்று வந்தில்லை: என்னைத் தனியே இட்டுவைத்தாய்’ நான் வருமளவும் இருந்தாய்” என்றாற்போலேயிருக்கிற சில சொல்ல நினைக்குமே. அது தோற்றும்படி உதடு நெளிக்கிறபடி” என்பது ஈடு. அவன்பால் இவர்கள் கூற நினைத்த குறைகள் அவனைக் கண்டதும் எங்கேயோ பறந்துவிடுவது நாயகிக்கு இயல்பு. அந்நாயகி பாவம்பெற்ற பக்தர்களுக்கியல்பு நாயகன் வந்தால் “துணிப்பேன் யானென்பேன் மன் அந்நிலையே அவற் காணில் தனித்தே தாழும்இத் தனியில் நெஞ்சே” என்று தலைவி கூற்றாகவரும் கலித்தொகை. “காணுங்கால் காணேன் தவறாய; காணக்கால் காணேன் தவறல்லவை” என்பது குறள். இத்தகையை உத்தம நாயகி பாவமுடைய பத்தர் நிலையும் இதுவே.

இராமனை மீள அழைக்கச் சென்ற பரதன் இராமனைக் கண்டால் என்ன சொல்லவேண்டும் என்று போகும் வழியிலேயே பயிற்சி செய்துகொண்டே போனானாம். “தருமத்தை நோக்கினாயில்லை. அருளைத் துறந்தாய். முறைமையைக் கைவிட்டாய்” என்றெல்லாம் சொல்ல வேண்டுமென்று அவ்வார்த்தைகளை அத்யயனம் செய்வார் போன்று உருப்போட்டுக்கொண்டே போனான். இராமனைப் பார்த்தான். அந்த வடிவழகிலே ஈடுபட்டவன் சொல்லவந்ததைச் சொல்லாமட்டும் விடவில்லை. மறந்தே போய்விட்டான் என்கிறார் கம்பர்.

**“அறந்தனை நினைந்திலை அருளை நீத்தனை**
**துறந்தனை முறைமையை என்னும் சொல்லினான்**
**மறந்தனன் மலரடி வந்து வீழ்ந்தனன்”**

*(கம்ப அயா-திருவடி சூட்டு. -53)*

என்பர் கம்பர் வாக்கு.

**மழைக்கணொடு**

கண்கள் நீர்மேகம்போலக் கண்ணீர் தாரையாகப் பெருக. அவனைக்கண்ட மகிழ்ச்சியிலே வரும் ஆனந்தக் கண்ணீர். இப்படிச் சொல்லவந்ததைச் சொல்ல வொட்டாது மனம் மறக்கடிக்க பார்க்க வேண்டியவனை நன்கு பார்த்து அனுபவிக்க வொட்டாமல் கண்ணீர் கண்ணை மறைக்க.

**என் செய்யுங் கொலோ**

என்னபாடுபடுகிறாளோ அப்போதைய அவள் சோபையைக் காண முடியாது போனோமே என்று வருந்துகிறாள் தாய். "நம்மையும் பிறரையும் விட்டு அவன் திருநாமங்களை அநுபவிக்கிற போதை அழகு காணப்பெற்றோம்! அவன் தன்னையே கண்டனுபவிக்கிற போதை அழகு காணப்பெற்றிலோமே! அநுஸந்தான வேளையிற் போலன்றிறே கண்டால் பிறக்கும் விகாரங்கள்....... அலாபத்தோடேயிருக்கும் இருப்புக் கண்டேன். லாபத்தோடேயிருக்கும் இருப்புக்காணப் பெற்றிலேன் என்கிறாள்" என்பது ஈடு.

## நான்காம் பாட்டு

**கொல்லை என்பர் கொலோ? குணம் மிக்கனள் என்பர் கொலோ?**
**சில்லைவாய்ப் பெண்டுகள் அயற்சேரி உள்ளாரும் எல்லே!**
**செல்வம் மல்கி அவன்கிடந்த திருக்கோளூர்க்கே**
**மெல்லிடை நுடங்க இளமான் செல்ல மேவினளே.**

இளம் மான்போன்ற என் மகள் பெருகிற செல்வத்தையுடையவனான அவன் கண் வளர்ந்தருளும் திருக்கோளூருக்கு, மெல்லிய தன் இடைதுவளப் போவதாக ஒருப்பட்டுப் போய் விட்டாள். (இப்படிப்போன அவளை) சிலுகிடுகையே செய்யும் வாய்படைத்த இச்சேரிப் பெண்களும், அயற்சேரிலுள்ளாரும், வரம்பழிந்தவள் என்று



சொல்லுவார்களோ அன்றி நல்ல குணவதி என்று சொல்வார்களோ ஐயோ என்னவாகுமோ?

**கொல்லை என்பர் கொலோ**

வரம் பழிந்தவள், கட்டு மீறியவள் என்று சொல்லுவார்களோ? ஒரு கன்னிக்குரிய காவலை மீறியவள்? தன் நிலைமைக்கு மீறிய ஒழுக்கமுடையவள் என்பரோ? என்று பழிப்பரோ.

**குணம் மிக்கனள் என்பர் கொலோ**

தன் சொரூபத்துக்கும் குணத்துக்கும் பொருந்தினதையே செய்தாள், அப்பெண் நல்ல குணவதி என்று கொண்டாடுவரோ.

இவ்விரண்டு வினாக்களுக்கும் பல நிலையில் பொருள் காட்டப்படுகிறது ஈட்டிலே அது வருமாறு:

இவள் விதி அதிக்ரமம் பண்ணினாள் என்பார்களோ அன்றைக்கே ஸித்தாந்தம் தன்னையே சொல்லுவார்களோ; ஓரளவிலே நின்று நிஷேதித்தவற்றைக் கொண்டு இது அப்ராப்தம் என்பார்களோ: ருசி ஸ்வபாவத்தாலும் இது ப்ராப்தம் என்பார்களோ ஸாதன விதிகளிலே நின்று தடுமாறுவார்களோ: ஸ்வஸ்வரூபத்தைப் பார்த்துத் தெளிவார்களோ; உபாயாம்சத்தைப் பற்றி நின்று இது கடவதல்ல என்பார்களோ: ப்ராப்தாவின் (அடைபவனின்) சொரூபத்தையும் ப்ராப்ய (அடையப்படும் பொருள்) ஸ்வரூபத்தையும் பார்த்து இது கடவது என்பார்களோ; அந்ய நிஷேதபூர்வகமான ஸ்வரூப ஞானம் பிறந்தால் புறப்பட்ட ப்ராதி இல்லை; ஸ்வரூபாநு ரூபமான ப்ராப்யாநுஸந்தானம் பண்ணினால் போய்ப்புக்கவல்லது நிற்கவொண்ணாது; விதியைப் பார்த்து கர்ஹிப்பார்களோ; காமவசனத்தைப் பார்த்து நன்றென்பர்களோ?

**சில்லைவாய்ப் பெண்டுகள்**

எப்போதும் ஏதேனும் பேசிச் சண்டையிடும் வாய்படைத்த பெண்டிர். வாயாடிகள் ஏதேனும் ஒன்றைப் பற்றி அது தமக்கு சம்பந்தமாயினும் அல்லவாயினும், அதைப்பற்றி அலசிப் பேசிக் கூச்சலிடுமவர் (இவர்களை (ஸ்பாபதேசத்தில்) அத்யவஸாய நிஷ்டர் என்று அரும்பதம் கூறும்.)

**அயற்சேரி உள்ளபுரும்**

பிறசேரியில் உள்ளவரும். என் மகள் இருந்த ஊரிலே இருந்து அவள் நிலையெல்லாம் கண்டறியாதவர்கள். ஏதும் நேரிலறியாராய் ஏதோ கேள்வியுள்ளதைக் கொண்டு பேசுமவர். (இவர்களை த்வராநிஷ்டர் என்று கூறும் அரும்பதம்.)

**எல்லே!**

பெண்டிரும் அயற்சேரியரும் மேலே சொன்ன இரண்டில் என் பெண்ணை எவ்வகையில் சேர்க்கப்போகின்றார்களோ? அவளைப் பழித்து ஒதுக்குவார்களோ அல்லது புகழ்ந்து போற்றுவார்களோ? எப்படி முடியுமோ என்று தாய் அங்கலாய்க்கிறாள்.

**செல்வம் மல்கி**

தன்னுடைய செல்வமெல்லாம் பெருகித் தோன்றும்படி, எல்லாச் செல்வங்களும், பொருள், வடிவு குணம் முதலிய எண் பொருளும்.

**அவன் கிடந்த**

அவன் கண் வளர்ந்தருளிய அவன் வருகை பார்த்து இவள் கிடக்க வேண்டியிருக்க அந்நிலை மாறி இவள் வருகை பார்த்து அவன் சாய்ந்து கிடக்கிற.

**திருக்கோளூர்க்கே**

செல்வமெல்லாம் கொண்ட ஊரான திருக்கோளூர்க்கு, செல்வம் மல்கி அவன் கிடந்ததாலே அப்பேர் பெற்ற ஊர்.



**மெல்லிடை நுடங்க**

தன் மெல்லிய இடை துவள, இழை போன்ற தன் நுண் மருங்குல் எங்கு இறுமோ என்று கண்டார் அஞ்சும் வண்ணம் துவண்டு துவண்டு அசைய. "இவ்விடையைக் கொண்டு இவள் நடக்கப்புக்கால் எதிரே புறப்பட்டு வர வேண்டாவோ" என்று ஈடு.

**இளமான்**

இன்னும் பருவம் நன்கு முதிராத மான் போன்றவள். தன் வலியும், நிலையும் நன்குணராதே வயதால் வந்த துணிவு மட்டுமேயுள்ள மான் கன்று இளங்கன்றாதலின் தான் போம் வழியுள்ள பயங்களையறியாத நிலை.

**செல்ல மேவினள்**

போதலைப் பொருந்தினாள். போனாள். "இங்கிருந்த நாள் நம்முடைய இந்த வசனம் கேட்கிலன்றோ வழியிலுள்ளார் பழி கேட்பது அவள்; இவள் வழிபட்டால் நல்வழியிலுள்ளார் வார்த்தை கேட்குமதொழியப் பெருவழியானார் வார்த்தை கேளாள்" என்பது ஈட்டில் முடிவிலே காணப்பெறும் பொருள் பொதிந்த கூற்று.

## ஐந்தாம் பாட்டு

**மேவி நைந்து நைந்து விளையாடலுறாள் என்சிறுத்**
**தேவிபோய் இனித்தன் திருமால் திருக்கோளூரில்**
**பூவியல் பொழிலும் தடமும் அவன் கோயிலும் கண்டு**
**ஆவி உள்குளிர எங்ஙனே உகக்குங்கொல் இன்றே.**

அவனுடைய குணங்கள் அழகுகளிலே மனம் பொருந்த கணம் கணம் மனம் நைந்து தன் வயதிற்குத்தக்க விளையாடல்களிலே பொருந்தாதவளான என் சிறிய பருவத்தாளாகிய பெண் இங்கு விட்டுப்போய் தன் காதலனாகிய இலக்ஷ்மீபதியின் திருக்கோளூரிலே பூக்கள்

மிகுந்த சோலைகளையும் தடாகங்களையும் அவன் உறையும் கோயிலையும் கண்டு இனி தன் மனம் உள்ளே குளிரும்படி எப்படி மகிழ்கிறாளோ.

**மேவி**

பகவானனுடைய அழகிலும் குணத்திலும் தன் மனத்தைப் பொருந்தவிட்டு.

**நைந்து நைந்து**

அக் குணங்களிலே ஈடுபட்டுத் தன்னையழித்தழித்து.

எங்களோடு பொருந்தாள். ஒருகால் நைந்தால் அது வேண்டாம் என்று விடுவாளா. இல்லை. மீண்டும் அவன் குணங்களிலே மூழ்கித்தானழிவாள். இப்படி நைந்து நைந்து போதலையே காலக்ஷேபமாகக் கொண்டவள். அவன் விஷயத்தை "நினைதொறும் சொல்லும்தொறும் நெஞ்சிடிந்துகும்" விஷயம் நிர்க்குணமானதல்லவே. உயர்வற உயர் நலமுடையவனையன்றோ மேவினாள். இப்படி நையப் பெறாதபோது ஆறியிருக்க மாட்டாதே மீண்டும் நைவதற்கே துடிக்கும்.

**விளையாடலுறாள்**

இப் போதுபோக்கு ருசித்தவாறே பிற விளையாட்டுக்களை வெறுத்தொதுக்கினாள். இதற்கே உள்ள நேரம் பற்றாதபோது வேறு விளையாட அவகாசமே கிடையாது. அவளுக்கு "மாற்பால் மனம் சுழிப்ப மங்கையர் தோள்கைவிட்டு" என்றாற்போல இவன் குணக்கடலிலே திளைக்க ஒருப்பட்டாள். பிறபொழுது போக்குக்களை விட்டாள்.

**என் சிறுத்தேவி**

என் சிறிய தேவியார், என் பெண் என்று சொல்ல இனி



வழியில்லையே. இவளுக்குத்தான் என்னுடைய பெண் என்ற நினைவே இல்லை. தவிர அவள் செயல்களைக் கண்டால் நானும் இனியும் இவள் என் பெண் என்று உறவு கொண்டாட அங்கும் நிலையல்லவோ உண்டாயிருக்கிறது. அதனாலே பெண் என்னாமல் சிறுத் தேவி என்கிறாள். மேலே 'திருமால்' என்று பெரிய தேவியோடு கூடியவன் என வருதலின் இவளைச் சிறிய தேவியார் என்கிறாள். இப்போது இவள் நிலையைப் பார்த்தால் இவளை என் பெண் என்று நினைப்பது தவறு. 'கண்ணபுரம் தொழும் பிள்ளையைப் பிள்ளையென்றெண்ணப் பெறுவரே' என்றாற்போல இப்படிப்பட்ட ஏற்றம் பெற்றவளைப்போய் நாம் இதம் சொல்லி இச் செயலினின்று இவளை மீட்பதாக முயன்றோமே. என்ன குற்றம் செய்தோம். இவளுக்கு இதம் சொன்ன நாக்கைக் கழுவவேணுமென்கிறார்" என்பது ஈடு.

**இனிப்போய்**

இப்போது இவளுக்குள்ள ஏற்றத்தைவிட மேலே என்ன கிடைக்குமென்று போனாள். இங்கே தன் பருவத்துக்கும் இயல்புக்கும் மீறின மனப்பரிபாகம் பெற்ற பின்பு வேறென்ன தேடிப் போனாள். பரமபதத்தில் முக்தனுக்குப் பிறந்த ஞானம் இவளுக்கு இங்கே இப்போதே பிறந்திருக்க இனி அங்குபோய் வேறென்ன அநுபவம் தேடவேண்டும்?

**தன் திருமால் திருக்கோளூரில்**

தன்னுடைய திருமகள் கேள்வனுடைய திருக்கோளூரிலே. பெரிய பிராட்டியாரை இங்கே கூறியபடியாலே முன்னே "சிறுதேவி" எனப்பட்டது. நாயகியாகப் பற்றும்போதும் பெரிய பிராட்டியாரை முன்னாக இட்டுப் பற்றுகிறாள். அதனால் திருமாற்றாளன்றி இவளுக்குப் புருஷகாரியும் ஆவாள்போல. "அலர்வாய் மழைக்கண் மடந்தை அரவணை ஏற மண்மாதர் விண்வாய் அழைதுதுப் புலம்பி" என்ற நிலையன்று இங்கு.

**பூவியல் பொழிலும் தடமும்**

பூக்கள் மலிந்த சோலைகளையும் தடாகங்களையும், இலையும் கொம்பும் தெரியாதபடி குலங்கப் பூத்து எங்குமே பூமயமாய்க் காட்சிதரும் சோலைகளும்; அதுபோன்று நீர்ப்பரப்பு மாறப் பூத்த தடாகங்கள்; தாமும் பூத்துப் பொழிலையும் வளர்க்கும் தடாகங்கள்.

**அவன் கோயிலும் கண்டு**

அவன் விரும்பி வாழும் கோயிலையும் கண்டு "திவ்யாத்ம ஸ்வரூபத்துக்குப் ப்ரகாசகமான திவ்யமங்கள விக்கிரகம் போலே அவையிரண்டுக்கும் பிரகாசகமான கோயில். கோயிலைக் கண்ட போதே உள்ளுண்டான வஸ்துவையும் அறுதியிடலாயிருக்கை. உள்ளில் பொன்னுக்குத்தக்க செப்பாயிருக்குமிறே" என்பது ஈடு.

**ஆவி உள்குளிர**

உள்ளே தவிப்பாலே வெட்டிறக் கொண்ட நெஞ்சம் அவ்வெடிப்பு மாறிக் குளிர, இங்கே ஒரு ஐதிஹ்யம் காண்கிறது:- இவ்விடத்தைப் பட்டர் அருளிச்செய்யா நிற்கச்செய்தே மேலெழ அருளிச் செய்தாராய், சீராமப்பிள்ளை இருந்தவர் "சீயா! எம்பார் அருளிச் செய்யும்போது ஆவி உள்குளிர என்று முகந்து கொண்டருளிச் செய்யும்படி கேட்டறிகை யில்லையோ?" என்றருளிச் செய்தார்.

**எங்ஙனனே உகக்குங்கொல் இன்றே**

தான் இளையளாயிருந்தும், ஞானம் முதிர்ந்து புறம்புள்ளவற்றை ஒதுக்கி அவனை நினைந்து கரையும் அழகை அநுபவித்தேள்; இன்று அவனைக் கண்டநுபவிக்கிற அழகைக் காணப்பெற்றிலனே என்று தாய் கவல்கிறாள். "எனக்கு சோகத்தாலோ சூன்யமாய்க் கிடக்கிற இன்று அவளுக்கு அநுபவத்தாலே அடிக்கழஞ்சு பெற்றுச் செல்லுகிறதே!" என்பது ஈடு. இப்படிக் கோயிலைக் கண்டு அனுபவிப்பாரைக் கண்டு அனுபவிக்கை பற்றி ஈட்டில் இரண்டு குறிப்புகள்



காண்கின்றன.

ஒன்று "பிள்ளை திருநறையூர் அரையரும் பட்டருமாக உண்ணே ப்ரதக்ஷிணம் பண்ணா நிற்க இட்ட அடி மாறியிடமாட்டாதே கண்களாலே பருகுவாரைப் போலே பார்த்து வாழ்ந்து கொண்டு போகிறபடியைப் பின்னே நின்று கண்டு அனுபவித்தேன்" என்று நஞ்சீயர் அருளிச் செய்வர்.

**மற்றொன்று**

ஆச்சானும் ஆண்டானுமாகக் கிழக்கே நடக்கிறபோது (குடந்தைக்கு எழுந்தருளும் போது) திருப்பேருக்கு ('திருப்பேர்' நகருக்கு) கிழக்குப் போகவும் மாட்டாதே ஏறித் திருவடி தொழவும் மாட்டாதே திருப்பேர் நகரான் கோயிலைப் பார்த்துக் கொண்டு இருந்தார்களாம்.

## ஆறாம் பாட்டு

**இன்று எனக்கு உதவாது அகன்ற**
**இளமான் இனிப் போய்த்**
**தென்திசைத் திலதமனைய**
**திருக்கோ ளூர்க்கே**
**சென்றுதன் திருமால் திருக்கண்ணும்**
**செவ்வாயும் கண்டு**
**நின்று நின்று நையும்**
**நெடும்கண்கள் பனிமல்கவே.**

தான் போனதால் வருந்தும் எனக்கு வந்து உதவாமல் நீங்கின சிறுமான் போன்ற என் மகள் நடந்துபோய் தெற்குத் திசைக்கே ஒரு திலகம் போன்று விளங்கும் திருக்கோளூருக்குச் சென்று இனிமேல் தன்னுடைய ஸ்ரீமானுடைய அழகிய கண்களையும் சிவந்த வாயையும் பார்த்து அம்மகிழ்ச்சியிலே தன் நீட்ண கண்களிலே நீர் பெருக நின்றுகொண்டே தன் திருமேனி குலைவாள்.

முன் பாட்டிலே தன்னைவிட்டுப் போன தன் மகள் அங்கு போய் ‘எங்ஙனே உகக்குங்கொல் இன்றே’ என்று தன்னையே வினவிக்கொண்ட அன்னை தன் மகள் நிலை இப்படித்தான் இருக்க வேண்டும் என்று தனக்குள்ளேயே கற்பனை செய்து காண்கிறாள்.

**இன்று எனக்கு உதவாது**

தவறில்லை, ஆனால் நான் இப்படி உள்ளம் தவிக்கையில், தவிக்கும் இப்போது என் பக்கம் நின்று எனக்கு இதமானது செய்தும் சொல்லியும் என்னைத் தேற்றாது. நான் என் வயமாய், மனமும் உடலும் நலமாய் இருக்கும்போது மக்கள் அருகிராவிடிலும் எனக்கு உதவாமல். இங்கே ஈட்டிலே இராமன் பிரிய அது பொறாது பிரலாபிக்கும் தசரதனை வால்மீக சுலோக மூலம் உவமை காட்டப் பெற்றது.

**“என்னை இம்மூப்பிடையே வெறுத்தாய்**
**இனிநான்**
**வாணாள் வேண்டேன் வேண்டேன்**
**என்றான்”**

என்றார் கம்பரும்.

**அகன்ற**

உதவவில்லை என்றால் எதோ இவ்வூரிலேதான் வேறெங்கோ சென்றிருக்கிறாள். கடுகவந்துவிடுவாள் என்று சற்று ஆற வழியுமின்றி வேற்றூரல்லவா போய்விட்டாள்.

**இளமான்**

இளமையுடைய மான்கன்று போலத் துள்ளித்திரியும் என் மகள். பருவத்தின் தன்மையாலே தன் செயலால் விளையும் விளைவுகளை உய்த்து நோக்கப் பக்குவம் பெறாதவள்.

**இனி**



தாய்க்கும் மிஞ்சின பந்துவா உலகிலே. பெற்று வளர்த்துச் சீராட்டிப் போற்றிய என்னையுங் காட்டில் தன் நலத்திலே அக்கரையுடையார் ஒருவர் உண்டு போல.

**போய்**

அப்படி ஒருவர் இருக்கிறதாகக் கொள்ளலாமோ என்றால் இவள் இதுவரை ஏங்கித் தவித்த போது அந்த அக்கரை உடையார் இவளுக்குதவ வந்ததாகவும் இல்லையே. இவளல்லவா தேடிப் போகிறாள்.

**தென் திசைத்திலதமனைய**

“தெற்குதிக்கு என்றுகொண்டு ஆர்யர்கள் இழந்த மிலேச்ச பூமியிறே” என்பது ஈடு. ஆர்யாவர்த்த: புண்யபூமி: மத்யம் விந்த்ய ஹிமாலயோ: என்று வடநாடுதான் புண்ய பூமியென்றும் தெற்கு மிலேச்ச பூமியென்றும் தவறாகக் கருதி இத் தென்நாட்டில் பெருமையை யிழந்தனர் ஆரியர். இதைக் கண்டித்துத் தான் எந்நிலத்து வித்திடினும் காஞ்சிரங்காழ் தெங்காகா தென்னாட்ட வரும் சுவர்க்கம் புகுதலாம் தன்னாற்றானாகவருமே வடதிசையும் கொன்னாளர் சாலப் பலர் என்று நாலடி கூறிற்று. இன்னும் ஆரிய மொழி வாயிலாகத் தான் இறைவனை யடைய முடியும் என்று தவறான கொள்கையையுடைய முரணர் பலர் பிரபந்தச் சுவையும் பயனும் இழந்து திரிவது கண்கூடு.

இத்திசையின் பெருமை யறியத் தவமில்லாதவர்.

**தென்திசை**

எம்பெருமான் நித்யவாசம் செய்து மகிழ்வதற்கென்றே தேர்ந்தெடுத்த திசை. அவனுள்ளத்துக்குத் தேன் போன்றினிய திசை. (தென் - இனிமை) அது காரணமாக வன்றோ அவன் நித்யவாச ஸ்தலங்கள் இங்கே பன்னூறாகவுள்ளன. அப்படி அவனுக்கினிய திசையான தெற்கு திக்கிலே.

**திலதமனைய திருக்கோளூர்க்கே**

அத்திசைக்கே ஒரு பொட்டிட்டது போன்று விளங்கும்; தான் விளங்குவதாலேயே தானுள்ள நுதற்பிரதேசம் விளங்கித் தோன்றும்படி யிருப்பது திலகம். திலக மில்லாநுதல் பாழ்பட்டுத் தோன்றுமன்றே! அதுபோலத்தானிருப்பதால் திசையே விளங்கும்படி அழகிலும் புகழிலும் ஏற்றம் பெறும்படி உள்ளத் திருக்கோளூர்க்கு.

**சென்று**

தன் வழி நடந்த வருத்தம்கூடத் தெரியாமல் போய்.

**தன்திருமால்**

தனக்கு ஸர்வவித பந்துவுமாகக்தான் வரித்த திருமால், வெறும்மாலல்ல (திருமால் முன்னைய பாசுரத்தில் இப்பதம் விளக்கபெற்றது காண்க) பிராட்டி முன்னாகப் பற்றுதலன்றி அறியாள். புருஷகாரி மூலம் பற்றுகையன்றே சுபாவமும் சொரூபமும்.

**திருக்கண்ணும் செவ்வாயும் கண்டு**

அவளைக் குளிர நோக்கும் அழகிய கண்கள். இவளிருந்தவிடம் தேடி நாம் செல்ல வேண்டியிருக்க நம் காலத் தாழ்வுபெறாதே நாமிருந்தவிடம் தேடி இவள் வரும்படியாய் விட்டதே என்ற வியப்பிலே மலர்ந்த கண்கள். இவள் கோவைவாய் துடிப்பு நின்றது போன்று துடிக்கும் அதரங்களுடன் விளங்கும் அவனுடைய செய்யவாய் இவற்றைக் கண்டு.

**நின்றுநின்று நையும்..... மல்கவே**

இப்படி நம்பக்கல் ஆதரமுடையவனையன்றோ நாம் பழிக்க நினைத்தது என்று தன் தவறாய எண்ணத்துக்கு வருந்தியும், அவனைக்கண்டு மகிழ்ந்தும் ஆக இரண்டு கண்ணீரும் வெள்ளமிட உடல் அங்க அங்கமாக குலைந்து நிற்பாள்.



இப்படி ஒரு நிலையிலே இரு கண்ணீரும் தேக்கி நிற்கும் அவள் இருப்பைக் காணப் பெற்றிலேனே என்று ஏங்குகிறாள் தாய்.

## ஏழாம் பாட்டு

**மல்குநீர்க் கண்ணொடு மையலுற்ற மனத்தினளாய்**
**அல்லுநன்பகலும் நெடுமால் என்றழைத்து இனிபோய்**
**செல்வம்மல்கி அவன் கிடந்த திருக்கோளூர்க்கே**
**ஒல்கி ஒல்கி நடந்து எங்ஙனே புகுங்கொல் ஓசிந்தே.**

பெருகுகின்ற கண்ணீரோடு மயக்கத்தையுடைய மனத்தையும் உடையவளாய் நல்லபகலும் இரவும் மிக்க காதலை உடையவனே என்று அவனைக் கூவி யழைத்துக் கொண்டே போய் செல்வம் கொழித்து அவன் சயனித்திருக்கிற திருக்கோளூருக்கு அசைந்தசைந்து நடந்து தளர்ந்து என்மகள் எப்படிப் போய்ப் புகுவளோ.

போன தன் மகள் அங்கு எப்படி ஆவள் என்று தன் மனத்திரையிலே கற்பனை செய்து பார்த்து அவ்விருப்பைக் கண்கூடாகக் காண வியலாது போயிற்றே என்று ஏங்கினாள் தாய். ஆனால் அவ்வெண்ணத்தோடேயே தன் மகளின் தன்மையை எண்ணுகிறாள். இந்நிலையிலுள்ளவள் எப்படி அவ்வூர் போய்ச் சேரப் போகிறாளோ என்று ஐயுறுகிறாள்.

**மல்குநீர்க் கண்ணொடு**

பெருகுகின்ற நீரையுடைய கண்ணோடு. அவனைப் பிரிந்த விரகத்தாலே வந்த கண்ணீர்.

**மையலுற்ற மனத்தினளாய்**

ஒரே மயக்கத்தில் ஆழ்ந்த மனத்தை யுடையளாய், நாம் போனால் நம்மை ஏற்பனோ உதாசீனம் செய்வனோ என்று மயக்கம். காதற் பிச்சில் அறிவு தடுமாறிய நிலை.

**அல்லு நன்பகலும்**

நன்பகலும் அல்லும். நல்ல பகற்பொழுதிலும் இரவிலும். காலம் தெரியாதே ஒரே போக்காக. “நள்ளிரவும் நண்பகலும்” என்றாற் போல.

**நெடுமால் என்றழைத்து**

அவனுக்குத் தன்மேல் உண்டான நீண்ட காதலைக் கூறி அத்தகைய காதலை உடையவனே என்றழைத்து. அவன் வியா மோகம் இவளுக்குப் பற்றாசாயிற்று.

**இனிப்போய்**

அப்படிக் கூப்பிட்டாலே போதாதோ உண்மையில் அவனுக்கு இவளைப் பற்றிய சிந்தையுண்டானால் அதுகேட்டு வந்து இவளுக்கு முகங்கொடானோ. அப்படி அவன் வராவிடினும் தான் அவனிருந்த இடம் தேடிப்போய்.

**செல்வம் மல்கி அவன் கிடந்த**

எல்லாச் செல்வமும் மிக்குப் பெருகி வெள்ளமிடும்படி அவன் அச்செல்வத்தைக் கண்டு தருக்கிச் சாய்ந்து கிடக்கிற. இவளை கூப்பீடு கேட்டுப் பாதி வழியேற வந்து அணைத்துக் கொடு போகாதே அவன் கிடந்தது செல்வச் செருக்காலேயிறே. அப்படி அவன் செய்திருந்தால் என் மகள் மனம் அடையும் பெருமித அழகை அவன் ரஸித்திருக்கலாம். தன் செருக்காலே அதை இழந்தான்.

**கிடந்த**

இவளும் அவன் கிடையழகு காண ஆசைப்பட்டவள். “கிடந்தோர் கிடக்கை கண்டும் எங்ஙனம் மறந்து வாழ்கேன் ஏழையேன் ஏழையேனே” என்றாரும் உண்டே.

**ஒல்கி ஒல்கி நடந்து ஒசிந்து**

தள்ளாடித் தள்ளாடி. கால்கள் பின்னலிட நடந்து அந்நடையாலே தளர்ந்து

**எங்ஙனே புகுங்கொல்**



எப்படிப் போய்ச் சேரப் போகிறாள். அவன் வீடாதலாலும் போகிறது பெண்ணாதலாலும் ‘புகும்’ என்றார். புக்ககம் என்று வழக்காதலாலே.

## எட்டாம் பாட்டு

**ஒசிந்த நுண்ணிடைமேல்**
**கையைவைத்து நொந்துநொந்து**
**கசிந்த நெஞ்சினளாய்க் கண்ணநீர்**
**துளும்பச் செல்லுங்கொல்**
**ஒசிந்த ஒண்மலராள் கொழுநன்**
**திருக்கோளூர்க்கே**
**கசிந்த நெஞ்சினளாய் எம்மை**
**நீத்தஎம் காரிகையே.**

துவண்ட ஒளிபொருந்திய மலர்மகளுக்கு நாயகனது திருக்கோளூர்க்கே உருகும் நெஞ்சையுடையளாய் எங்களெல்லோரையும்விட்டு அகன்ற அழகியான என் மகள் தளர்ந்த தன்னிடையிலே கைவைத்து மிகுவும் நொந்து நெஞ்சுருகியவளாய் கண்கள் நீர்த்துளிக்க போய்ச் சேர்வாளா.

இதுவும் முன் பாசுர மனோபாவத்தோ டொன்றியது. தான் போய்ச் சேரவுன்னிய திருப்பதிக்கு என் மகள் எப்படியேனும் போய்ச் சேர்வாளா என்று ஐயுறுகின்றது தாய் மனம்.

**ஒசிந்த நுண்ணிடைமேல்**

இடையோ இயற்கையிலேயே நுண்ணியது. இடை என்று ஒரு அவயம் உண்டோஇல்லையோ என்று கண்டார் சங்கிக்கும் படியிருப்பது, “இல்லையே நுசுப்பு என, பார் உண்டு என்னவும்” என்று கம்பர் பிராட்டியைக் கூறினார். இப் பெண்ணுக்கு இடை என்ற அவயவமே இல்லையே என்று கண்டார் சிலர் கூவ, வேறு சிலர் மேலுள்ள அவயவங்களைக்

காட்டி அவை நிலைக்க இடை என்ற அவயவம் இருந்தே தீர வேண்டும் என்று அனுமானத்தாலே இடையுண்மையைச் சாதிக்கும்படி அப்படி இழை போன்ற மெல்லிடை. அவ்விடை நடையாலே தளர்ந்து முறிவது போன்று நோக. அதன் மேலே

**கையைவைத்து**

தன் கையை வைத்து அழுத்தி

**நொந்து நொந்து**

இப்படி ஒரு புறம் நோக அங்கே கையை வைத்து அழுத்தி வலியை ஆற்ற மறுபுறம் நோகலுற உடனே அப்புறத்தை அழுத்த. இப்படி நோதலும் கைவைத்தழுத்தி ஆற்றலுமாகவே இடை முறிந்துவிடுமோ என்று பயந்து கைவைத்து பிடிப்பது போல.

**கசிந்த நெஞ்சினளாய்**

உள்ளம் நீர்ப்பண்டமாய் உருக. வேட்கை பெருகவே உள்ளம் உருகுகிறது. “உருகுமால் நெஞ்சம் உயிரின் பரமன்றிப் பெருகுமால் வேட்கையும்” என்பதும் இவர் பாசுரம்தானே.

**கண்ண நீர் துளும்ப**

உள்ளே நெஞ்சு நீராயுருக வெளியே கண்ணீர் ஆறாகப் பெருகுகிறது. இப்படி உள்ளும் புறமும் கரைந்து உருகி ஓட.

**செல்லும் கொல்**

இத்தனைத் துன்பத்தையும் பொறுத்துக் கொண்டுபோய்ச் சேர்வாளா?

**ஒசிந்த ஒண்மலராள்;**

ஒள்ளிய மலர்மேல்தான் தங்கிலும் அப்பூவும் உறுத்தும்படி மென்மையான திருவடிகளை உடைய திருமகள், அப் பூவின் உறாய்வும் பொறாது துவளும் இலக்ஷ்மி.



**“அனிச்சமும் அன்னத்தின் தூவியும்**
**மாதர் அடிக்கு நெருஞ்சிற் பழம்”**

என்றல்லவா குறள் கூறிற்று.

**கொழுநன்**

அத்திருமகள் நாயகன்.

**திருக்கோளூர்க்கே**

அவனது ஐச்வர்யம் எல்லாம் தேங்சி நின்ற ஊருக்கு.

**கசிந்த நெஞ்சினளாய்**

அவ்வூர்க்கே அன்பு செய்யும் மனமுடையளாய் அவ்வூர் நினைப்பிலே மனம் நீர்ப்பண்டமாக பள்ளத்துப் பாயும் நீர்போல் அவ்வூர் நோக்கியோடும் மனமுடையாளாய்.

**எம்மைநீத்த**

எங்களை விட்டகன்ற, என்னை மட்டுமல்ல அவள் விட்டது. மற்றச் செவிலியரை விட்டாள். தோழியரை விட்டாள். தனக்குகப்பான பூவை பைங்கிளிகள் பந்து தூதை பூம்புட்டில்கள் அனைத்தையும் விட்டாள். எங்கள் எல்லோரையும் ஸர்வ சங்க பரித்யாகம் பண்ணிச் சென்ற.

**எம்காரிகை**

எங்களுடைய பெண். பெண் என்றால் சாதாரணமான பெண்ணா. அழகே உருவெடுத்தவள். அவன் திருமார்பிலே வைத்திருக்கிறானே ‘ஒசிந்த ஒண் மலராள்’ அவளழகுக்கு ஒன்றும் குறைந்தவளில்லை.

## ஒன்பதாம் பாட்டு

**காரியம் நல்லனகள் அவைகாணில்**
**என் கண்ணுக்கு என்று**
**ஈரியாய் இருப்பாள் இதெல்லாம்**
**கிடக்க இனிப்போய்**

**சேரிபல்பழிதூஉய் இரைப்பத்**
**திருக்கோளூர்க்கே**
**நேரிழை நடந்தாள் எம்மை**
**ஒன்றும் நினைத்திலளே.**

நன்றாகச் செய்யப்பட்ட பொருள்களைக் கண்டால் என் கண்ணனுக்கு என்று அன்பு பாராட்டி இருப்பாள். அதெல்லாம் கிடக்க இப்போதுபோய் சேரியெல்லாம் பலவித அபவாதங்களைக் கூற அழகிய அணிகளையுடைய என் பெண் திருக்கோளூர்க்கே நடந்து போனாள். எங்களையெல்லாம் ஒரு சிறிதும் நினைத்தாளில்லை.

**காரியம் நல்லனகள் அவை காணில்**

நல்லனகள் காரியம் அவை காணில், நன்றாகச் செய்யப் பெற்ற பொருள் எவையாயினும் அவற்றைக் கண்டால்.

**என் கண்ணனுக்கு என்று**

இவை என்னுடைய கிருஷ்ணனுக்கே ஏற்கும். இவை அவனுக்கு உகப்பா யிருக்கும் என்று. எந்த நல்ல வஸ்துவைக் கண்டு தன் மனம் உகந்தாலும் சரி உடனே அப்பொருள் தனக்கென நினையாள். அவள் மனம் கண்ணனை நினைக்கும். இது அவனுக்கே தகும் என்பாள். இப்படி எல்லா நல்ல பொருளும் கண்ணனுக்கு என்று.

**ஈரியாய் இருப்பாள்**

உள்ளம் உருகுவாள். அவனுக்கு என்று நினைத்த நினைவோடே அவன் இதை எப்படி ரஸிப்பான் என்று தன்னுள்ளே கற்பனை செய்து பார்ப்பாள். இது அவன் சம்பந்தம் பெற்றால் எப்படி சோபிக்கும் என்று எண்ணுவாள். அந்த ரசனையிலே மனம் நீராய் உருகிவிடுவாள். அந்த உருக்கத்திலே தானும் அப்பொருளைத் துய்க்காள்.

**இதெல்லாம் கிடக்க**

இப்படி அவள் தேர்ந்தெடுத்தவை, கண்ணனுக்கு என்று



தேர்ந்தெடுத்தவை ஒன்றா? இரண்டா? இவையெல்லாம் கிடக்க, அவற்றைக் கொண்டாவது போனாளா, அதுவுமில்லை.

**இனிபோய்**

இப்போது சென்று, தான் தேர்ந்த பொருள்களைக் கொள்ளக் கண்ணன் வருவான் என்று இதுவரை இருந்தாள். இப்போது அவை இங்கே கிடக்கத்தான் அவனிருக்குமிடம் தேடிப் போனாள்.

**சேரிபல்பழி தூஉய் இரைப்ப**

இப்படி அவள் போனதன் பலன் பக்கத்திலுள்ளார் பழி கூறுகிறார்கள். அதனையும் ஒருவரோடொருவர் மறைவிலே கூறுகின்றார் என்பதில்லை. சேரியில் நாற்சந்தியிலும் பழியை இரைக்கிறார்கள். எங்கும் இதே பேச்சு. பழிதான் ஒன்றா, இரண்டா, ஒருத்தி "தன்னை அவளுக்கு என்று ஆக்கி வைத்தாள்" என்கிறாள். ஒருத்தி "வைத்தென்ன! அது முடிந்ததா?" என்கிறாள். வேறொருத்தி "ஏதடீ அவனிடம் தேடிப் புறப்பட்டுவிட்டாள்!" என்கிறாள். பின்னொருத்தி "ஒருதாய் தான் இருக்கிறாளே என்று நினைக்கவாவது செய்தாளா?" என்கிறாள். மற்றொருத்தி "இப்படி நாம் திமிராய்த் தனி வழி போனாள் என்று ஊர்சொல்லுமே என்றாவது நினைக்கவில்லையேடீ" என்கிறாள். எல்லாவற்றுக்கும் மேலாக ஒருத்தி "இப்படி ஒரு பெண் நம்மைத் தேடிப் புறப்பட்டு விட்டதே. சே! அப்படி விடக்கூடாது என்று பாதி வழி வந்தாவது அவன் பற்றிக் கொண்டானா அதுகூட இல்லை" என்று பரிகசிக்கிறாள்.

**திருக்கோளூர்க்கே**

அவன் சயனித்திருக்கும் திருக்கோளூருக்கே. வழியிலே தங்கினளில்லை. நேரே அவ்வூரை நோக்கி.

**நேரிழை**

அழகிய ஆபரணங்களை அணிந்த என் பெண்.

**நடந்தாள்**

ஒன்றும் நேராததுபோல நடந்தாள். ஊரார் பழி கூறுவார் என்று நினைத்தாளா. தாய் வருந்துவாள் என்று கருதினாாள. ஊரார் பழியே தனக்குத் தாரகமாகக்கொண்டு நடந்தாள். 'அலரெழு ஆருயிர் நிற்கும் அதனைப் பலரறியார் பாக்கியத்தால்' என்றார் வள்ளுவர். அவர் குறளுக்கு இலக்ஷ்யம்போலவல்லவா என் பெண் போயிருக்கிறாள்.

## பத்தாம் பாட்டு

**நினைக்கிலேன் தெய்வங்காள் நெடுங்கண்**
**இளமான் இனிப்போய்**
**அனைத்துலகும் உடைய**
**அரவிந்த லோசனனை**
**தினைத்தனையும் விடாள்**
**அவன்சேர் திருக்கோளூர்க்கே**
**மனைக்கு வான்பழியும் நினையாள்**
**செல்ல வைத்தனளே.**

தெய்வங்களே! இவள் செயலை நினைக்க முடியவில்லை. நீண்ட கண்களை உடையவளாய் இளமையான மான் போன்றவள் பின்னும்போய் எல்லா உலகங்களையும் உடையவனான தாமரைக் கண்ணனைக் கொஞ்சமும் விடாதவளாய் அவன் சேர்ந்துள்ள திருக்கோளூருக்கே போவது என்று மனம் வைத்தாள். அதனால் தன் குடும்பத்துக்கு நேரும் பெரிய பழியையும் நினைத்தாளில்லை.

**நினைக்கிலேன்**

இவளுடைய வரம்பு மீறிய செயல்களை நினைத்து அறுதியிட முடியாதவளாயிருக்கிறேன். கடலைக் கரைகாண முடியாதவளாயிருக்கிறேன். கடலைக் கரைகாண முடியாமை



போலேயிருந்தது இவள் வரம்புமீறிச் செய்த செயல்களை அறுதியிடுவது. அதை முற்ற எண்ணிப் பார்க்கவும் இயலாதவளானேன்.

**தெய்வங்காள்**

தெய்வங்களே! தன்னை மறந்து கையற்ற நிலையில் வந்த வாசகம் இது. தன்னினைவோடே பேசினால் தாய் இவ்வார்த்தை கூறாள், பிற தெய்வங்களை விளிக்கும் குடி வந்தவளாதலால். என்ன செய்வது என்று தெரியாது தவிக்கும் நிலையிலே தன் நிலைமையையும் மறந்து கூறுவது அவளது மனமழிந்த நிலையைக் காட்டி நின்றது.

**நெடுங்கண்**

நீண்ட கண்களை உடையவள். 'மாதிரமளக்கின் றகண்ணாள், "கஞ்சத்தின் அளவிற்றேனும் கடலினும் பெரிய கண்கள்" என்றார் கம்பர். அவனையும் அவன் விபூதிகளையும் தன் கடைக்கண்ணோரத்திலே ஒடுக்கும் பெரிய கண்களை உடையவள்.

**இளமான்**

இளமையான மான். மான்கன்று பருவத்தின் மிறுக்காலே செய்வதின் விளைவு என்ன என்று ஓர்ந்து செயல்படாது பயம் கெட்டு செய்த செயல். இளம் கன்று பயமறியாதன்றே.

**இனி**

இப்படி அவனும் தன்னை மறந்து நோக்கி நிற்கும்படி கண்ணழகு படைத்தவளாயிருந்தும்.

**போய்**

தான் அவனிடம் ஏறப்போய், என்ன மாறாட்டமான செயல். அவன் வந்து துவண்டு நிற்கும்படி கண்பெற்றவள், தன்நிலை மாறாடி அவனிருந்த இடம் தேடிப்போவதே!

**அனைத்துலகும் உடைய அரவிந்தலோசனனை**

மண்ணும் விண்ணும் உடைய தாமரைக் கண்ணன். தன் கமலக்கண்ணழகு கொண்டே உபய விபூதியையும் தனக்குடைமையாக்கிக் கொண்டவன். அவன் கண்களின் சக்தி அம்மட்டுத் தானே! இவளோ அவ்விபூதியினை உடையவனையே தன்னெதிரே ஏங்கி நிற்கும்படி செய்யவல்ல கண்படைத்தவளாயிற்றே, அப்படியிருந்தும் அவனைத் தேடிப்போனாளே!

**தினைத்தனையும் விடாள்**

கணமும் பிரியப்பொறாதவளாய் அவன் 'நெகிழ்த்தணைக்கவும் பொறாதவள் என்று ஈடு. "புல்லிக்கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில் அள்ளிக்கொண்டது பயிர்ப்பு" என்றார் வள்ளுவர். ஓரணையிலே அணைத்துக் கிடந்தவன் உறக்க மயக்கிலே கை நெகிழ்த்தானாக அவன் தன்னைப் பிரிந்தான் என்று ஒருகணம் அஞ்சினாள். உடலில் பசலைபடர்ந்து மூடிற்று. அதுபோலல்லவா இவள் நிலையும்.

**அவன்சேர் திருக்கோளூர்க்கே**

அவன் விரும்பிச் சேர்ந்த தலமான திருக்கோளூர்க்கே. பாதி ஏறச்சென்று அவனை எதிரே கண்டு கூடினாள் என்றுகூட இல்லை. அவன் திருக்கோளூரளவும்.

**செல்ல வைத்தனள்**

போவது என்று மனம் வைத்தாள். அங்கேயே போய்விடுவது என்று துணிந்தாள். தன் அழகை நோக்கினால் அவன் இவளிருக்குமிடம் தேடி ஓடி வர வேண்டும். அவள் இளமையை நினைத்தால் அவ்வளவு தூரம் செல்வதிலுள்ள கஷ்டத்தை நோக்கித் தவிர வேண்டும். இப்படியிருந்தும் அங்கு தான் போகவேண்டும் என்று துணிந்தாள். பிறர் கூறி மீட்க முடியாதபடி அத்துணிவிலே ஊன்றினாள்.



**மனைக்கு வான்பழியும் நினையாள்**

குடிக்குவரும் பழியையும் மதியாதவளானாள். 'கொல்லை என்பர் கொலோ குணம் மிக்கனள் என்பர் கொலோ என்று பிறர் தன்னைப் பற்றி என்ன சொல்வார்களோ என்று சிந்தித்தாளில்லை. சிந்தித்திருந்தால் போயிருப்பாளா. போகட்டும் அச் சிந்தனை எழவில்லை என்று கொள்வோம். "சேரிதான் பல்பழி தூவியிரைத்ததே" அப்போதாவது தன்னை ஊரார் பழிக்கின்றனர் என்று உணர்ந்து பின் வாங்கினாளா. அந்த அலரைத் தன் உட்கனலுக்கு ஊற்றப் பெற்ற நெய்யாகக் கொண்டு முன்னிலும் அதிக மிறுக்கோடல்லவா போனாள். இவையிரண்டும் அவளைப் பற்றிய தாகையாலே பொறுத்தாள். மதிக்கவில்லை என்று கொண்டாலும் தான் இவ்விதம் போவது தன் குடிக்கே பெரும் பழி என்பதை உணர்ந்தாவது போதலைத் தவிர வேண்டாமா? தன் முயற்சி என்பது இக்குடியின் பாங்கல்லவே. பூனைக்குட்டி குரங்காகலாமா. அவன் வந்து பற்றப்பட வேண்டியவள் தான் என்று குடிப்பாங்கோடு ஒட்டியிருத்தலின்றி அவனிருக்குமிடம் தேடிப்போவேன் என்று போனாளே! இவள் செய்கையின் தன்மையை நினைக்க நினைக்க அலர் வரம்பழிவின் எல்லை விரிந்து கொண்டு போகிறதே ஒழிய அதை அறுதியிட முடியவில்லையே என்று அங்கலாய்க்கிறாள் தாய். "செல்ல வைத்தனளே" என்பதற்கு தான் அங்கே போய் புக்கு மீளாதபடி சென்றதனால் நம்மையும் அங்கே போகும்படி செய்தவள் என்றும் பொருள் கொள்ளலாம்.

# பதினொன்றாம் பாட்டு

**வைத்தமா நிதியாம்**
**மதுசூதனையே அலற்றி**
**கொத்தலர் பொழில்சூழ் குருகூர்ச்**
**சடகோபன் சொன்ன**

**பத்துநூற்றுள் இப்பத்து**
**அவன்சேர் திருக்கோளூர்க்கே**
**சித்தம் வைத்துரைப்பார் திக**
**பொன்னுல காள்வரே.**

சேமித்துவைத்த பெருஞ் செல்வமாகியவனும், மது என்னும் அசுரனை அழித்தவனுமான மதுசூதனனைக் கூவி அரற்றி கொத்துக்களாக மலரும் சோலைகள் சூழ்ந்த திருக்குருகூரில் அவதரித்த சடரைக் கோபித்து விரட்டிய ஆழ்வார் கூறிய பத்து நூறாகிய ஆயிரம் பாக்களில் இந்தப் பத்துப் பாடலையும் அம்மதுசூதனன் உறையும் திருக்கோளூரிலே மனம் வைத்துச் சொல்பவர் ஒளிமயமான அழகிய பரமபதத்தைத் தாம் விரும்பியபடி ஆள்பவர்கள்.

**வைத்த மாநிதியாம்**

தாம் சேமித்துவைத்த பெரும் செல்வமானவன், இவள் தனி வழி போகைக்கும் தாயரை விடுகைக்கும் அடிப்படை. இச்செல்வம் இருக்கவேயன்றோ அவள் பிறரையும் பிறவற்றையும் விட்டுப்போனாள். இதுதான் எய்ப்பினில் வைப்பாயிற்றே. எனவேதான் இடருற்ற காலையில் பிறரும் பிறவும் உதவ வகை தெரியாது போகவே தன் எய்ப்பினில் வைப்பை நாடினாள். சேமித்து வைத்ததும் எய்ப்பினில் உதவ என்றன்றோ. அது இருக்க எடுத்து அநுபவியாதே இடர் பொறுத்து அலைவாருண்டோ. அது தானும் மற்றைச் செல்வம் போன்றதொன்றோ. "தளர்ந்தார் தாவளமாய், உண்டு என்ன உயிர் நிற்கும்படியாய், உடையவன் காலிலே எல்லோரும் விழும்படியாய் உடையவனுக்கு அறவிட்டு ஜீவித்தான் என்று ஏசாதபடியுமாய், அவன் தனக்குப் பெருமதிப்பைக் கொடுப்பதுமாய், உடையவனுக்கு ஒன்றும் கரையவேண்டாதபடியாய் எல்லாம் தன்னைக் கொண்டே கொள்ளலாய், எல்லா ரஸங்களும் போகங்களும் தன்னைக் கொண்டே கொள்ளலாய், இத்தகைய தன்மையுடைத்தாதல் பற்றி நிதி என்கிறது. அதிலும் இது மாநிதி. எல்லாம் தன்னைக் கொண்டே கொள்ளா நின்றாலும்தான் குறைவற்றிருக்கை" என்று ஈடு. "கொள்ளக்குறைவிலன் வேண்டிற்றெல்லாம் தரும் கோதிலன் வள்ளல்" என்றும் இவ்வாழ்வாரே கூறினார். அத்தகைய பெருஞ்செல்வமானவனும்.



**மதுசூதனை**

மது என்னும் அசுரனை அழித்தவனுமான இறைவனை. செல்வமான தன்னைத் துய்க்க உண்மையிலே எண்ணுவார்க்கு, அவர் அவ்விதம் அனுபவிப்பதற்குத் தடையாயிருப்பவற்றையும் இருப்பவரையும் விலக்கித் தன்னைத் துய்க்கத் தானே தன்னைத் தருமவனை.

**மதுசூதனையே**

அப்படித் தடை நீக்கிக் காத்து ஊட்டுமவனையே.

**அரற்றி**

கூவி அழைத்து, என்றும் எப்போதும் வேறு ஒன்றைக் கூவலின்றி அவன் பெயரை கூவிக் கூவி.

**கொத்துஅலர் பொழில்சூழ்**

கொத்துக் கொத்தாக மலரும் சோலைகள் சூழ்ந்த தனித்து மலர்கையின்றி என்றுமே கொத்தாக அலரும் மலர்களை உடைய சோலைகளால் சூழப்பட்ட இந்நில மிதியாலே பகவத் பக்தர்கள் ஒன்றிரண்டின்றிக் குழாங்களாய்த் திரளும் அடியார் நிறைவு பெற்ற குருகூர். அந்நகர் மட்டுமின்றிச் சுற்றிலும் அப்படியே அடியார் குழாங்கள் நிறைந்த ஸ்தலங்கள் சூழ்ந்த.

**குருகூர்ச் சடகோபன்**

திருக்குருகூரில் அவதரித்து சடரைக் கோபித்து,

“நாட்டில் பிறந்து சடரை ஒட்டி” என்றல்லவா சூத்திரம், தன் சடர் மட்டுமின்றி நாட்டினின்றே சடரை ஒட்டிய ஆழ்வார்.

**சொன்ன**

திருவாய் மலர்ந்தருளிய

**பத்து நூற்றுள்**

ஆயிரம் பாக்களில்

**இப்பத்து**

இப் பத்து பாட்டையும், பாற்கடலின் அமுதம் போன்று அவ்வாயிரம் பாக்களில் இப் பத்துப் பாசுரங்களையும்.

**அவன் சேர் திருக்கோளூர்க்கே**

அப்பெருஞ் செல்வம் உறையும் திருக்கோளூர்க்கே, எய்ப்பினில் வைப்பினில் வைப்பு இருத்தலாலேயே திருக்கோளூர் என்று பெயர்பெற்ற அத்தலத்திற்கே.

**சித்தம் வைத்து**

மனத்தை ஒன்ற வைத்து, வேறு நினைப்பின்றி, பலனில் இச்சையின்றி, ஒருவழிப்பட்ட உணர்வோடு.

**உரைப்பார்**

சொல்லுபவர்கள். பாடக்கூட வேண்டாம். வெறுமனே வசனமாகச் சொன்னாலும் போதும். அப்படி மனம் ஒன்றி உரைப்பவர்.

**திகழ் பொன்னுலகு**

“ஒளிவிசும்பு” என்று பெயர் பெற்றதும் எப்பொழுதும் ஒளிமயமாய் விளங்குவதுமான பரமபதத்தை.

**ஆள்வரே**

தன்னுடையதுபோலவே ஆளப் பெறுவர்.



ஏகாரம்:- தேற்றம். இது திண்ணம் என்றபடி.

ஒருத்தி கூப்பிட ஒருத்தி தனிபோகையன்றிக்கே என்றும் எப்போதும் துய்க்கக்கூடிய நிலத்திலே புகப்பெறுவர். தனிவழி போக வேண்டாத அர்ச்சிராதிகணம் சேவிக்க அழகுருக் கொண்ட தேசத்தே புகப்பெறுவர் என்று ஈடுகூறும்.

இனி இப்பதிகம் இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் இடையே உள்ளதாக முன் கூறப்பெற்ற ஒன்பதுவிதத் தொடர்பில் தாரக தார்ய (சார்பும் சார்வதும்) என்ற தொடர்பைக் காட்டு மென்றும், இப்பதிகத்தின் பருப்பொருள் குலசேகரரின் “தொக்கிலங்கியாறெல்லாம்” என்ற பாசுரக் கருத்தோடொக்கும் என்றும் சில பெரியோர் கூறவர். இக் கருத்துக்கு ‘உண்ணும் சோறு’ என்ற பாசுரத்தையும் ‘நினைக்கிலேன்’ என்ற பாசுரத்தையும் ஆதாரமாகக் கொள்வர். தனக்கு உயிரூட்டுவதாயும், தன்னைப் பேணித் தன் உயர்நிலை வளர்ப்பதாயும், தான் துய்க்கப்படும் பொருளாயும் உள்ளவை எல்லாம் கண்ணன் என்று கூறினமையின் அவனே தாரகப் பொருள் என்பது காட்டப் பெற்றது. கண்ணனே எனக்குச் சார்வு என்பது அறுதியிடப் பட்டது. அந்தச் சார்வு, பற்றுக்கோடு கிட்டாவிடில் இவ்வான்மா சார்பு பெறாமல் தவிக்குமென்பதும், அந்தப் பற்றுக்கோட்டைப் பெற்றாலொழிய ஆற்றாமல் அக் கோடிருக்கும் இடம் தேடிப் படர்ந்து அதைப் பற்றி மேல் என்றும் விடாமல் பற்றிப் படரும் திடசித்தம் கொண்டு படர்ந்தது. மற்றைப் பற்றுக் கோடுகள் போல் வந்த தாயர் முதலியவர்களையும், தனக்குத் துய்க்கும் பொருள்களாய்த் தோன்றிய பந்துதூதை பூம்புட்டில்கள், பூவை பைங்கிளிகள் இவற்றையெல்லாம் உதறியது. அவனே நம் எய்ப்பினில் வைப்பு என்பதை உணர்ந்தது. இங்கே இப்பதிகத் தோற்றுவாயைக் காண்போமானால் இவ்வுண்மை விளங்கும். இதற்கு முன்னைய பதிகம் ‘மாலுக்கு’ என்ற பதிகம். அதில் தலைவி எவ்வாறு தன் கைமுதலெல்லாம் இழந்தாள். எவற்றை

இழந்தாள் என்று கூறப்பெற்றது. இழந்தவற்றை மீண்டும் பெற மற்றைய கோடுகள் உதவா என்பதை உணர்ந்து எதைப்பற்றினால் தன் சத்தையை, தான் இழந்தவையான கட்டு, எழில், மாமை, நிறை, பொற்பு இவற்றை மீண்டும் பெறலாமோ அதைப் பற்றுகிறாள். எனவே தார்யத்துக்கு (சாரும் பொருளுக்கு) தாரகம் (சார்பு) எது என்பது காட்டப் பெற்றது இப்பதிகத்தில் என்பது அக் கொள்கையின் சுருக்க விளக்கம். இதே கருத்து ஓரளவு குலசேகரரின்,

**தொக்கிலங்கி யாறெல்லாம்**
**பரந்தோடித் தொடுகடலே**
**புக்கின்றிப் புறம்நிற்க**
**மாட்டாத மற்றவைபோல்**
**மீக்கிலங்கு முகில்நிறத்தாய்**
**வித்துவக் கோட்டம்மாநின்**
**புக்கிலங்கு சீரல்லால்**
**புக்கிலன்காண் புண்ணியனே**

என்ற பாடலுள் காணப்பெறும் என்பர். ஆறு மலையில் தோன்றுகிறது. வெளியே நிலத்தில் பாய்கிறது. மக்களை மகிழ்விக்கிறது, ஆனால் அதன் இலக்ஷ்யம் அதுதானா. இல்லை. அது எப்படியும் ஓடிக் கடலை அடைந்துவிட வேண்டும் என்பது அதன் கோட்பாடு. இடையிலே எங்கெல்லாம் எவ்வளவு பரப்பில் தேக்கினாலும் எவ்வளவு அழகிய ஏரி அமைத்தாலும் அந்த ஆற்று நீருக்கு அதன் இலக்ஷ்யமான கடலை அடையவேண்டும் என்ற பாரிப்புத்தான். அடைத்து வைத்த தடை நீங்கினால் அழகிய ஏரியை விட்டு ஆறு ஓடுகிறது. அவ்வோட்டத்தைத் தடைசெய்யாது போகும்படி விட்டால் எங்கு போய்ச்சேரும் கடைசியில்? கடலில்தானே. அது போன்று உயிர் எந்த அழகிய கூண்டிலிருப்பினும் அதன் துடிப்பெல்லாம் இறைவனை அடையவேண்டும் என்பதே. இடையே சிலகாலம் வேறு தடைகளால் அந்தக் கோட்பாடு



வெளிப்படாமல் இருக்கலாம். கோட்பாடே தெரியாமலும் தவிக்கலாம். அல்லது மாறி நினைக்கலாம். ஆனால் அந்தத் தடைகள் நீங்கினால் அது இறைவனையே நாடும். எனவே உயிருக்கு உண்மையான சார்பு (தாரகம்) இறைவனே என்பது குலசேகரரின் பாடலிலும் விளக்கப் பெறுகின்றது என்று காட்டுவர்.

இனி இப்பதிகத்தைப் பற்றி ‘ஆசார்ய இருதயம்’ என்ற நூல் கூறும் பொருள் பொதிந்த மொழிகளைப் பார்ப்போம்.

“கைம்முதல் இழந்தார் உண்ணும் நிதியின் ஆபத்ஸகத்வம் புகும் ஊரிலே ஸம்ருத்தம்” ***(ஆசார்ய. 3 -20)*** என்பது சூத்திரம். தனக்கென்றுள்ள, தன்னை அழகுறச் செய்து பலர் புகழும்படியாக்கிய பொருள்களானவற்றை இழந்தவர்கள் மீண்டும் அவற்றைப் பெறத்தேடும் நிதி போல்வனுடைய தளர்ந்தார்க்குத் தாவளமாய் உதவும் தன்மை தலைவி புகுமூராகிய திருக்கோளூரிலே நிறைந்தது என்பது பொருள். இதில் ‘மாலுக்கு’ என்ற பதிகத்தில் தலைவி தன்னைத் தலைவியாக விளக்கிய பொற்பு, எழில், கட்டுமாமை முதலியவை இழந்தமை கைம்முதலிழந்தார் என்பதால் காட்டப்பெற்றது. அப்படி இழந்தவர் மீண்டும் அதைப் பெற வேண்டுமானாலும் அதற்குத் தாரகமாகப் பற்றவேண்டிய பிறபொருள்களல்ல. கண்ணனே என்பதை ‘உண்ணும் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்’ என்ற வாக்கியத்தின் முதற்பதமான ‘உண்ணும்’ என்பதால் உணர்த்தப்பட்டது. அவன் தான் வைத்தமாநிதி. எய்ப்பினில் வைப்பு. என்பது நிதி என்ற தொடர் காட்டும். அதன் ஆபத்ஸகத்வம் (தளர்வில் உதவுவது) என்பது “வைத்த மாநிதி” என்ற பாடலின் ‘வைத்த’ என்ற பதத்திலிருந்து பெறப்பட்டது. ‘புகுமூரிலே’ என்பதால் ‘திண்ணம் என் இளமன் புகும்ஊர் திருக்கோளூரே’ என்ற ஆழ்வார் பாசுர அடிகள் காண்பிக்கப் பெற்றது. ‘ஸம்ருத்தம்’ (நிறைந்துளது) என்பது மாநிதி என்ற பதத்தினின்று பெறப்பட்டது. கொள்ளக் குறையா நிதி எடுத்தாலும் நிறைந்தே காணும் நிதி என்பது காட்டப்பெற்றது.

இத்துடன் நவதிருப்பதி அநுபவம் முற்றுப் பெறுகின்றது. சென்ற பக்கங்களிலே அவ்வொன்பது